சேகர் பதிப்பகம்

# இலெமூரியா முதல் அரப்பா வரை



பன்மொழிப் புலவர் இரா. மதிவாணன் எம்.ஏ., பி.லிட்.

# இலெமூரியா முதல் அரப்பா வரை

பன்மொழிப் புலவர்

இரா. மதிவாணன். எம். ஏ., பி. எட்.,

**சேகர் பதிப்பகம்**

66, பெரியார் தெரு, எம்.ஜி.ஆர்.நகர்

சென்னை - 83

# கடல் கொண்ட குமரிநாடு (இலெமூரியா)

சிலப்பதிகார உரையாசிரியரான அடியார்க்கு நல்லார் தரும் விளக்கத்தின் அடிப்படையில் இருந்த நிலப் பகுதிகள்.




குறிப்பு: ஏழ் தெங்க நாட்டிலிருந்து குமரிமலைத் தொடர் வரை 700 காவதம் (சற்றேறப்ப 7000 கி.மீ.) குமரிக்கண்டம் பரந்திருந்ததாகக் கூறப்படுகிறது.

முதற்பதிப்பு: மார்ச், 1977.　　　　உரிமம் ஆசிரியருக்கு

விலை ரூ. ஒன்பது

## உருவாக்கியவர்கள்

| | |
|---|---|
| ஆசிரியர் | பன்மொழிப் புலவர் திரு. இரா. மதிவாணன் எம். ஏ., பி. எட்., |
| ஓவியர் | திரு. ஓ. கிருஷ்ணராஜ் |
| உருவச்சு செய்தவர் (பிளாக்) | திரு. பாலகுரு |
| அச்சுக்கோப்பு மேலாளர் | திரு. பி. எஸ். குப்புசாமி |
| கட்டமைப்பு (பைண்டிங்) | திரு. ஜி. துரை |
| அச்சக உரிமையாளர் | திரு. முல்லை சத்தி |
| பதிப்பாளர் | வெள்ளியாம்பட்டு சுந்தரம் |

அச்சிட்டோர்: பிரபு பிரிண்டிங் ஹவுஸ்,
48/42, வடக்கு உஸ்மான் சாலை, சென்னை-600 017.

# அணிந்துரை

**மொழிஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர்** அவர்கள்,
இயக்குநர், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்.

தமிழ் நாட்டு அரசுச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககத்தில் உதவித் தொகுப்பாளராகப் பணியாற்றும் திரு. மதிவாணனார் எழுதி வெளியிட்டுள்ள **'இலெமூரியா முதல் அரப்பாவரை'** என்னும் தமிழ் வரலாற்று நூல், இக்காலக் கல்லூரித் தமிழ் மாணவர்க்கு இன்றியமையாத பாடப் பொத்தகமும், தமிழாசிரியர்க்குப் பெரிதும் உதவும் கருவி நூலும் ஆகும்,

இதில் மாந்தன் தோற்றம், தமிழன் பிறந்தகம், தமிழின் திரிவும் பரவலும் என்னும் முப்பொருட் செய்திகள், தக்க சான்றுகளுடனும் வலிய மேற்கோளுடனும் பொருத்தமான விளக்கப் படங்களுடனும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

மாந்தன் குரங்கினத்தினின்று தோன்றினனென்று கூறும் **தார்வினியர் (Darwinians)** கொள்கை, இன்னும் எல்லா அறிஞராலும் ஒப்புக்கொள்ளப் படாமையால், படைப்பு **(Creation)**, திரிவாக்கம் **(Evolution)** என்னும் இரு முரண் கொள்கைகள் இருந்தே வருகின்றன. சென்னைப் பல்கலைக் கழக மாநிலக் கல்லூரியில் விலங்குநூற் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற **ஏனோக்கு (Enoch)** என்னும் பேராசிரியர் எழுதியுள்ள **திரிவாக்கமா படைப்பா (Evolution or Creation)** என்னும் ஆராய்ச்சிநூலிறுதியிலுள்ள, **தார்வின் மறுக்களிப்பு (Darwin's Recantation)** என்னும் பின்னிணைப்பில், அவர் (தார்வின்) தம் இறுதிக் காலத்தில் தம் கொள்கையை மாற்றிக் கொண்டதாயும் சொல்லப்பட்டுள்ளது.

எக்கொள்கை சரியாயிருப்பினும், மாந்தன் தோன்றினது தமிழன் தோன்றிய குமரி நாடேயென்பதுதான், நாம் இங்குக் கருத்தாய்க் கவனிக்கத் தக்கது. மாந்தன் பிறந்தகம் குமரி நாடே யென்று, சென்ற நூற்றாண்டிலேயே பேரா. ஏக்கேல் (Haeckel) கூறியது, இன்று கென்யாவில் மாந்தனூலா ராய்ச்சி செய்துவரும் லீக்கியின் (R. Leakey) கூற்றாலும் வலியுற்று வருகின்றது.

தமிழ் தோன்றியது குமரி நாடே யென்பதற்கு, மறுக்க வொண்ணாத அகச்சான்றுகளும் புறச்சான்றுகளும் நிரம்ப வுள்ளன. தமிழ் வெளிநாட்டினின்று வந்ததென்று கொள் வாரும் கூறுவாரும், தம் அறியாமையையோ, ஆராய்ச்சி யின்மையையோ, தமிழ்ப் பகைமையையோ காட்டிக் கொடுக்குந் தன்மையையோதான் வெளிப்படக் காட்டுவர்.

இந்நூலாசிரியர், தமிழையும் தலைமையான தென் திரவிட மொழிகளையும் நிரம்பக் கற்றிருப்பதனாலும், தம் முதுகலை யாங்கிலக் கல்வியாலும், நடுநிலை யாராய்ச்சியாலும் தமிழின் திரிவும் பரவலும் பற்றிய சான்றுகளை, உள்ளத் தெளிவுடன் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். இரண்டோரிடத்தில் இவர் காட்டியுள்ள சொற்பொரு ளிணைப்பு வலிந்து கொண்டதாக இருக்கலாம். ஆயின், அது நூலின் மொத்த மதிப்பிற்கு அல்லது பயன்பாட்டிற்கு இழுக்காவதன்று.

ஆங்காங்குப் பல அச்சுப் பிழைகளிருப்பது, நூல் விரைந் தச்சேறியதால் நேர்ந்தது போலும்! விரிவும் விளக்கமுமான பிழை திருத்தப்பட்டியால் அக்குற்றம் ஒருவாறு நீங்கும்.

ஆங்கிலக் கல்வி குன்றியுள்ள இக்காலத்தில், எளிதாய் மாணவர் கைக்கெட்டாத பல்வேறு அரும்பேராங்கில ஆராய்ச்சி நூல்களினின்று பெரும்பாடுபட்டுத் தொகுத்துக் கூறிய இப்புலத்திரட்டை, மாணவரும் பள்ளியாசிரியரும் வாங்கிப் படித்துப் பயன்கொள்வாராக.

ஞா. தேவநேயன்.

# முன்னுரை

உலகம் ஒரே குடும்பம். உலக மக்கள் அனைவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள். உயிரினப் படிமுறை வளர்ச்சி (Theory of Evolution) யால் இதனை அறிய முடிகிறது.

தமிழ் உலக முதன்மொழி. உலக மக்கள் தமிழரின் நீண்ட நெடுங்காலக் கிளை மரபினர். இலெமூரியா எனப்படும் குமரி நாட்டு வரலாறு இவ்வுண்மையை உலகிற்கு அறிவுறுத்தி வருகிறது.

வீடு—ஊர்—நாடு—உலகம் எனப் பரந்து காணப்படும் மன்பதை (சமுதாயம்) யின் தோற்றம், குமரிநாட்டில் உலக முதன் நாகரிகமாக மலர்ந்தது. சிந்து வெளி வரை பரவி யிருந்த குமரிநாட்டு நாகரிகம், தன் அடிச்சுவடுகளை உலகின் பிற பகுதிகளிலுள்ள தொன்முது நாகரிகங்களிலும் பதித் திருக்கிறது. இது புனைந்துரை யன்று; காலத்தால் அழிக்க முடியாத வரலாற்றுண்மை.

இவ்வுண்மை, மாந்தவியல், நிலவமைப்பியல், கடலக அகழ்வாய்வு, மொழியகழ்வாய்வு, பழங்கால எழுத்துச் சான்றுகள் ஆகியவற்றால், மேலும் உறுதிப்பட்டு வருகிறது.

படைப்புக்காலந் தொட்டு மேம்பட்டு வரும் குடியினர் எனத் தமிழர் கூறப்படுதலின், பொதுநோக்கும் அருளுணர் வும் தமிழ்ப் பண்பாட்டின் ஆணிவேராயிற்று. தமிழர்க்கு அருமறை கூற்றாக (வேதவாக்காக) விளங்கும், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் பொன்னுரை, உலகமக்க ளின்... காதுகளில் இன்னுரையாக ஒலித்துக் கொண்டிருக் கிறது.

இந்த உலகம் தழுவிய ஒட்பம் (தெளிந்த அறிவு) நாகரிகப் படிகளை முழுமையாகக் கடந்து பண்பாட்டு முதிர்ச்சியுற்ற மக்களுக்குத்தான் தோன்றும். எத்துணையோ ஆயிரத்தாண்டு (millennium) களாக, அமைதியான அரசியலின் கீழ் அறநெறி தவறாமல் வாழ்ந்த மக்களாக, குமரிநாட்டு மாந்தர் வாழ்ந்திருக்க வேண்டும் என்பதையும் இது காட்டுகிறது.

கடல் கொண்ட குமரிநாட்டு அமைப்பு, அங்கு வளர்ந்த நாகரிகம், அந்நாகரிகம் உலகின் பிற பகுதிகளில் பரவிய முறை ஆகியவை இந்நூலுள் கூறப்படுகின்றன. சிந்துவெளி நாகரிக நகரங்களில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகளால் வெளிப்பட்டுள்ள உண்மைகள் குமரிநாட்டு மக்களின் வாழ்வியலை ஒத்திருப்பது விளக்கப் பட்டிருக்கிறது.

அண்மையில் சிந்துவெளி எழுத்துக்களைப் பற்றி வெளி வந்த 'The massage of Indus valley Script' என்னும் நூலில் பேரா. சக்கரவர்த்தி என்பவர், சிந்து வெளி மக்கள் பேசிய மொழி சூரசேனி பிராகிருதத்தைச் சார்ந்தது என்கிறார். பிராகிருதம் தமிழின் திரிமொழி என்பதும், தமிழ்மொழியும் பிராகிருத மொழி என அழைக்கப்பட்டிருக்கிறது என்பதும் அறியத்தக்கது. மறைக்கப்படாத உண்மைகள் வேறுபட்ட உள்ளங்களையும் ஒன்றாக்கி விடும்.

ஆதலால், இந்நூல் உலக ஒற்றுமையுணர்வினை வளர்த்தற்கு மிகச்சிறிய அளவிலாயினும் உறுதுணையானால், அதுவே நூலின் பயனாகும்.

இந்நூலைச் செப்பமுற வெளியிடப் பெருமுயற்சி மேற்கொண்ட சேகர் பதிப்பகத்தாருக்கும், ஏற்ற அணிந்துரை வழங்கியருளிய மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரா. மதிவாணன்.

# உள்ளடக்கம்


தொடக்கவுரை 9

## முதற்பகுதி

1. முந்து இலெமூரியா 15
2. இலெமூரியா - பெயர்க்காரணம் 20
3. இயற்கையின் அச்சுறுத்தல் 23
4. உயிரினப் படிமுறை வளர்ச்சி 26
5. இலெமூரியா படிமுறை (பரிணாம) வளர்ச்சியின் பிறப்பிடம் 34
6. கல்லும் எலும்பும் சொல்லும் கதைகள் 38

## இரண்டாம் பகுதி

7. இலெமூரியத் தலைநிலத்தில் மாந்தரினப் படிமுறை வளர்ச்சி 47
8. நாகரிக வளர்ச்சியின் அடிப்படை 63
9. போரும் போராட்டமும் முன்னேற்றத்தின் முதற்படிகள் 70

## மூன்றும் பகுதி

10. குமரி நாட்டு மாந்தரினம் 76
11. மூன்தோன்றி மூத்தகுடி 89
12. கடலக அகழ்வாய்வு 100
13. மொழி யகழ்வாய்வு 107

## நான்காம் பகுதி


| | | |
|---|---|---|
| 14. | குமரிக்கண்ட அமைப்பு | 117 |
| 15. | குமரிக்கண்ட நாகரிக முதன்மையர் | 127 |
| 16. | பழந்தமிழரின் நிலவழிச் செலவுகள் | 141 |
| 17. | வளி தொழிலாண்ட உரவோர் | 146 |
| 18. | பல்வேறு நாட்டுத் தொன்முது நாகரிகங்கள் | 162 |


## ஐந்தாம் பகுதி


| | | |
|---|---|---|
| 19. | பிறநாடுகட்கு நாகரிகக் கொடையாளர் | 167 |
| 20. | குடியேற்ற நாடுகளும் சிந்துவெளி நகரங்களும் | 175 |
| 21. | தொழில் வளமும் கல்விச் செல்வமும் பெருக்கிய தோன்றலர் | 215 |


## ஆறும் பகுதி


| | | |
|---|---|---|
| 22. | நாவலந் தண்பொழில் தமிழ்வேந்தர் | 223 |
| 23. | வட தமிழ் | 233 |
| 24. | இந்திய வரலாற்றின் தொடக்கம் | 243 |
| 25. | உலகளாவிய உறவு | 247 |
| | கருவி நூற்பட்டி | 257 |
| | Bibliography | 258 |
| | சொல்லடைவு (Index) | 259 |
| | பிழைதிருத்தப்பட்டி | 267 |

# தொடக்கவுரை

உலகத்தில் உயிரினம் தோன்றி வளர்ந்த வரலாற்றின் திறவு கோலாக இலெமூரியா பெருநிலத்தின் வரலாறு விளங்குகிறது.

இலெமூரியா பெருநிலத்தைப் பற்றியும் மொகஞ்சதாரோ, அரப்பா, உள்ளிட்ட புதையுண்ட நாகரிகங்களைப் பற்றியும் பல நூல்கள் வெளிவந்துள்ளன. எனினும், மனிதனின் தோற்றத்திலிருந்து சீரிய நாகரிக வாழ்வுவரை அமைந்த வளர்ச்சிப் படிகளில் தமிழர் நாகரிகம் உலக நாகரிகத்திற்கு எந்த அளவு உதவியிருக்கக் கூடும் என்பதை அறியும் பொருட்டு **"இலெமூரியா முதல் அரப்பா வரை"** என்னும் தலைப்பில் நூல் ஒன்று எழுத விரும்பினேன். அவ்வெண்ணம் இந்நூல் வாயிலாகச் செயல் வடிவம் பெற்றுள்ளது.

வரலாற்றுக்கு மிக மிக முந்திய காலத்தைப் பற்றி எழுதுவது என்பது பல்வேறு அறிவியல் துறை ஆராய்ச்சி முடிவுகளின் அல்லது கண்டு பிடிப்புகளின் அடிப்படையில் தான் இயலும். ஆதலால் வெகு அண்மைக் காலம் வரையில் கடலுள் மறைந்த குமரிக்கண்டம் தொடர்பாகவும் மண்ணுள் மறைந்த மொகஞ்சதாரோ தொடர்பாகவும்

வெளிவந்துள்ள செய்திகளை ஓரளவுக்குத் தொகுத்துத் தமிழர் வரலாற்ரேடு தொடர்புபடுத்தித் தந்துள்ளேன்.

அண்மைக்காலத்தில், மொழியகழ்வாராய்ச்சி (Language archaeology), வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட வரலாறுகளைத் தெரிவிக்கும் ஆற்றலுள்ளது என்று தெரிய வந்துள்ளது. இதனை யொட்டி மிகப் பழங்கால மாந்தர் வரலாற்றை அறிய ஒவ்வொரு மொழியிலும் உள்ள சொற்கள் எந்த அளவுக்கு உதவக்கூடும் என்பதையும் ஆய்ந்துள்ளேன்.

அடுத்தடுத்து ஏற்பட்ட கடல் கோள்களால் தமிழ் மக்கள் வடஇந்தியாவில் கி. மு. 6000 க்கு முன்பே குடியேறி யிருத்தல் கூடும் என்பதால் சிந்துவெளி நாகரிகம் தமிழருடையதே என்பதில் ஐயமில்லை. மொகஞ்சதாரோ, அராப்பாவில் காணப்பட்ட நாகரிகம் எகிப்து, சுமேரிய நாகரிகங்களைத் தோற்றுவித்தது. தமிழரின் நிலவழி, கடல் வழி வணிகமே நாகரிகத்தைக் கடல் கடந்த நாடுகளிலும் நிலவழித் தொலை நாடுகளிலும் பரப்பியிருக்கிறது.

யவனர், அராபியர், சீனர், எகிப்தியர், சுமேரியர் ஆகிய பன்னாட்டவரையும் தமிழர் வாழ் நிலமாகிய குமரிக்கண்டப் பகுதிகள், தமிழகம், கிழக்கிந்தியத் தீவுகள் ஆகியவை கவர்ந்துள்ளன. 'கடல் நீராலும் காட்டாற்று மண்ணாலும் புதையுண்ட தமிழரின் நாகரிக வரலாற்றை முறையாக உலகிற்குக் காட்டவேண்டியது இன்றியமையாததாகிறது.

தமிழன் வரலாற்றைச் சொல்லும் நூல்கள் கடலுள் மூழ்கின; நகரங்கள் அழிந்து விட்டன. வேறு எதனைச் சான்ருகச் சொல்வது என்று வருந்திய நேரத்தில், மேலை நாட்டு அறிஞர்களுள் பலர் முன்வந்து இலெமூரியா, மொகஞ்சதாரோ உண்மைகளை வெளிப்படுத்தியிருப்பது ஊக்கமும்

பெருமையும் கொள்ளத்தக்கதாகும். வரலாற்றடிப்படையான உண்மைகளைத் தெளிவாகக் கூறுவதற்கு வரலாற்று மூலங்கள் கிடைக்க வேண்டும்.

வரலாற்று மூலங்கள்

1. தொல் பொருள்கள் (Antiquities)
   (அகழ்வாராய்ச்சியாலும் பிற வகைகளாலும் கிடைக்கும் பழங்காலப் பொருள்கள்)
2. இலக்கியமும் வரலாறும்
   (கல்வெட்டு, பயணக் குறிப்பு, நாட் குறிப்பு (Diary), வெட்டெழுத்து (Epigraph), பட்டயம் ஆகிய நூல்களும் இதில் அடங்கும்.)
3. செவிவழிச் செய்திகள் (Traditions)
4. தொல் கதைகள் (புராணங்கள்) (Legends)
5. பழக்க வழக்கங்கள்
6. மொழிநூற் சான்றுகள் (Philology)
7. நிலவமைப்பியல் சான்றுகள் (Geological Evidence)
8. கடல்நூல் சான்றுகள் (Oceangoraphic evidence)
9. மாந்தவியல் (Anthropology)
10. குலமரபியல் (Ethnology)
11. நில நூல் (Geography)

மேற்கண்ட வரலாற்று மூலங்களின் துணையால் குமரிக் கண்ட மாந்தரின் நாகரிக வளர்ச்சி நிலைகள் நமக்குப் புலப்படுகின்றன.

நாகரிக வளர்ச்சி நிலைகளுக்கு ஏற்பவும் உலக உயிரினப் படிமுறை வளர்ச்சிக்கு (Evolution) ஏற்பவும் ஐந்து காலப் பிரிவுகள் வகுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

ஐந்து கோடி முதல் ஐந்து இலக்கம் ஆண்டு வரையுள்ள காலம் முந்து இலெமூரியா காலம் எனவும், ஐந்து இலக்கம் முதல் 10,000 ஆண்டுவரையுள்ள காலம் இலெமூரியா காலம் எனவும் ஒரு மதிப்பீடாகப் பிரிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய காலம் குமரி நாட்டில் நாகரிகம் மலர்ந்து சிந்துவெளியில் பரவிய காலமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

500 கோடி ஆண்டுகளுக்கு முன்பு
உலகம் தோன்றியது.
80 கோடி ஆண்டுகளுக்கு முன்பு
உயிர் தோன்றியது.
40 இலக்கம் ஆண்டுகளுக்கு முன்பு
குரக்கு மாந்தன் தரையில் நடந்தான்.
5 இலக்கம் ஆண்டுகளுக்கு முன்பு
முதற் கற்காலம் தொடங்கியது.
50,000 ஆண்டுகளுக்கு முன்பு
குமரிக் கண்டத்தில் நாகரிகம் அரும்பியது.
5,000 ஆண்டுகளுக்கு முன்பு
சிந்துவெளியில் நாகரிகம் செழித்திருந்தது.

அதே காலத்தில் தமிழகத்துக் குமரியாற்றங்கரையிலும் நாகரிகம் செழித்திருந்தது.

சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் மறைந்துபோன குமரிக் கண்டத்திலிருந்த 49 நாடுகளைப் பற்றியும் குமரி மலைத்தொடர், பன்மலைத் தொடர், குமரி யாறு, பஃறுளியாறு, தென்பாலிமுகம், கொல்லம் ஆகிய வற்றைப் பற்றியும் விளக்கமாகக் கூறுகிறார். இவர் கூறும் விளக்கத்திற்கு ஏற்ப, குமரி நாட்டின் படம் வரைந்து புதிதாகச் சேர்த்துள்ளேன். அரபிய வணிகரும், எகிப்து

சுமேரிய எழுத்துச் சான்றுகளும் புராணங்களும் (Legends சுட்டும் தீவுகள் பல.

குமரிக்கண்டம் கடல் கொண்ட பின்னும் கி. மு. 3000 முதல் கி.மு. 1000 வரையிலும் சில தீவுகள்-இக்காலத்திற்குப் பின்னுங்கூட - இந்தியப் பெருங்கடலில் இருந்தமைக்கு அவை சான்று பகர்கின்றன. பன்னாட்டுக் கடல் வணிகரின் குறிப்புகளுக்கிடையே எஞ்சிய குமரி நாட்டுத் தீவுகளின் படமும் புதிதாக வரைந்து சேர்க்கப்பட்டுள்ளது.

உபேரி, ஒன்னசு, செங்கோன், காய்சினவழுதி, கடுங்கோன், நெடியோன், முடத்திருமாறன், வெண்டேர்ச் செழியன், செம்பியன் (சிபி),மனு,முதுகாந்தன் (முசுகுந்தன்) மந்தாதா முதலிய தமிழ் மன்னர்கள் குமரிக்கண்ட தென் மதுரையிலிருந்து மொகஞ்சதாரோ காலத்ினூடே வட மதுரைக்கு அப்பால் இருந்த தமிழ் நிலம்வரை வாழ்ந்திருக்கிறார்கள். உலக முழுதும் பரவிய மாந்தரின் ஆலமரத்தின் அடிமரமாக விளங்கியிருக்கிறார்கள். அடிமரத்தின் வரலாறு புதிய விழுதுகளுக்கும் தெரியவேண்டும். இல்லாவிடின் வித்தின்றியே ஆலமரம் தோன்றி வளரும் என்பார் என்பதற்காகக் குமரிக் கண்ட தமிழ் மரபை அறிமுகப் படுத்தியிருக்கிறேன். ஊக்கும் சான்றோர்க்கு நன்றியுடையேன்.




BOOK: PRE HISTORIC SOUTH INDIA
Sri William Mayer Lectures, 1950-51
AUTHOR: V.R. Ramachandra Dikshitar M.A.,
Published by University of Madras - 1951

# முதற் பகுதி

**முந்து இலெமூரியா காலம் :**

*10 கோடி ஆண்டு முதல்*
*5 கோடி ஆண்டு வரை*

## 1. முந்து இலெமூரியா

*இந்தியப் பெருங்கடல்* **(Indian Ocean)** *முழுவதும் நிலப் பரப்பாக இருந்து ஆப்பிரிக்கா, இந்தியா, மலேயா, ஆத்தி ரேலியா ஆகிய நிலப்பரப்புகளையும் உள்ளடக்கி நின்ற மாபெரும் நிலப்பரப்பு ஒருகாலத்திலிருந்தது. அதற்குக் கோண்டுவானு அல்லது முந்திய இலெமூரியா என்பது பெயர்.*

*ஐந்து கோடி ஆண்டிலிருந்து பத்து கோடியாண்டு அளவில் கோண்டுவானு பெருங்கண்டம் இருந்தது என்றும் அது அளவில் சிறுத்தது அல்லது பல கண்டங்களாகப் பிரிந்தது என்றும் கூறுவர். கண்ட இடப் பெயர்ச்சிகள்* **(Continental drifts)** *வழக்கமாக நிகழ்ந்து வந்ததே நில அமைப்பின் மாற்றங்களுக்குக் காரணமாகும்.*[1]

*இவ்வுலகம் தோன்றி 500 கோடி ஆண்டுகளாகின்றன.*[2] *இதில் உயிரினம் தோன்றி 80 கோடி ஆண்டுகளாகின்றன.*

---

**1. Geology and oceanography tell us that earth's crust rises and falls that seas and oceans alternately advance on the land and retreat,**

**The Riddles of three oceans (page-21.)**

2. *தமிழக வரலாறு. தமிழக அரசு வெளியீடு (1975)*




நன்றி: பன்மொழிப் புலவர் க. அப்பாதுரை குமரிக் கண்டம் அல்லது கடல் கொண்ட தென்னாடு. கழக வெளியீடு-1972.

S.W. Scott Elliot - The last Lemuria, Published by London Thiosophical Publishing Society, 161, New Bond Street, W-1904.

கடந்த 10 கோடி ஆண்டுகளாகத் தென்னிந்தியா கடலுள் மூழ்கவில்லை. தமிழக மலைப்பாறைகள் 70 கோடி ஆண்டு கட்கு முற்பட்டவை. 5 கோடி ஆண்டுகளுக்கு முன்பு விந்திய மலைக்கு வடக்கே இமயமலை உட்பட கடலுள் மூழ்கி யிருந்தது. நண்ணிலக் கடலும் (மத்தியத் தரைக்கடலும்) பசுபிக் கடலும் இவ்வழியாக இணைந்து சைபீரியா வரை கடலாக இருந்தது.

கடந்த கால நில அமைப்பு, வரலாற்றில் மாபெரும் மாற்றங்களை உண்டாக்கிக் கடலை நிலமாகவும் நிலத்தைக் கடலாகவும் தலைகீழாக்கிய 3 பேரூழிகள், முறையே அறுபது கோடி ஆண்டுகளுக்கு முன்பு ஒருமுறையும், இருபது கோடி ஆண்டுகளுக்கு முன்பு ஒரு முறையும், 6½கோடி ஆண்டுகளுக்கு முன்பு ஒருமுறையும் ஏற்பட்டன. இதைத் தவிர கண்டங் களின் அமைப்பைமட்டும் மாற்றிய நிலநடுக்கங்கள், வெள்ள ஊழிகள், எரிமலைக் குமுறல்கள் எண்ணிறந்தவை.

நமக்குத் தெரிந்தவரை நிலநூலாரின்கூற்றுப்ப டிஆஸ்த்தி ரேலியா கி. மு. 18 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தனிக் கண்டமாகப் பிரிந்தது என்றும், இங்கிலாந்து கி. மு. 6 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஐரோப்பாவிலிருந்து பிரிந்தது என்றும், இலங்கை கி. மு. 2300-ல் தமிழகத்திலிருந்து பிரிந்தது என்றும் கூறப்படுகிறது.

இலெமூரியா அல்லது குமரிக்கண்டம் எனப்படும் பெரு நிலப்பரப்பு நால்வகை அமைப்புள்ளதாக இருந்திருக்கிறது.[1]

### குமரிக்கண்ட நால் நிலைகள்

1. ஆப்பிரிக்காவொடும் ஆத்திரேலியாவொடும் கூடிய பழம் பாண்டிநாடு (கோண்டுவானா எனப்படும் முந்து இலெமூரியா)

---

1. தமிழர் வரலாறு: பக்கம் 5. ஞா. தேவநேயப்பாவாணர்

இலெமூரியா எனும் குமரிக்கண்டத்தின் இடைக்கால நிலை




நன்றி திரு. ஞா. தேவநேயப் பாவாணர் எழுதிய ஒப்பியன் மொழிநூல்-1940 முதன்மடலம். திரவிடம். முதல் பாகம் (தமிழ்)
அதில், "By kind permission of the Editor, July 29, 1934 (Illustrated weekly)" எனும் குறிப்பு உள்ளது.

2. ஆப்பிரிக்கா நீங்கிய பழம் பாண்டிநாடு

3. ஆத்திரேலியா நீங்கிய பழம் பாண்டி நாடு

4. சிறிதுசிறிதாய்க் குறைந்து வந்த பழம் பாண்டிநாடு.

எக்கேல் என்பவர் இந்தியப் பெருங்கடல், ஒரு காலத்தில் சந்தாத் தீவுகளினின்று தொடங்கி ஆசியாவின் தென்கரை வழியாய் ஆப்பிரிக்காவின் கீழ்க்கரை வரைக்கும் பரவியிருந்த ஒரு கண்டமாயிருந்தது என்கிறார்.

## 2. இலெமூரியா - பெயர்க் காரணம்

கிளேற்றர் என்பவர் இக்கண்டத்தில் இலெமூர் எனும் குரங்கினம் வாழ்ந்திருந்ததால் இதனை இலெமூரியா என்று பெயரிட்டழைத்தார். இக்கண்டம் மனிதனின் பிறந்தகமாயிருந்திருக்கக் கூடுமாதலின் முதன்மையானதாய்க் கருதத்தக்கது என்று கூறுகின்றார்.[1]

இலெமூர் என்னும் குரங்கு ஏன் அப்பெயர் பெற்றது என்பதற்குக் கீழ்க்கண்ட காரணம் கூறுவர்.

இலெமூர் குரங்கு இரவில் இரைதேடித் திரியும் இயல்பினதாக இருந்ததால் பேய்க்கு ஒப்பாகக் கருதப்பட்டது. இலத்தீன் மொழியில் இலெமூர்ஸ் என்றால் இறந்தோர்களின் ஆவி என்பது பொருள். உரோமர்கள் ஆண்டுதோறும் மே மாதம் 7, 11, 13 ஆம் நாள்களில் இலெமூரியா (Lemuria) என்னும் விழா கொண்டாடினர். அவ்விழாவில் தீய ஆவிகள் ஓட்டப்பட்டன.

கிறித்தவ விவிலிய நூலில் மனிதனின் பிறப்பிடமாகக் கூறப்படும் ஏதேன் (Eden) தோட்டம் இயற்கை வளம்மிக்க

---

1. C. T. S. I. Vol. I. பக்கம் 20.

குமரிக்கண்டமாகவே இருக்கவேண்டும் என்று மொழிஞாயிறு பாவாணர் கூறுகிறார். ஏனெனில் மனித இனத்தின் தோற்ற காலத்தில் ஏதேன் தோட்டம் இருந்ததாகச் சொல்லப்படும் மொசபதேமியா கடலுக்குள் இருந்திருக்கவேண்டும். நண்ணிலக்கடல் (**Mediterranean**) நேரே கிழக்கு நோக்கி நீண்டு பசிபிக் கடலோடு கலந்திருந்ததால், அக்காலத்தில் ஆசிய ஐரோப்பாக் கண்டத்தின் பெரும்பகுதி கடலாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இலெமூரியா எனப்படும் குமரிக்கண்டத்திலிருந்து ஆப்பிரிக்கா மட்டும் பிரிந்து ஆத்திரேலியா பிரியாத காலத்திலேயே மாந்தரினம் தோன்றிக் கற்கால வாழ்வு தொடங்கியிருக்க வேண்டும். மேற்றிசையில் மட்டும் கடலிருந்ததனால்தான் தமிழர் பண்பாட்டில் கடல் தெய்வமான வருணனை மேற்றிசைக்குரிய தெய்வமாகவும், கடல்கோளால் குமரிக் கண்டத்தின் தென்பகுதிகள் சிறிது சிறிதாகக் கடலுக்குள் மூழ்கி வந்ததால் கூற்றுவன் (எமன்) தென் திசைக் கடவுளாகவும் கருதப்படுதலைக் காண்கிறோம்.

குமரிக்கண்டத்தின் மேற்கில்தான் முதன் முதல் கடல் தோன்றியிருக்க வேண்டும் என்பதற்குப் புறநானூற்றிலும் நமக்குச் சான்று கிடைக்கிறது.

பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியைக் காரிக் கிழார் பாடிய பாடலில் கடலினுள் மூழ்கிய குமரியாற்றைக் குறிப்பிடுகிறார். அந்த ஆற்றைத் தெற்கெல்லையாகக் குறிப்பிட்டவர், மேற்குக் கடலைத் 'தொன்று முதிர் பௌவம்' என்கிறார்.

குணாஅது கரை பொரு தொடுகடல் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்

(புறம்—6)

மேற்குக் கடலான அரபிக் கடல் மிகப் பழைய கடல் என்பதிலிருந்தே நமக்கு வருணன் மேற்றிசைக் கடவுளாகக் கருதப்பட்டதன் காரணம் தெரிகிறது.

தமிழ்மக்கள் எல்லாருடைய நாவிலும் தொன்று தொட்டு இயல்பாக வழங்கிவரும், 'என்ன முழுகிப்போய் விட்டது', 'அவன் கரைதேறுவானு' என்னும் பழமொழிகள் கடலால் பட்ட துன்பங்களை விளக்கிக் காட்டுகின்றன.

குமரிக்கண்டத்தின் வடிவ மாற்றங்கள் கடல்கோள் களால் வரையப்பட்ட காலத்தின் ஓவியங்களாக நிலைத்து விட்டன.

# 3. இயற்கையின் அச்சுறுத்தல்

நிலப்பரப்பில் பல்வேறு காலங்களில் வாழ்ந்த உயிரிகள் வெள்ளஊழி, பனியூழி (glacier period) நிலப்புடை பெயர்ச்சி (continental drift), எரிமலை, நிலநடுக்கம், பெருங் காற்று, பெருமழை ஆகிய இயற்கையின் சீற்றங்களைத் தாங்கி ஈடு கொடுத்து வாழவேண்டியிருந்தது.

## வெள்ளஊழி

கடல்மட்டம் உயர்ந்து நிலப்பகுதிகளை மூழ்கடிப்பதை வெள்ளஊழி என்பர். இரு துருவங்களிலுமுள்ள பனிப்பெரும் படலங்கள் (glacier) உருகுவதால் கடல்மட்டம் உயர்ந்து வெள்ளஊழி தோன்றும். உலகத்தின் உட்கொதிநிலை வேறு பாட்டின் காரணமாகத் தோன்றும் நில நடுக்கத்தால் நிலப் பகுதி தாழ்ந்து கடலின் அடிப்பகுதி மேலெழும்புவதாலும் வெள்ளஊழி ஏற்பட்டு நிலப்பகுதிகளை மூழ்கடிக்கும். இத் தகைய வெள்ளஊழிகளால் ஏற்பட்ட அச்சத்தால் கடலை வருணன் என்னும் தெய்வமாகக் குமரிக்கண்ட மக்கள் வழி பட்டனர் என்றும், அக்காலத்தில் மேற்றிசையில் மட்டும் கடலிருந்ததால் அத்தெய்வத்தை மேற்றிசைத் தெய்வ மாகக் கொண்டனர் என்றும் கூறுவர். இப்பொழுது கூட

தென்துருவ பனிப்படலம் உருகினால் கடல்மட்டம் 66மீட்டர் உயர்ந்துவிடும் என்று அறிவியலார் கூறுகின்றனர்.

## நிலப்புடை பெயர்ச்சி
## (Continental Drift)

நிலப்புடை பெயர்ச்சி என்பதைக் 'கண்ட நகர்வுக் கொள்கை' (continental Drift Theory) என்றும் கூறுவர்.

கடலால் சூழப்பட்ட பெருநிலப் பகுதிகள் நிலநடுக்கம் அல்லது உலகத்தின் உட்கொதியால் உந்தப்பட்ட புறணிப் பாறை நெகிழ்வு விலகல்களின் காரணமாகத் தாமாக நகர்ந்து செல்வதுண்டு. தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா ஆகியவை அப்படி விலகிச் சென்ற நாடுகளாகும். ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்து ஐரோப்பாவிலிருந்து பிரிந்து விட்டது.

இவ்வாறு கண்டங்கள் நகர்வதைக் குமரிக் கண்ட மாந்தர் அறிந்திருந்தனர். இதனை அவர்கள் 'நிலம்புடை பெயர்தல்' என்னும் தகுந்த சொற்றொடரால் குறித்தனர்.

'நிலம்புடை பெயர்வதாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி யில்லென

'நிலம் பெயரினும் நின்சொற் பெயரல்'

என்னும் சங்கச் செய்யுட்களின் அடிகள் 'கண்ட நகர்வு'களைக் கண்டறிந்த தமிழ்மக்களின் பட்டறிவை (அனுபவத்தை) நமக்குத் தெரிவிக்கின்றன.

## பனியூழி
## (glacier period)

உலகில் ஏற்பட்ட பெரும் பனியூழிகளில் 12,000 ஆண்டு களுக்கு முன்பு ஏற்பட்டது இறுதியானது. அப்போதுதான்

குமரிக்கண்டம் கடல் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். இது ஒரே நாளில் ஏற்பட்ட அழிவன்று. துருவப்பகுதிகளிலிருந்த பனிப் பெரும் படலங்கள் உருக உருக மெதுவாகக் கடல் மட்டம் உயர்ந்து வந்தது. ஆதலால் குமரிக் கண்ட மக்கள் தப்பித்து வேற்று நாடுகளுக்குச் செல்ல, போதிய கால இடை வெளியிருந்திருக்கும்.

# 4. உயிரினப் படிமுறை வளர்ச்சி

உலகம் தோன்றிய புதிதில் பலகோடி ஆண்டுகளாகப் பெருங்காற்று வீசிக் கொண்டிருந்தது. அதன் பிறகு தொடர்ந்த மழையாலும் படர்ந்த பனிப் படலங்களாலும் நிலம் குளிர்ந்து கடல்கள் உருவெடுத்தன. நீரில்தான் முதன் முதல் ஒற்றைச் செல் உயிரி தோற்றமெடுத்தது. உலகம் தோன்றி 500 கோடி ஆண்டுகளாகின்றனவென்றும் முதல் உயிரி தோன்றி 80 கோடி ஆண்டுகளாகின்றனவென்றும் அறிவியல் அறிஞர் கூறுகின்றனர்.

நீரில் தோன்றிய உயிர் மீன்களாகி, நிலத்திலும் நீரிலும் வாழும் தவளை போன்ற உயிரிகளாகி, நிலத்தில் மட்டும் வாழும் உயிரிகளாக நிலை பெறவும், புல்லாகிப் பூண்டாகிக் கொடியாகிச் செடியாகி, புதராகி, மரமாகிப் பெருங்காடு களாகிப் பொலியவும் எத்தனையோ கோடியாண்டுகள் உருண்டோடின.

உயிரினப் படிமுறை வளர்ச்சி (evolution) திடீரென்று ஏற்பட்டுவிடக் கூடிய மாற்றமன்று. மிகமெதுவாக உயிரினங் களின் படிமுறை வளர்ச்சியில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஒரு மாடு 20 ஆண்டுகள் வாழக் கூடிய உயிரியாக இருக்க லாம். ஆனால் அது மாடாகப் பிறவியெடுக்க எத்தனையோ

கோடி ஆண்டுகளாக பல்வேறு உயிரிகளிலிருந்து மெதுவாக இனமாற்று வளர்ச்சி பெற்று வந்திருக்கிறது.

## திருவாசகத்தில்

## உயிரினப் படிமுறை வளர்ச்சி

உயிரினப் படிமுறை வளர்ச்சியைத் திருவாசகத்தில் மணிவாசகர் சற்றேறப்ப அறிவியலுக்கேற்பவே வரன்முறைப் படுத்திக் கூறுவது வியப்பளிக்கிறது. அறிவியலார் ஒற்றைச் செல் (Proto Plasm) தான் முதல் உயிரினத்தின் அடிப் படைத் தோற்றம் என்கின்றனர். மணிவாசகர் புல்லி லிருந்து உயிரின வளர்ச்சியைத் தொடங்குகிறார்.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்"

[திருவாசகம்—சிவபுராணம்]

நீரில்தான் முதலில் உயிர் தோன்றியது. அது நிலத்தில் காலூன்றியபோது வேரூன்றிய நிலைத்திணை (தாவரம்) களாகிவிட்டது. நீரில் நீந்தியபோதும் நிலத்தில் தவழ்ந்த போதும் இயங்குதிணையான உயிரி (பிராணி) களாகிவிட் டன என்பது மணிவாசகப் பெருமானின் கருத்தாக உய்த் துணரக் கிடக்கிறது.

புல், பூண்டு, மரம் ஆகியவை வித்திலிருந்து தோன்று வன. பறவை, பாம்பு ஆகியவை முட்டையிலிருந்து பிறப் பன. வித்துக்களெல்லாம் மரஞ்செடி கொடிகளின் முட்டை களே. பாலூட்டிகளான (Mammals) விலங்குகளெல்லாம் தம் வயிற்றியிலேயே முட்டையைப் பொரித்து குட்டிபோடு

கின்றன. கல்லினுள் பொரித்த முட்டை, தேரை (சிறுதவளை) யாய் பிறவியெடுக்கிறது. கருவிலே திருவுற்ற உயிர் மனிதராகிறது- மனிதப்பிறவியோடு உயிரினப் படிமுறை வளர்ச்சியை அறிவியலார் நிறுத்திக்கொள்கின்றனர்.

மனிதரில் தேவராபவர், அரக்கராபவர், பேயாய் மாறுபவர், ஞானம் கைவரப்பெற்று பிறவாப் பேரின்பம் எய்தும் முனிவராபவர் என மணிவாசகர் உயிரினப் படிமுறை வளர்ச்சியை மனிதரிலிருந்து முனிவரில் கொண்டுபோய் நிறுத்துகின்றார்.

குரங்கின வளர்ச்சிப் படிமுறை

உலகத்திலுள்ள நீரி (நீர்வாழ்வன), ஊரி (ஊர்வன), பாலூட்டி, பறவை எனும் உயிரிகளில் பாலூட்டிகளான (mam-mals) இனத்தைச்சார்ந்த குரங்குகளின் படிமுறை வளர்ச்சியில் இனமாற்றம்பெற்று வளர்ந்தவன் மனிதன். பாலூட்டிகள் பெரும்பாலும் நாற்காலுயிரிகள் எனப்படும். மரஅணில், இலெமூர்குரங்கு, வாலில்லாத சிறியகுரங்கு, ஐவிரல் குரங்கு, புத்துலகக் குரங்கு, பழைய உலகக் குரங்கு, மாந்தக் குரங்கு என்பவை குரங்கின வளர்ச்சிப் படிமுறையில் பல கோடி ஆண்டுகளாக இனமாற்றம் பெற்று வளர்ந்தவை. படிமுறை வளர்ச்சியில் குறிப்பிட்ட காலத்தில் முந்தைய உயிரிடமிருந்து பெற்ற அதே வடிவத்தில் மேற்கொண்டு மாற்றமின்றி நிலைத்து விட்ட உயிரியை இனமாற்றம் பெற்ற உயிரி எனக் குறிப்பிடலாம்.

1. மர அணில்
   (Tree Shrewds)

மர அணில் வடிவில் மிகச் சிறியது. நீண்ட எலியைப் போன்று கூர்மையான மூக்கோடு அணிலைப்போல் மரத்தில்

ஏறி வாழ்ந்தது. இது குரங்கினத்துக்கு முந்தைய மூதாதை யாகக் கருதப்படுகிறது. இது 10 கோடி ஆண்டுகளுக்கு



முன்பு வாழ்ந்திருந்தது. இதிலிருந்துதான் இலெமூர் என்னும் குரங்கு இனமாற்றம் பெற்றது.

## 2. இலெமூர்

**(lemur)** (சற்றேறப்ப 7 கோடி ஆண்டுகளுக்கு முன்)

இலெமூர் என்னும் குரங்கு ஓரடி உயரமிருந்தது. வளைகோடுகளுள்ள வாலுள்ளதாக இருந்தது. மடகாசுகர் தீவில் இக்குரங்கு வாழ்ந்ததற்கான சான்று கிடைத்துள்ளது. இந்தியப் பெருங்கடலுள் மறைந்த இலெமூரியாவில் இக் குரங்குகள் ஏராளமாக வாழ்ந்திருந்ததால் அக்கண்டத்தை இலெமூரியாக் கண்டம் என்னும் பெயரிட்டு அழைத்தனர்.

இது 7 கோடி ஆண்டுகளுக்கு முன்பு, இலெமூரியாவில் வாழ்திருந்தது.

இந்த இலெமூர்குரங்கு இரவில் உணவுதேடும் இயல்பினது (nocturnal mammal) என்பர். இதிலிருந்துதான் வாலில்லாத



லொரைசஸ் (lorises) என்னும் குரங்கு இனமாற்றம் பெற்றது.

வாலில்லாத சிறிய குரங்கு

(lorises) (சற்றேறப்ப 6 கோடி ஆண்டுகளுக்கு முன்)

லொரைசஸ் எனப்பட்ட வாலில்லாத சிறிய குரங்கு வடிவில் சிறியது. இது நடு ஆப்பிரிக்காவிலும் கம்போடியா, இந்தோனேசியா பகுதிகளிலும் வாழ்ந்திருந்ததற்கான சான்று கிடைத்துள்ளது.

இக் குரங்கிலிருந்து ஐவிரல் குரங்கு எனப்படும் 'தார்சியர் குரங்கு' இனமாற்றம் பெற்றது.

ஐவிரல் குரங்கு

(Tarsier) (சற்றேறப்ப 5 கோடி ஆண்டுகளுக்கு முன்)

தார்சியர் எனப்படும் ஐவிரல் குரங்கு கிழக்கிந்தியத் தீவுகளில் வாழ்ந்திருந்ததற்கான சான்று கிடைத்துள்ளது. மரக்கிளைகளை உறுதியாகப் பற்றிக் கொள்வதற்கேற்ற வகை



யில் இக்குரங்கின் கையிலும் காலிலும் விரல்கள் சற்று நீண்டு வளர்ந்திருந்தன. விரல்நகம் தட்டையாயிற்று. விரல் மடிப்புகள் சீராக அமைந்தன.

இக் குரங்கிலிருந்துதான் புத்துலகக் குரங்குகள் இனமாற்றம் பெற்றன.

புத்துலகக் குரங்குகள்

(New world monkeys) (4 கோடி ஆண்டுகளுக்கு முன்)

புத்துலகக் குரங்குகள் என்பவை நாம் மரங்களில் காணும் சிறிய குரங்குகளைப் போன்றவை.

இவை தென் அமெரிக்காவிலும் மெக்சிகோவிலும் வாழ்ந்திருந்தன என்பர். இக்குரங்குகள் வாலுள்ளவை.



இவை பலகோடி ஆண்டுகளுக்கு முன்பு இனமாற்றம் பெற்று நிலைத்து விட்டவை. இவை புது உலகமாகிய தென் அமெரிக்காவில் காணப்படுவதால் இப்பெயர் பெற்றன.

பழைய உலகக் குரங்குகள்
(old world monkeys) (3 கோடி ஆண்டுகளுக்கு முன்)



ஆப்பிரிக்கா இந்தியா உள்ளிட்ட தென்கிழக்கு ஆசியப் பகுதிகளில் இக்குரங்குகள் வாழ்ந்தன. இவை சிம்பன்சி, கொரில்லா என இனம் பெருகி, வடிவில் பருத்தும் உயர்ந்தும்

வளர்ந்தன. இவைகளுக்கு வால் இல்லை. இவையே மாந்தக் குரங்கு (Ape) தோன்றுதற்கு முந்திய உயிரிகளாக விளங்கின.

### மாந்தக் குரங்கு

**(Ape)** (3 கோடி முதல் $2\frac{1}{2}$ கோடி ஆண்டுகள் வரை)

உலகின் மனித இனம் தோன்றுவதற்கு முன் முதல் படி நிலையான நிமிர்ந்த குரக்கு மாந்தன் **(Homo erectus)** பிறவி யெடுக்க அடிப்படையாக இருந்தது மாந்தக் குரங்கு **(Ape)** எனப்படுகிறது.



ஆப்பிரிக்கா, சாலி (ஜாவா)த் தீவு ஆகிய இடங்களில் மாந்தக் குரங்கு வாழ்ந்திருந்தது பழைய உலகக் குரங்குகளி லிருந்து மாந்தக் குரங்கும், மாந்தக் குரங்கிலிருந்து நிமிர்ந்து நடந்த குரக்கு மாந்தனும் தோன்றியிருப்பதால் மனிதன் முதன்முதல் தோன்றி வளர்ந்த இடம் இலெமூரியாக் கண்டமே என்று ஆராய்ச்சி அறிஞர் கூறுகின்றனர்.

கடலக அகழ்வாராய்ச்சியின் வாயிலாக இவ்வுண்மைகள் மேலும் வலுப்பெறும்.

# 5. இலெமூரியா படிமுறை (பரிணாம) வளர்ச்சியின் பிறப்பிடம்

## உலக நாகரிகத் தொட்டில்

உலகின் எப்பகுதியில் முதன்முதல் கற்கால நாகரிகம் தொடங்கி மேற்கொண்டு நாகரிக வளர்ச்சிக்கு வழிவகுத்தது என்னும் ஆய்வில் அறிஞர் ஈடுபட்டுள்ளனர். டார்வின் கொள்கை தோன்றுமுன் மனிதன் மனிதனாகவே படைக்கப் பட்டான் என்று நம்பியிருந்தனர். உரோம நாட்டுத் தலைமைப் பாதிரியாரான உசர் (Arch Bishop ussher) என்பவர் மனிதன் உலகில் கி.மு. 4004ல் படைக்கப்பட்டான் என்று கணித்திருந்தார்.[1]

இத்தொல் கதைகளை யெல்லாம் மீறி இன்றைய அறிவியலார் உயிரின வளர்ச்சிப் படிமுறைகளை நன்கு வரையறுத்துள்ளனர். ஒரு கோடி ஆண்டுகளுக்கு முன்புவரை ஆப்பிரிக்கா குமரிக்கண்டத்தோடும் இந்தியாவொடும் ஆத்திரேலியாவொடும் இணைந்திருந்தது. அப்பொழுதே ஓரியோபிதிகஸ் (oreopithecus) எனப்படும் குரக்குமாந்தன் இப்பகுதிகளில் வாழ்ந்திருந்தான். அவன் 4 அடி உயரமும் 80 பவுண்டு எடையும் உள்ளவனாக இருந்தான்.

---

1. The Early Man- By F. Clark Howell. Page-25.

குரக்குமாந்தன் தரையில் வாழத் தொடங்கிய 50-20 இலக்கம் ஆண்டுகளில் ஆப்பிரிக்கா முழுமையாகக் குமரிக்



கண்டத்திலிருந்து பிரிந்திருந்தாலும் மேற்கொண்டு இன வளர்ச்சியடைந்ததற்கான சான்றுகச் சாலி (ஜாவா)த் தீவில் நிமிர்ந்த குரக்குமாந்தனின் எலும்பும் மண்டையோடும் கிடைத்திருப்பதால் குமரிக்கண்டமே முதல் மனித வடிவத்திற்குப் பிறப்பிடம் என்பது தெரிகிறது. இலெமூர் குரங்கிலிருந்து நிமிர்ந்த குரக்குமாந்தன்வரை, மடகாசுகர் தீவு முதல் சாலித்தீவு (Java)வரையுள்ள பகுதிகளில் அதாவது குமரிக் கண்டத்தில் தோன்றி வளர்ந்தது.

குமரிக்கண்டத்தின் மேற்குப் பகுதியில் முதன் முதல் கடல் தோன்றியது. அதன் பிறகு கிழக்கில் கடல் தோன்றி

ஆத்திரேலியா, இந்தோனேசியா நிலப்பகுதிகளைப் பிரித்தது. கீழ்க்கடல் புதிதாகத் தோன்றியது என்னும் பொருளில் இதனை 'தொடுகடல்' என்று புறநானூறும், சகரபுத்திரரால் தோண்டப்பட்டது என்று தொல்கதையும் கூறுகின்றன.

குமரிக்கண்டத்திலிருந்து மேற்றிசை (ஆப்பிரிக்கா) சென்றவர் நாகரிகமின்றி நிலைத்துவிட்டனர். கீழ்த்திசையில் வடமேற்காகச் சீனா, வடஅமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு நிலவழியாக 15—5 இலக்க ஆண்டளவில் சென்றவர்கள், தீயைப் பயன் படுத்துமளவுக்கு நாகரிகம் பெற்றவர். வட அமெரிக்காவையும் கிழக்கு ஆசியப்பகுதியையும் இணைத்த 'பேரிங் நிலப்பாலம்' (Bering land) கி.மு.12000 ஆண்டு வரை இருந்ததாகவும், கி. மு. 12,000 ஆண்டளவில் தோன்றிய பனியூழியின்போதுதான் அது மூழ்கிவிட்டது என்றும்கூறுகின்றனர். அதுவரை கிழக்காசியா வழியாக வட அமெரிக்காவுக்குச் சென்ற பழங்கற்கால மாந்தர் பல் வகை அடிப்படை நாகரிகக் கூறுகளைப் பெற்றவர். அதனால் தான் வடஅமெரிக்க சிவப்பிந்தியரின் மாயா நாகரிகத்தில் சிவ வழிபாடும் கட்டிடக்கலையும் சிறந்த கூறுகளாய் இருந்திருக்கின்றன.

அவர்கள் கி. மு. 15,000 ஆண்டுகளுக்குமுன் சென்றவர் களாயினும் அதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே குமரிக்கண்டத்தில் கட்டிடக்கலை தெய்வ வழிபாடு முதலி யவை தோன்றியிருக்க வேண்டும்.

இவை எல்லாவற்றையும்விட 35,000 ஆண்டுகளுக்கு முன்பு மத்தியகிழக்கு நாடுகளிலிருந்து ஐரோப்பாவில் குடி யேறிய ஒரு புதுவகை மாந்தரினம் அறிவாற்றலிலும் நாகரி கத்திலும் மேம்பட்டிருந்தனர். ஏனைய நாகரிகம் முதிராத இனத்தாரை அடக்கி முன்னேறினர் என்னும் கண்டுபிடிப்பு, நாகரிக ஒளியைக் கொண்டு சென்ற மாந்தரெல்லாம் குமரிக் கண்டத்திலிருந்து பலதிசைகளிலும் பரவியவர் என்பதற்குச் சான்றாகிறது.

சிந்து வெளியில் அரப்பா மொகஞ்சதாரோ நகரங்களை யடுத்து நாற்றிசையிலும் ஏறத்தாழ இருபது பெருநகர நாகரிக வாழ்விடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உலகில் தொன்முதுநாகரிக வாழ்விடங்களாகக் கருதப்படும் மொசப தேமியா, எகிப்து, மாயா ஆகிய இடங்களின் அருகில் வேறு நாகரிக வாழ்விடங்கள் காணப்படவில்லை. இதிலிருந்து சிந்து வெளி நாகரிகம் நெடுங்காலத்திற்கு முன்பே முதன் முதல் தோற்றங் கொண்டு வளர்ந்திருக்க வேண்டும் என்றும், இதன் துணைகொண்டு பிறநாட்டு நாகரிகங்கள் வளர்ந்திருக்க வேண்டும் என்றும் ஆய்வாளர் எண்ணுகின்றனர்.

சிந்துவெளியில் கற்காலக் கருவிகள் கிடைக்காமல் எடுத்த எடுப்பிலேயே செழித்துத் தழைத்த நாகரிக வாழ் விடங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதால், வேறொரு பகுதி யில் செழித்த நாகரிகத்தோடு வாழ்ந்தவர் சிந்து வெளியில் வந்து குடியேறியிருக்க வேண்டும் என்று கருத வேண்டி யுள்ளது.

சிந்து வெளியில் வாழ்ந்த முதல் நாகரிக மக்கள் எங்கிருந்து திடீரென்று வந்தனர்? உலகில் வேறெந்த நாகரிகமும் இத்துணை தொன்மை வாய்ந்ததன்று. எனவே ஐயத்திற்கிடமின்றிச் சிந்துவெளி மக்கள் கடலுள் மறைந்த குமரிக்கண்டத்திலிருந்து தான் வந்திருக்க வேண்டும் என்று கருதலாம்.

சிந்துவெளி மக்களின் மொழி, வாழ்க்கைமுறை, சிவ வழிபாடு, கடல் வாணிகம், தேர்களின் பயன்பாடு ஆகியவை குமரிக்கண்ட பழந்தமிழரின் வாழ்க்கை யமைப்போடு நெருங்கிய ஒப்புமை உள்ளவையாகும்.

12,000 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட பனியூழியில் குமரிக்கண்டத்தின் ஒருபகுதி கடல் கொள்ளப்பட்டு எஞ்சி யோர் சிந்துவெளியில் குடியேறியிருக்கலாம்!

# 6. கல்லும் எலும்பும் சொல்லும் கதைகள்

உயிரினப் படிமுறை வளர்ச்சி (பரிணமம்) எவ்வாறு ஏற்படுகிறது என்பது நெடுங்காலம் பெரும் புதிராக இருந்தது. ஒருமுறை சிறுவனொருவன் கேட்டான்:

'குரங்கிலிருந்து மாந்தன் தோன்றினன் என்று சொல்லுகின்றீர்களே, இப்பொழுதுள்ள குரங்குகள் ஏன் மனிதனாகவில்லை? விளக்கமாகச் சொல்லுங்கள்!' என்றான்.

## உச்சாணிக் கிளை

சிறிய செடி பெரிய மரமாக வளர்கிறது. வளரும்போது அதன் உச்சாணிக்கிளை உயர்ந்து கொண்டே போகிறது. பக்கக் கிளைகள் இருந்த இடத்திலேயே நின்று விடுகின்றன அவை மேனோக்கி உயர்வதில்லை.

இதைப் போன்றே உயிரினப் படிமுறை வளர்ச்சியிலும் குரங்கினங்களும் ஏனைய உயிரினங்களும் பக்கக் கிளைகளாகப் பிரிந்து வளரத் தொடங்கியவை. மனித இனம் மட்டும் உச்சாணிக்கிளை போல் உயர்ந்து கொண்டே செல்கிறது. பக்கக் கிளையிலிருந்து உச்சிக்கிளை தோன்ற முடியாது. இப்பொழுதுள்ள குரங்குகளிலிருந்து மனிதனும் தோன்ற முடியாது என்பது அச்சிறுவனுக்கு விளக்கிக் கூறப்பட்டது. மனிதன்




மாந்தரினப் படிமுறை வளர்ச்சி
(EVOLUTION OF MAN)

குரங்குகளிலிருந்து பிறந்தவனல்லன். குரங்ினத்தைச் சார்ந்த மற்றொரு விலங்கே அவனுக்கு நேர்முன்னேனாக இருந்தது என்பதும் அச்சிறுவனுக்குப் புரிந்தது.

இச்செய்திகளைப் பழங்காலப் பாறைப் படிவு (Fossil) களிலிருந்தும் அக்கால உயிரி (பிராணி)களின் எலும்புகளி லிருந்தும் அறிகிறோம்.

பாறைப்படிவு
**Fossil**

பாறைகளில் இறந்த விலங்குகளின் எச்சங்களும் (Remains of animals), அவற்றின் உடற்பகுதிகளும், ஒட்டி யிருக்கும் நிலை பாறைப்படிவு எனப்படும். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பாறைப்படிவுகள் கிடைத்துள்ளன. இத்தாலி நாட்டுக் குகையொன்றில் நியாண்டர்தால் மனிதனின் அடிச்சுவடு ஈரக்களிமண்ணில் பதிந்த அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டது. பாறைப்படிவுகளையும் எலும்புகளை யும் நன்கு ஆய்ந்து எக்கேல் என்னும் தாவரநூலறிஞர் 1867-ல் ஒற்றைச் செல் உயிரி (blob of protoplasm) முதல் மாந்தன் வரை உயிர்களின் படிமுறை வளர்ச்சியை வரை படம் வரைந்து காட்டினர்.

பாறைப்படிவுகளில் மாந்தக்குரங்கு (Fossil Ape), குரக்குமாந்தன் (Fossil preman) படிவுகள் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

உலகமுழுவதும் பல்வேறு நாடுகளில் கிடைத்த பாறைப் படிவுகளிலிருந்து தாவரங்களின் படிமுறை வளர்ச்சி, நிலத்திலும் நீரிலும் வாழும் உயிரிகளின் படிமுறை வளர்ச்சி ஆகியவை சரியாகக் கணிக்கப்பட்டுள்ளன. தொல் லியல் துறையினர்க்கு (Archaeology) புதை பொருள்களைப் போலவே பாறைப்படிவுகளும் பல உண்மைகளைத் தெரிவிக் கின்றன.




நன்றி: Fossil Man. By Michael H. Day. முந்து உயிரினம் (Primate) வாழ்ந்த எல்லை.

எலும்புகள்

மண்டையோடுகளின் அமைப்பிலிருந்து அது மாந்தக் குரங்கினுடையதா மனிதனுடையதா என்று அறிய முடியும். குரங்குகளுக்கும் மாந்தக் குரங்குக்கும் மூளை குறைவாக இருந்ததால் மண்டையோடும் குறுகிச் சிறிதாக இருந்தது.

குரக்குமாந்தனுக்கும் கற்கால மாந்தனுக்கும் மண்டையோடு, மூளைப் பெருக்கத்தின் காரணமாக நீண்டு அல்லது பரந்து பெரிதாக இருந்தது.

இடுப்பெலும்பு மூட்டு நிமிர்ந்து நின்ற உயிரிகளையும் நாற்காலுயிரிகளையும் வேறுபடுத்திக் காட்டியது.

இலெமூர் குரங்குகளுக்கு 36 பற்கள் இருந்தன. அடுத்துத் தோன்றிய குரங்குகளுக்கு 34 பற்களிருந்தன. குரக்குமாந்தனுக்கும் கற்காலமாந்தனுக்கும் 32 பற்களிருந்தன. கடைவாய்ப்பற்கள் அரைவைப் பற்களாக மாறின. அதன் விளைவாக மாந்தக்குரங்கின் கடைவாய்ப் பல்லில் நடுக்குழியைச் சுற்றி நான்கு குமிழிகளும், மனிதன் அல்லது குரக்கு மாந்தனின் கடைவாய்ப்பல்லில் y வடிவிலுள்ள நடுக் குழியைச் சுற்றி ஐந்து குமிழிகளும் ஏற்பட்டன. குரங்காயிருந்தபோது நீண்டிருந்த தாடை எலும்புகள் மனிதனாக வளர்ந்த போது குறுகியதால் மனிதனின் முகம் கூராக நீளாமல், செங்குத்தாக ஒடுங்கி அழகு பெற்றது.

மனித இனம் மேலும் வளர வளர கடைவாய்ப் பற்கள் மேலும் குறைந்து மொத்தம் 28 பற்கள்தான் வருங்கால மனிதனுக்கு இருக்கும் என்கின்றனர்.

காலத்தின் கடியாரம்

கற்களிலும் பாறைகளிலும் பதிந்துள்ள பாறைப்படிவுகள் (Fossils) காலத்தின் கடியாரம் எனக் குறிப்பிடத்

தக்கவை. தொன்முது காலத்தில் வாழ்ந்த விலங்குகளின் மண்டையோடுகள், இடுப்பெலும்பு மூட்டுகள், பற்கள், தாடைகள், கைகால் எலும்புகள் ஆகியவையும் இத்தகையனவே. பாறைப்படிவுகளும் எலும்புகளும் குறிப்பிட்ட உயிரிகள் நிலவுலகில் வாழ்ந்திருந்த காலத்தைச் சரியாகக் கணக்கிட உதவுகின்றன. அகழ்வாராய்ச்சியாளர்க்கும் வரலாற்றுராய்வாளர்க்கும் கல்லும் எலும்பும் கல்வெட்டாகவும் ஓலைச்சுவடிகளாகவும் பயன்பட்டு வருகின்றன. **Bones and Stones are Sources of History** என்னும் வழக்கு இதனால் எழுந்தது.

## காலக்கணிப்பு
## (Carbon dating or Dating process)

இயற்கையில் காணப்படும் பொருள்கள் அனைத்தும் தனிமங்களால் **(elements)** ஆனவை. அணுவிலுள்ள பல்வேறு தனிமக் கூறுகள் **(isotopes)** வெவ்வேறு அணுவெடை **(Atomicweight)** உள்ளவை. இவற்றுட் பல கதிரியக்கம் **(radioactive)** உள்ளவை. கதிரியக்கத்தால் இவை வேறு தனிமங்களாகப் பிரிகின்றன. சான்றுகக் கதிரியக்கமுள்ள கரிமம்—*14* **(carbon-14)** என்பது கரிமம்-*12* **(carbon-12)** ஆகவும் நைட்ரஜனுகவும் பிரிகிறது. இவ்வாறு பிரிந்து கொண்டே செல்லும்போது ஒருதனிமம் தன்னில் பாதி தனிமக்கூறுகளை **(isotopes)** இழக்கும் காலம் பாதிவாணுள் **(Half Life)** எனப்படும். தனிமக்கூறுகளின் பாதிவாணுளைக் கணித்தால் எப்பொருளின் ஆயுளையும் தொன்மையையும் எளிதில் வரையறுத்து விடலாம்.

எத்துணை தனிமக்கூறுகள் அழிந்தனவோ அத்துணைக் காலத்திற்கு முந்தியது அப்பொருள் எனக் கண்டு பிடிக்கலாம்.

மரம், நிலக்கரி, வண்டல், பவளப்பாறை, எரிமலைப் பாறைபோன்ற பலவகைப் பொருள்களின் காலத்தொன்மை

யறிய கார்பன்—14, தோரியம்—230, யுரேனியம்—234, ஈலியம்—4, பொட்டாசியம் 40, ஆர்கன்—40 என்னும் காலக் கணிப்பு முறைகள் பின்பற்றப்படுகின்றன.

மரத்தின் ஒரு பகுதி கற்கால மனிதனின் கருவியாகப் பயன்பட்டது எனின், அம்மரத்தின் தொன்மையை கார்பன்—11, காலக் கணிப்பு முறையின்படி கணக்கிடுவர். அதன் பாதிவாணுள் 5,730 ஆண்டுகள். அது பாதி தனிமக் கூறுகளை (Isotopes) இழந்திருந்தால் 5,730 ஆண்டுகளுக்கு முற்பட்டது. குறைவாக இழந்திருந்தால் அதன் தொன்மைக் காலம் அதற்கேற்பக் குறையும். சில பொருள்களின் பாதிவாணுள் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

| காலக் கணிப்பு முறை | ஆராயப்படும் பொருள் | பாதிவாணுள் (Half life) |
|---|---|---|
| கார்பன்—14 | மரம், நிலக்கரி, சங்கு | 5,730 ஆண்டுகள் |
| தோரியம்—230 | அடிக்கடல் படிவுகள் | 75,000 ஆண்டுகள் |
| யுரேனியம்—234 | பவழம் | 2,50,000 ஆண்டுகள் |
| குளோரின்—36 | கருங்கற்பாறை எரிமலைப்பாறை | 3,00,000 ஆண்டுகள் |

அறிவியல் துறையில் கையாளப்படும் இத்தகைய கணிப்பு முறைகள் மிகத் தொன்மையான உயிரின வரலாற்றை அறியப் பெரிதும் துணைபுரிகிறது.

## புதை பொருள் ஆராய்ச்சி எப்படிச் செய்யப்படுகிறது?

புதைபொருள் ஆராய்ச்சியை மேற்கொள்பவர்களுக்குச் சில தனித்திறன்கள் தேவைப்படுகின்றன. அறிவியல் கருவி

களின் துணைகொண்டு திட்டமிட்டுச் சோர்வின்றித் தம் பணியை ஆய்வுக் களப்பணி (Field work) என்றும் ஆய்வுச் சாலைப்பணி (Laboratary worK) என்றும் இரண்டாகப் பிரித்துக் கொள்கின்றனர்.

## களப்பணி (Field work)

புதைபொருள் ஆராய்ச்சிக்கான இடத்தை ஆய்தல், துணையாட்களை அமர்த்தல், பொருளுதவி பெறுதல், ஆய்வு மேற்பார்வையிடல், ஆய்வுக்கான திட்டமிடல், ஆய்வுகளைத் தொகுதியாக வெளியிடல் ஆகிய பணிகள் செய்பவர் தொல்லியல் மாந்தவியலார் (Palaeo Anthxo Pologist) எனப்படுவர்.

நில அமைப்பியலார் (Geologist) பாறைப் படிவு களின் காலத்தை வரையறுக்கிறார். நிலத்தின் உட்கொதி நிலை, எரிமலை, மண்ணமைப்பு ஆகியவற்றைத் தெரிவிக்கிறார். அளவையர் (Surveyor) அகழ்வாராய்ச்சி நடைபெறும் இடத்தின் வரைபடத்தைத் தெளிவாக வரைந்து தருகிறார். வரைவாளர் (Draughtsman) பாறைப்படிவ ஆய்வில் கிடைக்கும் உண்மைகளைப் பதிவு செய்கிறார். கிடைத்த பொருள்களின் தன்மை, அளவு, இயைபுஆகியவற்றை நிரலே நுட்பமாக வரைகிறார். அமைப்பாளர் (Preparators) பாறைப் படிவுகளைச் சிதையாமல் பாதுகாக்கிறார். எலும்பு கள், மண்டையோடுகள் ஆகியவற்றை பூச்சு (Plastos) கொடுத்தும், காப்பு எண்ணெய் பூசியும் பாதுகாக்கிறார். துப்புரவாக வைத்திருந்து ஆய்வுக்கு அணியமாக்குகிறார் (தயாராக்குகிறார்).

## ஆய்வுச்சாலைப் பணி (Laboratory work)

நில அகழ்வாராய்ச்சியில் கிடைத்த எலும்புக் கூடுகள், பாறைப் படிவுகள், கற்கருவிகள் பயன்படுத்தப்பட்ட

பொருள்கள் ஆகியவற்றை ஆய்வுச் சாலேக்குக் கொணர்ந்து மேலும் ஆராய்கின்றனர். பாறை ஆய்வாளர் (Patrologist) பாறைகளின் தன்மை, கனிமங்கள் (Minerals) ஆகிய வற்றை ஆய்கிறூர். தாவர ஆய்வாளர் (Palynologist) பாறைப்படிவுகளில் காணப்படும் தாவரங்களேப்(Fessilplant) பற்றியும் அவற்றின் இனவளர்ச்சி பற்றியும் ஆய்கிறூர். அந்த இடத்தில் எவ்வகைச் செடிகொடிகள் மரங்கள் வளர்ந் திருந்தன என்பதை முடிவு செய்கிறூர். மண்ணியல் ஆய்வா ளர் (The pedologist) அகழ்வாராய்ச்சியில் கிடைத்த மண்ணே ஆராய்ந்து அம்மண்ணில் விளேயத்தக்க விளே பொருள்களே வரையறுக்கிறூர்.

நிலவியல் வேதியலார் (Geochemist) பொட்டா சியம் ஆர்கன் காலக்கணிப்பு முறையைக் கையாண்டு, கனிமம் மற்றும் மாழைகளின் (Mineral and Metals) சரியான வயதைக் கணிக்கிறூர்.

தொன்முது வாழ்வியலார் (Palaeoantologist) பாறைப் படிவுகளிலிருந்து கிடைக்கும் விலங்கு முதலிய உயிரினங் களின் உணவு முறை, வாழும் இயல்பு ஆகியவற்றை வரை யறுக்கிறூர்.

உடற்பாங்கு மாந்தவியலார் (The physical anthropologist) கிடைக்கும் சான்றுகளேக் கொண்டு குரங்கினத்தி லிருந்து மனிதன் வளர்ந்த வரலாற்றை ஒப்பிட்டு படிமுறை வளர்ச்சியை (Evolution) ஒழுங்கு படுத்துகிறூர். எலும்புக் கூடுகள் இவருடைய ஆய்வுக்குப் பெரிதும் பயன்படுகின்றன.

# இரண்டாம் பகுதி

**இலெமூரியத் தலைநிலம்**

**5 கோடியாண்டு முதல்**
**5 இலக்கம் ஆண்டுவரை.**

## 7. இலெமூரியத்தலை நிலத்தில் மாந்தரினப் படிமுறை வளர்ச்சி

*உலகில் மாந்தரினம் எப்படித் தோன்றியது என்னும் வினவுக்கு அறிஞர் டார்வினின் படிமுறை வளர்ச்சிக் கொள்கை* **(Theory of evolution)** *ஏற்ற விடையாக இருந்தாலும் குரங்கினத்துக்கும் மனிதனுக்கும் இடையே விடுபட்ட இணைப்பாக* **(Broken link)** *வேறொரு உயிரினம் இருந்திருக்க வேண்டும் என்னும் எண்ணம் அறிஞர் பலரிடை நிலவியது.*

### மனிதனின் முன்னோன் யார்?

*மனிதனின் நேர்முன்னோன் என மாந்தக் குரங்கைக்* **(Ape)** *கருத முடியவில்லை. மனிதனின் நேர் முன்னோனுக்கு இனமான உயிரினங்களில் அதுவும் ஒன்று. வாழைக் கன்றுகளுக்கு வாழ்வுதந்து தாய்வாழை செத்துவிடுவது போலவும் விழுதுகள் எண்ணிக்கையில் மிகும்போது ஆலமரத்தின் அடிப்பகுதி அழிந்து விடுவது போலவும் மனிதனின் நேர் முன்னோரான உயிரினங்கள் பல அழிந்து விட்டன. அவை யாவை என்னும்ஆராய்ச்சியில் மேனாட்டறிஞர் ஈடுபட்டனர்.*

## மனிதனுக்கும் மாந்தக் குரங்குக்கும் இடையே விடுபட்ட இணைப்பு

யூகனெ துபாய்சு என்னும் டச்சு நாட்டு மருத்துவர் இத் துறையில் ஆராய்ச்சி செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர். குரங்கு மரக்கறி உணவு உண்ணக்கூடியது. அதற்கேற்ற இயற்கை உணவு கிடைத்தற்கும் உடலிலுள்ள மயிர்ப்படலம் (Coat of hair) உதிர்வதற்கும் வெப்பம் மிகுந்த திருப்பக் கோட்டு (Tropical Countries) நிலப்பகுதியே ஏற்றதாகும். எனவே மனிதனுக்கும் மாந்தக் குரங்குக்கும் (Ape) இடைப்பட்ட குரங்கு மனிதன் ஆப்பிரிக்கா அல்லது கிழக்கிந்தியத்தீவுகளில்தான் வாழ்ந்திருக்க வேண்டும். ஐரோப்பிய நாடுகளிலோ அல்லது நண்ணிலக்கடல் (மத்திய தரைக் கடல்) நாடுகளிலோ அவனிருந்ததற்கான அடையாளங்களைத் தேடிப்பயனில்லை என்று கருதினர்.

1880ல் ஜாவா தீவிற்குச் சென்று ஆராய்ந்ததில் அவர் எதிர்பார்த்தபடி நிமிர்ந்து நடந்த குரக்கு மனிதனின்(Homo Erectus) எலும்புகளும் மண்டையோடும் கிடைத்தன. இக் கண்டுபிடிப்பு மாந்தவியல் (Anthropology) உலகத்தையே ஓர் உலுக்கு உலுக்கி விட்டது. யூகனெ துபாய்சின் கண்டு பிடிப்புக்காக அறிவியல் உலகம் அவரைப் பாராட்டியது.1 மனிதனுக்கும் மாந்தக் குரங்குக்கும் இடைப்பட்ட நிமிர்ந்து நடந்த குரக்குமாந்தன் வாழ்ந்திருந்ததற்கான சான்று கிடைத்துவிட்டது.

---

1. Dubois' find was a bomb shell, it rocked the Anthropological world.

(Fossil man-- page 13)

## குரங்குக்கும் மாந்தக் குரங்குக்கும் இடையே விடுபட்ட இணைப்பு
## (broken link between monkey and Ape)

சிம்பன்சி, கொரில்லா முதலிய மாந்தக் குரங்குகளுக்கும் மற்ற சிறிய குரங்குகளுக்கும் இடையே விடுபட்ட இணைப்பாக (broken link) ஒரு குரங்கினம் வாழ்ந்திருக்க வேண்டும். என்று அறிவதற்காக L. S. லீகி என்பவரும் அவர் மனைவி மேரியும் பெரும் அளவில் ஆராய்ச்சியை மேற்கொண்டனர். அரிய முயற்சியின் பயனாக 1930ஆம் ஆண்டு ஆப்பிரிக்காவிலுள்ள கெனியாப் பகுதியினதாகிய விக்டோரியா ஏரித் தீவில் முந்திய மாந்தக் குரங்கு (proconsul) வாழ்ந்திருந்ததற்கான அடையாளங்களைக் கண்டு பிடித்தனர். consul எனும் சிம்பன்சிக்குரங்கின் முந்தியகுரங்கினம் என்னும் பொருளில் இதற்குப் புரோகான்சல் (pro consul) எனப் பெயரிட்டனர். இந்தக் கண்டு பிடிப்பு உயிரினப் படிமுறை வளர்ச்சிக் கொள்கைகளுக்கு மேலும் விளக்கம் அளித்தது.

இந்தக் குரங்கினம் சிறிய வடிவத்திலிருந்து பெரிதாக வளரத் தொடங்கியது என்றும் மாந்தக்குரங்குகள் அனைத்துக்கும் இதுவே முந்தைய தாய்உயிரியாக இருக்கும் என்றும் கூறுகின்றனர். இந்தக் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் மாந்தக் குரங்கின் பின் ஏற்பட்ட இனமாற்றங்களான குரக்கு மாந்தரின் படிமுறை வளர்ச்சியைக் காணலாம்.

## மாந்தக் குரங்கும் குரக்குமாந்தனும்
## (Anthroid and pithecoid)

சிம்பன்சி, கொரில்லா முதலிய மாந்தக் குரங்குகள் (Apes) வடிவில் மனிதரைப் போல் வளர்ந்தும் இயல்பில் குரங்காக இருப்பவை. ஆதலால் இவற்றை மாந்தக் குரங்கு (Anthroid) என்பர். வடிவில் மாந்தக் குரங்கை ஒத்தும்

இயல்பில் மனிதரை ஒத்தும் காணப்பட்டதால் குரக்குமாந்தன்(pithecoid) எனும் பெயர் இரண்டுகால்களில் எழுந்து நடக்கத் தொடங்கிய குரங்கினத்துக்கு இடப்பட்டது.

## குரக்குமாந்தரின் படிமுறை வளர்ச்சி

முந்தைய கிப்பன், முந்தைய சிப்பன்சி, டிரையோ பிதிகஸ், ஓரியோ பிதிகஸ், ராம பிதிகஸ், ஆஸ்ட்ராலோ பிதிகஸ், பரன்த்ராபஸ், சோலோமாந்தன், ஆகியவை குரக்கு மாந்தரின் படிமுறை வளர்ச்சியில் முறையே வளர்ந்தவையாகும். இவற்றின் வளர்ச்சிக் காலம் $2\frac{1}{2}$ கோடி ஆண்டு முதல் 10 இலக்கம் ஆண்டுவரை எனக் கணிக்கப்பட்டுள்ளது.

## முந்து சிப்பன்சி

(Plio pithecus) இரண்டரை கோடி ஆண்டுகளுக்கு முன்.

கிப்பன் (Gibbon) என்னும் குரங்கின் முந்தைய வடிவைக் கொண்ட குரக்கு மாந்தன் இது. இது மாந்தனளவு பெருகி வளர்ந்திருந்தது. இது $2\frac{1}{2}$ கோடி ஆண்டுகளுக்கு முன்பு ஆப்பிரிக்கக் காடுகளில் வாழ்ந்திருந்தது.

## முந்து சிப்பன்சி

இரண்டரை கோடி முதல்
ஒன்றரை கோடி ஆண்டுவரை

சிப்பன்சிக் குரங்கின் முந்தைய வடிவைக் கொண்டது இது. இதனைத்தான் புரோகான்சல் (Proconsul) எனப் பெயரிட்டழைத்தனர். இது ஆப்பிரிக்காவில் கெனியா பகுதியில் வாழ்ந்ததற்கான சான்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது 2 கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருந்தது. இதன் இனத்தைச் சார்ந்ததாக இருக்கக் கூடும் என்று கருதப்படும் டிரையோபிதிகஸ் (Dryopithecus) எனும் குரக்குமாந்தன் சீனு ஐரோப்பா ஆகிய இடங்களில் $1\frac{1}{2}$ கோடி ஆண்டுகட்குமுன் பரவியிருந்தது.

ஓரியோ பிதிகஸ்
(Oreopithecus)

ஒன்றரை கோடி முதல்
ஒரு கோடி ஆண்டு வரை

ஓரியோபிதிகஸ் எனும் குரக்குமாந்தன் 4 உயரம் வளர்ந்திருந்தது என்றும் 80 பவுண்டு எடையுள்ளதா யிருந்தது என்றும் கூறுகின்றனர். இது $1\frac{1}{2}$ கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருந்தது. இது ஆப்பிரிக்கா போன்ற வெப்ப நாடுகளில் வாழ்ந்திருந்தது. இக் குரங்கின் முழு எலும்புக் கூடு இத்தாலியிலுள்ள நிலக்கரிப் படிவப் பாறையொன்றில் கிடைத்தது.

ராம பிதிகஸ்
(Ramapithecus) ஒரு கோடி முதல் ஐம்பது இலக்கம்வரை.

ராம பிதிகஸ் எனப்படும் குரக்குமாந்தன் ஓரியோபிதிகசின் வழி வந்தவன். இவன் 50 இலக்கம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவன். இவ்விரு குரக்குமாந்தரும் மனிதரின் நேர் முன்னோராய் இருக்கக்கூடும் என்று ஆய்வாளர் நம்புகின்றனர்.

குரக்குமாந்தரில் புலால் உணவினரும்
மரக்கறி உணவினரும்.

50 இலக்கம் முதல் 20 இலக்கம் ஆண்டுவரை

புல்லுணவை மட்டும் உண்டு வாழ்ந்த (Herbivorous) குரக்குமாந்தர் பரன்த்ராபஸ் (Paranthropus) எனப்பட்டனர். இம்மாந்தன் $5\frac{1}{2}$ உயரமும் 130 பவுண்டு எடையும் உள்ளவனாக இருந்தான். இவன் 20 இலக்கம் ஆண்டுகளுக்கு முன்பு உலகில் வாழ்ந்திருந்தான்.

பச்சைப்புலாலை உண்டு வாழ்ந்து வந்த குரக்குமாந்தன் ஆஸ்திராலோபிதிகஸ் (Australopithecus) எனப்பட்டான்.



புலால் உண்ணும் குரக்குமாந்தருக்கும் மரக்கறி உணவின ரான குரக்குமாந்தருக்கும் ஏற்பட்ட போராட்டத்தில் பரன்த்ராபஸ் என்னும் புலால் உண்ணுத இனம் அழிந்து விட்டது என்று கூறுகின்றனர். இக் குரக்குமாந்தர் மரத்தை விட்டிறங்கி தரையில் மட்டும் வாழத் தொடங்கியதும் கல்லே ஆயுதமாகப் பயன் படுத்தியதும் இவர்களுடைய சிறப்பியல்பு களில் குறிப்பிடத் தக்கனவாகும். இக் குரக்குமாந்தரை முதன் முதல் கையில் கருவி ஏந்தியவர் (First tool users) என்பர்.

மரக்கறி உணவை மட்டும் உண்டு வந்த பரன்த்ராபஸ் எனும் குரக்குமாந்தனுக்குக் கடைவாயில் அரைவைப் பற்கள் இருந்தது (Grinding teeth) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## நிமிர்ந்து நடந்த குரக்குமாந்தன் (Homo Sapien)

20 இலக்கம் முதல் 5 இலக்கம் ஆண்டுவரை.

சாலித் தீவில் (Java) வாழ்ந்திருந்த குரக்குமாந்தன் நிமிர்ந்த குரக்குமாந்தன் (Homo Erectus) எனப்பட்டான். இவனுடைய கையும் கால்களும் மனிதனைப் போன்றே நீண்டு வளர்ந்திருந்தன. ஆனல் கையையும் அறிவையும் முறை யாகப் பயன்படுத்த அறியாதவனுக இருந்தான்.

மண்டையோடும் முக அமைப்பும் மனிதனைப் போன்றே அமைந்திருந்தன. உடலில் மயிர்ப்படலம் (Coat of hair) இருந்தது. இத்தகைய மாந்தர் 20 இலக்கம் முதல் 5 இலக்கம் ஆண்டுவரை வாழ்ந்திருக்கக் கூடும். இம் மாந்தரை ஒமோ சேப்பியன் (Homo Sapien) என அழைப்பர்.

## நியாண்டர்தால் மாந்தன்

5 இலக்கம் முதல் 2 இலக்கம் ஆண்டுவரை

நியாண்டர்தால் மாந்தன் ஐரோப்பாவின் பல பகுதி களில் வாழ்ந்திருந்தான். ரைன் மாநிலத்தில் நியாண்டர்தால்











மாந்தன் வாழ்ந்த இடம் நியாண்டர்தால் பள்ளத்தாக்கு எனப்படுகிறது.

நியாண்டர்தால் மனிதன் தீயின் பயனை அறிந்திருந்தான். தோலாடை அணிந்திருந்தான். இறந்தவர்களைப் புதைத்துக் கல்லால் மூடினான். இறந்தவரைப் புதைக்கும் போது தலைமாட்டில் இறைச்சியையும் பிற உணவுப் பொருள்களையும் உடன் வைத்துப் புதைத்தான்[1].

இவன் கையாண்ட கற்கருவிகள் ஓரளவு திருத்தமுடையனவாயிருந்தன. கூரிய கற்கருவியால் விலங்குகளின் தோலை உரிக்கத் தெரிந்திருந்தான். கரடியை வேட்டையாடினான். கரடியை வழிபட்டான். கரடியை உணவாகவும் கொண்டிருந்தான்.

இம்மாந்தன் 5இலக்கம் ஆண்டு முதல் 3இலக்கம் ஆண்டு வரை வாழ்ந்திருந்தான் என்று கூறுகின்றனர். இவர்கள் பனியூழியில் வாழ்ந்தவரென்றும் பெரிய விலங்குகளை வேட்டையாடுவதில் வல்லவர் (Ice age hunters of large animals) என்றும் கூறப்படுகிறது[2]. இதிலிருந்து நியாண்டர்தால் மாந்தன் காலம்முதலே, முதற் கற்கால வாழ்க்கை தொடங்கிவிட்டது என்று தெரிகிறது.

## நெடிய கற்கால மாந்தர்
## (Cromagnon men)

3 இலக்கம் முதல் 1 இலக்கம் ஆண்டு வரை.

ஐரோப்பாவிலும் உலகின் பல பகுதிகளிலும் 3 இலக்கம் ஆண்டு முதல் 1 இலக்கம் ஆண்டுவரை நெடிய கற்கால

---

1. Archaeslogy (Page 15)
by Francis Celorie.
2. The Eary Mam (Page 44)

மாந்தர் (**Cromagnonmen**) புதிதாகப் பரவினர். நியாண்டர்தால் மாந்தரின் மறைவுக்குப்பின் இவர்களே திருந்திய கற்கால நாகரிகத்தவராக விளங்கினர். இவர்கள் உயரமாக இருந்தனர்.

இவர்கள் நம்மைவிட நாகரிகத்தில் ஒருபடி முன்னிருந்தவர்கள் என்பதல்லது எல்லா வகையிலும் நம்மைப் போன்றே செம்மையுற வாழ்ந்த நாகரிக நிலையினர்[1]. அவர்கள் கையாண்ட கருவிகள் கற்களாக இருந்தது ஒன்றே வேறுபாடு எனக் கூறுகின்றனர்.

இம்மாந்தன் கற்களிலும் பாறைகளிலும் வண்ண ஓவியம் வரையவும் சிற்பம் செதுக்கவும் தெரிந்திருந்தான். தான் வாழ்ந்த குகைகளில் தான் கண்ட விலங்கு பறவை முதலியவற்றின் ஓவியம் வரைந்தான். கலை நுணுக்கத்திலும் அழகுணர்ச்சியிலும் ஆர்வம் கொண்ட முதல் தலைமுறையைத் தோற்றுவித்தவன் இவனேயாகும்.

## தொர்தொக்னே கற்கால மாந்தர்

85,000 ஆண்டுகளுக்கு முன்

தென்மேற்குப் பிரான்சில் தொர்தொக்னே (**Dordogne**) என்னும் இடத்தில் 85,000 ஆண்டுகளுக்கு முன் கற்கால மாந்தன் வாழ்ந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இங்கு 65 அடுக்குகளில் வெவ்வேறு காலங்களில் மாந்தன் வாழ்ந்ததற்கான பாறைப் படிவுகளும் கற்காலக் கருவிகளும் கிடைத்துள்ளன.

போர்டக்ஸ் பல்கலைக் கழக தொல்லியல் வரலாற்றுப் பேராசிரியர் பிரான்சிஸ் போர்டஸ் என்பவர் 1953-ஆம்

---

1. Cro-magnon men are only a Cultural step away From us. They Replaced the Neandertal in Europe. They are not different from us Physically.

The Early Man-page-35.



ஆண்டு நடத்திய அகழ்வாராய்ச்சியில் இக்கற்கால நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்டது. இங்கு வாழ்ந்த மாந்தர் நியாண்டர் தால் மாந்தராய் இருக்கவேண்டும் என்று கூறப்படுகிறது.

சனிதார் கற்கால மாந்தர்
(Shanidar)

60,000 ஆண்டுகளுக்குமுன்.

வடக்கு ஈராக்கில் சனிதார் (Shanidar) என்னும் இடத்தில் 60,000 ஆண்டுகளுக்குமுன் மாந்தன் வாழ்ந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. 40 வயது நிரம்பிய ஆடவன் குகையொன்றில் புதைக்கப்பட்டிருப்பதும் கண்டுபிடிக்கப் பட்டது.

சனிதார் பகுதியில் 2000 தலைமுறைகளாக மாந்தன் வாழ்ந்திருக்கக் கூடும் என்று ஆய்வாளர் நம்புகின்றனர்.

## தொர்தொக்னேயில் நெடிய கற்கால மாந்தர்
**37,000 ஆண்டுகளுக்குமுன்**

தொர்தொக்னேயில் 37,000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த நெடிய கற்கால மாந்தர் வெண்ணிறத்தவராயிருந்தனர். இவர்கள் கால் நடைகளை வளர்த்தனர். ஓவியம் வரைதல், சிற்பம் செதுக்குதல் ஆகியவற்றில் ஆர்வம் கொண்டிருந்தனர். வேட்டையாடும் தொழிலில் சில நுட்பங்களைக் கையாண்டனர். சிறு விலங்குகளுக்கு வலைகளையும் பெரிய விலங்குகளுக்குப் புதை குழிகளை (Pitfalls)யும் வேட்டையாடுவதற்கேற்ற வழிவகைகளாகத் தெரிந்திருந்தனர். நல்ல வேட்டை கிடைப்பதற்காக ஒருவகை தெய்வ வழிபாட்டையும் இவர்கள் கைக்கொண்டிருந்தனர்.

இவர்கள் நெடிய கற்கால மாந்தரின் (Cromagnon) வழி வந்தவர். தாம் வேட்டையாடிய விலங்குகளின் இறைச்சியை உண்டனர். விலங்குகளின் தோலை உடுத்தனர்.

இவர்களிடம் காணப்பட்ட புதுமைகளில் கால்நடைகளை வளர்த்து வந்தது குறிப்பிடத் தக்கதாகும். வேட்டைத் தொழிலோடு கால்நடை வளர்ப்பிலும் மிகுந்த கருத்துச் செலுத்தியவராக 28000 ஆண்டுகள்வரை தொர்தொக்னே பகுதிகளில் வாழ்ந்திருக்கின்றனர்.

தொர்தொக்னே புதைபொருள்கள் கற்கால மாந்தரின் நாகரிக வளர்ச்சிப் படிநிலைகளைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

## புதுவகை மாந்தர்கள்
**35,000 ஆண்டுகளுக்குமுன்.**

மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து 35,000 ஆண்டுகளுக்கு முன் புதுவகை மாந்தரினம் ஐரோப்பாவில் குடியேறியது. இவ்வினத்தார் ஏற்கெனவே ஐரோப்பாவில் வாழ்ந்திருந்த

நியாண்டர்தால், நெடிய கற்கால மாந்தர் முதலியோரை விட அறிவிலும் நாகரிகத்திலும் மேம்பட்டிருந்தனர்.

வண்ண ஓவியம், சிற்பக்கலை, கல்லெழுத்து (Engraving). வரைதல் ஆகியவற்றில் சிறந்திருந்தனர். தைக்கப்பட்ட தோலாடை உடுத்தினர். வில்லும் அம்பும் ஏந்தி வேட்டையாடினர். இவர்கள் வெகு விரைவில் ஐரோப்பா முழுதும் பரவினர். தீயைப் பயன்படுத்தினர். இவர்கள் கையாண்ட கருவிகள் மிகவும் நேர்த்தியானவை[1].

கால்நடை வளர்க்கும் தொழிலில் கலைகளை வளர்க்கத் தக்க ஓய்வு கிடைத்திருக்கலாம்.

---

1. The men who replaced the Neandertals in Europe some 35,000 years ago are believed to have migrated from the Middle East. Intellectually and Culturally superior to their predecessors, they gradually acquired sufficient leisure to produce the First art, sculpture, paintings and stone engravings so powerfully conceived and executed as to rank among Mankind's great artistic achievements.

The early man-page 157.

# 8. நாகரிக வளர்ச்சியின் அடிப்படை

மனிதன் வளர்ச்சி மாற்றங்களைப் பெற்ற காலத்தை ஒரு நண்பர் வேடிக்கையாக வால் தேய்ந்த காலம், முதுகு நிமிர்ந்த காலம், மூளை வளர்ந்த காலம் என்று குறிப்பிட்டார். இது ஓரளவுக்கு உண்மையானதாகும்.

## கைகள்

தரையில் வாழ்ந்த பாலூட்டிகளான (Mammals) நாற்காலுயிரிகளில் குரங்குமட்டும் மரத்தில் ஏற முயன்ற நிகழ்ச்சி படிமுறை (பரிணாம) வளர்ச்சியின் முதல் முன்னேற்றமாயிற்று. மரக்கிளைகளைப் பற்றித் தொங்கியபோது கைவிரல்கள் வளர்ந்தன. எப்பொருளையும் விரல்களால் பற்றி எடுக்கும் திறம் வந்தது. இரண்டு கால்களைத் தரையில் ஊன்றிக் கைகளால் ஒரு பொருளை எடுத்து எழுந்து நிற்கவும் நடக்கவும் வேண்டிய சூழல் அமைந்தபோது குரங்கு மனித இயல்பைப் பெறத் தொடங்கியது.

## பற்கள்

நடப்பதற்கு இரண்டு கால்களையும் வேலை செய்ய முன் கால்களைக் கைகளாகவும் பயன்படுத்திக் கொண்ட

பிறகு, கிடைத்த உணவுப் பொருள்களை மென்று தின்னத் தொடங்கியது அடுத்த முன்னேற்றத்திற்கு வழிவகுத்தது. நீண்ட கோரைப் பற்கள் குறுகின. கடைவாய்ப் பற்கள் அரைவைப் பற்களாயின. மூளை அதிகரித்ததால் மண்டை யோடு பெருத்தது.

எழுந்து நின்று நடந்தபோது இடுப்பு மூட்டு எலும்புகள் அதற்கேற்ற மாற்றத்தை—நாளடைவில் தானுகப் பெற்றன. ஒரு உயிரி முன்னேற்றப் படியில் கால் வைக்கும்போது இயற்கை தானுக அதற்கு உதவி செய்கிறது என்பதற்கு இது சான்ருகிறது.

## வால் தேய்தல்

நாற்காலுயிரிகளுக்கு முன்னுல் தலை தொங்குவதனுல் ஏற்படும் சமநிலை முன்சாய்வை ஈடுபடுத்த பின்னுல் தடித்த அல்லது நீண்ட வாலிருப்பது தேவையாக இருந்தது. பறவை களுக்கு வாலிருப்பதும் இதனுல்தான் என்பர். மிகப் பழங் கால விலங்குகளுக்குப் பருமனுன வாலிருந்தது என்பர்.

மாந்தக்குரங்கு எழுந்து நின்று நடக்கத் தொடங்கிய போது உடல் சமநிலையை ஒழுங்குபடுத்த வாலின் தேவை யில்லாது போயிற்று. பயன்படுத்தாத உறுப்புகள் தானுகத் தேயும் என்னும் நெறிப்படியும், மாந்தக் குரங்கு தரையிலும் கிளையிலும் உட்கார்ந்தபோது வால் விரைந்து, தேய்வடைய நேர்ந்ததாலும் மாந்தக் குரங்குக்கு வால் மறைந்து போய் விட்டது.

## குகை வாழ்க்கை

தரையில் வாழ்வதைவிட்டு மரத்தில் வாழ்ந்த குரங்கினம் மாந்தக் குரங்கு (**Ape**) நிலையைக் கடந்தபின் குரக்குமாந்தன் (**Homosapien**) ஆனபோது மலைக் குகைகளில் வாழ்வு தொடங் கியது. மழை, வெயில், இடி ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு

கிடைத்தது. இக்காலத்தில் மாந்தன் நிலை அரும்பத் தொடங்கியது. தீயின் பயனை அறிந்தான். கற்களை இவனே உராய்ந்தபோதோ, எரிமலை, காட்டுத் தீ ஆகியவற்றைக் கண்டபோதோ நெருப்பையும் அதன் பயனையும் அறிந்தான். மனிதனின் நாகரிக வாழ்வுக்கு இக் கண்டுபிடிப்பு ஒளி தந்தது. கல்லைக் கருவியாகக் கொண்டபோது விலங்குகளை நெருங்காமல் தொலைவிலிருந்தே கொல்லும் ஆற்றலைப் பெற்ருன். கூன் நிமிர்ந்தது—மார்பு விரிந்தது. கற்களைத் தூக்கி எறியும்போதும் தொலைவில் வீச நேர்ந்த போதும் பின்னல் வளைந்து வீசவேண்டி வந்தது. வளைந்திருந்த குரங்கின் முதுகு, நிமிர்ந்த மனித முதுகுகளாகி விட்டது.

கற்காலம் மனிதனுக்கு விளைத்த பெரிய நன்மைகளில் இதுவும் ஒன்று. கல்லை வீச விலங்குகளைக் கொல்வது போலவே கூரிய ஈட்டிகளை எய்யவும் முதுகு பின்னல் வளைய நேர்ந்தது. மூச்சைப் பிடித்துக் கனமானவற்றைத் தூக்கும் போதும், கல், ஈட்டி முதலியவற்றை எய்யும்போதும் மார்பு தானுக விரிந்து இடுப்பு சுருங்கத் தொடங்கியது. மனிதனின் உடம்பு தோற்றம் மிக்கு, கைகால் தசைகளும் நரம்புகளும் முறுக்கேறின.

நா அசைந்தது

சுவைத்தும் சவைத்தும் உண்பதற்காக அமைந்த நாக்கு தொண்டையிலெழும் கூவிளிகளையும் கீச்சொலிகளையும் பேச்சொலியாக மாற்ற உதவியது, மனிதனின் பேச்சுக் கலைக்கு அடிகோலியது.

குரங்குகளின் இயல்பு பழித்துக் காட்டுவது. Monkey, Ape என்னும் ஆங்கிலச் சொற்களுக்கு பழித்துக் காட்டு, போலச் செய் (mimic, imitate) என்று பொருள்.

பிற விலங்குகள் பறவைகள் முதலியவை எழுப்பிய ஒலிகளை மாந்தக் குரங்குகள் அப்படியே திருப்பி ஒலித்தன. பல விலங்குகளின் இயல்புகளைப் போலச் செய்து காட்டின.

கைகளும் நாவும் ஒரு பொருளை அடுத்தவர்க்கு விளக்கிக் காட்ட முயன்றன. குறிப்பு (சைகை) மொழியின் இடத்தை நாளடைவில் நாக்கு கைப்பற்றிக் கொண்டது. பலவகை ஒலிகளை நா ஒலிக்கத் தொடங்கியது. முதலில் நீண்ட ஓசையாக இருந்த மாந்தக் குரங்கின் பேச்சொலி குரக்கு மாந்தன் காலத்தில் குறித்த பொருளுடைய சில ஓசைகளாக இருந்திருக்கும். கற்காலத்தில் நா நன்கு அசைந்து சொற்களை உருவாக்கியிருக்கக் கூடும்.

மொழி தோன்றிய போதே மனிதனின் நாகரிக வாழ்வு விரைந்து வளரத் தொடங்கியது. நடப்பதற்கென அமைந்திருந்த முன் கால்களை முற்றும் வேலை செய்யும் கைகளாகப் பயன்படுத்திக்கொள்ள கோடி ஆண்டுகள் ஆயின என்பர். உண்பதற்காக அமைந்த நாவைப் பேசுவதற்காகப் பயன்படுத்திக் கொள்ள பல இலக்கம் ஆண்டுகளாவது ஆகியிருக்கும்.

## உணவு

காய்கனி கிழங்குகளைத் தின்ற ஆதிமாந்தன் கெட்டியான வித்துக்களைப் பற்களால் கடிக்க முடியாதபோது நீரில் ஊறவைத்தோ வெயிலில் பாறையின்மேல் சூடேறவைத்தோ தின்றிருக்க வேண்டும். இதன் வளர்ச்சியாக நெருப்பில் வாட்டியும் நீரில் வேகவைத்தும் உண்ணும் வழக்கம் வந்திருக்கும். தீயை முதன் முதல் பயன்படுத்தத் தெரிந்து கொண்டது வெப்ப நாட்டில்தான் நிகழ்ந்திருக்கவேண்டும். காடு வெப்ப நாட்டில்தான் தானாகப் பற்றி எரியும். இறைச்சியையும் பிற உணவுப் பொருள்களையும் பல்லால் கடித்து இழுத்த காலத்தில் தாடை எலும்பு நீண்டு முகம் கூராக இருந்தது. கையால் எடுத்து மென்று தின்ற காலத்தில் தாடை எலும்பின் நீளம் குறைந்ததால் முகம் செங்குத்தான தட்டை வடிவம் பெற்றது.

## உடை

கற்காலத்திலேயே மாந்தன் மரப்பட்டைகளை உரிக்கவும் விலங்கின் தோலுரிக்கவும் கற்றிருந்தான். முதலில் ஈரத்தில் படுக்கப் பாயாகத் தோல் பயன்பட்டிருக்கும். குளிர் நாடு களுக்குச் சென்றபோது போர்வையாகப் பயன்பட்டிருக்கும். தோலுடைக்கு அடுத்த நிலையில், மரப்பட்டை, நார், ஓலை, இலை இவற்றாலான ஆடைகளை இடுப்பில் உடுக்கத் தொடங்கி யிருக்க வேண்டும். நியாண்டர்தால் மாந்தன் தோலுடை யணிந்தவனாகக் கூறப்படுகிறான்.

எகிப்தியர் நாரால் ஆன உடையணிந்திருந்த காலத்தில் சிந்துவெளி மக்கள் பருத்தி ஆடை அணிந்திருந்தனர்.

## கால்நடை வளர்ப்பு

வடக்கு ஈராக்கில் உள்ள சனிதார் அகழ்வாராய்ச்சியில் கி. மு. 9000 ஆண்டுகளுக்கு முன்பு ஆடுகள் வளர்க்கப்பட்ட தாகத் தெரிகிறது. சிந்து வெளியில் ஆடு மாடு எருமை ஆகிய மூன்றும் வளர்க்கப்பட்டன. சிந்துவெளி நாகரிகத்தின் தோற்றக்காலத்தை எவரும் சரியாக வரையறுக்காததால் கால் நடை வளர்ப்பு முதன் முதல் தோன்றிய இடம் குமரிக் கண்டமாகத்தான் இருக்க வேண்டும் என்று கொள்வதில் தவறில்லை.

சிந்துவெளி முத்திரைகளில் எருதின் இலச்சினை தலைமை யிடத்தைப் பெற்றிருப்பதாலும் தமிழர் மாடுகளுக்கு நன்றி செலுத்தும் பொருட்டே பொங்கல் விழாவெடுப்பதாலும் கால்நடை வளர்ப்பின் தோற்றம் குமரிக்கண்டத்ததே எனலாம்.

## வேளாண்மை

பெர்சியாவில் கி. மு. 8000 ஆண்டுகளுக்கு முன்பு தானியம் விளைவிக்கப்பட்டது; மெக்சிகோவில் கி.மு.5000

ஆண்டுகளுக்கு முன்பு சோளம் விளைவிக்கப்பட்டது என்பவை அகழ்வாராய்ச்சியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

எகிப்தியர்க்கும் மெசபதேமியர்க்கும் உழவுத் தொழிலையும் உழவுக்கருவிகளையும் கப்பலில் வந்த புதிய மக்கள் அறிமுகப்படுத்தினர் என்று அந்நாட்டுப் பழங்கதைகளிலும் எழுத்துச் சான்றுகளிலும் கூறப்பட்டிருப்பதால், கால்நடை வளர்ப்பும் உழவுத் தொழிலும் குமரிக்கண்டத்தில் முதன் முதல் தோன்றியிருக்க வேண்டும்.

## தொழில்

மெக்சிகோவில் கி. மு. 6,500 ஆண்டுகளுக்கு முன்பு மட்பாண்டம் செய்யப்பட்டது. ஈரானில் எலும்பு ஊசி பயன்படுத்தப்பட்டது. ஐரோப்பாவில் வாழ்ந்த மக்கள் 10,000 ஆண்டுகளுக்கு முன்பு கூடாரத்தில் வாழ்ந்தனர்.

மெசபதேமியாவில் கி. மு. 3500-3000 ஆண்டளவில் சக்கரத்தின் உதவியால் மட்பாண்டங்கள் செய்யப்பட்டன. ஆனால் இங்கிலாந்துக்கு உரோமர் வந்தபிறகுதான் குயவனின் சக்கரம் வந்தது. மீண்டும் சாக்சன் (Saxon) காலத்தில் சக்கரமில்லாமல் மட்பாண்டம் செய்யப்பட்டது.[1]

உலகின் எல்லா நாகரிகங்களையும்விட சிந்துவெளி நாகரிகத்தில் மட்பாண்டம் செய்தல், தொழிற் கருவிகள் செய்தல் ஆகியவை முன்பே சிறந்திருந்தன.

சிந்துவெளி நகரங்கள் பெரும் அளவில் வணிக நகரங்களாக விளங்கின. அரப்பா நகரிலும் 14 சந்தைகளும் மொகஞ்சதாரோ நகரில் 17 சந்தைகளும் கூடும் இடங்கள் காணப்படுகின்றன. சந்தையைச் சுற்றிலும் அகழி இருந்தது. இது வணிகப் பெருக்கத்தைக் காட்டுகிறது. நாகரிக வளர்ச்சி வணிக வளர்ச்சியைச் சார்ந்திருக்கிறது. (Civilization

---

[1] The Early Man-page 49.

**depends on trade)** என்னும் முதுமொழியின்படி சிந்து வெளியில் வணிக வளர்ச்சியே நாகரிக வளர்ச்சியை விரைவு படுத்தியது.

## நீரில் இயங்குதல்

பறவைகளும் மீன்களும் நீந்துவதைப் பார்த்து நீந்தத் தெரிந்து கொண்ட மனிதன் ஆற்று வெள்ளத்தில் மரக் கட்டைகள் மிதந்து வருவதைக் கண்டு உலர்ந்த கட்டைகளை கட்டுமரமாகக்கட்டி ஆற்றைக் கடக்க முற்பட்டான். நீண்ட கழியைஊன்றிக் கட்டுமரத்தைத்தள்ளியவன் கழியைத் துடுப் பாக்கிக்கொள்ளும் வித்தையைக் கற்ருன். தேங்கிய நீர் நிலையில் பாய்மரம் கட்டி, காற்றின் உதவியால் பயணம் செய்யவும் துணிந்தான்.

அஞ்சாமல் கடலில் கட்டு மரத்திலும் நாவாயிலும் அவன் பயணம் செய்த முதல் நாள், மனித நாகரிகத்தின் உயர்ந்த நிலைக்கு வழி வகுத்தது.

## நிலத்தில் விரைந்து செல்லுதல்

ஆதிமனிதன் விலங்குகளின் முதுகில் அமர்ந்து செல் வதை விளையாட்டாகக் கருதினன். இக்கட்டான நேரத்தில் விரைந்து செல்லவும் ஏதம் (ஆபத்து) வரும் போது தப்பித்து ஓடவும் விலங்குகளின் மீது அமர்ந்து விரைந்து ஓட்டிச் செல்வது பாதுகாப்பாக இருந்தது.

சுமையானவற்றை ஏற்றிச் செல்ல உருளை பொருத்தப் பட்ட வண்டி வேளாண்மை பெருகிய காலத்தில் கண்டு பிடிக் கப்பட்டது. குமரிக்கண்ட தமிழர்க்குக் காளைகளே வண்டி யிழுப்பனவாகவும் பொதி சுமப்பனவாகவும் இருந்தன. சிந்து வெளியிலும் குமரிக் கண்டத்திலும் குதிரைகளைப் பற்றிய குறிப்பின்மையின் எருதுகளே தேரில் பூட்டப்பட்டிருந்தனவா என்பதை அறியக்கூடவில்லை.

# 9. போரும் போராட்டமும் முன்னேற்றத்தின் முதற்படிகள்

உயிரினங்களின் படிமுறை வளர்ச்சியில் மனிதன் எல்லா உயிர்களினும் மேம்பட்டு விளங்குவதற்கு உறுதுணையாக இருந்தது அவனுடைய அஞ்சாமையும் போராட்டத்திறமையுமே ஆகும்.

கடலில் கடற்கன்னி, கடல் மனிதன் போன்றவை பாதி மீன் வடிவிலும் பாதி மனித வடிவிலும் படிமுறை (பரிணும) வளர்ச்சி பெற்ருலும் ஏனைய உயிர்களை வென்றடக்க இயலவில்லை. நிலத்தில் காலூன்றி எழுந்து நின்ற மனிதன் தன்னை விட வலிமை வாய்ந்த புலி, சிங்கம், யானை போன்ற விலங்குகளை அஞ்சாமையின் துணையால் போராடிப் போராடி வென்றடக்கிஞன்.

பொதுவாக விலங்கு தன்னை மட்டும் காத்துக்கொள்ளப் போரிடுகின்றது. ஆனுல் மனிதன் தன் இனத்தைக் காத்துக் கொள்ள பகையினத்தோடு போரிட்டான். ஓரிடத்தில் நடந்து முடிந்த போர் அதே இனத்தோடு பல தலைமுறைகளிலும் போராக நீடிக்கும் போது போராட்டமாய் விடுகிறது. அப்படி மனிதன் விலங்குகளோடு பல்லாயிரம் ஆண்டுகளாகப் போராட்டம் நடத்திஞன். போர் புரிவது ஒரு கலை

யானது. பெரும்பாலும் விலங்குகளை வென்றடக்கியபின் மனிதன் மனிதனோடு போர் புரிய வேண்டி வந்தது. இப்போர்களால் குறிப்பிட்ட மனித இனங்கள் அழிந்திருக்கலாம். ஆனால் தோற்றுவிட்ட இனத்தின் நாகரிகமும் வாழ்வியல் சிறப்பியல்புகளும் வென்ற இனத்தாரால் கைக்கொள்ளப் பட்டதால் மனிதன் வளர்த்த நாகரிகம் அழியாமல் மேன் மேலும் வளர்ந்து கொண்டே வந்தது. ஒரு இனத்தாரின் கண்டுபிடிப்பு மற்ற இனத்தார்க்கும் நன்மை விளைத்தது. இவ்வாறு போரும் போராட்டமும் மனித இனத்தின் வளர்ச்சிக்கு நன்மை புரிந்தது.

கூட்டாகச் சேர்ந்து போரிடும் இயல்பு மனிதனிடம் வளராமல் இருந்திருந்தால் மனிதன் விலங்கு நிலையிலிருந்து நாகரிகக் கூட்டுவாழ்வு நிலை எய்தியிருக்க முடியாது.

நல்லதைக் காப்பதற்காகத் தீயதைக் கொன்றேயாக வேண்டும் என்னும்போது போர் தவிர்க்க முடியாததாகிறது.

போர் புரிவதை ஒவ்வொரு ஆண்மகனுக்கும் உரிய கடமையாகக் குமரிக்கண்ட தமிழர் கொண்டிருந்ததால் வாழ்க்கைப் போராட்டத்தின் நுட்பமாகிய 'தகுதி வாய்ந்தவை உய்திபெறுதலை' (Survival of the fittest) அறிந்தவராதல் வேண்டும்.

மாந்தனின் கற்கால வாழ்க்கை இடைவிடாத போராட்டத்தில் தொடங்கியது. விலங்குகளோடு போரிட சில கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. மனிதனோடுபோரிடவும் சில கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வாறு இடைக்கால நாகரிக வாழ்க்கை போரால் வளர்ச்சி பெற்றது. புதுப்புது போர்க்கருவிகளும், கடல் பயணமும், உறுதியான கோட்டைகள், மதில்கள், கட்டிடங்கள் கட்டுதலும், தொழில் நுட்பங்களும் போர்க்கலை ஊட்டிய ஆர்வத்தால் விளைந்தவையே. போர்புரியாமல் நெடுங்காலம் அமைதியாக

வாழ்ந்த மலைவாழ் மக்கள் எவ்வித முன்னேற்றமும் பெறுததை வரலாறு நமக்குக் காட்டுகிறது. போர் நடந்த இடங்களே நாகரிகம் வளர்ந்த இடங்களாகவுள்ளன. நெருக்கடியான போர்க்காலத்தில் தேவைகள் மிகுகின்றன. தேவைகள் புதுக்கண்டுபிடிப்புகளை ஊக்குகின்றன. **(necessity is the mother of invention)** எனும் பழமொழி இதனுல் தோன்றியதே.

நாகரிகம் நிரம்பப்பெற்ற இக்காலத்தில் போரின் தேவை குறைந்து இயற்கையை வெல்லும் போராட்ட அறிவியல் வளர்ச்சி மிகுந்து வருகிறது. போராட்டம் — போர்-போராட்டம் என்று இயற்கைநெறி மாறிக்கொண்டே வருகிறது.

## விலங்குகளோடு போராட்டம்

அக்கால மாந்தர்க்கு எதிர்பாராத ஏதங்கள் (ஆபத்துகள்) அடிக்கடி ஏற்பட்டன. ஒருவன் மரத்தின் பருத்த வேரின் மீது உட்கார்ந்திருப்பான். அந்த வேர் நகரத் தொடங்கும். இவன் திரும்பிப் பார்ப்பதற்குள் மலைப்பாம்பின் வால் அவனை இறுக்கிக் கொள்ளும். அடுத்து மலைப்பாம்பால் விழுங்கப்படும் போது, தான் உட்கார்ந் திருந்தது மரத்தின் வேர் அன்று; அசையாமல் படுத்திருந்த மலைப்பாம்பு என்று தெரிந்து கொள்வான்.

மற்ருெருவன் ஆலம் விழுதென்று நினைத்துஆலமரத்தில் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருக்கும் மலைப்பாம்பைத் தொடப்போவான். அருகிலிருப்பவன் அவனைத் தடுத்தால் தான் அவன் தப்ப வாய்ப்பு உண்டு.

ஆற்றங்கரையில் பாசிபடிந்த கற்பாறை மீதமர்ந்து நீர் பருகி ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும்சில மாந்தரில் ஒருவன் பாறையோடு நீரில் நகர ஆரம்பித்தான். வியப்புற்று அவனைப் பிடிக்க முயல்வதற்குள் முதலை அவனை விழுங்கி

விட்டது. கருங்கல்லைப்போல் முதலை படுத்திருந்ததை அவர்கள் கவனிக்கவில்லை.

காட்டு வழியாகப் போய்க்கொண்டிருக்கும் போது மதயானை எதிரில்வரும். எதிர்ப்பட்டவர்களைக் காலால் மிதித்துக் கைகால்களைப் பிய்த்து எறியும். மற்றவர்கள் உயிருக்கு அஞ்சி ஓடுவர்.

சிலர் தூங்கிக் கொண்டிருக்கும்போது புலி ஒருவனை இழுத்துச் சென்றுவிடும். விழித்துப் பார்க்கும்போது ஒருவனைக் காணுமல் ஏனையோர் விழிப்பர்.

புதரில் புகுந்து ஒருவன் வெளிவந்தான். அவனை மற்றவர்களால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. செங்குளவிகள் உடல்முழுதும் கொட்டியதால் முகமும் கைகால்களும் பருத்துவிட்டன. சிறிது நேரத்தில் அவன் இறந்து விட்டான்.

ஆற்றங்கரை புதை மணலில் கால் வைத்து மூழ்கி விட்டவரும், குகைப்பாறைகள் சரிந்ததால் உள்ளே சிக்குண்டு நசுங்கிச் செத்தவரும், ஆற்றுமணலில் உறங்கிக் கொண்டிருந்தபோது இரவில்திடீரென புதுவெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டவரும் எண்ணில்லாதவர் ஆவர்.

எரியும் காட்டில் தப்பமுடியாமல் எரிந்துபோய்விட்டவர் பலர். கோடைக்காலத்தில் பசி தாளாமலும் நீர்வேட்கை தாளாமலும் கண்ட இலைகளைத் தின்று மயங்கிச் செத்தவரும் நோய்கண்டிறந்தவரும் பலர். திகைப் பூண்டுகளை மிதித்ததால் நினைவு மயங்கித் திசை தெரியாமல் காட்டில் பலநாள் எங்கெங்கோ பித்துற்று அலைந்தவர்கள்பலர்.

வேட்டைக்குச் சென்றவரில் சிலர் காட்டுப்பன்றியால் குடல் கிழிக்கப்பட்டு இறந்தனர். சிலர் காட்டெருமையாலும் வேங்கையாலும் தாக்கப்பட்டு இறந்தனர்.

யானை தாக்க வரும்போது மலைமீதிருந்து வேகமாகக் கீழே இறங்கித் தப்பித்துக் கொள்வர். ஏனெனில் யானை

யால் சறுக்கும் பள்ளத்தாக்குகளில் வேகமாக இறங்க முடியாது. ஆனால் புலிகளிடமிருந்தும் வேங்கையிடமிருந்தும் தப்பிக்க முடியாது. மிகுந்த வலிமை கொண்டவர் வேங்கையின் வாயைப் பிளந்து கொல்வதுண்டு.

மரத்தினடியில் படுத்திருந்தவனின் கையை மலைப்பாம்பு விழுங்கியது. மற்றவர்கள் முரட்டுத்தனமாக அவனைப் பிடித்து இழுத்தார்கள்: கையறுந்தது.

வேங்கை, சிங்கம், யானை, டினோசரஸ், யாளி போன்ற கொடிய விலங்குகளை நெருங்கிப் போரிட்டு வெல்வது எளிதன்று என்னும் நிலையில் தொலைவில் நின்று அவற்றைக் கொல்லக் கருவிகளைக் கண்டுபிடிக்க வேண்டிய கட்டாயம் மனிதனுக்கு ஏற்பட்டது.

## மாந்தருக்குள் போரும் பூசலும்

விலங்குகள் பசிக்காக மாந்தரைத் தாக்கின. மாந்தர் உண்ணும்பொருள்களுக்காகவும் உறையும் இடத்திற்காகவும் ஏனைய நுகர்பொருள்களுக்காகவும் தம்மொடு தாமே போர் புரிந்தனர்.

இறைச்சியைப் பச்சையாகத் தின்ற காலத்தில் ஒருவன் மற்றொருவனை அடித்துத் தின்பது இயல்பான காட்சியா யிருந்தது. சென்ற நூற்றாண்டில் கூட ஆப்பிரிக்கா காடுகளில் மனிதரைத் தின்னும் மனிதர்கள் இருந்தனர். விலங்குகளைப் பலியிடுவது போல காட்டுத் தெய்வங்களுக்கு மனிதரைப் பலியிட்டனர்.

ஒரு கும்பல் மற்றொரு கும்பலோடு மோதித் தோற்ற போது, தோல்விக்குக்காரணம்கும்பல் குறைவாக இருப்பதே என்றுணர்ந்து கும்பலைப் பெருக்கிக் கொள்ளவும் அதிகமாகக் கூடிவாழவும் தொடங்கிய வாழ்வே சமுதாயக் கூட்டு வாழ்க்கைக்கு அடிகோலியது. ஊர்கள் பெருகின. கோட்டை களும் மதில்களும் அகழிகளும் உருப்பெற்றன.

போர் புரியும்போது, கட்டுப்பாடும் ஒழுங்குணர்ச்சியும் குறையும் நேரத்தில் கும்பல் பெரிதாக இருந்தாலும்தோல்வி நேர்ந்தது. ஒழுங்கும் கட்டுப்பாட்டுணர்ச்சியும்,ஒரு தலைவனுக்கு அடங்கி நடப்பதும், சட்டதிட்டங்களும் பல கடும் போர்களின் விளைவாக மனித சமுதாயத்தில் உருப்பெற்றன.

மனிதன், கட்டுப்பாடு சட்டதிட்டங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டான். இவ்வாறு நாகரிகத்தின் அடிப்படை போர்க்களத்தில் உருவாயிற்று. இதனை அழிவால் தோன்றிய ஆக்கம் எனலாம்.

# 10. குமரிநாட்டு மாந்தரினம்

இந்தியப் பெருங்கடலுள் மறைந்த இலெமூரியத் தலைநிலமே உலகத்தின் நாகரிகத் தொட்டிலாகவும் (Lemuria the cradle of mankind) உலக முதன் மனிதனின் பிறப்பிடமாகவும்[1] இருந்தது என்னும் உண்மை பல்வேறு அறிவியல் சான்றுகளால் உறுதிப்பட்டுவருகிறது.

இலெமூரியத் தலைநிலத்தில் தோன்றி நாகரிகமும் மொழியும் வளர்த்தவர் தமிழர். அவருள் நாகரிகம் தோன்று முன்னும், தோன்றுங் காலத்தும், பல்வேறு நாடு கட்குப் பிரிந்து சென்ற மாந்தர் கூட்டம் பல. இலெமூரிய மக்களின் வரலாற்றை ஐந்து வகையாகப் பிரிக்கலாம்.

| | | |
|---|---|---|
| 1. | கோண்டுவானு காலம் அல்லது முந்து இலெமூரியக் காலம் | 10 கோடி முதல் 5 கோடி ஆண்டுவரை |
| 2. | இலெமூரியா காலம் (படிமுறை வளர்ச்சிக் காலம்) | 5கோடி யாண்டு முதல் 5 இலக்கம் ஆண்டு வரை |
| | கற்காலம் | 5 இலக்கம் முதல் 50,000 ஆண்டு வரை |

---

1. The Nature of earth and origin of Man-A Monograph by. y. Reshetov.

| | | |
|---|---|---|
| | அடிப்படையான நாகரிக வளர்ச்சிக் காலம் | 50,000 முதல் 10,000 வரை |
| 3. | குமரி நாட்டுக் காலம் அல்லது தலைக்கழக (முதற்சங்க) காலம் | 10,000 முதல் 5,000 வரை |
| 4. | எஞ்சிய குமரி நாட்டுக் காலம் அல்லது மொகஞ்சதாரோ காலம் | கி.மு. 5,000 முதல் கி.மு. 3,000 வரை |
| 5. | நாவலந்தேய காலம் அல்லது இடைக்கழக (இடைச்சங்க) காலம் | கி.மு. 3,000 முதல் கி.மு. 1,000வரை |

ஆப்பிரிக்கா, இந்தியா, தென்கிழக்கு ஆசியப்பகுதி, ஆத்திரேலியா ஆகியவற்றை உள்ளடக்கி நின்ற இந்தியப் பெருங்கடல் பகுதி அக்காலத்தில் இலெமூரியா என அழைக்கப்பட்டது. இங்குத் தோன்றி வளர்ந்த மாந்தன்தான் முதலில் நாகரிகம் பெற்றவன் என்பதை அண்மையில் **கோந்தர கோவ்** எனும் சோவியத்து அறிஞரும் முக்கடல் புதிர் (The Riddles of three oceans) என்னும் நூலில் நிறுவியுள்ளார்.[2]

சாலித்தீவில் (Java) 1891ல் **துபாயிசு** என்பவர் கண்டெடுத்த நிமிர்ந்த குரக்கு மாந்தன் (pithecanthropus

---

2 The most surprising part of it is that a study of the world's earliest civilizations reveals a whole series of riddles that can be solved only by using the hypothesis of lemuria, a large landmass in the indian ocean that was inhabited not just by lemurs and even by pithecantropi but by human beings who had reached a high level of civilization.

The riddles of three
Oceans-page 131

**Erectus)** எலும்புக்கூடு 5 இலக்கம் ஆண்டுகளுக்கு முந்தியது என்று கணிக்கப்பட்டுள்ளது.

**சாலிமாந்தனினும்** முந்தியவனாகக் கருதப்படும். **பீக்கின்மாந்தன்** என்னும் சீனமாந்தன் (sinanthropus pekinensis)நெருப்பைத் தன் குகையில் வைத்துப் பயன் படுத்தியதாகத் தெரிகிறது

இலெமூரியத் தலைநிலத்திலிருந்த மக்களினமே உலகின் நாற்றிசையிலும் பரவினர் என்று அறியப்படுகிறது. சிந்துவெளி நாகரிகம் தோற்றுவித்தவர் குமரிக்கண்ட மக்களே. குமரிநாட்டு யானை, காளை வடிவங்களே அரப்பா மொகஞ்சதாரோ புதைபொருள்களில் மிகுதியாகக் கிடைத்துள்ளன. கி.மு. 1500ல் இந்தியாவுக்கு வந்த ஆரியரின் வேள்விக் குரிய பசு, குதிரை ஆகியவற்றின் வடிவங்கள் காணப்படவில்லை. ஆரியர்கள் முதன்முதலாக சிந்து வெளியில் யானைகளைப் பார்த்தபோது கையையுடைய விலங்கு (ம்ருக ஹஸ்தின்) என்று பெயரிட்டனர்.[3]

5 இலக்கம் ஆண்டுகளுக்கு முன்னர் பழங்கற்கால நாகரிகத்தில் தொடங்கிய குமரிக்கண்ட மக்களின் நாகரிக

---

3 It is notorious that the cow, which was prized as wealth and considered 'AGHNYA' by the Rg-vedic Aryans, and the horse which played an important part of their life, do not find a place among the animals depicted in the Hindus valley sites, the place of the cow being taken by the bull, while of the horse no defenite trace is found. The elephant is referred to in Rg-veda by the curious name of Mrga-Hastine or an animal with a trunk implying a new acquaintance with the animal. For these reasons it is likely that the Hindus people were quite different from the Rg-vedic Aryans.
The cultural heritage of india-pege-128

வளர்ச்சிப்படிகளின் உச்சிப்படியாக இன்றும் கண்ணில் காணத்தக்க உண்மையாக நமக்குக் கிடைத்திருப்பவை அரப்பா மொகஞ்சதாரோ அகழ்வாராய்ச்சிக் கண்டுபிடிப்புகள். இக்கண்டு பிடிப்புகளிலிருந்தும் ஏனைய சான்றுகளிலிருந்தும் மாந்தரின வளர்ச்சிகளைப் பின்னோக்கிக் கணக்கிட வேண்டும். 40இலக்கம் ஆண்டுகளுக்கு முன்பே தரையில் இயற்கை உணவு தேடிக் குரக்கு மாந்தர் தங்கினர். மரக்கிளை வாழ்வை நீத்த நாள் முதல் மாந்தநிலை எய்திய வாழ்வு தொடங்கியிருக்கிறது.

பழங் கற்காலம்

*(5,00,000—1,00,000 ஆண்டுவரை)*

விலங்காக இருந்த மனிதன் விலங்காண்டி (savage) யாகி இரண்டு கால்களில் எழுந்து நிற்கவும் முன்னங்கால்களைக் கைகளாகப் பயன்படுத்திப் பகைவரைத் தாக்கவும் பணியாற்றவும் தெரிந்து கொண்ட நிலையே கற்காலமாகும் இக்காலமாந்தன் கற்களைக் கருவிகளாக்கிப் பயன்படுத்தினன்.

கூர்மையும் வழுவழுப்பும் செய்யப்படாத முரட்டுக் கற்களைப் பயன்படுத்திய காலம் பழங்கற்காலம்.

நாகரிக வளர்ச்சிப்படி எல்லாவிடங்களிலும் ஒரே சீராக அமையாது. ஒரே நாட்டில் ஒரே காலத்தில் நாகரிகத்தில் முதிர்ந்த இனத்தாரும் நாகரிகம் சிறிதும் பெருத இனத்தாரும் வாழ்ந்திருக்க முடியும். நாகரிகச் சின்னங்கள் தோண்டிய இடத்தில் கிடைக்காமல் வெறுங்கற்காலக் கருவிகள் மட்டும் கிடைத்தால் அதை வைத்துக்கொண்டு அந்நாட்டு மக்கள் அக்காலத்தில் கற்காலத்தில் தானிருந்தார்கள் என்று முடிவு கட்ட முடியாது.

நாகரிகம் ஏதோ ஓரிடத்தில் முதலில் தோன்றி ஏனைய இடங்களுக்கு மெதுவாகப் பரவியிருக்கும். இதனைக்கருத்தி

விருத்தி மாந்தனின் முதல்பிறப்பிடமான குமரிக்கண்ட கற்காலத்தைக் கணிப்பதற்கு கடலக அகழ்வாராய்ச்சி பெரிதும் துணைபுரிய வேண்டும்.

இயற்கை உணவு தேடத் தெரிந்ததும், எளிய இருப்பிடம் அமைக்கத் தெரிந்ததும், தீயின் பயன்பாடறிந்ததும், தோலுடை அல்லது தழையுடை அணிந்ததும், முழைத்தல் மொழி (inarticulate speech) எனப்படும் உணர்ச்சிக் குறிப் பொலிகளான மொழிதோன்றியதும் இக்கால நாகரிகக் கூறுகளாகும்.

## புதிய கற்காலம்

(1,00,000—50,000 ஆண்டுவரை)

காற்கால மாந்தர் வாழ்ந்த இடம் மலைப்பகுதிகளாக இருந்திருக்க வேண்டும். அங்குத்தான் அவர்கள் வெயிலுக்கும் மழைக்கும் கடுஞ்சூறுவளி காற்றுக்கும் ஒளிந்து கொள்ளு தற்கேற்ற குகைகள் உண்டு. காய் கனி கிழங்கு போன்ற இயற்கை உணவுகளும் கிட்டும். மலைமுகடுகளில் ஏறிக் கொண்டால் கொடிய விலங்குகளின் பார்வையினின்றும் தப்பித்துக் கொள்ளமுடியும்.

குமரிக்கண்ட தமிழர் மலை முகடுகளையே தமக்கு இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்தவர் என்பது கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடியினர் என்னும் தமிழ் வழக்கு உறுதிப் படுத்துகிறது.

தம் கற்கருவிகளை இக்காலத்தில் வாழ்ந்த குமரிக்கண்ட மக்கள் கூர்மையாக்கிக் கொண்டனர். வினைத்திறம் பெருகியது. கால்நடைகளை வளர்த்தலும் வேட்டைத் தொழிலும் ஒழுங்குபட்டது. விதைகளை நட்டு மரஞ்செடி கொடி வளர்த்தலும் சிலவகை புன்செய்ப்பயிர்களின் பயனும் தெரிந் திருக்கக் கூடும். உணவுப்பொருள்களைத் தீயிலிட்டுச் சுவைத்துத்தின்னும் பழக்கம் பெருகியிருக்கக் கூடும்.

இயற்கை மொழியாகிய முழைத்தல்மொழி (inarticulate speeh) எனும் நாவசைத்துப் பொருள் விளங்கப் பேசும் மொழி வளர்ச்சிப் பெற்றிருக்கும். படஎழுத்துமுறை (picture writing or pictograph)யிலிருந்து கருத்தெழுத்து முறை (ideograph) தோன்றியிருத்தல் வேண்டும்,

நாகரிக வளர்ச்சிக் காலம்

(50,000—10,000 ஆண்டு வரை

தொழில் திறனும் திருத்தமான மொழிபேசும்ஆற்றலும் குமரிநாட்டு மாந்தரிடை வளர்ந்த போது முறையே



வேளாண்மைப் பெருக்கமும். வாணிகப் பெருக்கமும் நகரமைப்புக்கலையும் முறையாக மேன்மையுற்றன.

மொழி செம்மையாகப் பேசப்பட்ட இக்காலவெல்லையில் அசைநிலை மொழியமைப்பின்போது சித்தியரின் முன்னோரும் பகு சொன்னிலை மொழியமைப்பின்போது சுமேரியரின் முன்னோரும் குமரிநாட்டிலிருந்து பிரிந்துபோயிருக்க வேண்டும் என்று மொழி ஞாயிறு. பாவாணர் கூறுகிறார்.

விலங்குகளைக் கருவிகளால் தாக்கிக் கொன்றவர்கள் மரக்கறி உணவினராகவும் (Herbivorous) கருவிகளின் துணையில்லாமல் கைகளால் குத்தியும் பல்லால் கடித்தும் போராடியவர்கள் குருதிச்சுவை மிக்கவராய் மாறிப் புலால் உண்ணும் இயல்பினராயும் மாறியிருத்தல் வேண்டும்.

## பொற் காலம்

கற்கருவி மரக்கருவிகளுக்குப்பிறகு தரைமட்டத்திலும் ஆற்றோரங்களிலும் இயல்பாகக் காணப்பட்ட பொன்னே குமரிக் கண்ட மாந்தர்க்குக் கிடைத்த முதல் மாழை (உலோகம்)யாகும். கி.மு. 50,000-30,000 வரையுள்ள காலம் குமரிக்கண்டத்தில் நிலவிய பொற்காலம் என்பர். சுடுமட்கலம், ஞெலி கோல் (தீக்கடையும் கோல்) தனியூர் குடியிருப்பு, கூட்டு வாழ்க்கை, இல்வாழ்க்கை ஆகியவை இக்கால நாகரிக நிலைகளாயிருத்தல் வேண்டும்.[4]

குமரிக்கண்ட காலத்தில் பொன் மிகுதியாகத் தரையின் மேற்பரப்பிலேயே கிடைத்தது. குமரிக் கண்டத்தை சேர்ந்திருந்த ஆத்திரேலியா தென்னாப்பிரிக்கா ஆகிய இடங்களில் இன்றும் பொன் கிடைத்து வருகிறது. பொற்காலம் என ஒன்று பழந்தமிழகம் தவிர வேறெந்நாட்டிலும் இருந்த

---

4. The indigeneous races of India belonged to Tamil and even in the dim prehistoric times they were far advanced in mental culture.

preface-பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும் -மறைமலையடிகள்)

தில்லை.[1] இங்குப் பொற்காலம் எனக்குறிப்பது பொன்னாலான ஏனங்கள் (பாத்திரங்கள்] அணிகலன்கள், காசுகள், அழகுப் பதுமைகள் ஆகியவற்றை செய்யப் பயன் படுத்திய காலத்தைக் குறிக்கும்.

இப்படியொரு காலம் இருந்திருக்க முடியுமா? என்று பலர் வியப்புற்றாலும் அப்படியிருந்திருக்க முடியும் என்பதற்கான சான்றுகள் உள்ளன.

குமரிக்கண்டத்தின் எச்சமாக இந்தியப் பெருங்கடலுள் எஞ்சி நின்ற தீவுகளுள் பொன்தீவு (சுவர்ணதீவு) எனப்பட்ட தீவைப் பற்றி வடமொழி பாலி பிராகிருத நூல்களுள் கூறப் படுகின்றது. என்று இந்திய வணிக நெறிகள்என்னும் நூலில் மோதி சந்திரர் கூறுகிறார். கி.மு. முதலிரு நூற்றாண்டு கடல் வணிகரின் குறிப்புகளில் இந்தியாவின் தென்பகுதி யும் கடல் தீவுகளும் பொன்னும் மணியும் கிடைக்கும் இடங் கள் எனக்குறிப்பிடப்படுகின்றன. தமிழரசர் புலவர்களுக்குப் பொற்கிழியளிப்பதும் எடைக்கு எடை பொன் தருவதும் இயல்பாகக் கொண்டிருந்தனர். சேக்சுபியர் (Shakespeare) பன்னிரண்டாம் இரவு' (Twelfth night) என்னும் நாடகத் தில் பொன்னை இந்திய மாழை (Metal of India) என்று குறிப் பிடுகிறார்.

குமரி நாட்டுப் பஃறுளி யாற்றங்கரையிலிருந்த தென் மதுரைப் பாண்டியனான நெடியோன் உயர்ந்த பசும்பொன்னை கூத்தர்க்குப் பரிசளித்தான் என்று நெட்டிமையார் பாடி யிருக்கிறார். உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி பொன்னால் செய்த தேர் வைத்திருந்தான்.

பொன் கிடைக்கும் வகைகள் தூள் (Dust), மணல் (grain), தகணை (nugget), நரம்பு (lode or vein), கலப்பு (mixture) என ஐந்து. 1851ல் ஆத்திரேலியாவில் நிலமட்டத் திற்கு ஓரிரு விரலாழத்திலேயே பெருந் தகணைகளாகப்

1. தமிழர் வரலாறு (பக்கம்-37) மொழி ஞாயிறு பாவாணர்.

பொன் கிடைத்தது போன்றே குமரிக் கண்ட காலத்தில் கிடைத்தது என்பதில் வியப்பில்லை.

குழந்தைகளைப் பொன்னே என்றழைப்பதும், முதலேர் பூட்டுவதைப் பொன்னேர் பூட்டுதல் என்பதும், இன்றும் தமிழரிடையே நிலவி வரும் குமரி நாட்டுச் சொல் வழக்கு களாயுள்ளன. பொன்னாலாகிய மலரிதழ் மாலைகளை மன்னர் அணிந்தனர். அம்மாலை பொலந்தார் எனப்பட்டது.

கற்காலத்தையடுத்த தமிழர் நாகரிகம் பொற்கால மாகவே இருந்திருக்க வேண்டும் என்பதை இக்கூற்றுகள் நிறுவுகின்றன. ஓர் ஆண்டில் முதன்முதலாக ஏர் உழுதலை மன்னன் தொடங்கி வைப்பது குமரி நாட்டு வழக்கமே. அப் போது மன்னன் பொன்னால் செய்த ஏரை உழவர் வரிசை யில் முன்னின்று ஓட்டுவான். இவ்வழக்கம் மொகஞ்சதாரோ காலத்திற்குப் பிறகு வட இந்தியாவில் வாழ்ந்த தமிழராலும் பின்பற்றப்பட்டது என்பது மகதநாட்டு ஊர்த்தலைவன் பொன்னால் செய்த ஏரை ஒரு படைச்சால் ஓட்டித் தொடங் வைப்பான் என்னும் வரலாறு மெய்ப்பிக்கிறது.

## செம்புக் காலம் கி மு 30,000—15,000

பொன் கிடைப்பது வரவரக் குறைந்தபோது குமரி நாட்டு மக்கள் செம்பைக் கண்டு பிடித்துப் பயன்படுத்தினர். பொதியமலை கூட செம்பிற் பொருப்பு எனப்பட்டது[1]. இதனைச் செப்பு வரை என்று குற்றாலத்தலபுராணம் கூறு கிறது. குமரிக் கண்ட காலத்தில் தமிழகமும் குமரிக்கண்டத் தோடு இணைந்தே இருந்தது. கடலுள் மூழ்கிய பழந் தமிழகமும் இக்காலத் தமிழகமும் ஒரே நாடாக இருந்தது.

குமரி நாட்டில் எங்கெங்குப் பொன் கிடைத்தது எங் கெங்குச் செம்பு கிடைத்தது என்ற விளக்கங்கள் நமக்குக்

---

1 தென் கால்விடுக்குஞ் செம்பிற் பொருப்பு.
(கல்லா, 51:11]

கிடைக்காவிடினும் செம்பைப் பயன் படுத்திக் கருவிகளும் ஏனங்களும் செய்திருக்கிறார்கள் என்பதற்குச் செம்புத் தொழில் வளர்ச்சியின் படிநிலைகள் சான்றாக உள்ளன.

செம்பை உருக்கி ஊற்றிக் கட்டப்பட்ட கற்கோட்டை துவரை எனப்பட்டது. இடைக் கழகப் புலவர் ஒருவர் துவரைக் கோமான் எனப்பட்டார். கண்ணன் ஆண்ட வட இந்திய துவரை நகரும் [துவாரகை) இத்தகைய கோட்டை யமைந்ததே. தமிழக வேளிரும் செம்புருக்கி வார்த்த கற் கோட்டைகளைக் கட்டியிருந்தனர்[2]

செம்பு ஏனங்கள் பொது மக்களும் ஆளத்தக்க எளிய ஏனங்களாயிருந்தன. செம்பு, செப்புக்குடம், தெய்வப்படிமம் ஆகியவை செம்பால் செய்யப்பட்டன. பனையோலைகளில் எழுதப்பட்ட இன்றியமையாத செய்திகள் செம்புக் காலத் தில் செப்புப் பட்டையங்களில் எழுதப்பட்டன. எகிப்து கல்லறைகளில் கி.மு 5000ல் செய்யப்பட்ட செம்புக் கருவி கள் கிடைத்துள்ளன.

ஆழ்கடலில் மீன் பிடித்தல், பண்டமாற்று, நிலவணிகம் முத்துக்குளித்தல், பவளம் திரட்டல் ஆகியவையும் இக்கால நாகரிக நிலைகளாக இருந்திருத்தல் கூடும்.

## உறைக் காலம் (வெண்கலக் காலம்)
## கி.மு 15,000—10,000

வெண்கலத்தைப் பழங்கால மக்கள் உறை என்றும் முறி என்றும் வழங்கினர். எட்டுப்பங்கு செம்பும் ஒரு பங்கு தகரமும்கலந்தகலப்பு உறை எனப்பட்டது.

இது வெண்ணிற வடிவில் காணப் பட்டதால் மக்கள் இதனை வெண்கலம் என்றனர். செம்பு ஏனங்களில் வைத்த

---

2 செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசை
உவரா வீகைத் துவரை யாண்டு (புறம். 201)

உணவுப் பொருள்கள் புளித்தும் கெட்டும் போவதால் வெண் கல ஏனங்கள் மக்களிடையே புழக்க மிக்கதாயின.

குமரிக்கண்டமக்கள், கைம்மணி, வண்டிமணி, ஆராய்ச்சி மணி, யானைமணி, ஆனிரை மணி, தேர்மணி, கோபுரமணி, செம்பை, கைத்தாளம் ஆகியவை செய்யப் பயன்படுத்தினர்.

இது இசைக் கலையின் கூறான தாளவோசைக்கு அடிப் படையானதால் தமிழில் முத்தமிழ்ப் பாகுபாடு ஏற்பட்ட காலத்திலேயே பயன் பாட்டுக்கு வந்திருக்கவேண்டும். இசை யும்நாடகமும் குமரிநாட்டு மக்கள் வளர்த்த அருங்கலைகளாக இருந்தன.

நிலையான வேந்தராட்சியும், கட்டிடக்கலையும், நகர மைப்பும், போர்முறைகளும், தொழிற்பெருக்கமும் கடல் வாணிகமும் தோன்றிய காலமாக இதனைக் குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும், இதே காலத்தில் வெள்ளியும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கலாம்.

இக்காலத்தில் கடல்வழியாகவும் நில வழியாகவும் பிற நாடுகட்குச் சென்ற தமிழ்மக்கள் பொன் . செம்பு, உறை [வெண்கலம்] ஆகியவற்றை அங்கு அறிமுகப் படுத்தியும், அந்நாட்டிலும் அவை கிடக்கின்றனவா என்பதை அறிந்தும், நாகரிகம் பரவுதலுக்கு அடி கோலினர் எனலாம்.

## இரும்புக் காலம் கி. மு. 10,000

உலகின் பல நாடுகளிலும் இரும்பு கிடைக்கிறது. எனினும் அதன் முதல் தோற்றம் பழந்தமிழகத்தில் தான் இருக்க வேண்டும் என்பதை, எகிப்து பிரமிடுகளில் பயன் படுத்தப்பட்ட இரும்பு தமிழகத்தைச் சார்ந்தது என்னும் உண்மை வெளிப்படுத்துகிறது.

தூபால் காயீன் இரும்பு செம்பு வினைஞர்க்குப் பயிற்று னனாக இருந்தான். இலக்கியக் கிரேக்கரின் முன்னோடிகளான

தோரியப் படையெடுப்பாளர், இரும்புக் கருவிகளையும் படைக்கலங்களையும் கொண்டிருந்தார்கள். கிரேக்கர் கருங் கடலின் தென் கரையினின்றும், உரோமர் இசுப்பானியா வினின்றும், எல்பாவினின்றும், இரும்பைப் பெற்றனர். தெளிவாகவுள்ளபடி, அதற்கு முந்திய மூலங்கள் இந்த யாவில் இருந்தன.[1] என்று பிரித்தானியக் கலைக்களஞ்சியம் கூறுகிறது.

தூபால் காயீன் கி. மு. 3874ல் வாழ்ந்தவன். கானானிய அரசன் யாபீன் 90 இரும்புத்தேர் உடையவனாயிருந்தான்.

மேற்கண்ட கூற்றுக்களிலிருந்து கி. மு. 5000க்கு முன்பே இரும்பு கடல் கடந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டிருக்க வேண்டும் என்பது தெரிகிறது. குமரிக்கண்ட தமிழர் இரும்பின் பயனை நன் குணர்ந்தவராதலால் ஈட்டி, வேல், வாள் போன்ற படைக்கலங்களைப் போரில் மிகுதியாகப் பயன்படுத்தினர். வேலெறிந்து விலங்குகளைக் கொல்லும் வழக்கம் இரும்புக் காலத்தில் தோன்றியதாகும்.

கி. மு. 5000 ஆண்டுகளுக்கு முன்பிருந்த இந்தியா குமரிக் கண்டத்தோடு சேர்ந்திருந்ததால் இந்திய நாகரிகம் குமரிக் கண்டத்திலிருந்து வந்த நாகரிகமே என்பதில் ஐயமில்லை.

கடலுள் மூழ்கிய இலெமுரியத் தலைநிலத்தில் வாழ்ந் தவர் நாகரிக நிலை எய்திய மாந்தராவர் என்று பிரடரிக் ஏஞ்செல்சு கூறியிருக்கிறார்.

கற்காலத்திலேயே தாம் கண்ட காட்சிகளைக் குகைகளில் பச்சிலைகளால் ஓவியம் வரையும் வழக்கம் இருந்திருக்கிறது. பழஞ்சேர நாடாகிய மலையாளத்து மேற்கு மலைத்தொடர்ச்சி மலையில் பாலக் காட்டையடுத்த மலைப்பாறைகளிலும் குகை களிலும் அத்தகைய கற்கால ஓவியங்களைக் கண்டு பிடித்திருக்

1 Encyclopaedia Britanica -1670, 12, பக் 598.

கிறார்கள். அவை 1½ இலக்க ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்கின்றனர். இந்த ஒவிய வளர்ச்சியே பட எழுத்து முறையாகவும் கருத்தெழுத்து முறையாகவும் மொழித்தோற்றத்தின் முன்னோடியாகவும் விளங்கியிருத்தல் கூடும்.

## ஐந்திணைப்பிரிவும் இருவகை ஒழுக்கமும

குறிஞ்சி எனப்படும் மலைப்பகுதி வாழ்க்கையிலிருந்து படிப்படியாக நாகரிகமடைந்து முல்லை, மருதம், நெய்தல் நிலங்களில் மக்கள் குடியேறிய போது தமிழரின் நாகரிக வாழ்வு நிறைவு பெற்றது. இதனடிப்படையில் தான் குறிஞ்சி, முல்லை, பாலை,மருதம்,நெய்தல் என்னும் ஐந்திணைப் பிரிவும் அந்த ஐந்நிலப்பிரிவுகளில் அகவாழ்க்கை, புறவாழ்க்கை எனப்படும் இருவகை ஒழுக்கமும் தோன்றின. மாந்தர் எவ்வாறு வாழவேண்டும் என்பதற்காக இவ்விருவகை ஒழுக்கத்திற்கும் வகுத்த இலக்கணம் பொருளிலக்கணம் எனப்பட்டது.

மொழிக்கு இலக்கணம் வகுத்ததோடு அமையாமல் மொழியைப் பேசும் மக்களின் வாழ்க்கைக்கும் பொருளிலக்கணம் வகுத்த பெருமை குமரிக்கண்ட தமிழருக்கு உரியதாகும். உலக மொழியினர் எவருக்கும் தோன்றாத அரிய இலக்கணப்படைப்பு இது.

# 11. முன்தோன்றி மூத்த குடி

*"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
முன்தோன்றி மூத்த குடி"*

(புறப்பொருள் வெண்பாமாலை)

*கல்தோன்றி மண்தோன்றாத காலம் என்று ஒன்று இருந்தது. வெயில் மிகுதியால் கற்பாறைகள் பிளந்தன. மழைநீர் தேங்கிய சுனையூற்றுக்களில் ஊறிய கற்பிளப்புகளிடையே செடிகளும் மரங்களும் முளைத்தன. கற்பாறைக் குன்றுகளும் மலைகளும் காடுகளாயின. எங்கோ சிறிய அளவில் மணலும் மண்ணும் காணப்பட்டது. அவை பெருகி தரையிலிருந்த கற்பகுதிகளை மூடி மேடிட்டன. இதுவே மண் தோன்றிய வரலாறு. இரும்பு துருப்பிடித்து உதிர்வது போன்று பாறையும் கற்களும் வெயிலில் வெந்து மழையில் உருகி உதிர்ந்த சிறு துகளே மண். நிலவுலகத்தில் கடல் தவிர ஏனைய நிலப்பகுதியில் பாறை மிகுதியாகவும் மண்மிகக்குறைவாகவும் இருந்த காலத்திலேயே மனிதன் தோன்றி விட்டான்.*

*தாவரம் தோன்றிய பொழுதே உயிர்களும் தோன்றின. மகரந்தச் சேர்க்கைக்குப் பறவையினம் உறுதுணையாக இருந்திருப்பது அதற்குச் சான்றாகும். இந்தக் காலத்தில் தோன்றிய*

மனிதன் உழவுத் தொழிலையறியாதவன். புல் பூண்டுகளை விட மரஞ்செடி கொடிகளையே அறிந்தவன். பறவை விலங்கு மீன் ஆகியவற்றை உணவாகக் கொண்டவன். வில்லும் மர ஈட்டியும் தவிர வேறு கருவிகளை அறியாதவன். அவன் கல்லும் தடியும் பயன்படுத்திய காலத்திலிருந்து வில்லைப் பயன் படுத்தும் காலத்துக்கு அடியெடுத்து வைத்த காலமே தொழில் வளர்ச்சியும் நாகரிகமும் பெற்ற காலம்.

கற்குகையே அவனுக்குப் பாதுகாவலான வீடு. கல்லே அவன் ஆயுதம். கல்லிடை வளர்ந்த மரங்களே அவன் தோட்டம். வேட்டையே அவன் தொழில். உடல்வலிமை ஒன்றே அவன் உயிர் வாழ்வின் அளவுகோல். அவன் சாவுக்கு அஞ்சாதவன், கொடிய விலங்குகளைக் கொல்லவும் அஞ்சாதவன். அஞ்சாமையே அவனை வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெறச் செய்தது. புதிய கருவிகள் படைக்கும் ஆற்றலும் அறிவும் அவனுக்குப் துணைபுரிந்தன. எல்லாவற்றிலும் மேலாகக் கற்கால மனிதன் விலங்குகளைத் தாக்கும் பொருட்டு ஒன்று சேர்ந்து பலரோடு கூடிக் கூட்டமாகச் சேர்ந்து வேட்டையாடத் தொடங்கியது மேலும் வெற்றிகளைக் குவித்தது.

கற்கால மனிதன் வலிமையால் வளர்ந்தான் என்பதை விட ஒற்றுமையால் வளர்ந்தான் என்பதே பொருந்தும். மிகப் பெரிய விலங்குகளையெல்லாம் சிறிய மனிதன்வென்று விட்டான். கூடி எதிர்த்தான், கூடி வாழ்ந்தான் கோடி நன்மைகளைப் பெற்றான். உயிரினங்களில் மனித இனம் தலைநிமிர்ந்து நடக்கத் தொடங்கிவிட்டது. நான்கு கால் நிலையிலிருந்து இரண்டு காலில் எழுந்து நடக்கத் தொடங்கியதே அவன் எழுச்சியின் முதற்படி எனலாம்.

இந்த ஈராயிரம் நூற்றுண்டுகளில் உலகின் மேற் பரப்பு, கடல் நிலமாகவும் நிலம் கடலாகவும் எத்துணையோ முறைகள் மாறியுள்ளன. கடல் கோள்களும், எரிமலைகளும், நில நடுக்கங்களும் உலகின் மேற்பரப்பை உலுக்கி உருமாற்றி

யுள்ளன. இந்த இயற்கை மாற்றங்களால் உயிரினங்களின் இடப்பெயர்ச்சி தவிர்க்க முடியாததாயிற்று. இடமாற்றங்கள் உயிர்களின் உருமாற்றங்களுக்கும் காரணமாயின. வெப்ப நாட்டு உயிரிகள் கரு நிறமும் குளிர்நாட்டு உயிரிகள் வெண்ணிறமும் பெற்றன.

கற்கால மனிதன் நாகரிகம் பெறத் தொடங்கினன். அவன் திருந்திய நாகரிகம் பெற்ற காலம் ஐந்நூறு நூற்றாண்டுகளுக்கு(50,000ஆண்டுகளுக்கு) முன்பு எனலாம்.

சுமார் 10,000 ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது உலக மேற்பரப்பில பெரிய அளவில் கடலூழி, எரிமலை போன்ற இயற்கை அழிவுகள் ஏற்படுவது, இயற்கையாக இருக்கிறது என்று நிலநூலார் கூறுவர். இக்கணக்கின்படி கோண்டுவானு அல்லது இலெமூரியாவிலிருந்து மாந்தர் இனம் 10 முறையாவது பெரும்அளவில் வேறு கண்டங்களுக்குத் தரை வழியாக இடம் பெயர்ந்திருக்க வேண்டும்.

இறந்தவர் போக எஞ்சியவர் தாம் கண்டிராத நாடுகளில் குடியேறி அங்கங்கே நிலைத்து விட்டிருப்பர். இவர்களில் ஓரளவுக்கு நாகரிகம் தோன்றிய காலத்தில் இடம் பெயர்ந்தவர்கள் உண்டு. சற்றும் நாகரிகம் பெறுத முதற் கற்கால மாந்தரும் உண்டு. இது எவ்வாருயினும் இடம் பெயர்ந்து வேறு நாடடைந்தவர் அனைவரும் பேசத் தெரிந்த நாகரிக நிலையினர் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஏனெனில் பேசத் தெரிந்தவரே மனிதர் என்றும், பேசத் தெரியாத மனிதத் தோற்றமுடையது குரங்குமாந்தன் என்றும் பிரிக்கப்பட்டிருப்பதை நாம் அறிவோம். இன்றும் மனிதக் குரங்குகள் ஆப்பிரிக்காவில் உள்ளதால் ஆப்பிரிக்காவை ஒட்டியிருந்த இலெமூரியாவிலேயே பேசத்தெரிந்த மனிதன் தோன்றினன் என்றும், அவன் மரபே உலக முழுவதும் பரந்தது என்றும் கொள்வதில் ஐயமில்லை.

கல் தோன்றிய காலம், கடல் தோன்றிய காலம், உயிர் தோன்றிய காலம், மண் தோன்றிய காலம் என்னும், காலப்

பகுப்பின்படி மண் தோன்றுமுன்னே, உயிர் தோற்றத் திறுதிக் கட்டமாக மனிதன் தோன்றி விட்டான். அவன் பேசத் தெரிந்தவன். அவன் பேசியது தமிழ்.

மரத்திலிருந்த குரங்கு மலைப்பாறைகளில் காலூன்றி எழுந்து நின்று நடந்து, 'என் பெயர் மனிதன்' என்றது. மரக்கிளையை விட்டு மலைக்குகையில் குடும்பம் நடத்தியது. பேச்சுக்கலை குரங்குமனிதனை முழுமனிதனுக்கிவிட்டது. இந்த அதிசயம் நடந்த இடம் இலெமூரியா. இந்நிகழ்ச்சி நடைபெற்ற காலம் கல்லை ஆயுதமாகத் தெரிந்தெடுத்த கி. மு. ஆயிரத்தாவது நூற்றாண்டு (1 இலக்கம் ஆண்டுக்கு முன்).

பேச்சுக்கலை

ஆயுதத்தால் பகைவனைத் தாக்கத் தூண்டியது அறிவு. அந்த அறிவைத் தூண்டிய சிந்தனையின் நிலைக்களம் மொழி. கைத்திறத்தின் அசைவுகளை அவன் நா அசைந்து பேச்சாக வெளிப்படுத்தியது. மற்றவர்களையும் பேசவைத்தது. முதன் முதலில் நாவை அசைத்து முதற் சொல்லைப் பேசிய மனிதன் எவனோ அவனே மொழியின் தந்தை.

உணர்வே அழவும் சிரிக்கவும் தூண்டுகிறது. உணர்வே வடிவமான பெண்ணினமே முதன் முதலில் நாவசைத்துப் பேசத் தொடங்கியிருக்க வேண்டும் என்னும் கூற்றின்படி, முதன் முதல் சொல்லைப் பேசிய பெருமை கற்காலப் பெண்ணையே சார்ந்திருந்தாலும் அதில் வியப்பில்லை. அப் பெண்ணே மொழியின் தாய்.

உணர்ச்சிகள் அந்த ஒலிகளாகி (Syllable) சொல்லாகவும் பாட்டாகவும் உருவெடுக்கும். ஆ, அது எனச் சொல்லி, கையாலும் சுட்டிக் காட்டியபோது 'அப்பொருள்' என்பது கேட்பவருக்கு விளங்கியது. மரத்தைச் சுட்டிக்

காட்டி, மரம் என்று சொன்ன நாளிலிருந்து மரத்தைக் காட்டாமலே மரம் என்ற சொல்லே மரத்தைக்குறிக்கும் அடையாளமாகிவிட்டது.

மனிதன் நாவில் சொற்கள் வளர்ந்தன. உள்ளத்தில் சிந்தனை ஒளிர்ந்தது. சிந்தனை யுள்ளவன் காரணமில்லாமல் அல்லது தொடர்பில்லாமல் ஒரு சொல்லும் படைக்கவோ பேசவோ முடியாது. ஆதலால் அவன் பேசியமொழி அவனையறியாமலேயே ஓர் ஒழுங்கும் இலக்கண அமைப்பும் உடையதாக இருந்தது.

அவன் அறிந்த பொருள்களுக்கெல்லாம் அவன் மொழியில் பெயர்ச் சொற்கள் தோன்றின. அவன் அறிந்த செயல்களுக்கெல்லாம் அவன் மொழியில் வினைச்சொற்கள் தோன்றின. அவனுடையது அது என்று சொல்ல, அவன் அது—அவன் அப்பொருள்—அவன் அப்பொருளுக்குரியவன்—அவனது என்று பெயர்ச் சொற்களே இடைச் சொற்களாக—வேற்றுமை உருபுகளாக—உருவெடுத்தன. அவனது (அவனுடையது) என்று முதன் முதல் கூறிய போதும், கையால் வேறொருவனுடையது எனச்சுட்டிக்காட்டிப்பொருள் விளக்கியிருப்பார்கள். இத்தகைய சொல்லாட்சி பெருகிய பிறகு கையால் சுட்டிச் சைகை காட்டுவது நின்று விட்டிருக்கும்.

மொழி தோன்றிய பிறகு வெகு விரைவாகப் பரவியிருக்கும். நெடுவிளியும்-கூக்குரலும்-பாட்டும்-கூத்தும் பல திறத்துக் கற்கால மாந்தரை ஓரினமாக்கியிருக்கும். மொழி, என்றைக்குப் பாட்டாகவும் கூத்தாகவும் மலர்ந்ததோ, அன்றே கற்கால மனிதனின் கல்லான மனம் இளகி அன்பு ஊற்றெடுத்து சிற்றூராக, ஒரு நகரமாக, நாகரிக வாழ்வு வாழத்தொடங்கிய காலத்தின் கால்கோள் விழாநாளாக ஆகும். சமுதாயச் சூழல் அல்லது அமைதியாகக் கூடி வாழும் காலம் வரும்வரை மொழியில்பாட்டும்கூத்தும் தோன்றாமல் உணர்வு வெளிப்பாட்டுப் பேச்சாகவே இருந்திருக்கும் எனலாம்.

## மொழி பரவுதல்

20,000 ஆண்டுகளுக்கு முன்பு இலெமூரியா கண்டத்தி லிருந்து ஆத்திரேலியாவில் குடியேறிய பழங்குடி மக்களின் மொழி தமிழோடு தொடர்புடையதாக இருக்கிறது. சுமார் 50,000 ஆண்டுகளுக்கு முன்பு இலெமூரியா கண்டத்தி லிருந்து தரைவழியாக குடியேறிய சீன மக்களின் மொழியில் தமிழ்மொழிக் கூறுகள் உள்ளன. 30,000 ஆண்டுகளுக்கு முன் ஆப்பிரிக்காவில் குடியேறிய நீக்ரோக்களின் மொழியில் தமிழின் சாயல் காணப்படுகிறது. சுமார் 10,000 ஆண்டு களுக்கு முன், மத்திய தரை கடலோரம் எகிப்து, பாரசீகம் ஆகியவற்றில் குடியேறிய மக்களிடமும் ஈபுரு, செமித்தியம் இந்தோ ஐரோப்பிய மொழிகளிலும் தமிழின் கூறுகள் உள் ளன. சுமார் 40,000 ஆண்டுகளுக்கு முன், பசுபிக்கடல் பகுதி நிலத்தில் வதிந்து பின் படிப்படியாக அமெரிக்காவில் குடி யேறிய செவ்விந்தியரின் மொழிகளில் தமிழின் கூறுகள் உள்ளன.

இவற்றையெல்லாம் ஒருங்கு வைத்துஎண்ணிப்பார்க்கும் போது இலெமூரியாக்கண்டம் என்னும் தலை நிலத்திலிருந்து வெவ்வேறு நீண்ட கால இடைவெளிகளில், நில வழியாக வேற்று நாடுகளுக்குத் தமிழினத்தைச் சார்ந்த மிகப்பழைய கிளைவழியினர் சென்றிருக்கிறார்கள் என்பதும் காலப்போக்கில் உடலமைப்பும் மொழியமைதியும் வேறுபட்டு விட்டன என்பதும் வெளிப்படையாகத் தெரிகிறது.

எந்தெந்தக் காலகட்டத்தில் எந்தெந்த மொழியினர் இலெமூரியா அல்லது குமரிக்கண்ட தமிழரினின்று பிரிந்தனர் என்பதையும் அந்தந்தக் காலத்தில் அம்மொழியின் அமைப்பு எவ்வாறு இருந்திருக்கும் என்பதையும் அறிந்தால் மிகவும் உவப்பாயிருக்கும். மொழியகழ்வாராய்ச்சி (Language archaeology) இந்த உண்மையை நிறுவ வல்லது.

அறப்பழங்கால மனிதர் வரலாறுகளை மொழியின் ஒப்பிலக்கண ஆராய்ச்சியாலன்றி வேறு வகையால் ஆய்ந்து திறுவுவது எளிதன்று.

இடம் பெயர்ந்தவர்களில்,நாகரிகம் பெற்ற காலகட்டத்தில் இடம் பெயர்ந்தவர்கள், தாம் சென்றநாடுகளிலும் அதே நாகரிகச் செம்மையை நிலை நாட்டினர். நாகரிகம் பெறாத காலகட்டத்தில் இடம் பெயர்ந்தவர்கள், அதே நாகரிகமில்லாத நிலையிலேயே காட்டு மனிதராக இந்த நூற்றாண்டு வரை வாழ நேர்ந்தது. ஆப்பிரிக்க நீகிரோவர், ஆத்திரேலிய அமெரிக்க பழங்குடிகள், பிரான்சு எல்லையில் வாழும் பாஸ்க் பழங்குடியினர் ஆகியோர் இவ்வகையினர்.

அலையலையாகப் பெயர்ந்த கிளைவழியினர் அனைத்து நாடுகளிலும் பல்வேறு காலங்களில் குடியேறி ஆங்காங்கு நிலைத்து விட்டனர். இவர்களில் நாகரிகச் செம்மையுற்றவரின் நகரங்களும் நாகரிகங்களும், போராலும் கொள்ளையாலும் பிறகாரணங்களாலும் தாக்கப்பட்டபோது அழிவுக்குள்ளாயின. அந்த நாகரிக நலன்களைப் பெற்ற பிற மக்கள் அதே நாகரிகத்தைத் தம் பெயரில் வெளிப்படுத்திக் கொண்டனர்.

## குமரிக் கண்ட மக்கள் பெருக்கம்

இலெமூரியா அல்லது குமரிக்கண்ட மாந்தர் படிப்படியாக நாகரிகம் பெற்ற காலத்தில் அமைதியான வாழ்வால் மக்கள் தொகை அதிகமாகப் பெருகியிருக்கும். இந்தியாவில் 1940-ல் 30 கோடியாக இருந்த மக்கள் தொகை, 1970-ல் 60 கோடியாக ஆகிவிட்டது. முப்பதே ஆண்டுகளில் இரு மடங்காகி விட்டதைக் காண்கிறோம். கி. மு. 1,00,000 விருந்து கி. மு. 10,000 வரையுள்ள 90 ஆயிரம் ஆண்டுகளில் கற்கால மனிதரின் மக்கள் தொகை பல்வேறு அழிவு

களுக்கிடையில் 1,000 ஆண்டுகளுக்கு ஒருமுறை இருமடங்கா யிற்று எனக் கணக்கிட்டுப் பார்க்கலாம்.

கி. மு. 1,00,000 ஆம் ஆண்டில் கணவனும் மனைவியு மாக இருவரே இருந்ததாகக் கொள்வோம். ஆயிரம் ஆண்டு களில் இருவரின் வழிமரபினரில் நால்வரே எஞ்சியிருந்ததாகக் கொள்ளாது. 20 ஆயிரம் ஆண்டுகளில் அவர்களின் தொகை $2^{20}$—20,51,152 (இரண்டு மில்லியன் ஆகும்.) இந்தக் கணக்கின்படி இப்போது அடுத்த 80 ஆயிரம் ஆண்டுகளில் இருநூறு கோடியே பத்து கோடியே பத்து கோடிப் பேர் இருக்க வேண்டும்.

மக்கள் தொகை பெருகவேண்டிய அளவில் சுற்காலத்தி லிருந்து பெருகவில்லை என்பதைவிட பெருகிய மக்கள் தொகை அவ்வப்போது அழிந்து விட்டது என்று கூறுதல் பொருந்தும். கோடிக்கணக்கான மக்களை இயற்கைப் போராட்டத்திற்குப் பலிகொடுத்து இன்றைய மனித இனம் வளர்ந்து வந்திருக்கிறது. புலிக்கும் சிங்கத்திற்கும் இரையா கிக் கொண்டே மான்களின் இனம் வளர்ந்து வந்திருக்கிறது. மனித இனமும் இதே முறையைக் கையாண்டு வந் திருக்கிறது.

தாவரங்களும், விலங்குகளும் ஒரு நாட்டில் தோன்றி யவை. பிறநாடுகளில் கொண்டுபோய் பயிர் செய்யப்பட்டும் வளர்க்கப்பட்டும் வந்துள்ளன.

கரும்பு கீழ்நாடுகளிலிருந்து கொணரப்பட்டு இந்தியா வில் பயிராக்கப்பட்டது. விலங்குகளும் இவ்வாறே வளர்க் கப்பட்டிருக்கின்றன. எல்லா நாடுகளிலும் யானைகளோ கங்காருகளோ ஒரே நேரத்தில் உண்டாகவில்லை. அவற்றின் முதல் தோற்றம் உலகின் குறிப்பிட்ட ஒரு பகுதியிலேயே.

மனிதனும் உலகின் பல இடங்களிலும் ஒரே நேரத் தில் தோன்றினன் என்பதைவிட குறித்த ஓர் இடத்தில்

தோன்றி, ஏனைய இடங்களுக்குப் பரவினுன் என்பதே இயற்கை நோக்கிற்கு ஏற்றதாகும். பறவைகள் உலகின் பல பகுதிகளுக்கு வலசை போகின்றன. மனிதனும் உலகின் பல பகுதிகளுக்குக் காலப்போக்கில் சென்று பரவ வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியிருக்கிருன். பைபிளில் கூறப்படுவது போல உலகில் முதலில் தோன்றிய ஆதாமும் ஏவாளும் கற்கால உலகில் தோன்றிய முதல் ஆணும் பெண்ணுமாக அறிவியலின்படி கொள்ளத்தகும்.

சுமார் 10,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்த குமரிக் கண்டம்—இந்தியாவைப்போல் மூன்று மடங்கு பரப்புள்ளதாக இருந்தது என அறிகிருேம். அதற்குமுந்திய இலெமூரியா கண்டமும், அதற்கும் முந்திய கோண்டுவானுவும் மிகப் பெரிய நிலப்பரப்புகள். இலெமூரியாவின் நிலப்பரப்பில் அடர்ந்த காடு தவிர்ந்த மலைப் பகுதிகளிலும், கடலோர ஆற்றுச் சமவெளிகளிலும் 100 கோடி பேராவது வாழத்தக்க இடப்பரப்பு இருந்திருக்கும். அடுத்தடுத்து நேர்ந்த கடல்கோளுக்குப்பின் இக்கண்டத்தின் நாலாப்புறங்களிலும் சிதறிய மக்கள் கூட்டம் ஆயிரம் ஆயிரம் பேராக வெவ்வேறு நாடுநோக்கிச்சென்றிருந்தாலும் இன்றுள்ள மக்கள் தொகையளவுக்குப் பெருகி வாழ்ந்து வருவது இயல்பானதே.

கி. மு. 5,000 வரை இலெமூரியாவிலிருந்து இடம் பெயர்ந்து சென்ற கிளைவழியினர் அனைவரும் எழுத்தும் நாகரிகமும் அறியாதவராகவே இருந்திருக்க வேண்டும். ஆயினும் அவர்கள் பேசத்தெரிந்தவர்களே.

## இடப்பெயர்ச்சி வகை

கற்கால மனிதர் இயற்கைக் கோளாறுகளுக்கு அஞ்சி இடம் பெயர்ந்ததும் உண்டு. அதைவிட இயல்பாகவே உணவு தேடி, கால்நடைகளைப் போல எங்கே போகிருேம் என்ற நோக்கின்றிக் காட்டு வழியாகப் போய்க் கொண்டே இருப்பதும் இயல்பு. வளமான பகுதியில் சில ஆண்டுகள்

அல்லது பல ஆண்டுகள் தங்குவதும், இடையூறு ஏதேனும் காணின் உடனே இடம் பெயர்வதும் அவர்களின் இயல்பு.

இப்பொழுதுகூட கால்நடைகளைக் காட்டில் மேய்ப்பவர்கள் ஒரு நாளுக்குக் குறைந்தது 20 கல் நடந்து செல்கிறார்கள். ஒரே மாதத்தில் குறைந்தது 20 பேர்கள் ஒரே திசை நோக்கி இவ்வாறு நடந்தால் 400 கல் செல்வர். ஓராண்டு இவ்விதத்தில் நடப்பவர்கள் 4800 கல் செல்லக்கூடும். பல ஆண்டுகளில் நடந்தே உலகை வலம் வருவது என்பது கற்கால மனிதர்க்கு மிக இயல்பான நிகழ்ச்சி. அவ்வாறு அவர்கள் ஒரே திசை நோக்கிச் செல்ல இயலாமல் தடுத்தவை கடல்களே. கடல்கோளால், கடல் நிலமாகவும் நிலம் கடலாகவும் மாறிய காலங்களில் ஏனைய கண்டங்களுக்கு இடம் பெயர்வது எளிதாயிற்று. அத்தகைய காலஇடைவெளிகளில் கண்டம் கடந்தவர்களே இன்றைய அமெரிக்க செவ்விந்தியரும் ஆத்திரேலிய பழங்குடிகளும் என்பது நில நூலாரும், மாந்தவியலாரும் கூறும் உண்மைகளாகும்.

ஆத்திரேலியாவையும் மலேசியாவையும் இணைத்த பாலம் போன்ற நிலப்பகுதி ஒன்று கி. மு. 20,000-ல் இருந்ததாகவும், அது கி.மு. 18,000 -ல் தோன்றிய கடல் கோளால் கடலுள் மூழ்கிவிட்டதாகவும் நில நூலார் கூறுவர். அந்தக் காலத்தில்தான் மலேசியா வழியாக அங்கு வந்து வாழ்ந்திருந்த குமரிக்கண்ட கிளைவழியினர் ஆத்திரேலியாவுக்குச் சென்றுள்ளனர் என்று வரலாற்றாசிரியர் கூறுவர்.

பசிபிக்கடல் பகுதியில் பல நாடுகள் இருந்ததாகவும் அந்நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் இணைந்திருந்த நிலப்பகுதி வழியாகப் பசிபிக் கடல் நடுவிலிருந்த நிலப்பகுதி மக்கள் அமெரிக்காவில் குடியேறி அந்நாட்டுப் பழங்குடிகளாயினர் என்று கூறுகின்றனர்.

உலக மக்களிடையில் ஒற்றுமையும் அன்புணர்வும் வளர மனிதனின் முதல் தோற்ற வளர்ச்சி வரலாற்றைத் தெரிந்து கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாதது.

ஐரோப்பா, உருசியா போன்ற மேலையாரிய நாட்டு மக்களும் கி. மு. 50,000-க்கு முன்போ அல்லதுபின்போ இலெமூரியாக் கண்டத்திலிருந்து நிலவழியாக எகிப்து, மத்தியதரைக் கடல் நாடுகள் வழியாகப் பரவியவராதல் வேண்டும்.

அரபிய, வங்கக் கடல்கள் தோன்றிய பிறகு குமரிக் கண்ட மக்கள் தமிழகம் வழியாக வடநாட்டிலும், அரப்பா மொகஞ்சதாரோ பெருநகரங்களிலும் நாகரிகக் கொடி நாட்டினர். கி. மு. 10,000 வாக்கில் ஏற்பட்ட இக்குடிப் பெயர்ச்சியே தமிழினத்தின் இறுதி இடப் பெயர்ச்சி எனலாம்.

# 12. கடலக அகழ்வாய்வு

## (Marine archaeology)

வரலாற்றுக்கு முற்பட்ட பழங்கால மக்களின்தொன்முது நாகரிகத்தை அறிய உலகின் பல்வேறு பகுதிகளில் தொல் பொருளாய்வுத்துறையினர் அகழ்வாராய்ச்சி நடத்தியுள்ளனர். நிலத்தினடியில் நகரங்களை அகழ்ந்து கண்டது போலவே ஆற்றுப் படுகைகள், மணல்பரந்த பாலைவனங்கள் ஆகிய இடங்களில் மணலுள் புதைந்த நாகரிகக் கருவிகள், பொருள்கள் ஆகியவற்றையும் கண்டெடுத்துள்ளனர்.

கடலுக்குள்ளும், கடல்கோள், எரிமலை ஆகியவற்றால் மறைந்த நாகரிக நகரங்கள், நாகரிகச் சின்னங்கள் உள்ளனவா என்று ஆராயும் எண்ணம் சென்ற நூற்றாண்டிலிருந்து அறிவியலறிஞரிடை முகிழ்த்துள்ளது.

கடலுக்குள் மூழ்கிப் பழங்கால நாகரிகச் சின்னங்களை அகழ்ந்தெடுக்கும் முறையைக் கடலக அகழ்வாய்வு (Marine archaeology) என்றழைக்கின்றனர்.

நண்ணிலக்கடல் (மத்தியதரைக்கடல்) அத்லாந்திக் கடல், பசுபிக் கடல், கருங்கடல், காசுபியன் கடல், உருசிய உள்நாட்டுப் பெரிய ஏரிகள் ஆகியவற்றுள் அகழ்வாய்வு நடத்தப்பட்டுள்ளது. நண்ணிலக் கடலுள் எத்துணையோ

நூற்றுண்டுகட்குமுன் மூழ்கிய கப்பலின் பகுதிகளும்,பொருள் களும் கிடைத்துள்ளன. கடலுள் மறைந்த பழங்கால நகரமைப்புகளையும் கண்டுள்ளனர்.

இந்தியப் பெருங்கடலுள்தான் இன்றுவரை மிகக் குறை வாகக் கடலக அகழ்வாய்வு நடத்தப்பட்டுள்ளது. கடலக அகழ்வாய்வுத் துறையினர்க்கு நிறைந்த உண்மைகளையும், (லெமூரியா) குமரிக்கண்ட மக்களின் திருந்திய நாகரிக நகர வாழ்வையும் வெளிப்படுத்தக் கூடிய இந்தியப் பெருங் கடலுள் அகழ்வாய்வு பெருமளவில் நடத்தப்படாதது பெருங் குறையாகும்.

இந்தியப் பெருங்கடலுள் இதுவரை நடத்தப்பட்ட அகழ்வாய்வுகளின் வாயிலாகப் பல உண்மைகள் வெளிப் பட்டுள்ளன.

அண்மையில் கல்கத்தாவில் கடலக அகழ்வாராய்ச்சி நிலையம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இதற்குமுன் தொடக்கநிலை ஆய்வாக இந்தியப் பெருங்கடலில் கடலக ஆய்வை மேற்கொண்டவர்கள், இலங்கைக்குத் தெற்கே 1,000 கல் தொலைவில் நீண்ட மலைத்தொடர்கள் கடலுக் கடியில் காணப்படுவதாகக் கூறியுள்ளனர். கேரளக் கடற் கரைக்கு மேற்கே வடக்குத் தெற்காக நீண்ட மலைத் தொடர் கள் கடலுக்கடியில் காணப்படுவதாக அறிவித்துள்ளனர். ஆனால் அவர்கள் மேற்கொண்டு பெரிய அளவில் ஆய்வு மேற் கொள்ளவில்லை.

உலகின் தொன்முது நாகரிகங்களில் மூன்றில் இரண்டு பகுதி திராவிட மொழியைப் பேசிய மக்களைச் சார்ந்தவை என்பதும், அத்திராவிட மொழியைப் பேசிய மக்களின் தொல்பழங்கால உறைவிடம் இந்துப் பெருங்கடலுள் மூழ்கிய குமரிக் கண்டமே (லெமூரியா) என்பதும், குமரிக் கண்டத் தில் வாழ்ந்தோர் திருந்திய நாகரிகம் பெற்றிருந்தவரே யல்லாமல், சிலர் கருதி வந்ததுபோல லெமூர் என்னும் குரக்கு

மாந்த நிலையினர் அல்லர் என்பதும், இதுவரை தொல் பொருள் ஆய்வுத் துறையினரும், கடலக அகழ்வாய்வுத் துறையினரும், வரலாற்றாய்வாளரும் கண்டறிந்துள்ள உண்மைகளாகும்[1]. ஆதலால் குமரிக் கண்டத்தை உலகத்தின் நாகரிகத் தொட்டில் என்று கூறுகின்றனர்.[2]

சில காலங்களுக்குமுன் சர் ஜான் மரே என்பவர் இந்துமாக்கடல் ஆராய்ச்சிக்கு என இருபதினாயிரம் பொன் முதலீடு வைத்துச் சென்றார். அதன் பயனாக நிறுவப்பெற்ற ஆராய்ச்சிக் கழகத்தார், சிந்து ஆறும் அவ் யாற்றின் பள்ளத் தாக்கும், அதன் அருகிலுள்ள ஆரவல்லி மலைகளும் கடலுள் நெடுந்தொலைவு செக்கோத்ராவரை நீண்டு கிடந்ததற்கான குறிகள் அத்தீவில் உள்ளன என்று கூறுகின்றனர்[3].

மரம் தாவரங்கள்

இந்தியாவில் வேறெங்கும் காணப்படாததும், இந்தியருக்குப் பெயரே தெரியாததுமான ஒரு மரம் மலையாளத்திலுள்ள கோட்டாற்றில் உள்ளது. அதனை அவ்விடத்து

---

1. The most surprising part of it is that a study of the world's earliest civilizations reveals a whole series of Riddles that can be solved only by using hypothesis of Lumuria, A large landmass in the Indian ocean that was inhabited not just by Lemurs and not even by Pithecanthropi, but by human beings who had reached a high level of Civilization.

R.T.O. Page—131

2. Lumuria the cradle of mankind, not a Bridgehead.
R.T.O. Page—140

3. குமரிக்கண்டம் அல்லது கடல்கொண்ட தென்னாடு - பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார். பக்கம்-21.

மக்கள் சீமைப் புளி, பப்பரப் புளி, யானைப்புளி என்கிறார்கள் என்று கால்டுவெல்குறிப்பிடுகிறார். இம்மரம் இந்தியாவுக்குப் புதுமையானதாயினும் ஆப்பிரிக்காவில் பொதுவாகக் காணப்படுகிறது.

ஆப்பிரிக்காவில் போபோர்ட் குழுவைச் சார்ந்த செடி வகைகள் இந்தியாவில் உள்ள பஞ்செத்துகள், கத்தினிகள் என்பவற்றை ஒத்துள்ளன. மடகாசுகர் தீவு நிலவியல்புபடி ஆப்பிரிக்காவுடன் வைத்து எண்ணப்படினும், உயிர்வகை, செடிகொடி வகைச் சார்பில் முற்றிலும் ஆப்பிரிக்காவையும் ஆசியாவையும் போலில்லாமல் இடைப்பட்டதொரு நிலையில் உள்ளது.

இந்துப் பெருங் கடலில் முறையாக ஆய்வு நடத்தினால் இலெமூரியாவில் வாழ்ந்த உயிரினங்களின் பொதுவியல்பு தெளிவாக வெளிப்பட வாய்ப்பு உள்ளது.

இந்தியாவின் மேற்குக் கரையிலிருந்து ஆப்பிரிக்காவி னருகிலுள்ள செசெல்சு, மடகாசுகர், மோரிசு வரைக்கும், இலக்கத்தீவம், மாலத்தீவம், சாகோசு தீவுக் கூட்டம், சாயாதேமுல்லா இவை உட்படப் பல பவளத் தீவுகளும் மணல் மேடுகளும் காணப்படுகின்றன.

செசெல்சைச் சுற்றி நெடுந்தொலைவுவரை கடல் 30 அல்லது 40 பாக ஆழத்திற்கு மேலில்லை என்றும், அதன் அடியில் நிலம் தட்டையான அகன்ற மணல்மேடே என்றும் டார்வின் என்பார் குறிப்பிடுகிறார்.

செடிகொடி மரவகைகளுள் தேக்கு தென்னிந்தியா வுக்கும் ஆப்பிரிக்காவுக்கும் பொதுவானது. புளி சாவகத் திலும் இந்தியாவிலும் உள்ளது. தென்னை இந்தியா, இலங்கை, மலேசியா நாடுகளில் நன்கு வளர்கிறது. கரும்பு சீனம், இந்தியா, சாவகம் ஆகிய மூன்றின் விளைபொருள். நெல் இந்தியாவிற்கும் பர்மாவிற்கும் சீனத்திற்தும் சப்பா னிற்கும் சாவகத்திற்கும் பொது விளைபொருள். இவற்றை

உற்று நோக்கின் கடல்கொண்ட இலெமூரியா பெருநிலத்தில் இவை யாவும் ஒருங்கே காணப்பட்ட தாவரங்களாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இதனைக் கடலக அகழ் வாய்வு மேலும் உறுதிப்படுத்த வல்லதாகும்.

## பிற்காலக் குறிப்பு

சிலப்பதிகாரத்துக்கு உரை கண்ட அடியார்க்கு நல்லாரின் குமரிக் கண்டம் பற்றிய விளக்கத்தை உண்மை வரலாருகவே கொள்ளலாம்.

அவர் கூற்றின்படி ஏழ்மதுரை நாடு, ஏழ்தெங்க நாடு ஏழ்முன்பாலை நாடு, ஏழ்பின்பாலை நாடு, ஏழ்குன்ற நாடு, ஏழ்குணகரை நாடு, ஏழ்குறும்பனை நாடு எனும் நாற்பத் தொன்பது நாடுகளும் இவற்றின் தெற்கேயிருந்த தென் பாலியும் சேர்ந்து எழுநூற்றுக்காவதம் பரந்திருந்ததாக அறிகிருேம்.

இதன்படி குமரிக்கண்டம் 7,000 கி.மீ. நீண்டிருந்தது. இந்தியாவைப்போல் மூன்று மடங்கு பெரியதாக இருந்தது என்று கருத இடமிருக்கிறது.

இத்துணைப் பெரிய நாடு கடலுக்கடியில் உறங்கிக் கொண்டிருக்கிறது. அங்கு வாழ்ந்த மக்களின் நாகரிக வளர்ச்சிப் படிகளைத் தன் அலைக்கைகளால் மூடி மறைத்துக் கொண்டிருக்கிறது. கடலக அகழ்வாராய்ச்சியாளர்களின் பார்வை, என்று இப்பகுதியை நோக்கித் திரும்புகிறதோ அன்றுதான் பழைய வரலாற்றுண்மைகள் உலக அரங்கில் உலாவரும் பொன்னுளாக இருக்கும். அந்நாளை ஆவலுடன் எதிர்பார்ப்போமாக.

## பசிபிக் கடலில் அகழ்வாய்வு

வடஅமெரிக்காவில் கலிபோர்னியா கடற்கரையை யடுத்த ஆழ்கடலில் முன்பு பெரிய நிலப்பரப்பு இருந்த

தென்றும் அது கடலால் விழுங்கப்பட்டது என்றும் ஆழ் கடல் அகழ்வாளர் (Undarwater archaelogist) கண்டறிந்தனர்.

கலிபோர்னிய வளைகுடாவின் அருகில் லாஜொல்லா எனுமிடத்தில் கடலுக்குள் மக்கள் வாழ்ந்திருந்த ஊர்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அங்கு மூழ்கி ஆய்வு நடத்தியவர்கள் அக்கால மக்கள் தானியத்தை அரைத்த அரைவைக் கற்களை வெளிக் கொணர்ந்தனர். இவை இந்தியர் பயன்படுத்தும் மாவரைக்கும் (உருள் தட்டை) கற்களைப் (Grinding stone) போன்றிருந்தது அவர்களுக்கு வியப்பூட்டியது.

லாஜொல்லாவில் கண்டெடுத்ததைப் போன்ற அரவைக் கல் வேறெங்கும் கடலுக்கடியில் கண்டுபிடிக்கப்படவில்லை. உலகிலேயே மிகப்பெரியதாகக் கருதப்படும் சிரிப்சு ஆழ்கடல் ஆய்வு நிறுவனம் (Sripps Institution of oceanography) இந்த ஆய்வை மேற்கொண்டது. பசுபிக் கடலில் இந்நிறுவனம் தொடர்ந்து நடத்தும் ஆய்வுகளால் மேலும் பல உண்மைகள் புலப்படக்கூடும்.

## இந்துமாவாரியில் (Indian ocean) கடலக அகழ்வாய்வு மேற்கொள்ளத்தக்க இடங்கள்

கடலுள் மறைந்த குமரிப் பெருநிலத்தில் பஃறுளியாற்றின் தென்மதுரை போன்ற நகரங்கள் இருந்த இடங்களைக் குறிப்பாகத் தேடி ஆழ்கடல் அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டால் மிகுந்த பயன் விளையும்.

மடகாசுகர் தீவுக்கு வடக்கிலும் இலங்கைக்குத் தென் மேற்கில் குமரியாறு பாய்ந்த இடைத் தமிழ்ச் சங்க பாண்டிய நாட்டுப் பகுதிகளிலும், கதவபுரம் (கபாடபுரம்) இருந்த இடத்திலும் ஆய்வு மேற்கொண்டால் பழந்தமிழரின் நாகரிகத்தை அறியச் சான்றுகள் கிடைக்கும்.

கடலுள் மூழ்கிய காவிரிப்பூம்பட்டினத்தை ஆராய்ந்தால் அரப்பா நாகரிகச் சான்றுகளைப் போன்றே நாகரிகச் சான்றுகள் கிடைக்கும்.

சூரியத்தீவு

பனைத்தீவு

மகன்தீவு

சேரன் தீவு

போன்றவை இருந்த இடங்களை அரிதின் முயன்று கண்டு பிடித்தால் பெரும் உண்மைகள் புலப்படும்.

## 13. மொழி யகழ்வாய்வு

(Language archaeology)

கடலக அகழ்வாய்வு (Marine archaeology) நில வமைப்பியல், ஆழியியல் (Oceanography) மாந்தவியல் (Anthropology) இனமரபியல் (Ethnology) போன்ற அறிவியல் துறைகளைப் போன்றே மொழியகழ்வாய்வும் மறைந்த நாகரிகங்களையும், வரலாறுகளையும், மாந்தவியலையும் அறியப் பெரிதும் துணைபுரியும் என்று இக்கால அறிவியலறிஞர் நம்புகின்றனர்.

எனவே அறப்பழங்காலத்திலிருந்து இன்றுவரை ஒவ்வொரு மொழியிலும் எழுத்துச் சான்றாகக் கிடைப்பனவற்றையும் செவிவழிச் செய்தியாகக் கிடைப்பவற்றையும் தொகுத்து முறையாக ஆய்வு நடத்துகின்றனர்.

எகிப்து பாரோ மன்னர்களின் பிரமிடுகளின் உட்புறச் சுவரெழுத்து எனப்படும் ஓவிய எழுத்துகளையும், பாபிரசு சுருள் எழுத்துகளையும் மெசபதேமிய, பாபிலோனிய களிமண் எழுத்துகளையும், மொகஞ்சதாரோ எழுத்துகளையும், சுமேரிய ஆப்பு எழுத்துகளையும் தொடர்ந்து ஆய்ந்து வருகின்றனர். இன்று பேச்சு வழக்கிலுள்ள காட்டு மக்களின் மொழி முதல் இலக்கிய வளம் பெற்ற உயர்தனிச் செம்மொழிவரை ஆய்வுக்கு எடுத்துக் கொள்கின்றனர்.

இக்கால ஆய்வாளர்கள் மொழியகழ்வாய்வில் கண்டு பிடித்துள்ள உண்மைகள்தாம் வரலாற்று ஆய்வுக்குப் பயன் படும் என்று எதிர்நோக்கியுள்ளனர்[1].

தென் ஐரோப்பாவில் ஓடும் ஆறுகளின் பெயர்கள் பலவற்றில் அப்பகுதி மொழியின் வேர்ச் சொற்கள் காணப் படாமல் சித்திய மொழிச் சொற்கள் காணப்படுவதால், சித்திய மொழி பேசுவோர் தென் ஐரோப்பாவில் ஒருகாலத் தில் வாழ்ந்திருக்க வேண்டும்[2] என்று முடிவு கட்டுகின்றனர்.

எழுத்துச் சான்றில்லாத வரலாற்றுப் பழங்காலத்தை மொழிக் கூறுகளின் துணையின்றி அறியமுடியாது[3]. தொல் பொருள் ஆய்வாளரின் பணியையும் பழங்கால எழுத்துச் சான்றுகளின் பணியையும் மொழிக் கூறுகளே முன்னின்று ஏற்று ஆய்வாளரைப் புதிது காணவும் உண்மை காணவும் வழி நடத்திச் செல்லும்[4] திறம் பெற்றுள்ளன.

---

1. Indo European unity broke up long before writing was invented. Archaeology too is powerless to help. All that is left are linguistic data. Philologists have been able to tell historians a lot.

R.T.O. Page—9

2. Rivers-Don, Donieper, Danpe, Dniester, Donets —These names prove that scythians once lived on Southern Europe along the black sea, for scythian word 'DON' means water or river.

The Riddles of Three oceans—Page 11

3. Language data enable the Historian to look far back to periods when written language did not yet exist and which had not left anyother material evidence.

R.T.O. Page—12

4. There are cases when the words of a language can take place of the archaeologist's spade and the annals of ancient chronicles.

R.T.O. Page—9

தென் மெசபதோமியாவின் துறைமுக நகரம் அல்உபாய்து என்பது கி.மு. 4,000 ஆண்டுகட்கு முற்பட்டது. பாரசீக வளைகுடாவில் இருந்த இந்தத் துறைமுக நகரை நிறுவிய இனத்தார் உபாய்துகள் எனப்படுவர். இது ஓனசு (Oannes) என்பவர் தலைமையில் கப்பலில் வந்த குழுவினரால் நிறுவப்பட்டது. இவர்களே மெசபதோமியர்க்கு, உழவு, வணிகம், கட்டிடக்கலை ஆகிய நாகரிகங்களைக் கற்றுத் தந்தவர். இந்த உபாய்துகள் குமரிக் கண்ட தமிழரே என நிறுவுவதற்கு மொழியகழ்வாய்வு துணை புரிகிறது.

மெசபதோமிய பழங்கால எழுத்துச் சான்றுகளிலிருந்து 20 உபாய்து சொற்களை ஆய்ந்ததில் அவை திராவிடச் சொற்களாக உள்ளன.[5]

திராவிடர் என்னும் சொல்லின் தோற்ற வரலாறு குறித்துப் பலரும் பலவகையான விளக்கங்கள் தந்து குழப்புவது போன்ற சிக்கல்கள் மொழியகழ்வாய்வினால் தவிர்க்கப்படும். தமிழ்மொழியைத் திராவிடம்என்று குறித்தவர் யார் யார்? அரவம் என்றவர் யார் யார்? எனப் பட்டியலிட்டுப் பார்த்தால் அச்சொல் பிறர் படைத்திட்டுக் கொண்ட சொற்கள் என்பது வெளிப்படும். தமிழர், தம்மைத் தமிழர் என்றே அழைத்துக் கொண்டனர்.

---

5. Who were the ubaids? Linguistic Excavation (The isolation of ubaid words in Sumerian Texts and the Discovery of ubaid place names) has given us about twenty ubaid words and Approximately the same number of place names. We find that quite a number of ubaid words similar to Dravidian words or the roots of dravidian words. Hundreds of communities in southern India have names that end in 'UR' the oldest city in Mesopotomia is Called 'UR'.

The Riddies of Three Oceans. Page—137

தமிழகத்தில் பிறர் தம்மைப் பார்ப்பனர் என்று அழைத்தாலும் பார்ப்பனர், தம்மைப் பிராமணர் என்றே அழைத்துக் கொண்டனர் என்று தெரிகிறது. கபிலர் தன்னை அந்தணன் என்றே அறிமுகப்படுத்திக் கொண்டார்.

## பொற்காலம்

தமிழரின் நாகரிக வரலாற்றில் ஏனை உலக மக்களைப் போல் கற்காலம், இரும்புக் காலம், பொற்காலம் என்னும் வளர்ச்சி நிலைகளுக்கு மாறாகக் கற்காலத்திற்குப் பிறகு பொற்காலமும் பொற்காலத்திற்குப் பிறகு இரும்புக் காலமும் இருந்திருக்கும் என்னும் செய்தி 'பொன்' என்னும் சொல்லை ஆராய்ந்து பார்க்கும்போது தெரிகிறது.

வெள்ளி, வெண்பொன் என்றும், இரும்பு இரும்பொன் (கரிய பொன்) என்றும் அழைக்கப்படுகின்றன. பொலம்-பொலிவது-மின்னுவது என்னும் பொருளில்-பொன் என்னும் சொல் முதன் முதல் ஆற்றங்கரைகளிலும் மலைமுகடுகளிலும் இயல்பாகக் காணப்பட்ட நிலையில்-பெயர் பெற்றிருக்கிறது.

தமிழர்க்கு முதலில் கண்ணில் பட்டதும் பயன்படுத்தப் பட்டதும் பொன்னே. பொன்னைப் பயன்படுத்தத் தெரிந்து கொண்ட பின்பு தமிழர் இரும்பை அறிந்ததால் அதற்கு இரும்பொன் என்றும், வெள்ளிக்கு வெண்பொன் என்றும் பெயரிட்டுள்ளனர். பல மாழைகள் (உலோகங்கள்) கண்டு பிடிக்கப்பட்டபின் பொன் பொதுச் சொல்லாகவும் உலோகத்தைக் குறிக்கப் பயன்பட்டது. மொழியகழ்வாராய்ச்சி, தமிழரின் நாகரிகத்தில் பொற்காலமே தொடக்க காலம் என்னும்உண்மையை வரலாற்றுசிரியருக்கு உணர்த்துகிறது.

## சொல் வழக்குகள்

உலகில் முதன் முதல் எழுதப்பட்ட மொழி சுமேரியம் என்றும், அது கி. மு. 3,100-ல் எழுத்து வழக்குப் பெற்றி

ருந்தது என்றும் பிரித்தானியா கலைக்களஞ்சியத்தில் கூறப் பட்டுள்ளது. தமிழரின் தோற்றமும் பரவலும் **(Origin and spread of Tamils)** என்னும் நூலில் திரு. இராமச்சந்திர தீட்சிதர், சுமேரியர் தமிழரின் குடியேற்ற வழியினர் என்பதைத் தெளிவு படுத்தியுள்ளார். பாபிலோனிய மொழியிலுள்ள ஆப் (அப்பன், தந்தை) ஊர், சிறுபாக்கம் எனும் சொற்கள் முற்றிலும் தமிழ்ச் சொற்களாக இருப்பது மொழிநூலார்க்கு வியப்பூட்டி உண்மையையும் விளக்கிக் காட்டுகிறது[6].

கிரேக்கம், இலத்தீன் முதலிய தொன்மையான மொழிகளில் பல அடிப்படைச் சொற்கள் தமிழ்ச் சொற்களாக வுள்ளன.

கிரேக்க மொழியிலுள்ள **Palaeo** எனுஞ் சொல் பழமையான என்னும் தமிழ்ச் சொல்லே. **Palaeography Palaeo anthropology** எனுஞ் சொல்லாட்சிகளைக் காண்க.

வீடு, மனை, இல், எனும் சொற்களைப் போன்றே உறை என்பதும் குமரிக் கண்ட காலத்தில் வீட்டைக் குறித்தது. உறையூர் இதனடியாகத் தோன்றிய சொல். இச்சொல் இன்றும் வடதிராவிட மொழிகளில் ஒன்றான பிராகுவீ மொழியில் 'உற' எனத் திரிந்து வீடு என்று பொருள்படுகிறது. இதே சொல் திராவிடக் குடும்பத்தின் தொலையுறவு மொழியான பாசுக்கு **(Basque)** மொழியில் மனைவியைக் குறிக்கிறது. பாசுக்கு மொழி இசுபெயின், போர்ச்சுகல் இடை எல்லைப் பகுதியில் பேசப்படுகிறது.

சித்திய மொழிகளுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை கால்டுவெல் புலப்படுத்தினர். தமிழரும் சித்திய மொழியினரும் ஏதோ ஒரு காலத்தில் நெருங்கி வாழ்ந்தவராதல்

---

6. சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்...பக் 16. (மொழி ஞாயிறு பாவாணர்)

வேண்டும் என்ற உண்மையை இவ்விருமொழிக் கூறுகளும் நமக்குக் காட்டுகின்றன.[7]

ஏதேனும் சிலபொருட் பெயர்கள் ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்குச் சென்றிருந்தால் அவ்விரு மொழியினரும் வணிகத் தொடர்பு கொண்டவர் எனலாம். தமிழில் போர்த்துகீசிய சொல் ஜன்னல் புகுந்திருப்பதும் தமிழ்ச் சொற்களான முத்து, தோகை, இஞ்சி, நாவாய் போன்றவை மேலையாரியத்தில் புகுந்திருப்பதும் வணிகத் தொடர்பால் ஏற்பட்டவையே.[8]

இவ்வாறில்லாமல் அடிப்படை (Basic vocabulary) பெயர்ச் சொற்கள், வினைச்சொற்கள் ஆகியவை சொல்வடிவிலோ, வேர்ச்சொல் அளவிலோ பிறமொழியில் காணப்பட்டால் இந்த இருமொழிகளும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவை அல்லது இந்த இருமொழிகளைப் பேசிய மக்களும் ஓர் இடத்தில் வாழ்ந்த ஒரே இனத்தினர் என்று முடிவுகட்டலாம்.

மொகஞ்சதாரோ நாகரிகம் ஆரியரின் வருகைக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்டது. அங்குப்

---

7. For instance 'Language Archaeology' has revealed that while the Indo Europeans knew the rudiments of agriculture, the similarity in the names of domestic animals, including differentiated names-separate names for cow, calf, sheep, lamb, horse, colt and so on-shows that their chief occupation was cattle raising. The discovery of this fact enabled scholars to narrow considerably the search for the original Indo-European homeland. The most likely area is asia minor. R.T.O. *(page-9)*

8. Historian turns to TOPONYMY a science that combines history with linguistics and geography to help. R.T.O. (page-10)

Place names—History on the surface of map. (page-10)

பேசப்பட்ட மொழி திராவிட மொழியே என்பதை அறிஞர் நிறுவியுள்ளனர். மொகஞ்சதாரோ முத்திரை எழுத்துகளைப் படித்தபோது அந்த நாகரிகத்தை வளர்த்த மக்கள் யார் என்பதை அச்சொற்கள் காட்டிக் கொடுத்து விட்டன. புதையுண்ட நாகரிகச் சின்னங்கள் பலஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாயிருக்கும் போது சின்னங்களை மட்டும் வைத்துக் கொண்டு இந்த இனத்தார்தான் இந்த நாகரிகத்தை வளர்த்தவர் என்று உறுதியாகக் கூறிவிட முடியாது. ஏனெனின் குறிப்பிட்ட ஓரினத்தார் கிறித்தவராக இருந்து அடுத்த நூற்றாண்டில் முகமதியராக மதம் மாறிவிடக் கூடும். அரசியல் வேறுபாடுகள், சமய வேறுபாடுகள், மக்களின் வாழ்க்கையமைப்பு, நாகரிகப் போக்கு ஆகியவற்றை மாற்றி விடக் கூடும்.

இன்று கிழக்கு வங்காளத்தில் வாழும் முகம்மதியரில் பெரும்பாலோர் இந்துக்களாக இருந்து மதம் மாறியவர்கள். அவர்களின் வாழ்க்கை முறை இந்து சமயத்தைத் தழுவிய தாக இருக்க வாய்ப்பில்லை. அவர்கள் மதம் மாறினாலும் தாய்மொழியை மாற்றிக் கொள்ளாமல் வங்காள மொழியையே பேசுகின்றனர். அவர்களின் மொழியை வைத்துக் கொண்டுதான் அவர்களை இனம் கண்டறியக் கூடும். ஆதலால் வரலாற்றுக்கு முந்திய மக்களின் இனப்பிரிவுகளையும் காட்டும் திறம் மொழிக்கு இருப்பதால் மொழியகழ்வாராய்ச்சி வரலாற்றுக்குத் துணைபுரியும் கருவியாகக் கொள்ளப்பட்டு விடுகிறது.

மொழியமைப்பை மட்டும் ஆராய்வது மொழியாராய்ச்சி அல்லது மொழியியல் எனப்படும். மொழியின் தோற்றத்தையும் அதன் வளர்ச்சிப் படிநிலைகளையும் வரையறுத்து ஏனைய மொழிகளின் தோற்ற வளர்ச்சிப் படிகளோடு, ஒப்பிட்டுக் காட்டுவது வரலாற்று ஒப்பியல் மொழிநூல் (Historical and comparative linguistics) எனப்படும். உலக மொழிகள் பலவற்றுள்ளும் உள்ள ஒத்த மொழிக் கூறு

கள், வேர்ச்சொற்கள், மொழியமைதிகள் ஆகியவற்றை ஆராய்வதும், அவற்றால் மிகப் பழங்கால வரலாற்று உண்மைகளாகப் புலனாவனவற்றைக் கண்டறிவதும் மொழியகழ்வாராய்ச்சி எனப்படும்.

உலகமொழிகள் அனைத்தையும் சில பெரிய குடும்ப மொழிகளில் அடக்கலாம். அந்தச் சில பெருங் குடும்பமொழிகளும் ஒரே குடும்ப மொழியில் அல்லது மூலமொழியில் அடங்கிவிடும். அப்படி ஒரு குடும்பத்திற்குள் அனைத்து மொழிகளையும் அடக்கிக் காணும் முயற்சிக்கும் மொழியகழ்வாராய்ச்சி பெரிதும் உதவும்.

ஒவ்வொரு மொழியிலும் உள்ள சொல்வளம் அம்மொழியினரின் நாகரிக வளர்ச்சியை அளந்து காட்டும் அளவு கருவியாகும்.

ஆப்பிரிக்கா கானநாட்டு மொழியில் வா, போ, தூக்கு முதலிய தமிழ்ச் சொற்கள் உள்ளவாறே வழங்குகின்றன. அவர்கள் மகளிர்க்குத் தேவி எனவும் பெயரிட்டழைக்கின்றனர். தெய்வம், தேவு என்பன அழகிய தமிழ்ச் சொற்கள். தெய்ய எனும் சொல் உரையசையாகக் கேண்மைப் பொருளில் சங்க இலக்கியங்களில் ஆட்சி பெற்றுள்ளது.

வடதுருவத்தில் காணப்படும் அரோரா பொரியாலீஸ் எனும் ஒளியை முதன் முதல் கடல் பயணிகள்தாம் கண்டிருக்க முடியும். நிலத்திலிருந்து எந்நாட்டவரும் அதனைக் காண முடியாது. உலகில் முதன் முதல் கடலில் நாவாய் செலுத்திக் கடல்வாணிகம் செய்தவர் தமிழர் என்பது உலகம் ஒப்புக் கொண்ட உண்மை. அதன் விளைவாகக் கப்பலைக் குறிக்கும் தமிழ்ச் சொல்லான நாவாய், ஆங்கிலத்தில் Navy என வழங்குகிறது. தமிழ்வணிகர் வட துருவ ஒளிக்கு **வடவனல்** எனப்பெயரிட்டனர். இதுவே அரோராபொரியாலீஸ் என வழங்கப்படுகிறது. பொரியாலீஸ்—வடக்கு. அரோரா—ஒளி.

நாவாய், வடவனல்[1] ஆகிய இரு சொற்களும் தமிழ் முன்ஞோரின் மொழியிலிருந்து உலக மொழிகளில் இடம் பெற்றிருப்பதால் இந்த இரண்டு சொற்களைப் பற்றிய ஆராய்ச்சி தமிழனின் தொன்மையான நாகரிகத்தைக் காட்டும் புதைபொருள் குறியீடுகளாகத் திகழ்கின்றன.

ஆங்கிலத்தில் God எனும் சொல் கோதிக் மொழியிலும் பராசீகத்திலும் Gadhu என்றும், பாரசீகம், உருது மொழியிலும் குதா என்றும் வழங்கிவருகிறது. இதுதமிழ்-கடவுளில், கட எனும் முதனிலையோடு ஒத்திருப்பது வரலாற்றுக் கெட்டாத பழங்காலத்தில் கடந்து நிற்கும் கடவுளின் உணர்வு ஏதோ ஒரு பிரிவாரிடமிருந்து ஏனைய மொழிகளுக்குப் பரவியுள்ளது என்னும் உண்மையை வெளிப்படுத்துகிறது. முந்திய நாகரிகத்தவரிடமிருந்து பிந்திய நாகரிகத்தவர்க்கு இச்சொல் சென்றிருப்பதால் இலெமூரியாக் கண்டத்தில் வாழ்ந்த தமிழரிடமிருந்தே இச்சொல் தோன்றி வளர்ந்துள்ளது என்னும் உண்மை மொழியகழ்வாராய்ச்சியாளர்க்குக் கிட்டுகிறது[2].

ஒரு நாட்டின் பண்டை வரலாற்றையறிய புத்தகமும் செய்யுளுந்தான் வேண்டுமென்பதில்லை. அந்நாட்டு மொழி அல்லது சொற்கள் கூட வரலாறுரைப்பனவாகும். இதே கருத்தை கிரகாம் என்னும் மேலைநாட்டு ஆசிரியரும் கூறுகிறூர்.

The teacher ought to note for remark the living memorials, in the words of today of the social and political condition of the people in the ages gone by. The

---

1 தமிழர் வரலாறு [மொழிஞாயிறு பாவாணர்]

2 சொல்லாராய்ச்சிக் கட்டுரைள்—பக். 16. [மொழி ஞாயிறு பாணர்]

inner life of every people is stereotyped in these languages and retained therefore the instruction of future generations and the teacher will signally fail if he does no evoke from customs and morals.

(English word book-by JOHN GRAHAM.)

மடகாசுகர் தீவு மொழி, ஈசுடர் தீவுமொழியை ஒத்திருப்பது எவ்வாறு என்ற வினா, மக்கள் ஓரிடத்தில் தோன்றிக் காலப்போக்கில் உலகின் பல பகுதிகளிலும் பரவியுள்ளனர் என்ற உண்மையை விளக்குகிறது. இவ்வாறு மொழியகழ்வாராய்ச்சி மிகப் பழங்கால வரலாற்றையறிய ஒரு கருவியாக இருக்கிறது.

# நான்காம் பகுதி

**குமரி நாட்டுக் காலம்**

*10 ஆயிரம் ஆண்டுமுதல்*
*5 ஆயிரம் ஆண்டுவரை*

## 14. குமரிக்கண்ட அமைப்பு

தமிழர் உயர் நாகரிகம் எய்தி வாழ்ந்திருந்த குமரிக்கண்ட பரப்பும் நிலவமைப்பும் பற்றிய திட்டமான எல்லை வரையறையைக் கடலக அகழ்வாய்வு முடிவுகள் இனிமேல் தரக்கூடும். எனினும் சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லார் உரையில் குறிப்பிடப்படும் எல்லைவரையறை தொன்று தொட்டு வந்த செவிவழிச் செய்தியாயினும் அது மறுத்தற் கியலாதது. ஏனெனின் நிலவியலாரும் பிற அறிவியல் துறையினரும் கணித்த குமரிக்கண்ட எல்லையைவிட அடியார்க்கு நல்லார் கூறும் நில எல்லை குறைவானதே.

ஆப்பிரிக்கா, ஆத்திரேலியா, கீழையிந்திய தீவங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய பகுதியாக குமரிக்கண்டத்தை நிலவியலார் கூறுகின்றனர். இலெமூரியாக் கண்டம் என்றும் இதனைப் பெயரிட்டழைக்கின்றனர். இப்பரந்த கண்ட வரலாறு குரக்கு மாந்த (Homo sapien) நிலையிலிருந்து கற்காலம் வரை மாந்தனின் தோற்ற வளர்ச்சியைக் காட்டுவது.

தமிழரின் குமரிக் கண்ட வரலாறு இத்தகைய கற்கால மாந்தரைப்பற்றியதன்று. திருந்திய நாகரிகம் பெற்ற மாந்தரின் வரலாற்றுத் தொடக்கமே அடியார்க்கு நல்லாரால் விவரிக்கப்படும் பழந்தமிழக அல்லது கடல் கொண்ட குமரிக் கண்ட நிலவமைப்பாகும்.

## ஏழ் மதுரை நாடு

இந்தியத் தென் முனையான இக்காலக் குமரிக்குத் தெற்கே இமயம் போன்றுயர்ந்த குமரி மலைத்தொடரும் குமரி ஆறும் குமரிக்கண்டத்தின் வட எல்லை. மடகாசுகர் தீவுக்கும் தெற்கே நீண்டிருந்த நிலப்பரப்பு தென் பாலிமுகம் எனப்பட்டது. இந்தத் தென்பாலி முகத்தின் வட எல்லையாக ஓடிய பஃறுளியாறு குமரிக்கண்டத்தின் தென் எல்லையாகும். இந்தப் பஃறுளியாற்றங்கரையில் இருந்த தென்மதுரையே தலைச்சங்கம் வைத்துப் பாண்டியர் தமிழ் வளர்த்த தொன்னகரம். இஃது ஏழ்மதுரை நாடு என்றழைக்கப்பட்டது.

## ஏழ் தெங்க நாடு

ஏழ் மதுரை நாட்டிலோடும் பஃறுளி ஆற்றுக்குத்தெற்கேயிருந்த தென்பாலி முகத்தை ஒட்டியே தெற்கு நோக்கி நீண்டிருந்தநிலப்பகுதி ஏழ்தெங்கநாடு. தென்னைமரத்திற்குத் தெற்கிலிருந்து வந்தது என்னும் பொருளில் (தென் + கு) தெங்கு எனப்பெயரிடப்பட்டிருப்பதால் ஏழ்தெங்கநாடு குமரிக் கண்டத்தின் தென்மேற்கு அல்லது தென்கிழக்கு முனையில் இருந்தது எனக்கொள்வதில் தவறில்லை.

## ஏழ் குணகரை நாடு

குமரிக்கண்டத்தின் கிழக்குக் கடற்கரை நெடுக அமைந்திருந்த நாடு ஏழ் குணகரை நாடு எனப்பட்டது. குணக்கு என்பது கிழக்குத் திசையைக் குறிப்பதாகும்.

குமரிக்கண்டத்தின் மேற்குப்பகுதி முழுதும் உயர்ந்த மலை முடிகளையும் நீண்ட மலைத்தொடர்களையும் கொண்டிருந்தது என்பதால் மேற்குப்பகுதி பன்மலை நாடு என்றும் அழைக்கப்பட்டது.

## ஏழ்குன்ற நாடு, ஏழ் குறும்பனை நாடு

குமரி ஆற்றின் தோற்றுவாயான குமரிமலைத் தொடர் ஏழ்குன்ற நாடு என்றும், ஏழ் குன்றநாட்டுக்கும் குணகரை நாட்டுக்கும் இடைப்பட்ட பகுதி ஏழ் குறும்பனை நாடு என்றும் அழைக்கப்பட்டிருக்கலாம். பனையின் வளர்ச்சிக்கு வெப்பம் பொருந்திய பகுதியே ஏற்றதாதலின் ஏழ் குறும் பனைநாடு, ஏழ்குன்ற நாட்டுக்கும் கடலோரப் பகுதியான ஏழ்குணகரை நாட்டிற்கும் இடையிலிருந்திருக்க வேண்டும்.

## ஏழ் முன்பாலை, பின்பாலை நாடுகள்

ஏழ்குன்ற நாட்டுக் குமரிமலைத் தொடர், பன்மலைத் தொடர், பஃறுளிமலைத்தொடர் ஆகியமேற்குமலைத்தொடர் களுக்கும் ஏழ் குணகரை நாட்டுக்கும் இடையில் ஏழ் முன் பாலைநாடு, ஏழ் பின் பாலை நாடு இருந்திருக்க வேண்டும். பஃறுளிக்கரையிலிருந்த தென்மதுரையே தலைநகராக இருந்த நிலையில், தென்பகுதியிலிருந்தது ஏழ்முன்பாலை நாடு எனவும், குமரிப்பகுதியாகிய ஏழ் குன்றநாடு, ஏழ்குறும்பனை நாடு ஆகியவற்றை நோக்கி வடக்கே இருந்த பகுதி ஏழ்பின்பாலை நாடு என்றும் அழைக்கப்பட்டிருக்கலாம். இந்நாடுகள் 7,000 மீட்டர்தொலைவு நீண்ட நிலப்பகுதியில் அமைந்திருந்தன.

ஏழேழ் 49 நாடுகளாகப் பிரித்த பகுப்பில் பன்மலை நாடு கொல்லம், தென்பாலிமுகம் ஆகியவை அடங்கவில்லை.

> "மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வெளவலின்
> மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
> புலியொடு வில்நீக்கி புகழ்பொறித்த கிளர் கெண்டை
> வலியினன் வணக்கிய வாடாச்சீர் தென்னவன்"[1]

இக்கலித்தொகைப் பாடல் பாண்டியனின் நாடு கடல் கொண்டதால் சேர சோழரோடு போரிட்டு அவர் நாட்டின்

---

1. முல்லைக்கலி-4

ஒரு பகுதியைத்தான் வென்று குடியேறினன் என்பதைக் காட்டுகின்றது.

'வடிவேல் எறிந்த வான்பகை பொறுது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசை கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை யாண்ட தென்னவன் வாழி'[2]

இச்சிலப்பதிகார அடிகள் குமரிக்கண்டம் கடல் கொள்ளப் பட்டதால் பாண்டியன், இமயமும் கங்கையும் வென்று இந்தியா முழுதும் தன்னுளுகைக்கு உட்படுத்தி தென்னுட்டி லிருந்து ஆட்சி புரிந்ததைக் கூறுகின்றன.

இப்பாண்டிய மன்னன் வரலாற்றில் மிகவும் முந்திய வனுக இருத்தல் வேண்டும். இக்காலத்தில் தமிழர் இமயம் வரை வாழ்ந்திருத்தல் வேண்டும்.

கடைச்சங்க காலத் தொடக்கத்தில் குமரிமுனைக்குத் தெற்கில் நிலப்பகுதி இருந்தது என்பதும், குமரியாறும் இருந் தது என்பதும் சங்கஇலக்கியங்களின் வாயிலாகதெரிகின்றன.

'வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனுஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணுஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்று முதிர் பௌவத்தின் குடக்கும்'[3]

காரிகிழார் இப்பாடலில் குறிப்பிடும் உருகெழுகுமரி என்ப தற்கு உட்குந்திறம் பொருந்திய குமரியாறு என்று பழைய உரையாசிரியர் பொருள் கொண்டிருக்கிறுர்.

---

2. சிலம்பு காடுகாண் 11:18-22
3. புறம்-6

## கடல் கொண்ட குமரிநாடு (இலெமூரியா)

சிலப்பதிகார உரையாசிரியரான அடியார்க்கு நல்லார் தரும் விளக்கத்தின் அடிப்படையில் இருந்த நிலப் பகுதிகள்.




குறிப்பு: ஏழ் தெங்க நாட்டிலிருந்து குமரிமலைத் தொடர் வரை 700 காவதம் (சற்றேறப்ப 7000 கி.மீ.) குமரிக்கண்டம் பரந்திருந்ததாகக் கூறப்படுகிறது.

'செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே'[1]

நிலந்தரு திருவின் நெடியோன் எனப் புகழப்படும் இப்பாண்டிய மன்னன் குமரிக் கண்டத்தில் பஃறுளியாற்றங் கரையிலிருந்ததென்மதுரையிலிருந்து அரசாண்டவன். இவனைநெட்டிமையார் என்னும் புலமைச் செல்வியார் பஃறுளி ஆற்று மணலினும் பல்லாண்டு வாழ்கஎன வாழ்த்தியிருக்கிறார். இப் பாடலைக் குமரிக் கண்ட தலைச் சங்ககாலப் பாடல் என்று கூறுவர். செங்கோனின் பெருவள நாடு என்பது குணகரை நாடாகலாம்.

இந்த ஏழு நாடுகளுக்கும் ஏழு அரசர்கள் இருந்தனர். ஏதோ ஒரு காலத்தில் இந்த எழு அரசர்களையும் வென்றதன் அடையாளமாகச் சேரர்கள் எழு முடி ஆரம் அணிந்தனர். இதற்கு ஏழிலாஞ்சனை என்றும் பெயர்.

குமரிக்கண்டம் கடலில் மூழ்கியபின் எஞ்சி நின்ற நிலப் பகுதிகளில் ஒன்று மூநாடு என்று அழைக்கப்பட்டதாகவும், அதன் அரசர் மூவேந்தர் என அழைக்கப்பட்டதாகவும் யாழ்ப்பாணத்து கணபதியாபிள்ளை கூறுவார். ஏழ்பனை என்பதன் திரிபே யாழ்ப்பாணம் ஆயிற்று என்பது அவர் கூற்று.

குமரிக்கண்டம் கடலுள் மூழ்கியபோது தென்பாலிமுகம், பனைத்தீவுகள், குமரிமலைத் தொடரின் எச்சமாகிய மகேந்திர மலை, குமரியாறு ஆகியவை அழியாமல் எஞ்சி நின்றன. ஒவ்வொரு கடல்கோளின் போதும் தமிழர் வடநாவலத்திலும் (வடஇந்தியா) பிறநாடுகளிலும் குடியேறினர்.

ஏழ் உலகங்கள் (!)

குமரிக்கண்டத்தின் எச்சங்களாக இந்துப் பெருங்கடலில் காணப்பட்ட நிலப்பகுதிகளும், நாவலந்தண் பொழில் எனப்

---

1. புறநானூறு—9

பட்ட இந்தியாவும், பிற கடல்கடந்தநாடுகளும், நாற்புறமும் அல்லது முப்புறமும் கடல் சூழப்பட்ட தன்மை நோக்கி ஏழு உலகங்களாக அல்லது ஏழு தீவங்களாகப் பழங்கதைகளில் கூறப்பட்டு வந்தன.

இந்தியா தமிழில் நாவலந்தீவம் என்றும் வடமொழியில் சம்புத்தீவு என்றும் அழைக்கப்பட்டது. இறலித் தீவு, இலவந் தீவு (சான்மலித் தீவு), அன்றில் (கிரவுஞ்சம்) தீவு, குசைத்தீவு, தெங்கந்தீவு, தாமரைத் (புட்கரம்) தீவு என்பவை ஏனையவை.

கி. மு. 2,300 அளவில் ஏற்பட்ட கடல்கோளால் இந்துப் பெருங்கடலில் காணப்பட்ட பனைத்தீவம், தென்பாலி முகம் ஆகியவை கடலுள் மூழ்கின. அப்போதுதான் தற்போதுள்ள இலங்கை தனித்தீவாகப் பிரிந்தது. இக்கடல்கோளின்போது குமரியாறு கடலுள் மூழ்கவில்லை. இவ்வாற்றங்கரையில் இருந்த கதவபுரத்தில் (கபாடபுரம்) இரண்டாம் தமிழ்ச் சங்கம் நடைபெற்றது.

இக்காலத்தில் சோழரின் கடற்கரைத் தலைநகரமான காவிரிப்பூம்பட்டினமும் சேரரின் துறைமுக நகரங்களும்கூட கடலுள் மூழ்காமல் இருந்திருத்தல் கூடும்.

இடைத் தமிழ்க் கழக காலத்தில் ஏற்பட்ட கடல் கோளால் கதவபுரமும் (கபாடபுரம்) குமரியாற்றுப் பகுதிகளும் கடல் கொண்டதாக நெடுங்கால வரலாறு கூறப்படுகிறதே ஒழிய தமிழகத்தின் கீழ்க்கரையிலும் மேற்கரையிலும் கடல்கோள் ஏற்பட்டு நிலத்தை விழுங்கியதாக வரலாறில்லை. மாறாக மேற்கில் கடல் விலகியதாகத் தொல்கதை வழங்கி வருகிறது. கி. பி. இரண்டாம் நூற்றாண்டளவில் பூம்புகார் கடல் கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கு முன் சில ஆயிரம் ஆண்டுகளாவது அது சிந்து வெளி நாகரிகக் காலத்தில் சிறந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

## 15. குமரிக்கண்ட நாகரிக முதன்மையர்

கி. மு. 10,000-க்கு முன்பே குமரிக்கண்ட மாந்தர் உலகம் முழுதும் பரவிவிட்டனர் என்று கருத இடமிருக்கிறது. கடைசி பனியூழிக்குப் பின் அஃதாவது கி. மு. 10,000க்குப் பின் குமரிக்கண்டத்தில் வாழ்ந்தவர் வாழ்வு ஒரு நிலைப்பட்ட தன்மை எய்தியிருக்கவேண்டும். ஏனெனின், மக்களின் குடிப்பெயர்ச்சி நாடோடி விலங்காண்பி (Savage) தன்மையிலிருந்து ஓரளவு நாகரிகமுற்ற கூட்டு வாழ்வை எய்தியிருந்தது என்பதற்கான சான்றுகள் கிடைப்பதாலும், பேரூழிகளின் முடிவுகாலமாக அக்காலம் இருந்ததாலும், திருந்திய மொழி வளர்ச்சியும் பொருந்திய பண்பாட்டு நாகரிக வளர்ச்சியும் பெறுதற்கேற்ற சூழல் அமைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

குரக்குமாந்த (Homosapien) நிலையிலிருந்து மனவுணர்வு, பேச்சுத்திறன் பெற்ற மாந்தநிலை பெற்ற காலம் 2 இலக்கம் ஆண்டுகளுக்கு முன் என்றும், ஓரிலக்கம் ஆண்டுகளுக்கு முன் என்றும் ஆய்வாளர் பலவாறுகூறினும், அறிவும் மனவுணர்வும் பெற்ற முழுமாந்த நிலையை எய்திய காலம் இற்றைக்கு ஏறத்தாழ 50,000 முதல் 35,000 ஆண்டுகளுக்குள் என்பர். புதிய கற்காலம் எனப்படும் இக்காலத்தில் மாந்தன் தீயைப் பயன்படுத்தத் தெரிந்திருந்தான் என்று சீன

நாகரிகச் சான்றுகள் விளக்குவதாகக் கூறுகின்றனர். கடலுள் மூழ்கிய குமரிக்கண்டத்திலிருந்து நாம் இதற்கான சான்றைத் தற்போது காட்ட இயலாவிடினும் கற்கால மாந்தன் எரிமலையையும், காடு பற்றி எரிவதையும் இயல்பாகக் கண்ணுற்று அதன் பயனை அறிந்து பயன்படுத்தத் தொடங்கியிருப்பது இயல்பே.

ஆனால் வேட்டைக் கருவிகளும், உழவுக்கருவிகளும், பிற தொழிற் கருவிகளும், உடையும் உறையுளும் புழங்கும் ஏனங்களுமே உலக முதன் மாந்தரின் நாகரிகத் தொன்மையை நிறுவுவனவாகும். பாபிலோனியர் 8,000 ஆண்டுகளுக்கு முன்பே திரியிட்டு எரிக்கப்பட்ட எண்ணெய் விளக்கைப் பயன்படுத்தினர் என்று தொல்பொருள் ஆய்வாளர் கூறுகின்றனர்.

பாபிலோனியா, சுமேரியா ஆகிய நாடுகட்குக் கடல் வாணிகம் செய்து குமரிக்கண்ட தமிழர் அங்கெல்லாம் நாகரிகம் பரப்பினர் என்பதற்கான சான்றுகள், நிறைய அந்தந்த நாட்டு எழுத்துச் சான்றுகளில் கிடைப்பதால், குமரிக்கண்ட தமிழர் பாபிலோனியர்க்கும் முன்பே திரியிட்ட எண்ணெய் விளக்கை **10,000** ஆண்டுகட்கு முன்பே அறிந்திருந்தனர் என்று கொள்வதில் தவறில்லை.

## தென் மதுரைத் தமிழ்க் கழகம்

(முதற்றமிழ்ச் சங்கம்)

பாண்டியன் பஃறுளியாற்றங்கரையிலிருந்த மதுரையென்னும் தன் தலைநகரில் முதல் தமிழ்க்கழகம் (தமிழ்ச் சங்கம்) நிறுவினான்.[1] அதில் 549 புலவர்கள் உறுப்பினரா

1 அவருள் தலைச்சங்கம் இருந்தார் அகத்தியனாரும், திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும், குன்றெறிந்த முருகவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனும் என இத்தொடக்கத்தார் ஐந்நூற்று நாற்பத்து ஒன்பதின்மர்

யிருந்தனர். அது 4,449 புலவர்களின் பாடல்களை அரங்கேற்றம் செய்தது. அது சற்றேறப்ப 4,500 ஆண்டுகள் நிலைத்திருந்தது. சிவபெருமானைத் தலைவராகக் கொண்டிருந்தனர் என்பதால் பழந்தமிழர் சைவ நெறியினர் என்று தெரிகிறது.

அப்புலவர்களால் பாடப்பட்ட நூல்கள் முதுநாரை, முதுகுருகு, களரியா விரை, பரிபாடல் முதலியன. காய்சின வழுதி என்னும் பாண்டியன் முதல், கடுங்கோன் என்னும் பாண்டியன்வரை அத்தமிழ்க் கழகத்தைக் காத்து வளர்த்தனர். இக்காலத்திலிருந்த தமிழிலக்கணம் **மாபிண்டம்** எனப்படுகிறது. இது தொல்காப்பியத்திற்கும் அகத்தியத்திற்கும் முந்தியதாகும்.

முதல் தமிழ்க் கழகத்தைப் பற்றிய செய்திகள் நெடுங்காலம் மக்களிடை செவிவழிச் செய்தியாகவே வழங்கி வந்திருக்கிறது. இக்காலத்திய நூல்களுள் ஒன்று கிடைக்காவிட்டாலும் தமிழ்மொழி பண்பட்டிருக்கும் நிலையை ஏனைய உலக மொழிகளோடு ஒப்பிட்டுக் காணும்போது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கியச் செல்வம் பெற்ற மொழியாக இது விளங்கியிருக்க வேண்டும் என்னும் உண்மை புலப்படுகிறது.

---

என்ப. அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினர் என்ப. அவர்களாற் பாடப்பட்டன எத்துணையோ? பரிபாடலும், முது நாரையும், முதுகுருகும், களரியா விரையும் என இத் தொடக்கத்தன.

அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்கம் இருந்தார் என்பது. அவர்களைச் சங்கமிரீஇயினார் காய்ச்சினவழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக எண்பத்தொன்பதின்மர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை என்ப.

(இறையனார் அகப்பொருள் உரை-பக்கம்5)

சிவனை வணங்கி வந்த சைவ நெறியும், தாய்வழிபாடாகிய கொற்றவை வழிபாடும் குமரிக்கண்டத்தில் முதன் முதல் தோன்றியவை என்பது, முதல் தமிழ்க்கழக வரலாற்றிலிருந்து தெரிகிறது.

குமரிக்கண்ட பழந்தமிழர் நாகரிக வாழ்க்கையில் எவ்வாறு சிறந்திருந்தனர் என்று அறிய, தலைச்சங்க இலக்கியங்கள் கடல் கொள்ளப்பட்டதால் நம்மிடம் சான்றுகள் மிகுதியாக இல்லை. கடல் கொண்ட குமரிக் கண்டத்திலிருந்து பிரிந்து சென்று, பல்வேறு தொலை நாடுகளில் குடியேறி, மொழித்திரிபாலும் கால வேறுபாட்டாலும் அகன்றுள்ள தமிழின மொழிகளின் மொழி ஒப்புமை, நாகரிக ஒருமருங்கு ஒப்புமைச் சான்றும், குமரிக்கண்டத்தில் முதற் கடல் கோளுக்குப்பின் எஞ்சி நின்ற நிலப்பகுதிகளில் அடுத்த கடல்கோள் வரை வாழ்ந்த தமிழ் மக்களோடு கடல் வாணிகம் புரிந்த எகிப்திய, கிரேக்க, அரேபிய, சுமேரிய கடல் வணிகர்களின் கூற்றுகள், அவ்வந்நாடுகளில் உள்ள எஞ்சிநின்ற குமரிக்கண்ட நாடுகளைப் பற்றிய எழுத்துச் சான்றுகள் ஆகியவையும் நமக்குக் குமரிக்கண்ட வரலாற்று மூலங்களாக உள்ளன.

உருசிய வரலாற்று ஆய்வாளர் திரு. கொந்தரகோவ் என்பவர் சென்ற ஆண்டு வெளியிட்ட 'முக்கடல் புதிர்' (The Riddles of three oceans) என்னும் நூலில், சுமேரியா முதலிய பழைய நாகரிகத் தொடர்புகளாகிய நகரப் புதைபாடுகளிலிருந்தும் கடலக அகழ்வாய்விலிருந்தும் (Marine archaeology) கிடைத்தஉண்மைகளைத் திரட்டிக் குமரிக்கண்ட தமிழ்மக்களின் நாகரிக வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

அவர் காட்டுகின்ற எடுத்துக் காட்டுகளின்படி இலெமூரியா எனப்பட்ட குமரிக்கண்டம், பல கடல் கோள்களுக்குட்பட்டு இந்தியப் பெருங்கடலால் சிறிது சிறிதாக விழுங்கப்பட்டு வந்த கால கட்டங்களில், மெசபதோமியா

எகிப்திய நாகரிகங்கள் தழைத்த கி. மு. 4,000 ஆண்டு வாக்கில் குமரிக்கண்டப் பகுதிகள் தெற்கே ஒரு பெருநிலப் பரப்பாகவும், இன்றைய குமரி முனைக்குத் தெற்கிலும் நில நடுக்கோட்டை ஒட்டிய பகுதிகளிலும் பல தீவுகளாகவும் இருந்தமை தெரிகிறது.

மிகப் பழங்கால நாகரிகத்தைச் சார்ந்த அராபிய, சுமேரிய கடல் வணிகர்களால் இந்தியக் கடலில் பனைத் தீவுகள், ஞாயிற்றுத் தீவு (Sun island), மகன் தீவுகள் ஆகியவை குறிப்பிடப்படுகின்றன. இவை சிறு தீவுகள் அல்ல. இலங்கையைவிடப் பெரியவை. இத்தீவுகளுக்கும் தெற்கேயிருந்த பெரிய நிலப்பரப்பு மடகாசுகர் தீவை ஒட்டி தென் துருவத்தை நோக்கி நீண்டிருந்ததாகக் கருத இடந்தருகிறது. இத் தென் நிலப்பரப்பு, சேரன்தீவம், தில்முன், மெலுகா, தாப்ரபனெ என்று நான்கு பெயர்களால் வெவ்வேறு மேனாட்டுப் பழங்கால மக்களால் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அறியப்பட்டிருக்கிறது.

அடியார்க்கு நல்லார் தென்பாலி முகத்திற்கு வட எல்லையாகிய பஃறுளி ஆறுமுதல் வடக்கே குமரியாறும் குமரி மலைத் தொடரும் வரை கடல் கொண்டதாகத்தான் கூறியிருக்கிறார். தென்பாலிமுகம் என்னும் நிலப்பகுதி தவிர ஏனைய 49 நாடுகள் கடல் கொண்டதாக அவர் கூற்றிலிருந்து நமக்குத் தெரிகிறது.

தென்பாலிமுகம் கடல்கோளிலிருந்து தப்பிநெடுங்காலம் நிலப்பகுதியாக இருந்திருக்க வேண்டும் என்றும், இதைப் போலவே இன்னும் சிறிதும் பெரிதுமாக பல நிலப்பகுதிகள் கடல் கோளுக்கு உட்படாமல் தப்பியிருக்கலாம் என்றும் கருத மேனாட்டாரின் குறிப்பு நமக்கு உதவுகிறது.

தென்பாலிமுகம் என்னும் இப்பகுதியே 'தில்முன்' என்று குறிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், சேரரின் ஆட்சிக்குட்பட்ட பகுதியாக இது இருந்ததால் இதனைச் சேரன் தீவம் என்று குறிப்பிட்டிருக்கலாம் என்றும் கருதலாம்.

## தில்முன் என்னும் தென்பாலிமுக நாடு

சுமேரிய பழைய நகரமான 'ஊர்' புதை பொருளாய் விலும், பிற மொசபதோமிய தொல்பொருளாய்விலும் கிடைத்த ஆப்பு எழுத்துச் சான்றுகள், களிமண் எழுத்துப் பட்டயங்கள் ஆகியவற்றில் சில வணிகக் குறிப்புகளும் உள்ளன. அவ்வணிகக் குறிப்புகளில் தில்முனிலிருந்து வந்த மரக்கலங்களைப் பற்றியும் அவை ஏற்றி வந்த பொருள்களைப் பற்றியும் குறிப்புக் காணப்படுகிறது.

மொசபதோமியர்க்கு நாகரிகம் கற்பித்தவரும் பிறகு அவர்களால் தெய்வமாக வணங்கப்பட்டவருமான 'என்கி' அல்லது 'எய' என்பவர், தில்முன் நாட்டில் வாழ்ந்திருந் தவர் என்றும், அந்நாட்டில் நோயும் மூப்பும் இல்லை என்றும், தெளிந்த நீரருவிகள் நிறைந்த அந்நாடு, ஒரு பொன்னுல காக இருந்தது என்றும் அக்குறிப்புகள் கூறுகின்றன.[1]

கடலில் நெடுந்தொலைவிலிருந்த இந்நாட்டை 'சூரியன் உதிக்கும் நாடு' என்றும் கடல் வாணிகர் குறித்தனர்.

சூரியன் உதிக்கும் நாடு என்னும் குறிப்பை அடிப்படை யாகக் கொண்டு சில வரலாற்றாசிரியர் பாரசீக வளைகுடாவி லுள்ள 'பேரிங்' தீவுதான் 'தில்முன்' என்று நினைத்தனர். சுமேரிய வரலாற்று மூலங்கள் குறிப்பிடும் 'இய' தெய் வத்தின் கோயிலும், பெரிய தந்தங்கள் கிடைக்குமளவுக்கு

---

1. We find mention of Ships from DILMUN in very early business documents of Mesopotemia.

Enki himself lived in Dilmun, a land from which diseases and death had been banished where fresh water gushed from springs, where human life was happy and Care free.

The Riddles of three Oceans—page-155.

யானைக்கூட்டங்களும் 'பேரிங்' தீவில் இருந்திருக்க வாய்ப் பில்லை. ஆதலால் அவர்களின் கூற்று மெய்யன்று என்பது அனைவர்க்கும் தெளிவான பின், 'தில்முன்' இந்துப்பெருங் கடலில் உள்ள நாடே என்ற முடிவுக்கு வந்தனர். "**இய**" என்னும் தெய்வத்தின் பெயரும் **இயவுள்** (கடவுள்) எனும் தமிழ்ச் சொல்லே என்பது அறியத் தக்கது.

அசீரிய வரலாற்று மூலங்கள் தில்முன் மன்னன் உபேரி (uperi) என்பவன் அசீரிய மன்னன், இரண்டாம் சர்கோனுக் குத் திறையளித்தான் என்று குறிப்பிடுகின்றன.

மற்றோர் அசீரிய மன்னன் தில்முன் நாட்டில் பெரும் பொருள் கொள்ளை கொண்டு வந்தான் என்றும், சென்ன கெரிபு என்னும் அசீரிய மன்னன் தில்முன் படைவீரர்களின் உதவியால் பாபிலோன் நகரைத் தரைமட்டமாக்கினான் என்றும் குறிப்பிடப்படுகிறது. இவற்றையெல்லாம் நோக்குங் கால் 'தில்முன்' என்னும் செல்வச் செழிப்பு மிக்க நாடு உண்மையில் இருந்த நாடேயன்றி கற்பனை நாடன்று.[2]

பாபிலோனிய ஆப்பெழுத்துப் பட்டயங்கள் இதே தில்முன் பகுதியை **மெலுகா** என்று குறிப்பிடுகின்றன. மெலுகா ஒரு துறைமுகமாகவும் இருந்திருக்கலாம். இஃது இந்துக் கடலில் தெற்கில் வெகு தொலைவில் இருந்தது

---

2. Assyrian sources say that king Uperi of Dilmun paid tribute to king Sargon-II of Assyria. Another Assyrian ruler carried rich plunder out of Dilmun, includ-ing copper bronze and precious timber, Dilmun Soldiers helped the Assyrian despot Sennacherib to level Babylon Mother of ground. To sumup, although mythology gives the domain of Ea the typical features of paradise, Dilmun was a country that actually did exist.

The Riddles of three oceans-(page-156)

என்றும் இந்நாட்டு மக்கள் கருப்பாக இருந்தனர் என்றும் குறிப்பிடப்படுகிறது.

மெலுக்கரின் கப்பல் மகுளிம் (magulim) மிகப் பெரிது. மெலுக்காவிலிருந்து தங்கத்துகள், முத்து ஆகியவை வந்தன. மெலுக்கர் கப்பலில் வந்தனர்.[1] சுமேரியர் அங்குச் செல்ல வில்லை என்பன அக்குறிப்புகளுட் சில.

சுமேரிய அகழ்வாய்வாளர்கள் மெலுக்கா நாட்டு மொழி பெயர்ப்பாளனின் முத்திரை[2] (seal) ஒன்றைக் கண்டெடுத் துள்ளனர்.

இத் தில்முன் நாட்டை அரேபியர் சேரன்தீவம் அல்லது தாப்ரபனே என்றனர். அரேபிய மிகப் பழங்கால நில நூலார் இந்துக் கடலில் 1,370 தீவுகள் இருந்தன என்றும், இந்துக் கடலின் தென் கோடியில் தாப்ரபனே இருந்த தெனவும் அதனருகே 59 தீவுகள் இருந்தன எனவும் குறிப் பிட்டுள்ளனர்.

சேரன்தீவம் 5,000 கி. மீ. சுற்றளவுள்ளது. நெடிய மலைத் தொடர்களையும் எண்ணிறந்த ஆறுகளையும் கொண்டது. இம்மண்ணில் மாணிக்கக் கற்கள் கிடைக் கின்றன என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். மெசப தோமியர் தில்முன் நாட்டைக் குறிப்பிடுங்கால், இந்நாடு மக்கள் வேண்டுவன அனைத்தையும் வழங்கும் தன்மைத்து[3] என்று பாராட்டினர்.

---

1. Texts speak of 'Man of the ships of Meluka'.
R. T. O (page—153)

2. The Riddles of three oceans-(page-154)

3. "Dilmun—Promised land. The land supplied the inhabitants with every thing they needed."
The Riddles of three oceans. (bage-168)

கிரேக்க நிலநூலார் ஸ்ட்ராபோ என்பவர் இந்தியத் தென் முனையிலிருந்து ஏழு நாட்கள் கடலில் பயணம் செய்து தாப்பனெயை அடைந்ததாகக் கூறுகிருர். தாப்ரபனெயிக்கும் இந்தியாவுக்கும் இடையில் எண்ணிறந்த தீவுகள் இருந்தன. இடையில் சூரியத் தீவும் (Sun Island) இருந்தது என்று தொல்கால ஆய்வாளர் (Author of antiquity) கூறுகிருர்.

தாப்ரபனெ நாட்டையும் யாரும் கப்பலில் சுற்றி வந்ததில்லை. அந்நாடு மிகப் பரந்தது என்று இப்பாக்கிரசு (Hippachrus) என்பவர் கூறுகிருர்[1].

தாப்ரபனெயில் நிழல் தென்புறமே வீழ்ந்தது. கதிரவன் இடப்பக்கம் தோன்றி வலப் பக்கம் மறைகிருன் என்று கேள்விப்பட்டதாகப் பிளினி கூறுகிருர். இந்நாட்டில் 600 நகரங்கள் இருந்தன என்று தொல்கால நிலவியலார் (Geographers of antiquity) கூறுகின்றனர். பிளினி கூறும் மேற்கண்ட கூற்றுக்கள் அண்ணியசு பிளகம் (Annius plokom a freedman) என்பானின் வாயிலாகக் கேட்டறிந்தவை என்றும் இந்த அண்ணியசு பிளகம் கி. மு. முதல் நூற்ருண்டில் வாழ்ந்தவன் என்றும் கூறப்படுகிறது[2].

அண்ணியசு பிளகம் என்பவனும் தான் கேட்ட செவி வழிச் செய்தியையே குறிப்பிட்டாஞ என்பது தெரியவில்லை, எனினும் நெடுங் காலமாக மக்கள் வாயிலாக நினைவு கூர்ந்து போற்றப்பட்ட செய்தி உண்மைச் செய்தியே என்பதில் ஐயமில்லை.

இந்துக் கடலின் தென்கோடியில் இருந்த பெரிய நாடு என்று அனைவராலும், தில்முன், தாப்ரபனே, மெலுகா,

1. It is mentioned in very old sources
R. T. O. (page-170)

2. ... ... ... ...

சேரன் தீவம் எனும் நான்கு பெயர்களால் சுட்டப்படுவது சிலப்பதிகார உரையாசியர் அடியார்க்கு நல்லாரால் குறிப்பிடப்படும் தென்பாலிமுக நாடே எனத் துணியலாம்.

ஞாயிற்றுத் தீவம்

தியோதரசு (Diodorus) என்பவர் தம் நூலில் (Historical library) தன்னுடைய நான்கு மாதக் கடல் பயணத்தை விவரிக்கும்போது இந்தியத் தென்முனைக்குத் தெற்கே இந்துக் கடலில் ஞாயிற்றுத் தீவைக் (Sun island) குறிப்பிடுகிறார்.

> இத்தீவு 5,000 ஸ்டேடியம் (6,000 கி. மி.) சுற்றளவுள்ளது எதியோப்பியர் ஜாம்புல் என்பவனை இத்தீவுக்குக் கொணர்ந்தனர்.
>
> இத்தீவில் இரவும் பகலும் சமமாக இருக்கிறது. நண்பகலில் நிழல் தரையில் சாய்ந்து விழுவதில்லை. மக்கள் நீண்ட ஆயுளினர். 150 வயதுவரை வாழ்கின்றனர். இவர்கள் நோய் நொடி அறியாதவர். இவர்களுக்குள் போட்டி, பொருமை, பகைமை இல்லை. இம்மக்கள் வான நூலறிவில் சிறந்துள்ளனர். இவர்கள் செங்குத்தாக—மேலிருந்து கீழ்நோக்கி—எழுதும் ஒருவகை எழுத்தைப் பயன்படுத்துகின்றனர்[1].

பனைத்தீவம்

தியோதரசு (Diodorus) என்பவர் தன் நூலில் யூகிமெரசு (Euhemeres) என்பவன் இந்துக் கடலில் கண்ட மூன்று பனைத் தீவங்களைப் பற்றிக் (three panhaia islands) குறிப்பிடுகிறார்.

---

1. The Riddles of three oceans. (page-169)

இத் தீவுகளில் பல நகரங்கள் இருந்தன. இத் தீவங்களில் வாழும் மக்கள் பேராற்றல் மிக்கவர். இத்தீவநாடு வளம் மிக்கது. நல்ல விளையுள் பெருகுகிறது. இம் மக்களின் விளையாட்டு வகைகள் எண்ணிலர்தவை.

இவர்கள் போரில் தேர்களைப் பயன்படுத்துகின்றனர். இவர்களுடைய போர்ப் படைகளுள் ஒன்றுன தேர்ப்படை பழைமையானதும் பெரிதானதுமாகும். இவர்கள் அரசியல் அடிப்படையில் முப்பிரிவாக வாழ்கின்றனர்.

உழவர், வீரர், கால்நடை காப்பவர், தொழிலாளர் ஆகியவர்களை அவர்கள் வாழும் ஊர்களில் காப்பவர் சமயத் தலைவரே. அவரே சண்டைச் சச்சரவுகள் இருப்பின் தீர்த்து வைக்கிறுர். மக்களுக்குப் பல வகைகளில் வழிகாட்டியாக உள்ளார். இங்குத் தனிமனிதனுக்கு வீடும் நிலமும் தவிர வேறு சொத்துரிமையில்லை. வருவாய், சமயத் தலைவரிடம் சேர்க்கப்படுகிறது. அவரே அதனைப் பகிர்ந்து அனைவர்க்கும் வழங்குகிறுர். தனக்கு மட்டும் இரண்டு பங்கு எடுத்துக் கொள்கிறுர்.[1]

கி.மு. 2,000 காலத்ததாகக் கருதப்படும் சுமேரியபழைய எழுத்துச் சான்றுகள், இந்துக் கடலிலிருந்த மகன் தீவகத்தி லிருந்து தேக்கு சந்தனம் ஆகியவை சுமேரியாவுக்குக் கப்ப லில் வந்திறங்கியதாகக் குறிப்பிடுகின்றன.

இதுகாறும் கண்ட சான்றுகளிலிருந்து கி.மு. 4,000-த்தி லிருந்து கி.மு. 1,000வரையிலான நீண்ட காலத்தில் இந்துக் கடலில் குமரிக் கண்டத்தின் எஞ்சிய பகுதிகள் கடல்சூழ்ந்த நாடுகளாகவும் தீவுகளாகவும் இருந்தன என்பதும், அவற்றில் தமிழ் மக்கள் உயர்ந்த நாகரிகத்தோடும் வாணிக வளத் தோடும் வாழ்ந்தனர் என்பதும் தெரிகிறது.

---

1. The Riddles of three oceans. (page-168)

இலங்கைத் தீவு இந்தியத் தென்முனையிலிருந்து கி.மு. 2,350ல் ஏற்பட்ட கடல்கோளின்போது பிரிந்துவிட்டது என்றும், இந்தியத் தலைநிலத்திலிருந்து பிரிந்த பிறகு மூன்று கடல் கோள்கள் ஏற்பட்டன என்றும், அவற்றால் இலங்கைத் தீவு ஓரளவு தாக்கப்பட்டது—அழிவும் அடைந்தது என்றும் மகாவம்சம் கூறுகிறது.

இடைச் சங்க வரலாற்றில் கபாடபுரத்திலிருந்த தமிழ்ச் சங்கம் கடல்கோளில் மூழ்கியதால் மணலூருக்குப் பாண்டியன் தலைநகரை மாற்றி அங்குத் தமிழ்ச் சங்கம் நிறுவினான் என அறிகிறோம். சப்பான் நாட்டு மக்கள் எரிமலைகள் விளை விக்கும் துன்பங்களிடையே பழகிப் போய்விட்டதைப் போல குமரிக்கண்ட பழந்தமிழரும் எண்ணிலா கடல்கோள்களைக் கண்டு கண்டு பழகிப் போய்விட்டனர். தமிழர் சிறந்த கடலோடிகளாக இருந்ததால் கடல் கடந்த நாடுகளிலும் சென்று குடியேறினர்.

பாண்டியரின் மீன்கொடி அவர்கள் கடல் நடுவே அல்லது கடலையடுத்து வாழ்ந்து வந்த பழங்கால மரபினர் என்பதை அறிவிக்கிறது. கப்பல் பயணங்களும், அவற்றால் நேர்ந்த துன்பங்களும், அத்துன்பங்களையும் தாங்கிக் கடல் வாணிகம் இந்தியப் பெருங்கடலில் செழித்திருந்த வகைகளையும் பற்றி பாலி, பிராகிருத மொழிகளில் பௌத்த சமணத் துறவிகள் எழுதி வைத்துள்ள பயணக் குறிப்புகள் கூறுகின்றன. இக் குறிப்புகள் கி.மு. 3ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவை.

## மடகாசு தீவினரின் பழங்கதை - மூழ்கிய கோட்டை

மடகாசுகர் தீவின் வடபகுதியிலுள்ள கடற்றுறை நகராகிய தியகோ சுவாரெசு (Diego Suares) வையடுத்துள்ள பகுதிகளில் வாழும் அத்தீவின் பழங்குடி மக்கள் வடபகுதியில்

கடலுள் மூழ்கிப்போன பழங்காலக் கோட்டைகளைக் குறித்த பழங்கதைகளைச் சொல்லி வருகின்றனர்[1].

செவிவழிச் செய்தியாகக் கதைகளில் கூறப்பட்டு வரும் இக்கூற்று, கடலுள் மூழ்கிய குமரிக் கண்ட நகரங்களுள் ஒன்ருக இருத்தல் கூடும்.

பழங்காலத்தில் தியோதரசு என்பவர் தம் (**Historical library**) நூலில் குமரி முனைக்குத் தெற்கேயிருந்த இந்துக் கடல் தீவாக ஞாயிற்றுத் தீவைக் (**Sun island**) குறிப்பிட்டு, இத்தீவினர் நாகரிகத்தில் முதிர்ந்தவர் என்றும் மேலிருந்து கீழ்நோக்கி எழுதும் எழுத்து முறையைப் பின் பற்றினர் என்றும் கூறியிருக்கிருர்.[2] மடகாசு தீவினரும் மேலிருந்து கீழ்நோக்கி எழுதும் எழுத்துமுறையை ஒரு காலத்தில் கொண்டிருந்தனர்.

இந்த எழுத்து முறை ஒற்றுமையைக் காணும்போது மேலிருந்து கீழ்நோக்கி எழுதும் முறை குமரிக் கண்ட மக்கள் கையாண்ட எழுத்து முறையாக இருக்கும் என்று கருதலாம். சீன—சப்பான் நாட்டு எழுத்து முறையும் இதைப் போன்றதே.

மிகப் பரந்த குமரிக்கண்ட காலத்திலேயே இந்த எழுத்து முறை தோன்றியிருக்க வேண்டும் எனவும், கடல்கோள்களால் மக்கள் பல்வேறு கண்டங்களில் வாழ்பவராகப் பிரிக்கப்பட்ட பின்னும் அந்த எழுத்து முறை அவ்வம்

---

1. Is there any factual basis for the legends about an under water castle in the depths of the green waters that have been recorded among the malagasy who live in the envirous of Diegosurez, A harbour and town near northern end of madagascar.

R. T. O (page-174)

2. R. T. O (page-169)

மக்களால் பின்பற்றப்பட்டுக் காலத்திற்கேற்ற வளர்ச்சிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்றும் உணரலாம்.

தமிழர் தமிழகத்தின் முதுகுடிகள் மட்டுமல்லர். உலகத்தின் ஆதிமக்கள்.[1] உலகில் 7,000 ஆண்டுகளுக்கு முன்பே திருந்திய நாகரிகமும் செவ்விய ஆட்சிமுறையும் கொண்ட மக்கள் இருந்தனர் என்று வரலாற்றாசிரியர் கூறுகின்றனர்[2].

தமிழரின் மிகத் தொன்மையான அரசியல் சமுதாய நாகரிகச் செம்மையும் ஒழுங்கான வாழ்க்கை யமைப்பும் வரலாற்றாசிரியரின் வரையறைக்கு அப்பாற்பட்ட அடிப்பழங் காலத்திலேயே தோன்றியவை என்றும், தமிழர் நாகரிகம் ஆரியரின் நாகரிகத்தைவிட மிகமிகத் தொன்மையானது என்றும் T. R. சேச ஐயங்கார் குறிப்பிடுகிறார்.[3]

---

1. பி. டி. சீனிவாச ஐயங்கார். History of Tamils (பக்—14)
2. S. Liang—Human origins.
3. T. R. சேச ஐயங்கார். Dravidian India(page-195)

## 16. பழந்தமிழரின் நிலவழிச் செலவுகள்

குமரிக்கண்ட தமிழ் வேந்தர்களுள் பஃறுளி ஆற்றுக்கும் குமரி ஆற்றிற்கும் இடைப்பட்ட பெருவள நாட்டரசனை செங்கோன் தரைவழியாகப் பல தொலைவான நாடுகட்குச் செலவை மேற்கொண்ட செய்தி இம்மன்னன்மீது பாடப் பட்ட 'செங்கோன் தரைச் செலவு' என்னும் காப்பியத்தால் உறுதிப்படுகிறது. பாரத இராமாயணம் போல் பெருங் காப்பியமாக மதித்துப் போற்றப்பட்ட இத் தமிழ் நூல் மறைந்துவிட்டது. இது தனியூர்ச் சேந்தன் என்னும் புலவ ரால் பாடப்பட்டதாகும்:

> செங்கோன் தரைச்செலவைச் சேந்தன் தனியூரான்
> துங்கன் தமிழ்த்தாப் புலித்தொடரால்-அங்கிசைத்தான்
> சக்கரக்கோ முன்னின்று சாற்றும் பெருவூழி
> அக்கரக்கோ நர்மஞ்சு வாம்.

மாவீரன் அலெக்சாந்தரைப் போன்று நிலவழிச் சென்று பல நாடுகளை வென்ற செய்திகளையும் பல புது நாடுகளையும் அல்லது புதுமைகளைக் கண்ட செய்திகளையும் இந்நூல் விளக்குவதாக இருந்திருக்கும்.

வடிம்பலம்ப நின்ற நெடியோன் என்னும் தமிழ்வேந்தன் கடல் வழியாகப் பல நாடுகளுக்குச் சென்று அந்

நாட்டுக் கடலலைகள் தன் திருவடிகளை அலம்ப நின்றதால் வடிம்பலம்ப நின்ற நெடியோன் எனப் பெயர் பெற்றதாகக் கூறுகின்றனர். மற்ெருரு சாரார் அம்மன்னன் தன் திருவடியைக் கல்லில் பொறித்து அக்கடலலை அலம்ப கடற்கரையில் நிறுவியதால் அப்பெயர் பெற்ருன் எனக் கூறுகின்றனர்.

அண்மைக் காலத்தில் ஆய்வாளர்கள் ஆத்திரேலியா, நியூகினியா, மலேயாத் தீவுகள், கிழக்கிந்தியத் தீவுகள் ஆகிய பல இடங்களில் கடற்கரைகளில் முழு உருவக் கடைக் கற்காலக் கற்படிமங்கள் நின்ற நிலையில் நிறுவப்பட்டிருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர். இவற்றை நிறுவியவர் யார் என்னும் ஆய்வில் மூழ்கியுள்ளனர்.[1]

இத்தகைய கற்படிமம் அல்லது இலச்சினை பொறித்த கற்கள், கல்லுருவங்கள் ஆகியவை உலகின் பல்வேறு நாட்டுக் கடற்கரைகளில் காணப்படுகின்றன. தென்னிந்தியா, ஸ்பெயின், எப்பிரிசு தீவுகள், காகசசு, ஆத்திரேலியா ஆகியவற்றின் கடற்கரைப் பகுதிகளில் இதுவரை இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன

வடிம்பலம்ப நின்ற நெடியோன் வரலாறும், தமிழரின் வீரக்கல் பொறிக்கும் பண்பாடும், வெற்றியைக் குறிக்கத் தன் கொடியை மலைமுகடுகளில் பொறிக்கும் வழக்கமும், ஒப்பிட்டுப் பார்க்கும்போது கடற்கரைகளில் கற்களில்

1. Life size human figures totally different from the Australians were found on the arnhen island peninsula at the end of last century. The Mysterious statues and stone objects which archaeologists found on new Guinea and about which the local inhabitants know nothing and stone monuments on the malenesian islands. Such megalithic structure is fascinating riddle. Were they erected by sea faring people ?

R. T. O. page 15.

உருவமோ அல்லது இலச்சினையையோ பொறித்து நிறுவுவது தமிழரின் தொன்றுதொட்டு வரும் பழக்கம் என்பதை நன்கறியலாம்.

தரை வழியாகத் தீவமுனைகளுக்குச் (தீபகற்பம்) செல்பவர்களும் கடல் வழியாக ஒரு தீவின் அல்லது கடற்கரையை அடைபவர்களும் தம் பயணத்தின் எல்லையாக அல்லது வெற்றி நினைவாக இத்தகைய கற்சின்னங்களை நிறுவியிருக்க வேண்டும்.

குமரிக் கண்ட காலத்தில் நாகரிகத்தில் முதிர்ந்தவர் தமிழரே யாதலாலும், பல நாடுகட்குத் தரை வழியாகவும் கடல் வழியாகவும் பெரும் பயணங்களை மேற்கொண்டவரும் தமிழரே யாதலாலும் இக் கற்சின்னங்களை நிறுவும் பழக்கத்தைத் தோற்றுவித்தவர் தமிழரே எனத் துணிதல் கூடும்.

வெற்றியைக் குறிக்க அல்லது அருஞ்செயலையும் உயர் குடிப் பண்பையும் காட்டுவதற்காக நெடுங்கற்கள் நடுவது இன்றும் தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களால் கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது.

ஒரு நாட்டின் மீது படையெடுப்பதற்காக மட்டும் அன்றிப் பிறநாடுகளைக் காண்பதற்காகவும், நிலநடுக்கம், கடல்கோள், எரிமலை, வறட்சி போன்ற பல காரணங்களால் தரைவழியாக மக்கள் கூட்டம் கூட்டமாகக் குடிபெயர்வதும் உலக வரலாற்றில் இயல்பாக இருந்திருக்கிறது.

இயற்கைச் சீற்றத்தின் காரணமாகக் குமரிக் கண்டத்தி லிருந்துகுடிபெயர்ந்த மக்களின் தொகையே மிகுதி எனலாம். இவ்வாறு பல்வேறு நாடுகட்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் சென்றுவிட்ட குமரிக்கண்டமக்களின் மொழிக் கூற்றில் காணப்படும் ஒப்புமைகளால்தான் அவர்களை அறியமுடி கிறது. அதனை மொழியகழ்வாராய்ச்சி எனும் தலைப்பின் கீழ்க் காண்க.

வணிகம், போர், ஒற்றறிதல், கல்வி, கலை பயிலச் செல்லுதல் ஆகிய காரணங்களால் தரைவழியாகச் செலவு மேற்கொண்டவர்களின் தொகையும் குமரிக் கண்ட தமிழரில் மிகுதியாக இருந்தது.

வணிகரின் போக்கு வரவு நாள்தோறும் நடைபெறக் கூடியதாதலால் போக்குவரவுத்துச் சாலைகளை நிலைப்படுத்து பவரும் அவராகவே இருந்தனர். பல்வேறு ஊர்களைப் பற்றி யும், நாடுகளைப்பற்றியும், அங்கு விளையும் விளைபொருள்களைப் பற்றியும், பிற நாட்டார்க்கு அறிவிக்கும் செய்தித் தொடர் பாளர்களும் வணிகராகவே இருந்தனர்.

குதிரை, கழுதை, பொதியெருது ஆகியவை மூட்டை முடிச்சுகளைச் சுமந்து செல்ல, பல நாட்கள் ஓயாது நடந்து செல்வது அவர்களுக்கு அலுப்பைத் தராத பயணம். வெயில் நேரத்தில் நிழலில் தங்கி இளங்காலை, மாலை, நிலா ஒளிவீசும் இராக்காலம் ஆகிய நேரங்களில் பாட்டும் கதையும் கூறிய வாறு ஆரவாரத்தோடு வழி நடப்பது களிப்பு நல்கியது.

கொடுவிலங்குகளும், வழிப்பறி கொள்ளைக்காரர்களும் இல்லாத பாதையாகத் தேர்ந்தெடுத்து வழி நடந்தனர். நீரில்லாத காடுகளின் வழியாகச் செல்ல அஞ்சினர்.

குமரிக்கண்ட காலத்தில் வாழ்ந்த காட்டு விலங்குகள் வடிவத்தில் மிகப்பெரியவை.

செல்லும் வழியில் உறங்கிக் கொண்டிருக்கும் கும்பலில் ஒருவனை மலைப்பாம்பு விழுங்கி ஏப்பம் விட்டுச் சென்றுவிடும். மறுநாள் தம்மில் ஒருவனைக் காணுமல் ஏனையோர் விழிப் பார்கள்.

குமரிக்கண்டத்தில் திஞேசாரியாவே என்னும் 100 அடிக்கும் மிக்கு நீண்ட விலங்கைக் காணின் மக்கள் அச்சத் தால் மடிந்துவிடுவர். செடிகொடிகளையும் உயிர்களையும் அழிப்பதில் அதற்கு ஈடு கிடையாது. ஊன் வெறியால்

அது உறுமும்போதும், மரஞ்செடி கொடிகளை நெரித்து நடக்கும் போதும் மக்கள் முன்னெச்சரிக்கையோடு ஒதுங்கிப் போய்விடுவர்.

குமரிக்கண்ட விலங்குகளில் **அசுணமா, யாளி** போன்றவையும் மறைந்து விட்டன. காரோதிமம் (காரன்னம்) நீர் நாய் ஆகியவை இன்றும் ஆத்திரேலியாவில் உள்ளன. குமரிநாட்டில் கொன்றுழலும் வேங்கைகளும் சடைவளர்ந்த மதயானைகளும் வழிப்போக்கர்க்கு அச்சமூட்டுவனவாய் இருந்தன.

எரிமலையும் கடல்கோளும் கொடுவிலங்கும் கடுங்கண் கள்வரும் மிக்க சூழலில் துன்பங்களின் நடுவில் இன்பப் பயணம் மேற்கொண்டு குமரிநாட்டு மாந்தர் வாழ்ந்து வந்தனர்.

# 17. வளி தொழிலாண்ட உரவோர்

உலக நாகரிக வளர்ச்சிக்கு அடிப்படையானவற்றுள் கடல் வாணிகம் தலைமையானது. திசையும் எல்லையும் காண முடியாத அச்சந்தரும் கடலில் மரக்கலம் செலுத்தத் தொடங்கிய காலம் எது என்று குமரிக்கண்ட தமிழர் வரலாற்றில் சரியாக வரையறுக்க இயலாவிடினும் தொலைநாடுகட்கும் துணிந்து கலஞ் செலுத்தி வணிகம் செய்த உலக முதன் மக்கள் தமிழர்களே என்பதற்கான சான்றுகள் கிடைத்து வருகின்றன. 'சாதலும் புதுவதன்றே' என்னும் நெறி தமிழர்க்குக் கடல் கடக்கும் துணிவைத் தந்திருக்கலாம்.

தமிழ் வேந்தர் தம் பெருமையாகவும் தம்முன்னோர் பெருமையாகவும் குறிப்பிடுவனவற்றுள்,

**"வளி தொழிலாண்ட உரவோர் மருகன்"** என்பதும் ஒன்று.

பருவக்காற்று வீசும் காலமும் திசையும் அறிந்து கடலில் கலஞ் செலுத்துதலே **வளி தொழிலாளுதல்** எனப்படுகிறது.

நமக்குக் கிடைக்கும் அனைத்துச் சான்றுகளையும் ஒருசேரப் பார்க்கும்போது தமிழர் கடலோடும் கலையில் எவ்வகைத் தேர்ச்சி பெற்றிருந்தனர் என்பதை யறியலாம்.

தென் அரேபியா, ஏமன் வணிகர்கள் 6,000 ஆண்டுகட்கு முன்பிருந்தே கடல் வாணிகத்தில் சிறந்தவர் என்று கூறப்படுகிறது. ஆனால் அவர்கள் இந்துப் பெருங்கடல்வழியாகத் தமிழர் கலங்களில் வந்த யானைத் தந்தம், முத்து, சந்தனம் ஆகியவற்றை எகிப்து கிரேக்கம் ஆகிய நாடுகட்குக் கொண்டு சென்று வாணிகம் புரிந்தனர் என்று தெரிவதால் தமிழரே கடல் வாணிகத்தில் அவர்க்கு முன்பு சிறந்திருந்தனர் எனத் தெரிகிறது.



எகிப்தில் கிடைத்த பழங்காலப் பாபிரசு சுருள் ஓலை அண்மையில் உருசிய அறிஞர்களால் எழுத்தறிந்து படிக்கப் பட்டது. அது ஒரு கலங்கவிழ்ந்த இளைஞன் கதை[7].

"இவ்விளைஞன் 120 குயிபிட் நீளமும் 40 குயிபிட் அகலமும் கொண்ட ஒரு மரக்கலத்தில் ஏறி இந்துக்கடலில் நெடுந்தொலைவு பயணம் செய்தான். மரக்கலம் புயற்காற்றால் மூழ்கடிக்கப்பட்டது. அனைவரும் மூழ்கினர். இவன் ஒருவன் மட்டும் ஒரு மரக்கட்டையைப் பற்றிக்கொண்டு ஒரு கடற் கரையை அடைந்தான். முதல் மூன்று நாள்கள் தன்னந்தனி யாக அலைந்தான். அங்குக் கிடைத்த காய்கனிகளை உண் டான். அடுத்த நாள் அந்நாட்டு அரசனைக் கண்டான்.

"அவனோர் நாகமன்னன். அவனுடல் பாதி பாம்பாக வும் பாதி மனிதனாகவும் இருந்தது. மனிதத் தலையும் நீண்டதாடியும் இருந்தது. நாடு வளமானதாக இருந்தது போலவே அரசனின் அரண்மனையும் செல்வச் செழிப்பால் மிக்கிருந்தது. அரசன் பொன்மயமாகப் பொலிந்தான்[8] கடலில் கலங்கவிழ்ந்ததால் தான்பட்ட துன்பங்களை அந்த இளைஞன் அரசனுக்கு உணர்த்தினான்."

அரசன் அவனுக்கு யானைத்தந்தம், நறுமணப் பொருள் கள், மற்றும் பல விலையுயர்ந்தப் பொருள்களைப்பரிசளித்துஒரு கப்பலில் ஏற்றி எகிப்துக்கு அனுப்பி வைத்தான். அவனை அனுப்பி வைக்கு முன், நீ மீண்டும் எங்கள் நாட்டைக் காண

---

7. "Tale of ship wrecked sailor" Papyrus No: 1 1115 in the collections of the hermitage museum in Leningrad]

8. Soon he encountered the ruler of that bounteous land, an enormous serpant with a beard, a body clad in gold and eye brows of lazulite.

The Riddles of three ocean-Page-166.

முடியாது என்றும், இன்னும் சில காலத்திற்குள் இந் நாட்டைக் கடல் விழுங்கிவிடும் என்றும் அரசன் கூறினான்.

இந்த பாபிரசு சுருள் ஓலையில் விளக்கப்பட்ட இந்துக் கடலின் தென்பகுதியிலிருந்த நாகநாடு நம் கடைச்சங்க இலக்கியங்களிலும் சுட்டப்படுவதை நாம் அறிவோம். நாக நாட்டினர் தம் இடுப்பில் அணிந்திருந்த உடை பாம்பின் உடல்போல் தோற்றம் அளித்திருக்கலாம். அவர்களுடல் பாதி பாம்பாகவே இருந்திருத்தல் இயலாது. ஏனெனின் சோழமன்னன் ஒருவன் நாகநாட்டுப்பெண் பீலிவளையை மணந்து மகனைப் பெற்றதாக அறிகிறோம்.

இந்நாக மரபினர் குமரிக்கண்ட பழந்தமிழரே என்பதில் ஐயமில்லை. அந்த எகிப்திய இளைஞனை ஒரு மரக்கலத்திலேற்றி எகிப்துக்குத் திருப்பியனுப்பினார்கள் என்னும் செய்தி அவர்கள் கப்பல் கட்டும் கலையில் தேர்ந்திருந்தனர் என்று தெரிவிக்கிறது.

இந்தப் பாபிரசு சுருள் எகிப்தியரின் மிகத் தொன்மை யான நாகரிகச் சான்றுதலால் நாக நாட்டுக் கப்பற்கலை கி.மு. 5,000 ஆண்டுகட்கு முற்பட்டதாக இருக்க வேண்டும்.

நமக்கு இதுவரை கிடைத்துள்ள சான்றுகளிலிருந்து சுமேரியாவுடன் கி. மு. 4,000க்கு முன்பிருந்தும் எகிப்துடன் கி. மு. 3,000க்கு முன்பிருந்தும் சீனத்துடன் கி.மு. 1,200க்கு முன்பிருந்தும் தமிழர் கடல் வாணிகம் புரிந்து வந்ததாகத் தெரிகிறது.

தமிழகக் கடல் வாணிகர் நாய்கர் எனப்பட்டனர். நாவாய்+கர்-நாவாய்கர்-நாய்கர் எனத் இச்சொல் திரிந்துள்ளது. கடல் வாணிகம் 'முந்நீர் வழக்கம்' எனக் குறிக்கப் பட்டது. "முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை" என்னும் தொல்காப்பிய நூற்பா கடற்பயணத்தின் போது தமிழர் மகளிரை உடனழைத்துச் செல்வதில்லை என்று கூறுகிறது.

பெரிய பாய்மரக் கலங்களைக் கட்டும் தொழில் 'கலம் புணர்த்தல்' எனப்பட்டது. இத்தகைய கப்பல் கட்டுபவர் 'கலம் புணர் கம்மியர்' எனப்பட்டனர். கப்பல் ஓட்டுபவன் 'மீகாமன்' எனப்பட்டான். நாவாய் என்னும் தமிழ்ச் சொல்லே ஆங்கிலத்தில் நேவி (Navy) என வழங்குகிறது.

கடலில் தொலை நாடுகளுக்குத் தமிழரின் பாய்மரக் கப்பல்கள் செழிப்பான வாணிகம் தொடங்கிய காலம் கி. மு. **5000-3000** ஆண்டுகட்கிடைப் பட்ட காலமாகலாம்.

அரேபியா, எகிப்து, கிரேக்கம், உரோம், ஆகிய நாடுகளின் தொன்முது கடலோடிகள் அனைவரும் இந்துக்கடலிலுள்ள செல்வச் செழிப்பு மிக்க தமிழ் நாட்டுப் பகுதிகளைக் (குமரிக் கண்ட பகுதிகளை) குறிக்கின்றனர்.

மற்றும் சுமேரியர், எகிப்தியர் போன்றோர் இந்தியக் கடலிலிருந்து வந்த கப்பல்களையும் அவற்றில் வந்த தமிழகக் கடலோடிகளையும் குறிப்பிட்டு அவர்களே மிகுதியாகத் தம் நாட்டுக்கு வந்ததாகவும் நாகரிகக் கலைகளைக் கற்றுத் தந்ததாவும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்துக் கடலில் முதன் முதல் கப்பல் ஓட்டியவர் தமிழரே என்று கூறுகின்றனர்.[4] மொகஞ்சதாரோவில் பாய்மரக் கப்பலின் ஓவியம் காணப்படுகிறது. சுமேரியாவுடன்

---

3. Daring protoindian sea farers voyaged in the Indian ocean 5,000 years ago.

R.T.O. Page-152

4. According to recent investigation the inhabitants of dravidian India were most likely the first to voyage the Indian ocean.

R.T.O. Page-152

மொகஞ்சதாரோ மக்கள் கடல் வாணிகம் செய்ததன் அடை யாளமே இக்கப்பல் ஓவியம் என்று கருதப்படுகிறது.[5]

இக்கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் அண்மையில் கத்தி யவார் பகுதியில் கடலே ஒட்டி 'லோதல்' துறைமுகத்தை அகழ்வாய்வுத் துறையினர் கண்டுபிடித்துள்ளனர். இத்துறை முகம் கி. மு. 4,000 காலத்தது என்றும், 7மீ அகலக்கால் வாய் இத்துறைமுகத்தை உள் நாட்டுக் கப்பல் போக்கு வரத்துக்காக ஆற்ருேடு இணைந்திருந்தது என்றும், துறை முகம் 218மீ. அளவில் செங்கற் பாவி கட்டப்பட்டிருந்தது என்றும் கூறப்படுகிறது.

மெசபதோமிய தெய்வப் பெயர்களையே தமக்கும் தெய்வப் பெயர்களாகக் கொண்டுள்ள நீலகிரியில் வாழும் தோடர்களின் பாடல்களில் கப்பல்களைப்பற்றியும் கடற் பயணத்தைப் பற்றியும், அவர்களின் முன்னேர் கடலில் பல நாடுகளுக்குச் சென்றதைப் பற்றியும் குறிப்புகள் உள்ளன.

கரிகாற்சோழன் கடலில் கப்பல் செலுத்துதலில் வல்ல முன்னேரின் வழியில் வந்தவன் என்று பாராட்டப் படுகிருன்.[6]

மற்ருேர் உலகமே எதிர்வந்தாற் போன்று வடிவிற் பெரிய கப்பல் என்று கப்பலின் பெரிய வடிவம், உயர்வு நவிற்சியாகக் கூறப்படுகிறது.[7]

---

5. Indus valley people widely used sea route to Sumer.

Ernest mackay, Brit. arch.

6. நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழிலாண்ட உரவோர் உம்பல்
களியியல் யானை கரிகால வளவ (புறம் 126)

7. உலகு கிளர்ந்தன்ன உருகெழு வங்கம் (அகம்255)

உலகுகிளர்ந்தன்ன உருகெழு வங்கங்களை ஆழியிற் செலுத்திய வளிதொழிலாண்ட உரவோர் உம்பலான கரிகாலன் காலத்தில் நடைபெற்ற கடல் வாணிகச் சிறப்பைப் பட்டினப் பாலையில் கடியலூர் உருத்திரங் கண்ணனார் அழகுறப் பாடியுள்ளார்.

கரிகாலனின் முன்னோருள்ஒருவனான சோழன் கி.மு.2ஆம் நூற்றாண்டில் இலங்கையை கடற்படை கொண்டு வென்ற நிகழ்ச்சி மகாவம்சத்தில் கூறப்படுகிறது.

சேரரும் கடலில் பெரிய கடற்படை செலுத்திப் போர் புரிவதிலும் பிற நாடுகளுடன் கடல் வாணிகம் செய்வதிலும் வல்லவராயிருந்தனர்.*

கப்பலோட்டும் மாலுமிக்கு மீகாமன் என்று பெயர். கடல் வணிகர் **பெருநீரோச்சுனர்** எனப்பட்டனர். அதியமானின் முன்னோரான சேரர் கீழைக்கடலில் கலஞ் செலுத்தி **சாலித்** (ஜாவா) தீவிலிருந்து கரும்பைக் கொணர்ந்து தமிழ் நாட்டில் பயிரிட்ட காலம் வரையறுக்கப்படவில்லை. அக்காலத்திற்கு முன்பே தமிழர் கப்பற் கலையில் வல்லுநராயிருந்தனர்.

படகு, கலம், நாவாய், கப்பல் என்பவை தூய தமிழ்ச் சொற்கள். அம்பி, ஓடம், என்பன ஆற்றைக் கடக்க உதவுபவை. திமில், தோணி, கட்டுமரம், என்பவை மீன்பிடிக்க உதவுபவை. தமிழகத்தில் 100க்கு மேற்பட்டகப்பல் வகைகள் இருந்தன. யுக்தி கல்பதரு என்னும்நூலுள் 272 வகை கப்பல்கள் கூறப்படுகின்றன.

ஆங்கிலத்திலுள்ள Ancor NaVy எனும் சொற்கள் தமிழிலுள்ள நங்கூரம், நாவாய் எனும் சொற்களின் திரிந்த வடிவங்களே ஆகும்.

---

8. சினமிகுதானை வானவன் குடகடல்
பொலந்தரு நாவாய் ஓட்டிய வவ்வழிப்
பிறகலம் செல்கலா தனையோம் (புறம் 126)

குமரிநாட்டில் மாந்தன் மலைப்பகுதிகளில் முதலில் தோன்றி வளர்ந்தபோது மேற்றிசைக் கடலே அருகிலிருந்தது. ஆதலால் கடல் தெய்வமாகிய வருணன் மேற்றிசைத் தெய்வமாக வணங்கப்பட்டான். தமிழர் பண்பாட்டில் பண்டுதொட்டேயிருந்து வரும் வருணனின் வழிபாடு தமிழர் கடலைச்சார்ந்து அதில் கலஞ்செலுத்தி வாழ்ந்த தொன்மையான வரலாற்றைச் சுட்டுவதாகும்.

பாம்பால் தீங்கு நேர்வதறிந்து அதனைத் தெய்வமாக வணங்கும் வழக்கம் வந்திருப்பது போன்றே கடலால் நேரும் துன்பம் கண்டு வருண வழிபாடு தோன்றியிருக்கக் கூடும். கடல்கோள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை உண்டாதலால் கடல்கோளுக்கு அஞ்சி வருணனை வழிபட்டனர் என்பதை விட கடலில் மீன் வேட்டத்தின் காரணமாகவும், கடற்பயணத்தின் காரணமாகவும் நேரும் துன்பங்களுக்கு அஞ்சி வருணன் வழிபாடு மேற்கொண்டனர் என்பதே பொருந்தும்.

எனவே தமிழர் கடற்பணம் மேற் கொண்ட காலம் குமரிக் கண்ட வரலாற்றின்படி பார்த்தாலும் மிகத் தொன்மையானதாய் இருத்தல் வேண்டும்.

கடைச்சங்க காலத்திலும், கடைச் சங்க காலத்திற்கு முன்னும் ஆந்திர நாட்டை ஆண்ட நூற்றுவர் கன்னர் (கி.மு 230—கி.பி 250) சாதாவாகனர் என்னும் பெயரில் கடல் வாணிகத்திலும் சிறந்து விளங்கினர். இவர்கள் வடநாடாண்ட தமிழரின் சேரக்கிளை மரபினரே. பாண கவிஞரின் அர்சரித்திரம் என்னும் நூலில் ஆந்திரர் முக்கடல் தலைவர்கள் (திரிசமுத்திரபதிகள்) என அழைக்கப்படுகின்றனர். ஆந்திரனின் பழைய நாணயங்களில் பாய்மரக் கப்பல் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.1

1. Coin of andhras-Rapson.
Ja. Jan.-March. 1936 page-96

சுமேரியா, சிந்துவெளி, தமிழகம் ஆகியவற்றுக்கிடையே அறப்பழங்காலத்திலிருந்தே நெருங்கியதொடர்பு இருந்தது[2] என்று எச். ஆர். ஆல் என்னும் வரலாற்றுசிரியர் கூறுகிறார். இத்தொடர்பு கடல் வழியாகவும் நிலவழியாகவும் நிகழ்ந்திருக்கிறது. சுமேரியாவுக்கு, அரிசி, மிளகு, இஞ்சி, மெல்லிய மசுலின் துணி, நறுமணப் பொருள்கள் ஆகியவை தமிழகத்திலிருந்து ஏற்றுமதியானதாக ஸ்காப் என்பவர் கூறுகிறார்.[3]

கி.மு. 7ஆம் நூற்றாண்டிலும் அதற்கு முன்னும் பாபிலோனுடனும் பிறகு மேற்கு நாடுகளுடனும் கடல் வாணிகம் செய்தோர் தமிழக மேற்குக் கடற்கரை வணிகரே என்பதை ரைஸ் டேவிட் என்னும் அறிஞர் தெளிவு படுத்தியுள்ளார்.[4] அவர் கூற்று பின்வருமாறு.

The merchants, who traded from ports on the south west coast of India (at the beginning of 7th century B.C.) To Babylon, then a great mercantile emporium, were mostly Dravidians, not Aryans. Such Indian names of the goods imported as were adopted in the west (solomons, ivory, apes and peacocks for instance, and the word rice) were adoptions, not of sanskrit or pali but of Tamil words.

செருமானியக் கடற்கரையில் ஒதுங்கிய இந்தியர் சிலர் சுயேவி மன்னரால் கால் நாட்டுக்குப் பரிசுப்பொருளாக

---

2. The ancient history of the near east-H.R. Hall. page 173-174

3. Periplus-Schoff. Page-3

4. Buddhist India. page-50

அனுப்பப்பட்டனர் என்று பிளினியின் குறிப்பு கூறுகிறது.[1] கி. மு. 60-59ல் நடந்ததாகக் கூறப்படும் இந்நிகழ்ச்சி தமிழரின் கப்பல் புயலால் திசை மாறி செருமானியக் கடற் கரையில் ஒதுக்கப்பட்டிருக்கலாம் என்று கருதத் தூண்டு கிறது.

கடலில் நெடுந்தொலைவுப் பயணத்தையும் கடல்வாணிகத் தமிழர் மேற்கொண்டிருந்தனர் என்பதற்கு இவை சான்று கின்றன. கிரேக்க வணிகர் தமிழகத்தோடு நீண்டகாலமாக கடல் வாணிகத் தொடர்பு கொண்டவர். கிரேக்க வாணிகர் குழு ஒன்று தமிழகத்தின் வழியாகச் சீன அரசர் யுவான்தி லயாங் என்பவரை கி.பி 166ல் சென்று கண்டதாகக் கூறப் படுகிறது.[2]

பிளானி, பெரிப்ளுஸ் நில நூலாசிரியர் ஆகியோர்க்கு தமிழகத்துக்கு மட்டும் தான் வழி தெரிந்திருந்தது என்றும் தாலமி மட்டும் அனைத்துக் கடல் போக்குவரத்து வழிகளும் அறிந்திருந்தார் என்றும் கூறப்படுகிறது.

சீனர் கடல் வாணிகம் மேற்கொண்டிருந்தாலும் கடற் கொள்ளைக்காரர்களுக்கு அஞ்சினர்கள் என்றும் அச்சமும்

---

1. I do not think that any emphasis should be laid on the curious fact recorded by pliny and pomponius mela that Metilius celer, who was pro-consul of Gaul in 60-59 B.C. received from the king of Suevi or the Boii, a present of some Indians who have said to have been cast upon the German coast.

Cary and warmington
—Ancient explorers
Page-55

2. History of Rome-cary.

Page-671

தயக்கமும் கொண்ட கடலோடிகள் என்றும் கூறப்படு கிறது.

இக் கூற்றுகள் அனைத்தும் கிரேக்கர் முதல் சீனர்வரை பல நாட்டவரும் கடலோடும் கலையில் தமிழர்க்குப் பிந்திய வரே என்பதைக் காட்டுகின்றன.

இடைக் காலச் சோழரின் கடல் வாணிகம் சங்ககாலக் கடல் வாணிகம் போன்றே சிறந்திருந்தது. சோழ மன்னர் களின் வாயிலாக மூன்று தூதுக் குழுக்கள் சீன மன்னர்க்கு அனுப்பப்பட்டுள்ளன. கி. பி. 1015ல் இராசராசன் காலத் தில்ஒன்றும் கி.பி1033ல் இராசேந்திர சோழன் காலத்தில் ஒன்றும் கி.பி 1077ல் குலோத்துங்க சோழன் காலத்தில் ஒன்றும் ஆக மூன்று தூதுக் குழுக்கள் சீனுவுக்கு சென்ற தாகத் தெரிகிறது.

சீன இலக்கியங்களிலும் வரலாற்றிலும் தமிழகத்துக்கும் சீனத்துக்கும் இருந்த வணிகத் தொடர்பு, நட்பு ஆகியவை குறித்து மேலும் பல சான்றுகளிருப்பதாகவும் பல தூதுக் குழுக்களைபற்றிய குறிப்புகளிருப்பதாகவும் அவை சீனமொழி யிலிருந்து வேற்று மொழிகளில் இன்னும் மொழி பெயர்க்கப் படவில்லை என்றும் இதை ஒரு சீன அறிஞரிடம் தாம் கேட்டறிந்ததாகவும் பேராசிரியர் டாக்டர் சஞ்சீவி அவர்கள் கூறுகிறுர்.

இராசேந்திர சோழன் காலத்தில் சீனுவுக்குக் கடல் வழி யாகச் செல்ல 247 நாள்களாயின என்று தூதுக்குழுவினர் குறித்துள்ளனர்.

---

3. The chinese were timid navigators and much afraid of pirates.

Foreign notices of South India.
Page-13

கி.மு. 2ஆம் நூற்றாண்டில் சுமேரியா யூபிரடிஸ் ஆற்றின் மேற்குக் கரையில் இரண்டு தமிழ் வணிகர் குடியேறி அங்குக் கண்ணனுக்கும் பல தேவனுக்கும் கோயில் கட்டினர்.

கி. மு. முதல் நூற்றாண்டளவில் கடலில் வடமதுரை நோக்கிப் பயணம் செய்த பாண்டியனின் மகளிர் கப்பல் புயலிற்சிக்கிய போது சிவனையும் முருகனையும் வேண்டி வழி பட்டனர் என்று ஆவஷ்யச் சூர்ணி (பக் 706) என்னும் சமண நூல் கூறுகிறது.[1]

கடல் வணிகர் அறிந்திருந்த 16 காற்றுகளைப்பற்றியும் அந்நூல் கூறுகிறது. கடல் வணிகர் வழிபட்ட மணிமேகலை தெய்வத்தையும், தரை வணிகர் சார்த்த வாஹ (வாணிகச் சாத்து) என்று அழைக்கப்பட்டதையும் சமண நூல்கள் குறிப்பிடுகின்றன.

கடற் பயணக் கதைகளும் சமண நூல்களில் கூறப்படு கின்றன. புயலால் கப்பல் தத்தளித்தபோது மீகாமன் அனை வரையும் நீராடி, சிவனையும் முருகனையும் ஏத்திப்பாடுமாறு பணித்தான் என்றும், கப்பல் பயணிகள் அவன் சொல்லுக் கிணங்கி அவ்வாறு வழிப்பட்டதும், புயல் அடங்கி விட்டது என்றும் ஒரு கதை அமைந்துள்ளது. சிவனையும் முருகனையும் வணங்கும் வழக்கிலிருந்து இவை தமிழ் வணிகரின் கடற் பயணத்தையே குறித்தவை என்பது புலனாகிறது.

மற்றொரு கதையில் அரசன் ஏவலால் ஆப்பிரிக்காவை அடுத்திருந்த காலியத் தீவிலிருந்து கடல் வணிகர் வரிக் குதிரைகளைக் கொணர்ந்த செய்தி கூறப்படுகிறது.

நீண்ட கடற்பயணம் செய்வோர் அருகில்கரை உள்ளதா என அறிய காக்கைகளையும் புறாக்களையும் பயன் படுத்தினர்.

பிற நாட்டார் தங்கள் கப்பல்களை 12 ஆண்டுகட்கு ஒரு முறை பழுது பார்க்கவேண்டியிருந்தது என்றும், தமிழர்

1. இந்திய வணிக நெறிகள்—மோதி சந்திரர் (தமிழாக்கம்)

இலெ—10

கட்டிய கப்பல்களை 50 ஆண்டானாலும் பழுதுபார்க்க வேண்டியதில்லை என்றும் லெப்டினன்ட் வாக்கர் தன் ஆங்கில நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.[2] சேரநாட்டுக் கடற்கரையில் அகஸ்தஸ் மன்னனுக்குக் கோயிலிருந்தது என்னும் குறிப்பும் தமிழகக் கடற்கரைப் பட்டினப்பகுதிகளில் யவனக்குடியிருப்புகள் இருந்தன என்பதும் பன்னாட்டுக் கடல் வணிகம் நீண்ட நெடுங்காலத்துக்கு முன்பே தோன்றியிருக்கவேண்டும் என்பதை நினைவுறுகின்றன.

வேதங்களில் படகோட்டி 'நாவஜா' எனப்படுகிறான். இச்சொல் நாவாய்கன் என்னும் தமிழ்ச் சொல்லே என்பது வெளிப்படை.

புத்த ஜாதகக் கதைகளில் திசை காட்டும் கருவிபற்றிய குறிப்பு வருகிறது. மூழ்கும் கப்பலில் இருப்பவர்கள் வயிறார வெல்லமும் நெய்யும் உண்டு உடம்பில், எண்ணெய் பூசிக் கொள்வார்கள். இது எளிதில் நீந்தவும் பசியின்றிச் சில நாட்கள் இருக்கவும் அவர்களுக்கு உதவின.

பாவேறு ஜாதகக் கதைகளில் மிகப் பழங்கால இந்தியக் கடல் வணிகர் கரையைக் கண்டுபிடிக்க, காக்கை, புறா, குருவி போன்றவற்றைக் கப்பலிலிருந்து பறக்கவிட்டனர் என்று தெரிகிறது.

தென் மதுரைக்கும் வடமதுரைக்கும் இடையே அடிக்கடி கப்பல் வணிகம் நடந்து வந்தது என்று மிகப் பழங்கால சமணரின் குறிப்புகளான ஆவஷ்யக் சூர்ணி குறிப்பிடுகிறது.

இக்குறிப்பால் சிந்துவெளி நாகரிகத்துக்கும் தமிழர் நாகரிகத்துக்கும் இன அடிப்படையான தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. சிந்துவெளி நாகரிக காலத்திலேயே கிழக்குக் கரையில் காவிரிப்பூம் பட்டினமும்

---

2. நம் நாட்டுக் கப்பற்கலை (பக்கம் 16)
சாத்தன் குளம் அ. இராகவன்.

தெற்கில் குமரியாற்றங்கரையில் கதவபுரமும் (கபாடபுரம்) பெரிய நாகரிக நகரங்களாக இருந்திருக்கவேண்டும். வால்மீகி இராமாயணத்தில் கதவபுரம் (பாண்டியரின் கபாடபுரம்) குறிக்கப்படுவதாலும் சிலப்பதிகாரத்தில் புகார் நகரம், மக்கள் குடிபெயர்தலை அறியாத தொன்முது நகரம்

'பதியெழுவறியா பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பின் புகார்'

எனப் படுதலாலும் இவ்வுண்மையை அறியலாம். கடல் வாணிகர் மலரும் நறுமணப் பொருள்களும் தூவி, காற்றையும் கடலையும் வழிபட்ட பிறகு பாய்மரத்தில் கொடியேற்றுவர். முத்துக்கும் யானைத் தந்தத்துக்கும் வணிகர் முன்பணம் தருவர்.[4]

சிந்துவெளியில் கிடைத்த முத்திரைகளில் பாய்மரக் கப்பல் உருவமும் இரு கோடுயர்ந்த படகின் உருவமும் காணப்படுகின்றன. துடுப்புகள் பொருத்தப்பட்டிருப்பதும் காட்டப்பட்டிருக்கிறது.

தமிழ் நாட்டில் தொன்று தொட்டு வழங்கிவரும் கப்பல் தொடர்பான பழமொழிகள் கடல் வாணிகத்தின் தொன்மையைக் காட்டுகின்றன.

கப்பலேறி பட்ட கடன் கொட்டை நூற்று முடியுமா?
கப்பலோட்டிக் கெட்டகுடி கடுகுவிற்று வாழுமா?
கப்பற்காரன் வாழ்வு காற்றடித்தால் போச்சு
ஏலேல சிங்கன் கப்பல் ஏழுகடல் சென்றுமீளும்.
காலளவே கப்பலின் ஓட்டம்
நூலளவே ஆகுமாம் நுண்சீலை.
கப்பற்காரன் பெண்டாட்டி தொப்பைக்காரி
கப்பல் உடைந்தால் பிச்சைக்காரி
கடலை ஆள்பவன் நிலத்தை ஆள்வான்.

---

4. இந்திய வணிகநெறிகள் (பக்-303)
மோதிசந்திரர் (மூலம்-இந்தி)

இத்தகைய பழமொழிகள் இன்னும் எண்ணிறந்தன மக்களால் வழங்கப்படுகின்றன.

## தமிழர் உலக முதற் கடலோடிகள்

உலகில் முதன் முதல் ஆழ்கடலிற் பெருங்கலம் செலுத்தியவரும் சுற்றுக் கடலோடிகளாக (Circum navigators) விளங்கியவரும் தமிழரே என்பது,கடல்,கப்பல் தொடர்பான பல தமிழ்ச் சொற்கள் மேலையாரிய மொழிகளில் கலந்திருப்பதிலிருந்து தெரிகிறது.[5]

கடலைக் குறிக்கும் வாரி என்னும் தமிழ்ச் சொல் இலத்தீனில் Mare என்றும், வாரணம் எனுஞ்சொல் Marinus என்றும், ஆங்கிலத்தில் Marine, marina என்றும் வழங்கி வருகிறது.

படகு எனுந் தமிழ்ச்சொல் இலத்தீன் மொழியில் Barca என்றும், பிரஞ்சு மொழியில் bargue என்று ஆங்கிலத்தில் bark, barge என்றும் பழைய பிரஞ்சில் barge என்றும்வழங்கி வருகிறது. தமிழில் உள்ள டகரம் ஆங்கில ஒலிப்பில் ரகரம் ஆவது இயல்பு. குடகு Coorg எனத் திரிவதைக் காணலாம்.

நாவாய் எனும் தமிழ்ச் சொல் இலத்தீனில் Navis, Navia என்றும், ஆங்கிலத்தில் Navy என்றும், கிரேக்க மொழியில் Naus என்றும் வழங்கி வருகிறது.

கப்பலைக் குறிக்கும் 'கலம்' எனும் தமிழ்ச்சொல்
கிரேக்க மொழியில் galaia என்றும்,
இலத்தீனில் galea என்றும்,
இடைக்கால ஆங்கிலத்தில் galie என்றும்,
பிற்கால ஆங்கிலத்தில் galley என்றும் வழங்கியது.

---

5. தமிழர் வரலாறு—(பக்-246)
ஞா. தேவநேயப்பாவாணர்.

கப்பல் எனுந் தமிழ்ச் சொல்
கோதிக் மொழியில் 'Skip' என்றும்,
பழைய ஆங்கிலத்தில் Scip என்றும்,
செருமானிய மொழியில் Schep என்றும்,
வடக்கு பிரீசியன் மொழியில் Skapp என்றும் வழங்கியது.

பல கிளைகளைக் கொண்ட பாய்மரக் கப்பலே பழங்காலத்தில் தமிழில் கப்பல் எனப்பட்டது.

கொம்பு—கொப்பு,
கொப்பல்—கப்பல்

எனத் திரிந்த சொல் வடிவம் இது என்று மொழி ஞாயிறு பாவாணர் கூறுவார்.

இஞ்சி, அரிசி போன்ற தமிழ்ச் சொற்கள் பிரஞ்சு, செருமானியம், ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கம் ஆகிய அனைத்து மேலையாரிய மொழிகளிலும் கலந்திருப்பதிலிருந்து கடல் வணிகத் தொடர்பான அனைத்துச் சொற்களும் அவர்களால் கடன் கொள்ளப்பட்டுள்ளன என்பது மேலும் மொழியாராய்ச்சியால் நன்கு உறுதிப்படும்.

கடல் வணிகத்தால் சென்ற பொருள்களின் பெயர்கள் சென்ற நாடுகளிலும் அதே பெயர்களால் வழங்கப்படுவதால் கடல் வணிகத் தலைநிலம் தமிழகமே என்று தெரிகிறது.

# 18. பல்வேறு நாட்டுத் தொன்முது நாகரிகங்கள்

உலகின் பல்வேறு நாடுகளில் காணப்படும் தொன்முது நாகரிகங்கள் பழந்தமிழரின் நாகரிகத்தோடு ஒற்றுமையுடையனவாய் காணப்படுகின்றன. உலகின் பலநாட்டுத் தொல் கதைகளும் கிழக்காசிய நாடுகளிலிருந்து சென்றவை.[1]

## அமெரிக்கா

அமெரிக்காவில் அசுதெக் மக்கள், மாயர்கள் (**Aztecs and yucatanMayas**) ஆகியோர் வெள்ளையர் குடியேறுதற்கு வெகு காலத்திற்கு முன்பே திருந்திய நாகரிகத்தோடு வாழ்ந்திருந்த பழங்குடிகளாவர். அமெரிக்காவில் நடத்திய அகழ்வாராய்ச்சிகளின் வாயிலாக இம்மக்கள் நிறுவியிருந்த கோயில்கள், திருமேனிகள், ஆப்பெழுத்துப் பட்டயங்கள் ஆகியவை, கொலம்பியா, பெரு, பொலிவியா, ஈக்வடார் ஆகிய பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்நாகரிகங்களும் கிழக்கிந்திய நாகரிகச் சாயலுடையவை என்று கூறப்படுகின்றன.

---

1. **Bible absorbed myths and legends of the more ancient culture of Mesepotomia (R.T.O. Page-7)**

மெக்சிகோ மக்கள் மாயன் நாகரிகத்தைத் திராவிட நாகரிகத் தொடர்புடையது என்கின்றனர். மேலும் கரு நிறத்தை அம்மக்கள் அழகான நிறம் என்கின்றனர்.[2] 'நிக்ரிதோ சிந்தோ' என்றால் அம்மொழியில் கருப்பு அழகானது என்று பொருள்.

'கறுப்பின் மிக்குள்ளது அழகு' என்பது தமிழர் வழங்கிய பழமொழியாதலின் அமெரிக்கப் பழங்குடி மக்களும் தமிழரும் ஒன்றுபட்ட பண்பாட்டு நெறியினர் என்று தெரிகிறது. சாயல்-சந்தம்-சிந்தோ எனத் திரிந்த சொல்வடிவும் தமிழ்ச் சொல்லாகவே தெரிகிறது. (சாயல்-அழகு).

ஆப்பிரிக்கா

ஆப்பிரிக்காவில் அறப்பழங்கால மக்களின் நாகரிக எச்சங்களும், நகர இடிபாடுகளும் பல இடங்களில் காணப்படுகின்றன.

1) தசிலி நாகரிகம் **Frescoes of Tassili**

2) பெஃசான் குகை ஓவியங்கள் **Cave paintings of Fezzan.**

3) சிம்பாப்வெயிலுள்ள அரிய கட்டிடங்கள் **Complex of buildings at zimbabwe**

4) பெனின் பகுதியிலுள்ள வெண்கலக்கலைப்பொருள் **Bronze master pieces of Benin,**

5) கிழக்காப்பிரிக்காவிலுள்ள வியக்கத்தக்க அழிபாடுகள் (ruins).

---

2. மெக்சிகோ பயணம்—மணியன், ஆனந்தவிகடன் 20—2—77.

6) இதியோப்பியாவில் தழைத்திருந்த அக்சுமைத்திய பேரரசின் அறிகுறிகள்.

7) மிகப்பழமையான மெரியோதிய (Meriotic) பேரரசு தழைத்திருந்த பகுதிகள்.

ஆப்பிரிக்காவின் நீண்டகால இருண்ட வரலாற்றில் அறப்பழங்கால நாகரிக வாழ்வின் எச்சங்களாக (சின்னங்களாக) மேற்கண்ட அகழ்வாய்வு உண்மைகள் நமக்குக்கிட்டியுள்ளன. இவ்வளவு நாகரிகமாக வாழ்ந்த மக்கள் ஆப்பிரிக்காவிலிருந்து எங்கே போயினர்? ஆப்பிரிக்கா இருண்ட கண்டமாகவும் காடடர்ந்த பெருநிலத்தில் கரியநிற நீக்கிரோக்கள் நாகரிக மறியாத விலங்கு வாழ்க்கையினராய் வாழ நேர்ந்தது ஏன்? முன்பு திருந்திய நாகரிகத்தோடு வாழ்ந்திருந்த மக்களுக்கும் நீக்கிரோக்களுக்கும் தொடர்பு இருந்ததா இல்லையா என்பதையெல்லாம் அறியக்கூடவில்லை.

## சோவியத்து நாட்டில்

சோவியத்து நாட்டில் அறப்பழங்கால மக்கள் நாகரிகத்தோடு வாழ்ந்ததற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. சார்ச்சிய குடியரசைச் சார்ந்த பலியோசுதமி ஏரியினுள் கி.மு. 200ஐச் சேர்ந்த நாகரிகக் குடியேற்றம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. உசுனி அரசின் தலைநகர் என்று கருதப்படும் ‘சிகுஜென்’ என்னும் நகரத்தின் இடிபாடுகள் கிரிகிஜ் குடியரசைச்சார்ந்த இசுக்குள் ஏரியினுள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்நகரம் மார்கோபோலோவால் சுட்டப்பட்டதாகும்.

கி.மு. 3,000 ஆண்டுக்கு முற்பட்டதாகக் கருதப்படும். உரார்த்து அரசர்களால் நிறுவப்பட்ட ஆர்மினியன் நகர அழிபாடுகள் செவன் ஏரியின் நடுவே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## அங்கேரி

அங்கேரி நாட்டில் பலதன் ஏரியில் (Lake Balaton) மூழ்கிய கி.மு. 400க்கு முற்பட்ட நகரத்தின் சுவர்ப்பகுதிகளும், பிற இடிபாடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## சுவிட்சர்லாந்து

சுவிட்சர்லாந்தில் போடன் கடலில் (Boden sea) 50 கற்காலக் கருவிகளும், உறைவிடங்களும், 12 வெண்கலக்கால மக்களின் உறைவிடங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## மேற்குச் செருமனி

மேற்குச்செருமனியில் ரைன் ஆற்றுப்படுகைகளில் உரோமப்பேரரசன் தர்சான் (Trazan) காலத்ததாகக் கருதப்படும் கோட்டைப்பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## சோவியத் நாடு

சோவியத்து நாட்டில் உள்ள தென் தர்க்மேனியாவில் நடத்திய அகழ்வாய்வில் கி.மு. 3,000 ஆண்டுகட்கு முற்பட்ட நகரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந் நகரங்களில் கோயில்கள், கோட்டைகள், கோபுரங்கள், உபாய்து நாகரிகத்தை ஒத்திருக்கும் படிமங்கள் (Terra cotta Statuettes) ஆகியவை அக்கால மக்களின் நாகரிக வளர்ச்சியைக் காட்டுகின்றன. இங்குக் கண்டெடுக்கப்பட்ட இருபதுக்கு மேற்பட்ட எழுத்துச் சான்றுகள் சுமேரிய, எலாமிய, சிந்துவெளிகளில் கண்டெடுக்கப்பட்ட ஆப்பெழுத்துக்களை ஒத்திருப்பது ஆய்வாளர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

மெசபதோமியாவிலுள்ள உபாய்திலும், சோவியத்து நாட்டுத் தென்தர்க்மேனியாவிலும் எண்கோண வடி

விலுள்ள விண்மீன் அடையாளம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது தெய்வத்தை அல்லது வானத்தைக் குறிக்கும் என்று கருதப்படுகிறது. இந்த எழுத்து கி.மு. 2000 ஆண்டைய தாக இருக்கலாம் என்கின்றனர்.

சோவியத்து நாட்டில் கி.மு. 2000 ஆண்டையது எனக் கருதத்தக்க அல்தின்திபெ(Altyn Depe)நகரம் 1960ல் நடந்த அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்டது. இங்கு மூன்று செவ் வகத் தந்தக்கட்டைகள் கிடைத்தன. இவற்றின்மேல் சிறு சிறு வட்டங்கள் வரையப்பட்டுள்ளன. இவை இந்திய சிந்துவெளியில் கிடைத்த தந்தக்கட்டைகளை ஒத்துள்ளன. இவற்றை உயர எறிந்து கீழே விழுந்தபின் அதன்மூலம் வருங் காலம் அறியப்பயன்படுத்தினர் என்று கருதுகின்றனர்.

மேலும் தென்தர்க்மேனியாவில் கிடைத்த மண்டை ஓடு களின் அமைப்பு சிந்துவெளியிலும் உபாய்திலும் கிடைத்த மண்டை ஓடுகளைப் பெரிதும் ஒத்துள்ளன.

இவற்றிலிருந்து சோவியத்து நாட்டின்தொல் முது நாகரிக மாந்தர் சிந்துவெளித் தமிழரின் இனத்தவராகவே இருக்க லாம் என்று கருதப்படுகிறது.

# ஐந்தாம் பகுதி

**எஞ்சிய குமரி நாட்டுக் காலம்**
**கி.மு. 5,000 முதல் கி.மு. 3,000 வரை**

## 19. பிறநாடுகட்கு நாகரிகக் கொடையாளர்

உலகில் மாந்தன் முதன் முதல் எந்நாட்டில் தோன்றினன்? முதன் முதல் நாகரிகம் பெற்ற மக்கள் எந்நாட்டினர்? இத்தகைய வினாக்களை வரலாற்று ஆசிரியர்களும் அறிவியலறிஞரும் அடிக்கடி தொடுத்து இவற்றுக்கான விடைகளை ஆய்ந்து வருகின்றனர்.

இந்த ஆய்வுகளின் முடிவாக, எல்லோரும் வியக்குமாறு உலகில் தொன்மையான நாகரிகங்களின் எண்ணிக்கையில் மூன்றிலிரண்டு பங்கு நாகரிகங்கள் திராவிட இன மொழிகளைப் பேசிய மக்களால் தோற்றுவிக்கப்பட்டனவாகக் காணப்படுகின்றன.

The surprising thing is that atleast two out of three of the worlds' earliest civilizations turn out to be connected with people who spoke Dravidian languages.[1]

கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் வாழ்ந்த தமிழ்ப் பெருமக்களின் கால்வழியினர் கடல் கோளுக்கும் பிற இயற்கைக்கெடுதிகளுக்கும் அஞ்சி உலகின் பல பகுதிகளுக்கும் சென்றனர் என்னும் உண்மையின் எதிரொலியே மேற்கண்ட ஆய்வு முடிவு என்றால் அது மிகையாகாது. குமரிக்கண்டத்தில் கடல் கோளுக்குப் பிறகும் சில பகுதிகள் எஞ்சியிருந்தன.

இக்கூற்றின்படி உலகின் எந்தெந்த நாடுகட்குப் பழங்காலத்தமிழர் நாகரிகக் கொடையளித்துள்ளனர். என

1. The Riddles of three oceans page-132

அறிதல் இன்றியமையாதது. பல நாடுகளில் வழங்கும் பழங் கதைகள் (legends) கலை ஒப்புமைகள், பண்பாட்டுக்கூறுகள், மொழியமைதி, பழங்காலச் சின்னங்கள், தொல்பொருள் அகழ்வாய்வில் கண்ட உண்மைகள், பழங்கால எழுத்துச் சான்றுகள் ஆகியவை இவ்வுண்மைகளை, நமக்கு நினைவுக் கெட்டாத நெடுங்காலத் தொடர்பை வலியுறுத்தும் வகையில் வெளிக்காட்டுகின்றன.

## மெசபதோமிய நாகரிகம்

பாபிலோனியப் பாதிரி ஒருவர் பழங்காலத்தில் எழுதி வைத்ததாக உள்ள ஒரு பழங்கதை, மெசபதோமியர்க்கு நாகரிகம் கற்பித்த ஓனசு (oannes) என்பவர் பாரசீக வளை குடாவைக் கடந்து கப்பலில் வந்தார் என்றும், இவர் தலை மையில் ஒரு குழுவே வந்தது என்றும் கூறுகிறது. "இவர்எரிது (Eridu) நகருக்கு வந்து நாகரிகம் கற்றுக் கொடுத்தார். ஏர் உழவுக் கருவிகளைக் கொடுத்து உழவுத் தொழிலைக் கற்பித் தார். கலை, அறிவியல், கட்டிடக் கலை, நகரமைப்பு, கடவுள் வழிபாடு ஆகியவற்றைக் கற்பித்தார். அனைவருக்கும் எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்தார்."

இக்கூற்றை ஆராய்ந்தால் அக்காலத்தில் கப்பலில் வந்தி றங்கிய குழு குமரிக்கண்ட தமிழரன்றி வேறு எவராகவும் இருந்திருத்தல் இயலாது. சுமேரியர் அக்காலத்து கடலில் கலஞ் செலுத்தியறியார். இவர்கள் காகசசு பகுதியிலிருந்து வந்து குடியேறியவர்.[2]

---

2. Eridu was where Mesopotomian civilisation was Born. it was there that man made the leap from stone age to age of metals, irrigation and monumental buildings among other attributes of civilisation.

R. T. O. page 140.

கற்காலத்திலிருந்து படிப்படியாக நாகரிகம் வளராமல் திடீரென்று வேளாண்மை, வணிக வளம், நாகரிக நகர வாழ்வு ஆகியவை தோன்றுகின்றன என்றால் அத்தகைய நாகரிக வாழ்வுக்குக் காரணமானவர்கள் அந்நாகரிகத்தைக் கொணர்ந்த வேற்று நாட்டினரே என்னும் உண்மையை இப் பழங்கதை வலியுறுத்துகிறது.

## எகிப்தியர்க்கு நாகரிகம் கற்பித்தவர் தமிழர்

எகிப்தியரின் பழங்கால நாகரிக வளர்ச்சியை ஆராய்ந்த அறிஞர் ஓர் ஐயப்பாட்டை வெளியிடுகின்றனர். கற்கால நாகரிகச் சின்னங்களையடுத்து படிப்படியான நாகரிக வளர்ச் சிக்கான அறிகுறிகள் எகிப்திய நாகரிக வரலாற்றில் காணக் கூடவில்லை. கற்கால நாகரிகத்தை அடுத்து திடீரென உயர்ந்த மாடமாளிகைகளோடு கூடிய, எழுத்தின் பயன் அறிந்த திருந்திய நாகரிகம் காணப்படுகிறது.

எகிப்தியர் கி. மு. 3000 ஆண்டு வாக்கில் கற்கால வாழ் விலிருந்து திடீரென்று எவ்வாறு உயர் நாகரிகம் பெற்றனர் என்னும் கேள்விக்குறியை வரலாற்று ஆய்வாளர் எழுப்பு கின்றனர். எகிப்து பிரமிடுகளின் அகத்தே காணப்படும் ஓவிய எழுத்து உலகின் மிகப் பழமையான எழுத்துச் சான்றாகும். நுட்பமான சமய உண்மைகளையும் தெரிவிக்கும் தன்மையது.[3] இது செம்மை மிக்க திருந்திய மொழியின் கூறாகவே தெரிகிறது.

---

3. The writing itself cannot be called archaic. It corresponds to the 'classical' canon, to the graphic system which the ancient Egyptians used through out their history. It is so advanced that complex religious and phylosophical ideas can be expressed by it.

R. T. O (page-160)




நன்றி. தமிழக வரலாறு - முதற்பகுதி. தமிழ்நாடு அரசு வெளியீடு 1975
From Ancient Temperatures by 'CESARE EMILIANSI'
Copyright © 1958 by Scientific American Inc.

எகிப்தியர் திடீரென நாகரிகத்தையும் செவ்விய எழுத்து முறையையும் யாரிடமிருந்தாவது கற்றுக் கொண்டிருக்க வேண்டும். மொசபதோமியர் தம்முடைய ஆப்பெழுத்து கீழ் நாடுகளிலிருந்து வந்தது என்கின்றனர். கிரேக்கரின் எழுத்து முறை, சிலவேனியர், எத்ருசுகனியர் ஆகியவர்களிடமிருந்து வந்தது. சப்பானியர் சீனரிடமிருந்து எழுத்து முறையைக் கற்றனர். எகிப்தியரின் எழுத்து முறையை கிரீதிய தீவினர் பின்பற்றினர்.

எகிப்தியர் மொசபதோமியரிடமிருந்து எழுத்தைக் கற்றனராவெனின் அதுவுமன்று. மெசபதோமிய எழுத்துமுறை எகிப்தியரை விட முன்னதாயினும் எகிப்தியரின் எழுத்து முறை தனித்தன்மை வாய்ந்ததாக உள்ளது. எனவே எகிப்தியர்க்கு எழுத்தும் நாகரிகமும் கற்பித்தவர் எகிப்துடன் வாணிகம் செய்த குமரிக் கண்ட தமிழராகவே இருந்திருக்க வேண்டும். எகிப்தியர்க்கு மட்டுமன்றி மொசபதோமிய உபாய்து நாகரிகத்தார், எலாமியர், ஆகியோர்க்கும் திருந்திய நாகரிக வாழ்வைக் கற்பித்தவர் குமரிக் கண்ட தமிழராகவே இருத்தல் கூடும் என்று கருதப்படுகிறது.

வட ஆப்பிரிக்காவிலுள்ள சகாரா பாலைநிலத்தில் ஒரு காலத்தில் வளநகரங்கள் இருந்தன. நைல் பள்ளத்தாக்கில் தசிலி, பெசான் (Tassili, Fessan) என்னுமிடங்களிலுள்ள பாறை ஓவியங்களும் கி.மு. 4000 ஆண்டயது என்கின்றனர். எகிப்தியர் கி.மு. 5000க்குப் பின்னும் கற்காலத்தில் வாழ்ந்

---

4. It is possible that all of the four earliest civilizations The egypt, ubaid, elamite, dravidian originated in one place, in lemuria. If oceanography confirms the existance, in indian ocean, the land that subsided several thousand years ago, many pages of man's earliest history will have to be rewritten.

R. T. O. (page-161)

தனர். எனினும் திடீரென உயர் நாகரிகத்திற்குத் தாவியுள்ளனர் என்பதை'வரலாற்ருசிரியர் குறிப்பிடுகின்றனர்.[5]

## ஆத்திரேலியர்க்கு நாகரிகம் கற்பித்தவர் தமிழர்

குமரிக்கண்ட காலத்தின் தொடக்கத்தில் ஆத்திரேலியாவும் ஆப்பிரிக்காவும் குமரிக்கண்டத்துடன் இணைந்திருந்தன. இதை இன்றும் மெய்ப்பிக்கும் வகையில் செடிகொடி வகைகளும், உயிரின வகைகளும் பெருமளவில் இந்தியா, ஆப்பிரிக்கா, ஆத்திரேலியா, ஆகிய நாடுகளில் ஒத்துள்ளன. மொழியமைப்பிலும் ஒற்றுமை உள்ளது போலவே நாகரிக வளர்ச்சியிலும் ஒற்றுமை உள்ளது.

ஆத்திரேலியாவில் கற்கால மக்களின் முதற்படியான நககரிக வளர்ச்சி கடல் வழியாக வடமேற்கிலிருந்து வந்த மக்களால் தோற்றுவிக்கப்பட்டது என்பதற்கான சான்றுகள் ஆத்திரேலியாவில் கிடைக்கின்றன. ஆத்திரேலியாவின் வடமேற்குப் பகுதியில் பல்லாயிரம் ஆண்டுகட்கு முந்திய பாறை ஓவியங்கள் காணப்படுகின்றன. இவ்வோவியங்களில் உட்சிங்கா ஓவியம் அனைவரின் கருத்தையும் ஈர்ப்பதாகும். சியார்ச் கிரெ என்பவரால் கிம்பர்லி கற்குகைகளில் 1838-ல் இவ்வோவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

---

5. Nile valley suddenly emerged from the age of stone in to the age of metal, from a premitive culture to a civilization with writing, a state machinery, priests and officials, a system of irrigation cities and the rest. This civilization is auttochthonous.

Sheets of slate found in egypt's oldest cities are covered with picture characters and drawings of genre scenes. This is still a pictography. But we find the later texts are in fully developed script.

R.T.O. page-160

உட்சிங்கா ஓவியத்தின் தலையைச் சுற்றி தெய்வப்படிமங்களுக்குஉள்ளது போன்ற ஒளி வட்டம் உள்ளது. வெள்ளைமுகமும்கோடிட்ட உடற்பகுதியும் கொண்ட இவ்வுருவம் ஆத்திரேலியர்களால் பஞ்சகாலங்களில்மழைதரும் தெய்வமாகவும் துன்பம் நீக்கும் தெய்வமாகவும் தொட்டு வணங்கப் படுகிறது.

இத் தெய்வ வழிபாட்டைக் கற்பித்தவரும் ஆத்திரேலியர்க்கு ஆயுதங்களும், பிற கருவிகளும் தந்தவரும் ஆகிய தம் முன்னோர் வடமேற்குத் திசையிலிருந்து கடல் வழியாக வந்தவர்கள் என்னும் குறிப்பு அவர்களுடைய பழங் கதைகளிலும் காணப்படுகின்றது.[2]

சென்ற நூற்றாண்டினிறுதியில் ஆத்திரேலிய அர்ன் என்னும் முனையில்முழுஉருவ கற்படிமம்ஒன்று கண்டெடுக்கப் பட்டது. இது ஆத்திரேலிய மாந்தரைப் போலில்லை. இதை இங்கே நிறுவியவர் யார் என ஆய்வாளர் ஆய்ந்ததில் ஆத்திரேலியர்க்கு நாகரிகம் கற்பித்த வேற்றவரின் கற்படிமமாக இருக்கலாம் எனக் கருதுகின்றனர்.

இத்தகைய கற்படிமங்கள்நியூகினியா கடற்கரைகளிலும் காணப்படுவது கருதத்தக்கதாகும்.

கிரேக்க நாட்டில் பழங்காலத்தில் தேர்கள்பயன்படுத்தப் பட்டன. அத்தேர்களில் குதிரைகள் பூட்டப்பட்டிருந்தன.

பழந்தமிழர் நாகரிகத்தில் தேர்ப்படை ஒரு இன்றியமையாத இடத்தைப் பெற்றிருந்தது. கப்பற் கட்டுந் தொழிலில்

---

2. Australian legends and myths speak of ancestors to whom the oborigines owed their cultural achievements. The mythical ancestors or fantastic beings who gave the oborigines weapons and implements came from the direction of the indian ocean.

R. T. O. page-198

சிறந்திருந்த தமிழர் தேர் செய்யும் தொழிலிலும் முதன் முதல் தேர்ந்தவர்களாய் இருந்திருக்கின்றனர். கப்பல் வாணிகம் கடல் கடந்த நாடுகளோடு செழித்திருந்த



தொடக்க காலத்தில் தேரில் இவர்ந்து செல்லும் நாகரிகமும் பிற நாடுகளில் பரவியிருத்தல் கூடும்.

குமரி நாட்டில் கிரேக்க நாட்டைப்போன்று குதிரை பூட்டிய தேர்கள் இருந்திருக்க வியலாது. எருது போன்ற விலங்குகள் பூட்டப்பட்டிருக்கலாம்.

# 20. குடியேற்ற நாடுகளும் சிந்துவெளி நகரங்களும்

நலமிக்க குடிகளும், நாகரிக நகரங்களும், வளமிக்க நாடுகளும், வற்றாத ஆறுகளும்,வான்முட்டும் மலைமுகடுகளும் தமிழ் தழைத்த தலைச்சங்கமும் தன்னகத்தே கொண்டிருந்த குமரிக்கண்டம் இந்துமாவாரியில் பல்வேறு ஊழிகளில் மூழ்கத் தொடங்கிய பிறகு, அக்காலத்திலேயே சிறந்த கடலோடிகளாக விளங்கிய தமிழர் தாம் ஏற்கெனவே வாணிகம் செய்து வந்த நாடுகளுக்கும் கற்கால மக்கள் வாழும் பிற நிலப்பகுதிகட்கும் சென்று குடியேறினர். அங்குத்தம் குடியேற்ற நாடுகளை நிறுவினர்.

## வட இந்தியக் குடியேற்றம்

இன்றைய தமிழகத்தின் வடக்கே தக்கணம், சிந்து, கங்கைச் சமவெளிகளில் கி. மு. 6000க்கு முன்பே குடியேற்ற நகரங்களைத் தமிழர் அமைத்தனர். இந்தியப் பெருநிலம் முழுதும் முதன் முதல் காடு கொன்று நாடாக்கி நாகரிப் நகரங்களை நிறுவியவர் தமிழ்ப் பெருமக்களே. தமிழர்க்குப் பிறகு கி. மு. 3000-த்தில் முண்டரும் கி. மு. 1500-ல் ஆரியரும் வட இந்தியாவில் குடிபுகுந்தனர்.

இருக்குவேதம் திராவிடர்களின் நாகரிகவாழ்வைக்குறிப்பிடுங்கால், 'தசியூக்களின் அரண்மனைகள் பொன்னாலும் மணியாலும் பொலிந்து விளங்குகின்றன. வலிய கோட்டைகளும் மதிலரண்களும் வானைத் தொட்டு நிற்கின்றன. குயவன் (கோவன்) என்பானின் மனைவியர் இருவரும் நாடோறும் பாலில் குளிக்கின்றனர். அவர்கள் சிபா ஆற்றில் வீழ்வார்களாக!' என்று கூறுகிறது.

ஆரியர்கள், தசியூக்களின் 90 கோட்டைகளையும் 99 நகரங்களையும் அழித்து விட்டதாக வடமொழி நூல்கள் குறிப்பிடுகின்றன.

வட இந்தியப் பழங்கால நகரங்களைத் தொல்பொருள் அகழ்வாய்வுத் துறையினர் மேலும் ஆய்ந்து முடிவுகளைத் தெரிவித்தபின்னும், இந்துப் பெருங்கடலில் அகழ்வாய்வு நடத்திய பின் கிடைக்கும் உண்மைகளின் அடிப்படையிலும், இந்திய வரலாறு புதிதாக மீண்டும் தமிழர் நாகரிகத்தின் தொடக்கத்திலிருந்து தொடங்கி தற்போதுள்ள பல கூறுகளை மாற்றி எழுதப்படவேண்டி வரும். இதே போல் கிரேக்கத்திலும் கிளீமன், ஈவான் கண்டுபிடிப்புகளின் பிறகு அந்நாட்டு வரலாறு மாற்றி எழுதப்பட்டது.[4]

இதுவரை கிடைத்திருக்கும் சான்றுகளிலிருந்து ஆரியர் வருகைக்கு முற்பட்ட இந்திய நாகரிகம் திராவிடமொழி பேசுபவர்களுடையதே என ஐயந்திரிபற விளக்கப் பட்டுள்ளது[5]

---

4. After all the history of ancient greece had to be re examined after the discoveries of schliemann and Evans, and the history of ancient India after the excavations of proto Indian cities.

R.T.O. page-162

5. The proto-Indian civilization was that of dravidians.

R.T.O. page-134

கங்கை, யமுனை, ஆற்றங்கரைப் பகுதிகளிலும், பஞ்சாப் சிவலிக்குன்று பகுதியிலும் முந்து இந்தியரின் (Proto Indian) நாகரிக நகரங்கள் இருந்தன என்கின்றனர். சிந்துவெளியில் கிடைத்த முக்கண்மாதா உருவம் குமரிக்கண்ட நெற்றிக் கண்மாந்தர் உருவத்தை ஒத்துள்ளது. ஊழ்கத்தில் (தியானத்தில்) மூழ்கிய மும்முகக் கடவுளை நான்கு விலங்குகள் சூழஉள்ள சிந்துவெளி உருவமும் பழந்தமிழரின்சமயக் கொள்கைகளை விளக்குவன என்பர்.

குமரிக்கண்டம், சிந்துவெளி, சுமேரிய, எகிப்து, நண்ணிலக் கடல் (Mediterranean) நாடுகள் ஆகியவற்றில் செழித்த நாகரிகம் தமிழருடையதே என்று வரலாற்றாசிரியர் V. R. இராமச்சந்திர தீட்சிதர்[6] குறிப்பிடுகிறார்.

## சிந்துவெளி நகரங்கள்

பழங்கால நாகரிக நகரங்களாகப் புதைபொருள் ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்ட அரப்பாவும் மொகஞ்சதாரோவும் இந்திய நாட்டின் நாகரிகத் தொன்மையைக் காட்டுகின்றன. சிந்துவெளி நாகரிகத்தை அரப்பா நாகரிகம் (Harappan culture) என்று வரலாற்றாசிரியர் அழைக்கின்றனர்.

அரப்பா பஞ்சாப் மாநிலத்தில் மாண்ட் கோமரி மாவட்டத்தில் ரவி ஆற்றிலிருந்து ஆறு கல் தொலைவில் இருக்கிறது. சிந்து மாநிலத்திலுள்ள லர்க்கானா மாவட்டத்தில் மொகஞ்சதாரோ இருக்கிறது.

அரப்பா நகரமும் மொகஞ்சதாரோ நகரமும் மூன்று கல் சுற்றளவுடையதாக இருந்தன.

---

6. **Origin and spread of Tamils** **PP : 35-36**

சிந்துவெளி, நாகரிக நகரங்களைக் காட்டும்
இந்திய நிலப்படம்.



மொகஞ்சதாரோவில் ஏழடுக்குகளில் கண்டெடுக்கப் பட்ட புதை பொருள்களால் அங்கு ஏழு வேறுபட்ட காலங் களில் மக்கள் புதிது புதிதாக அதே இடத்தில் நகரம் அமைத்து வாழ்ந்தார்கள் என்று தெரிகிறது.

நடு அடுக்குகளில் காணப்பட்ட கட்டிடங்களிலிருந்து அக்காலத்திலேயே கட்டிடக்கலையும் வாணிகமும் பெருகியிருந் தமை தெரிய வருகிறது. அடிமட்டத்திலிருக்கும் நகர அமைப்பை நீரூற்றின் காரணமாக ஆராய்ச்சியாளர்களால் நன்கு ஆராய முடியவில்லை.

தற்போது மொகஞ்சதாரோவிலிருந்து சிந்து ஆறு மூன்றுகல் தொலைவில் ஓடிக்கொண்டிருந்தாலும் இவ்யாறு அடிக்கடி மொகஞ்சதாரோ நகரத்தை அழித்திருக்கிறது. யாங்டிசிகியாங் ஆற்றைச் சீனாவின் துயரம் என்று சொன்னது போல சிந்துவை இந்தியாவின் துயரம் என்றும் அழைத் திருப்பார்கள்.

சிம்லாவின் அடிவாரத்திலுள்ள ரூபர் ஆறு முதல் அரபிக் கடலைத் தொட்டு நிற்கும் கராச்சியையடுத்த சுத்கஜன்தார் வரை ஏறத்தாழ 300 கல் தொலைவுவரை இந்நாகரிக நகரங் கள் பரந்திருந்தன. உலகில் வேறெந்த தொன்முது நாகரிக மும் இத்துணைப் பரந்த பரப்பில் ஓரே காலத்தில் விளங்க வில்லை. 1

சிந்துவெளி நகரங்களை அகழும் முயற்சி 1826-ல் மேற் கொள்ளப்பட்டது. அரப்பாவில் காணப்படுவது போன்ற தானியக் களஞ்சியம் வேறெங்கும் காணப்படவில்லை. பிற நாகரிக நகரங்களில் அரசனின் அரண்மனை, கோட்டை

1. The Harappa culture was the most extensive of ancient civilizations in area including not only indus plain (the punjab and sind) but also northern Rajastan and the region of kathiawar in western India.

The history of India vol-I-Romila Thapar.

போன்றவை பெரிய கட்டிடங்களாக உள்ளன. சிந்துவெளியில் பொதுமக்கள் வாழ்ந்த வீடுகளெல்லாம்கூட பெரிய கட்டிடங்களாக இருந்தன. எகிப்திய நாகரிகத்தில் முதலில் மரநாரால் ஆடை நெய்யப்பட்டது. சிந்துவெளியில் பருத்தியால் ஆடை நெய்யப்பட்டது.

மொகஞ்சதாரோ

விந்திய மலைப் பகுதிகளில் பழங்கால நாகரிக மாந்தர் வரைந்த பாறை ஓவியங்கள் அண்மையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. ஐந்து வண்ணங்களைக் கொண்டு பல விலங்குகளின் ஓவியம் பெரிய அளவில் வரையப்பட்டுள்ளன. ஒரு காட்டெருமையின் ஓவியம் 12 அடி நீளமும் 6 அடி உயரமும் உள்ளதாக இருக்கிறது. தேர் மெட்டோடும் சக்கரங்களோடும் கூடிய தேரின் ஓவியம் அழகுற வரையப்பட்டுள்ளது. இப்படிப் பல ஓவியங்கள் இப்பகுதியில் காணப்படுகின்றன. 2

ஆரியர் வருகைக்கு முற்பட்ட இந்திய நாகரிகம் தமிழருடையதே என்பதை நிறுவ மொகஞ்சதாரோ அகழ்வாய்வில் கிடைத்த பொருள்கள் உதவுகின்றன. இங்குக் கிடைத்த எழுத்துச் சான்றுகளை ஆய்ந்த அறிஞர் குழு இங்கு வாழ்ந்த பழங்கால மக்கள் திராவிடரே என உறுதி செய்துள்ளனர்.*

மொகஞ்சதாரோவில் கிடைத்த எழுத்துச் சான்றுகளை மின்கம்ப்யூடர் வாயிலாகப் படித்துத் தொடக்க அறிக்கை ஒன்றை (A preleminary report on a study of proto Indian

---

2. Hindu. dated 11-1-1976.

1. It is quite possible that in hoary antiquity, the whole of this region was inhabited by peoples who spoke dravidian languages. Proto-Indian civilization was that of dravidians.

R.T.O. Page-134

**Texts)** 1995ல் வெளியிட்டனர். இந்த அறிக்கை வெளியிட்ட சோவியத்துக் குழுவில், திரு. ஆந்தரகோவ், பிராப்சுட், அலெக்சியேஞேவ், வால்செக், பியோதரோவ் ஆகிய அறிஞர் பெருமக்கள் இருந்தனர். இக்குழு சோவியத்து நாட்டு இனமரபியல் நிறுவனம், அறிவியல் தொழில் நுட்ப ஆய்வு நிறுவனம் என்னும் இரண்டின் கூட்டமைப் பாகும்.

**(The above report was prepared under the auspices of the all union Institute of ethnography of academy of sciences of the U.S.S.R.)**

இவர்கள் உலகின் பல்வேறு பகுதிகளில் வழங்கும் அனைத்து மொழிகளோடும் மொகஞ்சதாரோ மொழியின் எழுத்துச் சான்றுகளை ஒப்பிட்டுப் பார்த்தனர். மொகஞ் சதாரோ மொழிக்கு 'x மொழி' **(Language x)** எனக்குறியீடு இட்டனர். இறுதியில் திரவிட மொழிகளே இந்த xமொழிக்கு மிக நெருங்கிய ஒற்றுமை உடையதாகக் கண்டுபிடிக்கப் பட்டது. **(The structure of dravidian languages turned out to be the closest to that language x.)**

சிந்துவெளி மொழி தமிழே

சிந்துவெளி அகழ்வாராய்ச்சிப் பொருள்களை ஆய்ந்த ஈராசு பாதிரியார், சிந்துவெளியில் கிடைத்துள்ள அணிகலன் கள், சிற்பங்கள், புழங்கும் கருவிகள், பட எழுத்துமுறை ஆகியவை திரவிடருடையதே எனவும், எழுத்துச் சான்று களில் உள்ள வேல், வேளாளன் ஊர், நாய், வேலூர் முதலிய சொற்கள் தமிழ்ச் சொற்களே என்றும் கூறியுள்ளார்.1

---

**1. Father Heras–Proto dravidion new review. Indian culture-III**

**Journal of the Benaras Hindu university II No. 106**

ஐயா என்னும் சொல் கோயில் தலைவரைக் குறித்தது. தாண்டவன் என்னும் சொல் சிவனையும், அலர் பூவையும் குறித்த சொற்கள். ஆறிரூர். இருபதி, ஈரூர், கூடுமலை, குடலூர், கூடுகோப, மூன்மலை, நான்மலை, நண்கோப, நன்பதி, தளிர்பதி, உயரேழ்பலி (உயர் ஞாயிற்றூரர்) ஆகிய ஊர்ப் பெயர்கள் சிந்துவெளி எழுத்துச் சான்றுகளில் காணப் படுவதாக ஈராசு பாதிரியார் எடுத்துக் காட்டியுள்ளார். அவர் இந்திய வரலாற்றிதழில் பின்வருமாறு கூறுகிறார்:[2]

"யான் மொகஞ்சதாரோ முத்திரைகளில் பொறித் துள்ள எழுத்துகளை ஒலிமுறையாகப் படித்து வைத்திருந்த வைகளை யாழ்ப்பாணம் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாச ரிடம் காட்டினேன். அவை செய்யுட்களின் பகுதிகளாய் இருப்பதை அறிந்தபோது யான் எய்திய வியப்புக்கு அளவில்லை. இப்பாடல்கள் பல யாப்புகளில் எழுதப்பட் டுள்ளன. அவைகளுள் ஐந்து, குறள் வெண்பா யாப்பில் அமைந்துள்ளன.

ஈராசு பாதிரியார் ஒலிமுறைப்படி படித்து எழுதிய சிந்து வெளி முத்திரைகளிலுள்ள செய்யுள் வரிகள் :—

1) "நன்றுறுறு தூக்கு அடு கார்முகில் ஊர் வேலி ஒரூர்
எடு எட்டுறு உயர் எல் இர் ஆர் இரிபேர் கடவுள்"

பொருள்: —ஓர் ஊர் என்னும் ஆண்டை அடைகின்ற ஓசை யிட்டு உயரச் செல்கின்ற ஞாயிற்றின் இரண்டு வழிகளை யுடைய பச்சை (பயிர்) கடவுள் மழைமுகில்களும் சத்த முடைய நாட்டுக்கு வெளியே உள்ளது.

2) "மீனனிர் மாறுஅடு இர்ஐயன் செறிதல் தல்வ"

பொருள் ;— மீனவரின் பகைவர் மறியற்படுத்தப்பட்ட அரச குரு.

---

2. இந்திய வரலாற்றிதழ்-சூலை-1936 ஈராசு பாதிரியர்.

When new inscriptions will be unearthed, the above scanty information will be complimented and the knowledge of the people and the land of those days will eventually become complete.[3]

The object of the hostility of Minnas is the imprisoned illustrious ruler who is a priest.[4]

தவவாழ்வு மேற்கொண்ட அரசன் சிறைப்படுத்தப்பட்டதால் மீனவராகிய பாண்டியர் பகைகொள்ள நேர்ந்தது என்று பொருள் கொள்ளும் வகையில் இவ்வரி அமைந்துள்ளது. முதற்செய்யுளின் பொருள் தெளிவாகப் பொருள் உணரப்படாவிடினும் தமிழ்ச்செஞ்சொற்களே ஆளப்பட்டிருந்ததாகக் காணமுடிகிறது. கடைச்சங்க காலத்துக்கு ஈராயிரம்அல்லது மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தமிழ்ச் சொல்லாட்சிகளின் பொருள் தெளிவை நல்ல ஆய்வுக்குப் பின்புதான் வரையறுக்கமுடியும்.

சிந்துவெளியில் கிடைத்துள்ள மீன் உருவங்கள் பாண்டியரின் தொடர்பைக்காட்டுவதாகத்துணியலாம். ஏனெனின் வேதகாலத்து ஆரியர் மீனை இழிவாகக் கருதினர். மீன் தமிழர் இலச்சினையாக இருந்த செய்தி உலகறிந்தவொன்று.

மீன் தமிழர் இலச்சினையாக மட்டுமன்றித் தமிழரால் வணங்கத்தக்கதாகவும் இருந்தது என்று தெரிகிறது. சிந்துவெளி எழுத்துச் சான்றுகளைப்படித்த பின்னிசு சோவியத்து அறிஞர்குழு 1969ல் வெளியிட்ட அறிக்கையில் பெரு மீன், பெருந்தேவி என்று பொருள் தரும் சொற்றொடர்களைச் சுட்டிக்காட்டியுள்ளனர். இவற்றை மகாமச்சனி, மகாதேவி

---

3. Reprinted from 'Indian culture' vol III. No. 4 Page-720
Mohenja-dara. The people and the land.
—by H. Heras, S.J.

4. The Journal of the university of Bombay.

என்று வடமொழியில் மொழிபெயர்த்துக் கூருமல் சிந்து வெளிச் சொல்லாலேயே குறிப்பிடுவதே நன்று என்கின் றனர்.[1]

சிந்துவெளி நாகரிக காலத்திய மொழியைப்பற்றி அறிய முயல்பவர் அந்நாகரிகத்தை உண்டாக்கிய மக்களின் இன மொழிகளாக இன்றிருப்பவைகளை நன்கு ஆய்ந்து அவற்ரேடு ஒப்பிட்டுப்பார்த்தால் எளிதில் உண்மைவிளங்கும். சிந்து வெளி எழுத்துச் சான்றுகளை விரைந்து ஆராய்ந்து உண்மை காண்பது வரலாற்றுக்கு ஒளிசேர்ப்பதாகும்.

சிந்துவெளி நகரங்கள் :

சிந்துவெளியில் 1000க்கு மேற்பட்ட நகரங்கள் இருந்தன என்று கூறப்படுகிறது. மிகப்பழங்கால கிரேக்கப்பழங்கதை யில் அரிசுதோபுலசு (Aristobulus) என்பவன் சிந்து வெளியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட நகரங்களும், ஊர்களும் சிந்து ஆற்றின் திசைமாற்றத்தால் குடிபெயர நேர்ந்ததை நேரிற் கண்டதாக ஒரு செய்தி தொன்றுதொட்டு பேசப்பட்டு வருகிறது. இதனை ஸ்ட்ராபோ என்னும் கிரேக்க நிலநூல் வல்லுநர் குறிப்பிட்டிருக்கிருர். இக்கூற்று பல நூற்ருண்டு களுக்குப்பிறகு சிந்துவெளி அகழ்வாய்வால் நிறுவப்பட்டிருக் கிறது. நிலநடுக்கத்தால் ஆறுகள் திசைமாறி நகரங்கள்

1. The Proto-Indian texts contain the names great fish and great goddess. The names of course were not maha machli and maha devi which names are sanskrit loan translations from the proto Indian. Five front triden. conveys the meaning of great and conbined with the picture of a fish or a woman signifies the title 'Great Fish', 'The Great Woman' the titles of the supreme deities of the Proto-Indian.

R.T.O. Page-179

மண்ணில் புதையுண்ட செய்தியை இக்கால அறிவியலறிஞர் மெய்ப்பித்திருக்கின்றனர்.[1]

மொகஞ்சதாரோவில் குறைந்தது ஐந்துக்கு மேற்பட்ட தடவைகள் ஆற்று வெள்ளம் பாய்ந்து நகரம் மணலுள் மூழ்கியிருக்கவேண்டும் என்றும் கருதுகின்றனர்.[2]

சிந்துவெளியில் கருங்கல்லால் கட்டப்பட்ட அணைக்கட்டு ஒன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உலகிலேயே மிகவும் தொன்மையான அணைக்கட்டாகக் கருதத் தக்கது இது. இது 10 மீட்டர்உயரமும் 20 மீட்டர் அடியகலமும்கொண்டதாக இருக்கிறது. ஆற்றைத்தடுத்துஅணைதேக்கி வேளாண்மையைப் பெருக்கிய சிந்துவெளித்தமிழரின் நாகரிக வளர்ச்சியை இந்த அணைக்கட்டு எடுத்துக்காட்டுகிறது.

சிந்துவெளித் தமிழர் கடலில் கப்பல் போக்குவரத்து நடத்தினர் என்பதற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. கத்தியவார் அருகிலுள்ள கடற்றுறையான பழங்காலத் துறைமுகம் லோதல் என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது உலகிலே முதன்முதல் நிறுவப்பட்ட துறைமுகமாகக் கருதத் தக்கதாகும்.[1]

---

1. The numerous communities near Mohenja-Daro were Burried beneath a layer of sand and silt many meters deep.

by D. Rakes-American researcher and his team of hydrologists and geologists.

R.T.O Page—182

2. Mohenja-daro was flooded more than five times, yet it rose from its ruins again and again .

R.T.O. Page 180.

1. The structure of the ruins of Lothal, the oldest port in the world found by Indian archaeologists on kathiawar peninsula.

R.T.O. Page—181

பண்டைக்காலத்தில் சேர நாடு குஜராத் வரை பரந்திருந்தது என்று மொழிநூலறிஞர் பாவாணர் கூறுகிறார்.[2] ஈராசு பாதிரியார் மொகஞ்சதாரோ திராவிட நாகரிகம் இந்தியா முழுதும் பரந்திருந்தது என்கிறார்.[3]

வேதங்களில் திராவிடமொழி தாக்குதல் இருப்பதால் ஆரியர்க்கு முன்பே வடஇந்தியாவில் திராவிடர்வாழ்ந்ததைக் காட்டுகிறது.[4]

அரப்பா மொகஞ்சதாரோ நாகரிக புதைவெளிகளில் ஒன்றன் கீழ் ஒன்ருகப்பல நகரங்கள் காணப்படுவதால் சிந்து வெளியில் பல ஆயிரம் ஆண்டுகளாகத் திராவிடர் நாகரிகம் தழைத்து நிலைபெற்றிருக்கவேண்டும் என்று தெரிகிறது.

---

2. திரவிடத்தாய். பக்—34.

3. Thus the external and internal evidence of the inscriptions of the Indus valley shows that the inhabitants of those cities were dravidians who spoke a Dravidian language. The Mohenja-Daro civilization was not a civilization restricted to the Indus valley. It was a civilization that extended all over India and eventually we should find relics of this civilization similar to those of Mohenja-Daro all over the Indian sub continent.

Studies in proto Indian mediterranian culture
Vol-I Page—129.

4. Through out the long history of aryan speech Dravidian dialects were also spoken ; and in the north I venture to think, to a much larger extent and much later in time than is usually supposed. no. 2, vedic, is largely subject to Dravidian influence, both in phonetics and in vocabulary.

J.W. Rhys David, Buddhist India
(P. 155—156)

## சிவ வழிபாடு

சிந்துவெளி முத்திரைகளில் 'எனுன்' எனப்படும் சொல் எண் குணத்தானுகிய சிவபெருமானைக் குறிப்பது என்று ஈராசு பாதிரியார் குறிப்பிடுகிருர். அங்குக் கிடைத்த பல முத்திரைகளில் சிவனுருவம் பொறிக்கப் பட்டுள்ளது.





இலெமூரியா எனப்பட்ட குமரிக் கண்டத்தில் வாழ்ந்த மக்களால் வழிபடப்பட்ட முழுமுதற் கடவுள் சிவன் என்பது சிவனுக்கு முக்கண் படைத்திருப்பதிலிருந்து தெரிகிறது. இலெமூரியா மக்களுக்கு நெற்றியில் கண்போன்ற ஓர் உறுப்பு இருந்தது என்று கூறப்படுகிறது. தென்னிந்திய அரச மர பினருள் நுளம்பர் என்பவர் முக்கண் மரபினராகக் கூறப்படு கின்றனர். ஆரிய வர்த்தத்திற்குத் தெற்கே (விந்தியமலைக்குத் தெற்கே) வாழ்ந்தவர்கள் சிவனை வணங்குபவர் என்றும், அவருள் ஒரு பிரிவினரான நாகமரபினர் சிவனைத் தம் குல தெய்வமாக வழிபடுவர் என்றும் கூறப்படுகிறது.

இருக்கு வேதத்தில் 'சிவன் தட்சிணுபதி (தென்னவர் களால் வழிபடப்படும் தெய்வம்) எனப்படுகிருன். சிவனை

---

1. கலைமகள் பிப், 77. சிவ வழிபாடு K. V.கோபாலன்

வணங்கும் தென்னவர்களாக, பாரசிவர், சுட்டு நாகர், மகா நாகர் ஆகிய மரபினரும் குறிப்பிடப்படுகின்றனர்.

## பிற நாடுகளில் சிவ வழிபாடு

கி.மு. 8000 ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவிலுள்ள கொலஹறாடோ ஆற்றங்கரையில் சிவன் கோயில் இருந்ததாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பிலிப்பைன்சு மக்கள் சிவனை 'சிவப்பன் என்னும் பெயரால் வழிபட்டனர்.

ஆசியாவில் சிவாஸ் என்ற நகரம் இருந்தது. அங்குக் காளை வழிபாடும் நடை பெற்று வந்தது.

இந்தோனேசியாவில் சிவன் கோயில்கள் இருந்தன. இன்றும் சிவனை வணங்குவோர் அங்கு வாழ்கின்றனர்.

இலங்கையில் சிவன் ஒளி பாதமலை உள்ளது. சப்பானியரின் பழந்தெய்வம் சிவோ எனப்பட்டது. கொரியாவில் வீதிதோறும் சிவன் கோயில்கள் இருந்தன.

பாபிலோனிய களிமண் ஏடுகளில் சிவன் எனும் சொல் மாதப் பெயராக உள்ளது.

அக்கேடிய மக்களின் ஏழு நாண்மீன் பெயர்களுள் சிவன் என்பதும் ஒன்று.

எகிப்து நாட்டு ஆற்றங்கரைகளில் சிவலிங்கங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சயாம் நாட்டு முடிசூட்டு விழாவில் திருவெம்பாவையின் ஈற்றடி பாலி எழுத்தில் எழுதிப் படிக்கப்பட்டது.

சிந்துவெளி, எகிப்து, சுமேரியா நாகரிகங்களுக்கிடையில் ஒற்றுமை காணப்படுகிறது. அவ்வொற்றுமை, நகரவாழ்க்கை, உணவுப் பொருள்கள் கால் நடைவளர்ப்பு, உலோகத்

தொழில், நெசவுக்கலை, மட்பாண்டம் செய்தல், செங்கல் அறுத்தல், திண்பொருள்களைத் துளையிடல், கட்டிடக்கலை, பானைகளின் மேல் ஓவியம் வரைதல், வண்ணம் பூசுதல், ஆகியவற்றில் மிகுதியாகக் காணப்படுகிறது. இம்மூன்று நாகரிகத்தார்க்கும் அவர்களுக்கே உரிய சில தனித்தன்மைகளும் காணப்படுகின்றன.



சிந்துவெளி மக்களுக்கும் சுமேரியர்க்கும் இடையில் மிகப் பழங்காலந் தொட்டே மிகுதியான வணிகத்தொடர்பு இருந்ததால், சிந்துவெளி நாகரிகத்தை இந்தோ சுமேரிய நாகரிகம் என அழைத்தவரும் உளர். அவ்வணிகத் தொடர்பு நில வாணிகம், கடல் வாணிகம் என இருதிறத்திலும் பெருகியிருந்தது. யானைபோன்ற இந்தியவிலங்குகளின் முத்திரைகள் சுமேரிய எலாமிய நாகரிகப் புதைபொருள்களில் கிடைத்

திருப்பதால் சிந்துவெளி நாகரிகமே பிறபகுதிகளில் பரவி யிருக்க வேண்டும் என்று கருதுவதில் தவறில்லை.

கி. மு. 668ல் வாழ்ந்த அசுர்பானிபாலின் நூலகத்தில் கிடைத்த சிந்து எனும் சொல் இந்தியப்பருத்தி எனப்பொருள் தருகிறது.

நிநவெ நகரில் சென்னகரிபு என்பவரால் (கிமு704-681) அமைக்கப்பட்ட பூங்காவில் இந்தியாவிலிருந்து கொணரப்பட்ட கம்பளி காய்க்கும் மரம் (பருத்திச் செடி) நடப்பட்டது.

கி.மு. ஆறும் நூற்றாண்டில் சலாடியரின் நிலவுத் தெய்வத்திற்காக ஊர் எனுமிடத்தில் அமைத்த கோயிலிலும், நெபுகாத் நேச்சரின் அரண்மனையிலும் இந்தியத் தேக்குமரம் பயன்படுத்தப்பட்டது.

பாவெரு (பாபிலோன்) நாட்டிற்கு இந்தியப் பறவை களான மயில், காக்கை முதலியன ஏற்றுமதி செய்யப்பட்ட செய்தியையும், இந்தியர் கடல் வாணிகத்தில் முன்னோடி களாக இருந்தார்கள் என்பதையும் பாவெரு ஜாதக நூல்கள் குறிப்பிடுகின்றன.

அரப்பாவில் கண்டெடுக்கப் பட்ட புதை பொருள்களி லிருந்து அங்குத் தாய்வழிபாடும், தாய்த்தெய்வ வழிபாடும் மிக்கிருந்தது என்று தெரிகிறது.

சிந்துவெளியில் வாழ்ந்த மக்களில் நால்வகை இனத் தார் கலந்திருக்கக் கூடும் என்கின்றனர். மண்டையோடுகளை ஆய்ந்ததில் ஆத்திரேலியர், மங்கோலியர், நண்ணிலக்கடல் மக்கள் (மத்தியதரைக்கடல்), அல்பைன் இனத்தார் ஆகிய வர் அங்கு வாழ்ந்திருக்கக் கூடும் என்று எண்ணுகின்றனர். தமிழ் நாட்டில் ஆதிச்சநல்லூரில் கிடைத்த மண்டையோடு கள் சிந்து வெளி மண்டையோடுகளை ஒத்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சிந்துவெளி மக்கள் சங்கும் பவளமும் பயன்படுத்தினர். அரப்பாவிலும் ஒன்றன் கீழ் ஒன்ருக ஆறு அடுக்கு நகரங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தற்போது அரப்பாவிலிருந்து வடக்கே ஆறுகல் தொலைவில் ஓடிக் கொண்டிருக்கும் ரவி ஆறு, கி. மு. 3000 ஆண்டுகளுக்கு முன்பு அரப்பா நகரத்தின் அருகிலேயே ஓடிக் கொண்டிருந்தது.

இவ்விரு நகரங்களிலும் செங்கற்களால் திண்மையாகக் கட்டப்பட்ட பெரிய மதில்கள் இருந்தன. நடுத்தர மக்கள் வாழ்ந்த வீடுகள்கூட பல அறைகளைக் கொண்டவையாக இருந்தன. எல்லா வீடுகளிலும் குளிக்கும் அறை அல்லது தடுப்புச் சுவரிட்ட குளிக்கும் அறைகள் தவருமல் கட்டப்பட்டிருந்தன. ஒவ்வொரு வீட்டிலும் கிணறு இருந்தது. புதை சாக்கடை வடிகால் முறை செம்மையாக இருந்தது. நகரம் துப்புரவாக வைக்கப்பட்டிருந்தது. வீடுகளிலும் மாளிகைகளிலும் சன்னல்களும் மேற்சாளரங்களும் வைக்கப்பட்டிருந்தன.

அரப்பாவில் தொழிலாளர் குடியிருப்புகள் காணப்பட்டன. தெருக்களும் சந்துகளும் சீராக அமைந்திருந்தன. பெருஞ் சாலைகள் 14 அடி முதல் 34 அடிவரை அகன்றிருந்தன.

சிந்து வெளி நகரங்களிலுள்ளது போன்ற பாதையமைப்புகளோ புதை சாக்கடை அமைப்போ, அத்துணைப் பழங் காலத்தனவாக மெசபதோமியா ஊர் நாகரிகத்திலோ அல்லது எகிப்திய நாகரிகத்திலோ காணப்படவில்லை.

## அரப்பாவின் களஞ்சியக் கருவூலம்
## (The great granary)

அரப்பா நகரில் இருந்த மிகப் பெரிய கட்டிடம் தானியக் களஞ்சியக் கட்டிடமாகும். இது இரு பகுதிகளாகக் கட்டப்

பட்டிருந்தது. தென் வடலாக 166 அடி நீளமும், கிழமேற்காக 135 அடி அகலமும் கொண்டிருந்தது. ஒவ்வொரு பகுதியிலும் $51\frac{3}{4}' \times 17\frac{1}{2}'$ அளவுள்ள ஆறு அறைகள் இருந்தன. $5\frac{1}{2}$ அடி அகலமுள்ள முன் திண்ணை இருந்தது. தரைமட்டத்திலிருந்து நான்கடி உயரம் கட்டிட அடிப்படை எழுப்பப்பட்டு அதன்மீது அறைகள் கட்டப்பட்டிருந்தன. ஒவ்வொரு அறையினுள்ளும் மும்மூன்று தடுப்புச் சுவர்கள் எழுப்பப்பட்டு நான்கு உள்ளறைகள் பிரிக்கப்பட்டிருந்தன. இவை வெவ்வேறு தானியங்களைக் கொட்டி வைப்பதற்காகச் செய்யப்பட்ட பிரிவுகளாக இருக்கலாம்.

நாணயப் புழக்கமில்லாமல் பண்டமாற்றே மிகுந்திருந்த காலத்தில் அரசனுக்குத் தரப்படும் வரிப்பணம் தானியமாகவே தரப்பட்டதால் இத்தானியக் களஞ்சியம் கட்டப்பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது. அதனால் இதனைக் களஞ்சியக் கருவூலம் என்றும் அழைக்கலாம். இது பிற்காலத்தில் இங்கிலாந்தில் உரோமானிய கோட்டைகளையடுத்திருந்த களஞ்சியங்களுக்கு முன் மாதிரியாக விளங்கியது.

தானியம் கொண்டுவர எருது பூட்டப்பட்ட வண்டிகள் பயன் படுத்தப்பட்டன. தேர்களும், மக்களால் ஊர்ந்து செல்வதற்கு அல்லது போருக்குப் பயன்படுத்தப் பட்டிருக்க வேண்டும் என்பதற்கான சான்றுகள் கிடைத்திருப்பதாகக் கூறுகின்றனர்.

### மொகஞ்சதாரோ நீராடும் மண்டபம்

மொகஞ்சதாரோ நகரில் ஒரு பெரிய நீராடும் மண்டபம் (Tbe great Bath) கட்டப்பட்டிருந்தது. இது கோட்டைத் திடலின் அருகில் அமைக்கப்பட்டிருந்தது.

நீராடும் மண்டபம் தென்வடலாக 180 அடி நீளமும், கிழக்கு மேற்காக 108 அடி அகலமுமுள்ள செவ்வக வடிவில் இருந்தது. சுற்றுச் சுவர் 8அடி கன முடையது. நடுவிலிருந்த

நீச்சல் குளத்தின் இருமருங்கிலும் பல அறைகள் வரிசை வரிசையாகக் கட்டப்பட்டிருந்தன. மேற்குப் பக்கம் தவிர ஏனைய பக்கங்களில் மாடங்களும் அறைகளும் இருந்தன-தெற்குப்பக்கத்தில் நீண்ட கூடமும் அறையும் இருந்தன. கிழக்கில் பள்ளியறைகளும் கிணறும் இருந்தன. வடக்கில் நீண்ட கூடங்களும் சேமிப்பு அறைகளும் இருந்தன.



நீச்சல் குளம் 39 அடி நீளமும் 23 அடி அகலமும் கொண்டிருந்தது. அதன் ஆழம் 8 அடி. நீச்சல் குளத்திற்குப் படிக்கட்டுகளும் கட்டப்பட்டிருந்தன. கிழக்குப்பக்கத்திலிருந்த அறையிலிருந்து மேல்மாடிக்குச் செல்ல படிக்கட்டு அமைந்திருந்தது. கிழக்குத் திசையிலிருந்த கிணற்றிலிருந்து

நீச்சல் குளத்திற்குத் தண்ணீர் வந்தது. நீச்சல் குளத்தின் மேற்றிசையில் நீச்சல் குளத்து நீரை வெளியேற்ற வடிகால் அமைக்கப்பட்டிருந்தது. இந்த வடிகால் குழாய் ஒரு மனிதன் உட்செல்லுமளவுக்கு 6' விட்டமுள்ளதாகஇருந்தது. செங்கற்பாவிய அடித்தளம் நீச்சல் குளத்தைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்தது.

சிந்துவெளி மக்கள் யானைத் தந்தத்தால் செய்யப்பட்ட சிறிய ஏனங்களைப் பயன்படுத்தினர். செம்பு, வெள்ளி, வெண்கலத்தால் ஆன ஏனங்களைப் பெரிதும் பயன்படுத்தினர். வண்ணம் பூசப்பட்ட மட்பாண்டங்கள், சிறியனவும் பெரியனவுமாகப் பலவகைகள் இருந்தன. மட்பாண்டங்கள் அனைத்தும் சக்கரத்தின் உதவியால் செய்யப்பட்டவை. மட்பாண்டங்கள் உண் கலங்களாகவும், சமையல் ஏனங்களாகவும், பொருள்களையும் தானியங்களையும் இட்டு வைக்கும் கொள்கலங்களாகவும் பயன்படுத்தப்பட்டன. எண்ணெய் ஊற்றி வைத்த பெரிய மட்சாடிகள்,அடிப்பகுதி தட்டையாகவும் மேலே குவிந்தும் உள்ள வடிவத்தில் செய்யப்பட்டிருந்தன. வண்ணப் பானைகள் பலவற்றில் செந்நிறம் பூசப்பட்டு கருநிற இடைக்கோடுகள் வரையப்பட்டிருந்தன. ஓவியங்கள் எழுதப்பட்ட மட்பாண்டங்களும் இருந்தன. மீன், மயில், அரசமரம் ஆகிய ஓவியங்கள் அவற்றுட் சில.

செம்புப் பிடியிட்ட கண்ணாடிகள், கைப்பிடியுள்ள தந்தச் சீப்புகள், பிற ஒப்பனைப் பொருட்கள், சங்கால் செய்த அழகுப் பொருட்கள், கோப்பைகள், காட்சிப் பொருட்களாகச் செய்யப்பட்ட துலாக்கோல் ஆகியவை நாகரிகச் சான்றுகளாகக் கிடைத்தன.

செம்பாலும் வெண்கலத்தாலும் செய்யப்பட்ட கத்தி, வாள், அரிவாள், ஊசிகள், கோடரி முதலிய கருவிகள் குறிப்பிடத்தக்கன. ஊசிகள் தந்தத்தாலும் தங்கத்தாலும் கூட செய்யப்பட்டிருந்தன. உழுதொழிலுக்கு நேர்த்தியான கலப்பைகள் பயன்படுத்தப்பட்டன.

அரப்பாவில் கிழடுக்கு புதைபொருள்களில் கருங்கல்லா லான கூரிய உளி கிடைத்தது. தானியங்களை அரைக்கத் தட்டையான திருகுகல் (Saddle quern) பயன்படுத்தப்பட்டது. கருங்கல்லால் தட்டுகளும் செய்யப்பட்டிருந்தன.

குத்திட்டி, ஈட்டி, வாள், தண்டு (கதாயுதம்), அம்பு ஆகிய போர்க் கருவிகளை அக்கால மக்கள் பயன்படுத்தினர். தங்கம், வெள்ளி, செம்பு, வெண்கலம் ஆகிய நான்கும் அணிகலன் செய்யவும், கருவிகள் செய்யவும் சிந்துவெளி நாகரிகத் தொடக்க காலத்திலேயே பயன்படுத்தப்பட்டுள்ளன.

கடுகு போன்ற எண்ணெய் வித்துக்கள், பருப்புவகைகள், கோதுமை முதலிய தவசங்கள் விளைவிக்கப்பட்டன. மகளிர் காதிலணிந்த குழை எலுமிச்சம் இலை வடிவில் செய்யப்பட்டிருந்ததால் எலுமிச்சம்பழமும், தேங்காய் வடிவ வண்ணத் தொட்டிகள் (Polychrome Vases) ஆளப்பட்டிருப்பதால் தேங்காயும் அம்மக்களால் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். மீனும் இறைச்சியும் அம்மக்களின் உணவுப் பொருள்களாக இருந்தன.

ஆடு, மாடு, எருமை, நாய், பூனை ஆகிய விலங்குகள் வளர்க்கப்பட்டன. முத்திரைகளிலுள்ள ஓவியங்களிலிருந்து யானை, முயல், குரங்கு, எருது, புறா, கிளி, காட்டெருமை, புலி, கரடி, மான், மயில், வாத்து, ஆந்தை, பாம்பு, தேள், முதலை, ஆமை, தவளை, மீன் ஆகிய உயிரிகள் அக்காலத்தில் வாழ்ந்தனவாக அறியப்படுகின்றன. ஆனால் குதிரையும் ஒட்டகமும் இருந்ததற்கான சான்று எதுவும் கிடைக்கவில்லை.

விளையாட்டுப் பொருள்கள் பொம்மைகள் ஆகியவற்றில் வண்டி, பலவகைத் தேர்கள், பறவைகளாலும் விலங்குகளாலும் இழுக்கப்படும் தேர்கள், பறவைக் கூண்டுகள், பாம்பு மற்றும் சங்குப் பொம்மைகள், சூதாடும் கருவிகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

## சிந்துவெளி எழுத்து

சிந்துவெளி எழுத்து படவெழுத்தின் (Pictographic in Origin) அடிப்படையில் அமைந்ததாயினும் ஒழுங்குபடுத்தப் பட்ட குறுகிய அமைப்பால் பொருளுணர்த்தத்தக்கதாக இருந்தது. இதனை முழுதும் படிக்கும் முயற்சியில் அறிஞர் ஈடுபட்டுள்ளனர்.

எழுத்துகள் வலமிருந்து இடமாக எழுதப்பட்டன. வாக்கியம் நீண்டதாயின் அடுத்த வரி இடமிருந்தும் வலமாக எழுதப்பட்டுள்ளது. லாங்டன் என்பவரின் கருத்துப்படி சிந்துவெளி எழுத்திலிருந்துதான் பிராமி எழுத்து தோன்றியது என்கின்றனர்.

நடமாடும் உருவம், எட்டிதழ் தாமரை, வளையல் மோதிர வகைகள், பலவகைஅணிகலன்கள் ஆகியவையும்,மணிபதித்த கழுத்தணிகளும் அவர்களின் நாகரிக உயர்வைக் காட்டுகின்றன.

தாய்த் தெய்வ வழிபாடும் சிவலிங்க வழிபாடும் அம்மக்களிடையே பெருகியிருந்தது. வில்லும் அம்பும் இறந்தவனுடன் புதைக்கப்பட்டன. இந்திய நாகரிகத்தின் அடையாளமாகிய வேட்டியும் புடவையும் திராவிட நாகரிகத்தின் கொடையேயாகும் என்று பேராசிரியர் S. K. சாட்டர்ச்சி கூறுகிறார்.[1]

வேட்டி எனுஞ் சொல் பிராகிருத மொழியில் பெண்களுடுத்த புடவையைக் குறித்தது. போர்வீரர் வட்டுடை முழங்கால்வரை வளைத்துச் சுற்றி உடுப்பதுபோல் வடஇந்திய மகளிரும் புடவையை உடுத்தார்களா என்பது ஆய்வுக்குரியது. இன்றும் மராத்திய நாட்டுப்புற மகளிர் இவ்வாறு உடுப்பதைக் காணலாம்.

சிந்துவெளி மக்களால் தென்னையும் பனைமரமும் அறியப்பட்டிருந்தன. இவை வெப்பநாட்டு மரங்கள். சிறப்பாகப்

1. Indo Aryan and Hindu. S. K. Chatterji (Page-134)

பனைமரமும் அதன் இளமடல்களும் பழங்காலத் தமிழரின் நாகரிகக் கூறுகளாக இருந்தன. சேரன் பனம்பூமாலையணிந் தவன். பனைமரம் இலத்தீனில் பல்ம (Palma) என்றும் பழைய பிரஞ்சு மொழியில் பல்ம (Palma) என்றும் வழங் கியது. ஆங்கிலேயர் ஈஸ்டர் விழாவின் முதல்நாளில் பனை ஞாயிறு (Palm Sunday) என்று ஒரு விழா நடத்தி வந்தனர். இயேசுபெருமான் செருசலேம் நகரில் புகுவதைக் குறிக்கும் இவ்விழாவில் பனைமடல்கள் ஏந்திச் செல்லப்பட்டன.[2]

சிந்துவெளியில் பயன்படுத்தப்பட்ட சில கருவிகள் (Instrument) வெளிநாட்டிலிருந்து வந்தவையாகக் காணப் படுகின்றன. இவை நாகரிக வளர்ச்சியின் இடைக் காலத்தில் வணிகப் பெருக்கத்தால் விளைந்ததாகலாம்.

கி.மு. 2,000 ஆண்டுகளுக்கு முன்பு சிந்துவெளியில் தேர் கள் பயன்படுத்தப்பட்டன. ஆரியரும் தேர்களைப் பயன் படுத்தியிருக்கின்றனர். ஆரியரின் தேர்ச் சக்கரத்தில் 4 ஆரக் கால்கள் இருந்தன1. இருவர் அமரத்தக்கதாக அது இருந் தது. சிந்துவெளி நாகரிகத்தாரிடமிருந்து ஆரியர்கள் தேரின் பயன்பாட்டை அறிந்திருக்கக் கூடும்.

கி.மு. 1,500-ல் அழிந்த பழைய ஊர்களின்மேல் புது ஊர்கள் கட்டப்பட்டன. சில ஊர்கள் தீயால் அழிக்கப் பட்டிருப்பதும் தெரியவந்தது. பின்னல் வந்த ஆரியர்கள், தாசர் எனப்பட்ட உள்நாட்டு மக்களோடு நட்பு கொண் டிருந்தனர்2. ஆதலால் பழைய மக்களின் நாகரிகம் புது மக்களிடையே பரவ வாய்ப்பிருந்தது.

---

2 Palm Sunday—Sunday before Easter, on which Christ's entry into Jerusalem is celebrated by processions, in which branches of palm are carried.

-- Oxford Concise Dictionary

1. இந்திய வணிக நெறிகள் (பக்-87)
2. ,, ,, (பக்–89)

ஆரியரால் வணிகர் 'பணி' என அழைக்கப்பட்டனர். இன்றும் வடநாட்டில வணிகர் 'பணியா' என அழைக்கப்படு கின்றனர். இருக்கு வேதத்தில் வணிகர் 'வாணிஜ்' எனப் படுகின்றனர். வாணிஜ் என்பவர் வேதமதத்தில் நம்பிக்கை யில்லாதவர் என்றும் ஆரியரல்லாதவர் என்றும் கூறப்பட் டுள்ளது.[3] பசு பண்டமாற்றாக விற்கப்பட்டது.

கடல்கொண்ட குமரிக் கண்டத்தில் தமிழ் மக்கள் வாழ்ந்த நிலப்பரப்பு 700 காவதம் என்று அடியார்க்கு நல்லார் கூறுகிறார். வடவேங்கடம் தென் குமரிக்குட்பட்ட கடைச் சங்ககாலத் தமிழகத்தின் நிலப்பரப்பு—சேர நாடு 50 காதமும் சோழ பாண்டிய நாடுகள் 50 காதமும்—ஆக மொத்தம் நூறு காதம் இருந்ததாகத் தெரிகிறது.

குமரிக் கண்ட நிலப்பரப்பில் 7ல் 1பகுதியான நிலப் பரப்பில் குடியேறிய தமிழர் போக எஞ்சியோர் எந்தெந்த நாடுகளுக்குச்சென்றனர் என்பதை, மாந்த நூலாரும், தொல் பொருளாய்வாளரும், மொழி நூலாரும் தரும் குறிப்புகளி லிருந்து திரட்டவேண்டியுள்ளது.

## தமிழர் எங்கிருந்து வந்தனர்?

தமிழரும் தமிழருள்ளிட்ட இந்தியத் திரவிடரும் நண்ணிலக் கடல் (மத்திய தரைக்கடல்) பகுதியிலிருந்து இந்தியாவுக்கு வந்து குடியேறியவர் என்று சில வரலாற்றாசிரி யர் கூறிவருகின்றனர். இக் கூற்றுக்கு மாறாக, வடஇந்தியத் திரவிட மொழிகள் தென்னிந்தியத் திரவிட மொழிகள் ஆகியவற்றை ஒப்பிட்டு ஆராய்ந்த சாகிரப் என்னும்

---

3. இந்திய வணிக நெறிகள் (பக்-96)

சோவியத்துஅறிஞர் தமிழர்தெற்கிலிருந்தே வடக்குநோக்கிப் பரவியுள்ளனர் என்பதை ஐயந்திரிபற விளக்கியுள்ளனர்.1

பீகார் மாநில ராஜ்மகால் குன்றுகளில் வாழும் திரவிட மக்களான குருக்கர் என்போர் தம்முன்னோர் இந்தியாவின் தென்முனைப் பகுதியில் வாழ்ந்தவர் என்றும், அங்கிருந்தே இங்குக் குடிவந்தவரின் மரபினர் தாம் என்றும், அவர்களுடைய நாட்டுப் பாடல்களிலும் பழங்கதைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.2

ஆரியர் வருகைக்குப் பின் வடஇந்தியா முழுவதிலும் வாழ்ந்திருந்த தமிழர் ஆரியரால் இழிவாகத் தாழ்த்தி வருணிக்கப்பட்டனர். வேதகாலம் கி.மு. 1,000 முதல் கி.மு. 600 என்று கருதப்படுகிறது. இக்காலத்தில்தான் வேதங்கள் தோன்றின. இருக்குவேத காலமாகிய தொடக்க காலத்தில் ஆரியர்களுக்குத் தென்தமிழகம் பற்றி ஒன்றும் தெரியாமலிருந்தது. வடநாட்டுத் தமிழரை அவர்கள் தாசர்கள் என்றனர். தாசன் (தஸ்யு) என்னும் சொல்லுக்கு மூக்கற்றவன் என்று பொருள்.[1] தென்னாட்டைப்பற்றி ஆரியர்கள் இருக்குவேத காலத்திற்குப் பின்புதான் தெரிந்து கொண்டனர். எனவே வேதங்கள் வரலாற்றாராய்ச்சிக்குப் பயன்படா.

---

1. On the contrary linguistic data indicate that the Dravidian Languages spread from south to north rather than from north to south.

G. Zograf,
Soviet Indologist, In a Survey of
Languages of India, Pakistan,
Cylon and Nepal.

2. Kuruk Legends say that their ancestors once lived in south India.

R. T. O. page 150

1. மு. ஆரோக்கியசாமி—'நாமிருக்கும் நாடு' (பக்-14)

பௌத்த நூல்களில் தென்னிந்தியாவின் தென் பகுதியே முதன் முதல் மாந்தன் தோன்றிய இடம் என்று குறிக்கப்பட்டுள்ளது. எகிப்திலும் சுமேரியாவிலும் சென்று முதன் முதல் குடியேறியவர் இந்தியரே என்று போலந்து பேராசிரியர் ஜோவக்சிம் கூறுகிறார்.[2] மொகஞ்சதாரோ காலத்திய வடநாட்டுத் தமிழரின் வடதமிழின் பிற்காலத்திய திரிபே பாலி மொழியாயிற்று என்று துரையனார் அடிகள் கூறுகிறார்.[3]

ஆரியர் இந்தியாவுக்கு வந்த காலத்தையடுத்து இமய மலைச்சாரலில் தங்கியிருந்ததாக அகநானூறு 398-ஆம் பாடலில் இம்மென்கீரனார் குறிப்பிடுகிறார்.

## தெற்கு நல்ல திசையாகக் கருதப்பட்டது

கயிலையில் சிவபெருமான் வீற்றிருத்தலால், வடக்கு புண்ணிய திசையாகக் கருதப்படுகின்றது. தென்திசை கூற்றுவன் திசையாகக் கூறப்பட்டதற்கு முன்பு, நல்ல திசையாகவும் புண்ணிய திசையாகவும் கருதப்பட்டது என்பது 'தக்ஷிண' என்னும் சொல்லின் வேர்ப் பொருளிலிருந்து தெரிகிறது.

சிந்துவெளி நாகரிகத்தையடுத்துத் தோன்றிய பிராகிருத மொழியில் (Dahina) தக்ஷிண என்னும் சொல் வலப்பக்கம்4 என்று பொருள்படுகிறது. தென்னகம் சிந்து வெளிக்கு வலப்பக்கத்திலிருக்கிறது. சிவபெருமான் வேதங்களில் தட்சணாபதி எனப்படுகிறார். வேங்கை இடம் வீழ்ந்தது உண்ணாது என்னும் பழமொழியும், வலம்-நன்மை,

---

2. திராவிடத் தமிழர்களின் பண்டைக்கால வரலாறு (பக்-23 )

3. ,, (துரையனார் அடிகள்) (பக்-23)

4. காதாசப்தசதி [4:3] சாதவாகன மன்னன் ஆளன். (பிராகிருத நூல்)

வெற்றி எனப் பொருள்படுதலும் சிந்துவெளி நாகரிகக் காலத்தில் தென்னாடு நாகரிகத் தலைநிலமாகவும் நன்னாடாக வும் கருதப்பட்டது என்பதைக் காட்டுகிறது.

தமிழரின் முன்னோர் கடல்கொண்ட குமரிக் கண்டத் தவரே என்பதை மெய்ப்பிக்கும் வகையில் தமிழரிடம் இன்றும் தென்புலத்தார் வழிபாடு உள்ளது. இல்வாழ் வாரால் வழிபடத் தக்கவர்களில் தென்புலத்தார்க்கு முதலிடம் தருகிறார் திருவள்ளுவர்.5 தமிழரும் ஏனைத் திரவிடரும் தம் முன்னோர்க்குப் படையலிட்டு வணங்கும் போது தென்திசை நோக்கி வணங்குவதை இன்றும் காணலாம்.

## வடஇந்திய மொழிகள்

வடஇந்தியாவில் ஆரியர் வருகைக்கு முற்பட்ட மொழி யாகக் கருதப்படும் பிராகிருதம், பழந்திரவிடமாகிய திரிமொழியே என்றும், சூரசேனி பிராகிருத வழிவந்த சிதை மொழியே இன்றைய இந்தி மொழி என்றும் மொழிநூலறி ஞர் பாவாணர் கூறுகிறார்.

குமரிக் கண்ட தென்பாலி நாட்டுத் தமிழின மொழியின் சிதைமொழியே வடநாட்டுப் பாலி மொழி என்று துரையனார் அடிகள் கூறுகிறார். இம்மொழி வட நாட்டில் தமிழரால் பேசப்பட்டபோது தமிழாகவே இருந் தது என்பதும் பிற்காலத்தில் பாலியாகத் திரிந்தது என்பதும் இவர் கொள்கை.

திபெத்து மொழியில் தமிழ்ச்சொற்கள் உள்ளன என்றும், தமிழுக்கும் திபெத்துமொழிக்கும் ஒற்றுமைகள் உள்ளன என்றும் கூறுகின்றனர்.

---

5. தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல்தானென்று
ஐம்புலத்தா றோம்பல் தலை. (குறள்)

வடநாட்டிலுள்ள உதய்பூர் என்பது உதயணன் ஊர் என்பதன் திரிபு என்கின்றனர். ஏனெனில் உதயணன் கதையில் அம்மன்னன் தமிழர் பெரும் படையை வைத்திருந்தான் என்னும் குறிப்பு உள்ளது.[1]

நேபாளத்திற்கு கிழக்கில் 'திமில்' என்னும் சாதியினர் வாழ்கின்றனர்.[2]

யாழ்ப்பாணத்துத் தமிழகராதியில் கிரந்தம் என்னும் சொல்லுக்கு வடதமிழ் என்று பொருள் கூறப்பட்டுள்ளது.

தமிழில் மிகப் பழைய நாடக இலக்கண நூலான கூத்த நூலுள் வடதமிழ், தென்தமிழ் என்னும் சொல்லாட்சிகள் முதன் முதலாகக் காணக்கிடக்கின்றன. வடதமிழ், தமிழாகவே இருந்து பிறகு திரிபுற்றுப் பல மொழிகளாயின என்பதை இச் சான்றுகள் வலியுறுத்துகின்றன.

மணியோசை என்னும் பொருளுள்ள கச்சேரி என்னும் பாலிச் சொல், அரசனின் அத்தாணி மண்டபத்தைக் குறிக்கிறது. தமுலிக (தமிழகம்) எனும் சொல் இந்தியா முழுவதையும் குறிப்பதாகப் பாலி நூல்கள் குறிப்பிடுகின்றன.

பாஞ்சாலத்தில் ஆரியர் வருகைக் காலத்தில் பிரவாகண சைவலி என்னும் தமிழ் மன்னன் தமிழ்க் கல்லூரி வைத்திருந்ததாகவும், இதில் கௌதமர் முதலிய ஆரிய முனிவர் தமிழ் நூல்களைக் கற்றதாகவும், இச்செய்தி சாந்தோக்கிய உபநிடதம் 5வது பிரபாகடம் 3வது காண்டத்தில் உள்ளது என்றும், கூறப்படுகிறது.[1]

ஆரியர் இந்தியாவில் குடியேறி நீண்ட காலம்வரை பழந் திரவிட மொழிகளைப் பேசி வந்ததாகவும், திரிதராட்டிரன்

---

1. திராவிடத் தமிழர்களின் பண்டைக்கால வாலாறு
2. ,, ,, ,,
1. திரவிடத் தமிழரின் பண்டைக் கால வரலாறு (பக்-50

ஆரியப் பெண்ணான காந்தாரியை மணந்த பின் ஆரியமொழி அரண்மனை மொழியாயிற்று என்றும், மாகறல் கார்த்திகேய முதலியார் கூறுகிறார்.[2]

வடமொழியிலுள்ள பூவைப்பற்றிய சொற்களும் மாலைகளைப் பற்றிய சொற்களும் திரவிட மொழிகளிலிருந்து சென்றவையே என கில்பர்ட் சிலேட்டர் என்னும் அறிஞர் கூறுகிறார்.

திரவிட நாகரிகத்தின் அடிப்படையில் ஆரிய நாகரிகம் செழிப்பும் வலிவும் பெற்றது என்று தாகூர் கூறியிருக்கிறார்.

## இமயத் தமிழர்

இமய நெற்றியில் புலி, வில், கயல் பொறித்த பெருமை தமிழ் மூவேந்தர்க்குரியது. சேர சோழ பாண்டியர் இமயத்தை வென்றதன் அடையாளமாகத் தம் இலச்சினைகளை மட்டும் பொறிக்கவில்லை. இமயச் சாரலின் பல்வேறு பகுதிகளில் தமிழ்க் குடியேற்றங்களையும் அமைத்திருக்கக் கூடும் என்பதற்கான சான்றுகள் கிடைத்து வருகின்றன.

சிக்கிம், திபேத், நேபாளம், மேகாலயா, கேதாரநாத், காசுமீரம் ஆகிய பகுதிகளில் உள்ள இடப் பெயர்கள். மலைவாழ் மக்களின் மொழி, அவர்களின் பழங்கதைகள், நாட்டுப் பாடல் குறிப்புகள், நிலப் படங்கள் ஆகியவை நமக்கு இமயமலைப் பகுதிகளில் வாழ்ந்த தமிழர் வாழ்வை எடுத்துக் காட்டுகின்றன.

## மேகாலயா

மேகாலயா நிலப்படத்தில் (Latest map of Megalaya) காரோ குன்று மாவட்டத் தலைநகரின் பெயர் 'சேரன்கிரி'

---

2. திராவிடத் தமிழரின் பண்டைக்கால வரலாறு (பக்-51)

என்று குறிக்கப்பட்டுள்ளது. சேரன் என்னும் சொல்லோடு கூடிய பல ஊர்கள் இம்மாநிலத்தில் காணப்படுகின்றன. சேரக் குன்றுகள் என்னும் சொல்லே காரோ குன்றுகள் (Garo hills) எனத் திரிந்திருக்கக் கூடும். இம் மாநில மொழியும் காரோ என்பது குறிப்பிடத்தக்கது. சேர மரபினர்க்கும் மேகாலயா காரோ மொழியினர்க்கும் எக்காலத்திலேயோ உறவு இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.

## நேபாளம்

நேபாளத்தில் 'தங்காரி' எனும் மொழி திரவிட மொழியினத்தைச் சேர்ந்தது என்று அண்மையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. சோல கும்பு (Chola Kumbu) என்று ஒரு மாவட்டமும் சோல கோலா (CholaKola) என்று ஓர் அருவியும்1 இங்கு உண்டு.

## சிக்கிம் திபெத் எல்லை

சிக்கிம் திபேத் எல்லையில் சோழன் மலைத் தொடரும் சோழன் கணவாயும் (Solarange, Sola pass) உள்ளன. இச் சொற்கள் சிக்கிம் திபேத் மொழிகளுக்குப் பொருந்தவில்லை என்று இராவ் சாகிப் மு. இராகவ அய்யங்கார் அவர்கள் கூறியுள்ளார். சோழன் கணவாய் ரீடர்சு டைசச்டு உலகப் படத்திலும் (Reader's Digest World Atlas P- 77.G.L.) காட்டப்பட்டுள்ளது.

## காசுமீரம்

காசுமீரத்தில் பேசப்படும் சில மலைவாழ் மக்களின் மொழிகள் திராவிட மொழியினத்தைச் சார்ந்தவை என்று கன்னடப் பேராசிரியர் ஒருவர் கூறியுள்ளார்.

---

1. 'கொங்கு' (திங்களிதழ்) ஆடி-'75

## கேதாரநாத்

கார்வால் மாவட்டத்திலுள்ள கேதாரநாத்துக் கோயிலில் நடைபெறும் விழாவைக் குறித்து அம்மக்கள் ஒரு பழங்கதை கூறுகின்றனர். அப் பழங்கதையில், சிவன் பாண்டியனோடு பலமுறை போரிட்டு மண்ணில் மறைந்தான் என்றும், சிவனின் உடற் பகுதிகள் பல திசைகளில் சிதறின என்றும் கூறப்படுகிறது. இச் செய்தியை நேரில் கேட்டறிந்து, அப்துல் ரசீது என்னும் இரயில்வே வாரிய நூலகர், தான் எழுதிய பயணத் துணைவன் (The Travellers Companion P. 141) என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.

இமயமலைப் பகுதிகளில் மூவேந்தரின் செல்வாக்கும், தமிழர் குடியேற்றமும் மிகுதியாக இருந்ததைக் காணும் போது, இங்குக் குறிப்பிடப்படும் தமிழர் தென்னாட்டிலிருந்து கங்கைச் சமவெளியில் குடியேறி வாழ்ந்தவரின் மரபினர் என்று கருதுவது பொருந்தும்.

## கங்கைச் சமவெளியில் தமிழர்

கங்கைச் சமவெளியில் தமிழர் பெரு நகரங்கள் பலவற்றை நிறுவியிருந்தனர் என்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

வங்காளத்தில் மித்னாபுர் மாவட்டத்தில் ரூப்நாராயண் ஆற்றங்கரையில், தமுலுக் (Tamuluk) என்னும் பழைய தலை நகரம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தமுலுக் நகரத்திலிருந்து ஆண்ட மன்னர் மயில் மரபினர் என்று கூறப்படுகிறது1. இங்கு 'பர்கபீம' (Barga Bhima) என்னும்

1. The Travellers Companion—Page 240 Compiled by Abdur Rasheed, Librarian under order of the Railway Board.

Pub : Supt. of Govt. Printing, Calcutta-1911.

காளி கோயில் உள்ளது. கரிய காளி, தமிழரின் கொற்றவையே என்பது அனைவரும் அறிந்ததே. காளி கோட்டத்தின் திரிபாகவே கல்கத்தா நகரத்தின் பெயர் அமைந்துள்ளது. காளிகோட்டம் என்பது காளியின் கோயில் என்று பொருள்படுவதாகும்.

இடைக் காலத்தில் வங்காளத்தை ஆண்ட சேனமரபினர் திரவிட இனத்தவர் என்றும், இராசேந்திர சோழனுடன் சென்ற கருநாடகமன்னர் என்றும், வரலாற்றாசிரியர் தெளிவு படுத்தியுள்ளனர்.2

வேதங்கள் வடநாட்டில் வாழ்ந்த திராவிடரை மந்திர தந்திர ஆற்றல் மிக்கவர் என்றும், சிறப்பாக இறந்தவரை எழுப்ப வல்லவர் என்றும் குறிப்பிடுகின்றன.3 பாம்பால் கடியுண்டு இறந்தவனை உயிர்பெறச் செய்யும் மூலிகை பற்றிக் கன்னட மருத்துவ நூல் ஒன்று கூறுகிறது.

ஆரியர் தமக்கு முன்பே இந்தியாவில் வாழ்ந்திருந்த திராவிடரைத் தாசர் அல்லது தஸ்யூ என்றழைத்தனர். ஆஸ்திக் மக்களாகிய முண்டரை 'நிசாதர்' என்றனர். சீனோ திபேத்தியராகிய மங்கோலியரைக் 'கிராதர்' என்றனர்.

பிராகிருத பாலி மொழிகளில் ஆரியத்துக்கில்லாத எகர ஒகரக் குறில் இருப்பதாலும், மொழித் தொடர்பான பிற ஏதுக்களாலும், மகத நாட்டில் பழங் காலத்தில் தமிழ் பேசப்பட்டது என்று தெரிகிறது. புத்தர் திராவிடமரபினர் என்பது எவர்லாங் போன்ற அறிஞர் கருத்து என்று டாக்டர் G.R. பந்தர்கர் கூறுகிறார்.4

---

2. R. D. Banerji—Palas of Bengal P.—73, 99.

3. இந்திய நாகரிகத்தில் திரவிடப் பண்பு—கிலேட்டர் பக்கம்—108.

4. Dr. R. G. Bandharkar—William's Philosophical Lectures.

'தமிழர் பழம்பெரும் நாகரிகத்தினர். யூபிரடிசு ஆற்றங் கரையில் தம் நாகரிகத்தைப் பரப்பினர். கணியம், சமயம், போர், நீதி முதலியவற்றில் வல்லவர். அசிரிய எகிப்திய பாபிலோனிய நாடுகளுக்கு நாகரிகக் கொடை தந்தவர். இவர்களுடைய பழங்கதைகள் விவிலிய நூலுக்கு ஆதார மாயின. ஆரியர் இவர்களுக்குக் கடமைப்பட்டுள்ளனர். தமிழகக் கோயில்கள் இவர்களின் கலைத் திறனைக் காட்டு கின்றன'5. என்று விவேகானந்தர் கூறியிருக்கிறார்

ஆரிய அரசன் யாழ்ப்பிரமதத்தன் இயற்றியதாகக் குறுந் தொகையில் 182ஆம் பாடல் உள்ளது. ஆரிய அரசனுக்குத் தமிழ் உணர்த்தும் பொருட்டு, கபிலர் பத்துப்பாட்டுள் ஒன்றாகிய குறிஞ்சிப் பாட்டைப் பாடினார். இச்செய்திகள் வடநாட்டில் ஆரியரும் தமிழ் கற்று வந்ததையும் தமிழில் புலமை பெற்றிருந்ததையும் காட்டுகிறது. வடநாட்டில் தமிழரும் தமிழ்க் கல்வியும் நன்னிலையிலிருந்திருக்கலாம் என்பதற்கு இவை சான்றாகின்றன.

சுமேரியக் குடியேற்றம்

ஈராக்கு ஈரான் நாடுகளின் செழிப்புக்குக் காரணமான யூபிரடிசு, தைகிரிசு ஆற்றங்கரைகளில் சுமேரிய நாகரிகம் இன்றைக்கு 6000 ஆண்டுகளுக்கு முன்பு (கி. மு. 3500-3200) செழித்திருந்தது. உலகத்திலேயே மிகவும் தொன்மை யான நாகரிகம் சுமேரிய நாகரிகம் என்று இதுவரை கருதப் பட்டு வருகிறது. ஆயின் சுமேரியர் இப் பகுதிக்கு வருவதற்கு முன்பே யூபிரடிசு, தைகிரிசு ஆற்றங்கரைகளில் வாழ்ந்திருந்த நாகரிக இனத்தார் திராவிடராகவே இருத்தல் ஒல்லும்6

---

5. விவேகானந்தர்—Quoted in Prabaha Bharatha, Sep. 1921

6. The Dravidians may have been the first to settle in the Tigiris an Eupharates Area, proceeding the sumarians whose civilizations is regarded as the oldest in the world.

என்று கோந்தரதோவ் என்னும் உருசிய வரலாற்றாசிரியர் கூறுகிறார்.

சுமேரியரின் நாகரிகத்தொன்மையைக் காட்டுவது 'ஊர்' என்னும் பழைய நகரமாகும். இப்பெயரே நல்லதமிழ்ச் சொல்லாகவுள்ளது. இந்நகரில் கி. மு. 4,000 காலத்தியதாகக் கருதப்படும் தமிழகத் தேக்குமரம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.7 இங்குள்ள ஊர், ஊருக், நிப்பூர், எரிது சுறுபாக் (சிறுபாக்கம்) ஊர்நம்மு, எநூண்மாக் ஆகிய ஊர்ப் பெயர்கள் சுமேரியச் சொற்களல்ல வென்றும் திராவிடச் சொற்களே என்றும் நிறுவப்பட்டுள்ளது.

மற்றும், பனை, நாள், ஏர், நெய்வோன், கல்லுடைப் போன், பரதவன், கொல்லன், பொற்கொல்லன், உழவன், தச்சன், இடையன், ஆயன், வணிகன் ஆகியவற்றுக்கான சொற்கள் சுமேரிய ஆப்பெழுத்துகளிலிருந்து படிக்கப் பட்டன. ஆயின் அச்சொற்களில் ஒன்றேனும் சுமேரியச் சொல்லாக இல்லை என்றும் அவை அனைத்தும் சுமேரிய மொழிக்கு அயற் சொற்களாயினும் மொகஞ்சதாரோ திராவிடமொழிக்கு மிக ஒத்த சொற்கள் என்றும் கூறப் படுகிறது.

யூபிரடிசு தைகிரிசு ஆறுகளின் பெயர்களான இடிகிலப் புரனுன் (idiglat, Buranun) என்பனவும் சுமேரியச் சொற்க ளல்ல; திராவிடச் சொற்களே எனப்படுகிறது.

### கடவுள் பெயர்

சுமேரியரின் கடவுள் 'இய' என்றும் 'என்கி' என்றும் (Ea–Enki) அழைக்கப்படுகிறது. பழந்தமிழர் கடவுளை 'இயவுள்' என்றும் வழங்கினர். 'பெரியோரேத்தும் பெரும் பெயர் இயவுள்' என்று நக்கீரர் பாடுகிறார். இயவு என்னும்

7. Sayce, Hibert Lectures—PP. 1368

சொல், வழி, பாதை என்றும் பொருள்படும். எல்லோர்க்கும் நல்வழி காட்டுபவன் என்னும் பொருளில் தமிழரின் முன்னோர் கடவுளை இயவுள் என வழிபட்டிருக்கலாம் எனத் தெரிகிறது.

இத்தெய்வமே, சுமேரியருக்கு முந்திய சுமேரிய நாட்டுத் திராவிடரின் கடவுள். சுமேரியர் இத்தெய்வத்தை 'இய' (Ea) என்றே வழிபட்டு வந்தனர். இத்தெய்வம் நிலத்தெய்வ மாகக் கருதப்பட்டதையும், நக்கீரர் குறிஞ்சி நிலத் தெய்வ மாகிய முருகனை 'இயவுள்' என்று வணங்குவதையும் ஒப்பு நோக்குதல் பொருந்துவதாகும். பரிபாடலிலும் 'இயவு' என்னும் சொல் ஆளப்பட்டுள்ளது.

சுமேரியர்

சுமேரியர் மெசபதோமியாவின் பழங்குடிகள் அல்லர் என்றும், நடு ஆசியப் பகுதியிலிருந்து வந்து புதிதாகக் குடி யேறிய நாடோடி இனத்தவர் என்றும், கப்பற்கலை யறியா தவர் என்றும் வரலாற்றாசிரியர் கூறுகின்றனர்.

பாபிலோனியப் பாதிரியார் பெரோசசு (Berossus) எழுதியதாகக் கூறப்படும் பழங்கதை(legend) ஒன்றில், ஓனசு (oannes)) என்பார் தலைமையில் கப்பலில் வந்த குழு, பாரசீக வளைகுடாவைக் கடந்து 'எரிது' நகருக்கு வந்து மக்களுக்கு நாகரிகம் கற்றுக் கொடுத்ததாகவும், எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்ததாகவும் கூறுகிறது. கலை, அறிவியல், கட்டிடக்கலை, நகரமைப்பு, கடவுள் வழிபாடு, உழவு, உழவுக்கருவிகள் செய்தல் ஆகிய அனைத்தும் கற்றுக் கொடுத்ததை விவரிக் கிறது. மெசபதோமியாவில் இத்தகைய பல பழங்கதைகள் வழங்குகின்றன. சில கதைகள் புதிதாக நாகரிகம் கற்றுத் தந்த குழுத் தலைவனான ஓனசு, மீன் வடிவினன் என்று கூறுகின்றன.

மெசபதோமியாவிலுள்ள நூற்றுக் கணக்கான பழங் காலக் கூம்பு வடிவ முத்திரைகளில்,சதுர வடிவான மொகசஞ்

தாரோ முத்திரைகளையும் அகழ்வாய்வாளர் கண்டெடுத்துள்ளனர்.

உபாய்து துறைமுகம்

பாரசீக வளைகுடாவின் துறைமுக நகரம் 'உபாய்து' என்பதாகும். இந்நகரம் எரிது நகருக்கு அண்மையிலிருந்தது. கி. மு. 4,000-த்தில் இந்நகரம் மெசபதோமியரின் கடற்றுறையாக விளங்கியது.

சுமேரியாவில் வழங்கும் சொற்களான engar- உழவர், nangar-தச்சர் போன்ற நூற்றுக்கணக்கான சொற்கள் உபாய்து நகர மக்களின் சொற்களாகக் கருதப்படுகின்றன. இத்துறைமுகத்தை நிறுவியவரும் மெசபதோமியர்க்கு நாகரிகம் கற்றுக் கொடுத்தவருமான உபாய்து மக்கள், குமரிக் கண்டத்திலிருந்து பல்வேறு நாடுகளில் குடியேறிய தமிழக மரபினராக இருத்தல் கூடும் என்று கருதப்படுகிறது. யூபிரடிசு, தைகிரிசு ஆற்றங்கரைகளில் நகரங்களை நிறுவியவர் உபாய்துகளே என்றும், சுமேரியர் அல்லர் என்றும் வைமன் (V. Vaiman) என்னும் சோவியத்து அறிஞர் கூறுகிறார்.

ஊர் நாகரிகம்

பிரித்தன் நாட்டு அகழ்வாய்வாளர் சான் மார்சல், ஊர் நாகரிகத்தை ஆய்ந்தார். இச் சுமேரிய நகரம் செங்கற்களால் கட்டப்பட்டது. இமில் உயர்ந்த எருது, உட்கார்ந்த நிலையிலுள்ள குரங்கு, புலியோடு போர்புரியும் வீரன், கொம்பும் காலும் வாலும் உள்ள எருது மனிதன் ஆகிய உருவங்கள் பொறித்த சின்னங்கள் இங்குக் கிடைத்துள்ளன. இவையனைத்தும் மொகஞ்சதாரோவில் கிடைத்த சின்னங்களை முற்றிலும் ஒத்துள்ளன.

மொகஞ்சதாரோ, மெசபதோமியா ஆகிய இரண்டு இடங்களிலும் கிடைத்த மண்டையோடுகளை ஆராய்ந்த

மாந்தனூலவார் இவ்விரு நாகரிகங்களையும் தோற்றுவித்த மாந்தர் ஒரே இனத்தவர் என்று கூறுகின்றனர்.

சிற்பங்களில் பொறிக்கப்பட்ட மாந்த உருவங்களும் இரண்டு இடங்களிலும் ஒன்றுபோலவே உள்ளன. சுமேரிய மொழியாய்வாளராகிய சாமுவேல் கிராமர் என்பவர் உபாய்துகள் முந்து இந்தியரே (Proto Indian) என்கிறார்

நீலகிரியிலுள்ள தோடர்களின் தெய்வப்பெயர்கள் மெசபதோமிய (உபாய்து) மக்களின் தெய்வப் பெயர்களோடு முழு ஒப்புமை உடையனவாக உள்ளன. தோடர்கள் தெய்வ வழிபாட்டுக்கென குவர்சம் (Kworsham) என்னும் ஒரு தனிமொழியை ஆளுகின்றனர்.8

எலம் நாடு (Elam)

ஈரானிலுள்ள தைகிரிசு ஆற்றின் கிழக்குப் பகுதியாகிய தற்கால குசிசுதான் (Khuzistan) அக்காலத்தில் எலம் எனப் பட்டது. கி. மு. 3,000 ஆண்டில், பல நகரங்களோடும், சிறந்த நாகரிகத்தோடும், எழுதப்படும்மொழியோடும் கூடிய நாகரிக நாடாக விளங்கியது. இந்த எலம் நாட்டினரான எலமியர் திராவிடரே என்றும், இவர்கள் பேசிய மொழி திராவிட மொழியே என்றும் ஐ. தியாகொனோவ் என்னும் அறிஞர் பழங்கால ஆசியாமைனரின் மொழிகள் (Language of Ancient Asia minor) என்னும் நூலில் குறிப் பிடுகிறார்.

எலாமிய மொழியில் கெடு, நாண் (நாள்), பரி (சேர்) ஆகிய சொற்கள் செந்தமிழ்ச் சொற்களாக விளங்குவதைக் காணலாம். சொற்கள் மட்டும் அல்ல. இலக்கண அமைப்

---

8. Kworsham is the special ritual language of Todas, in which the names of many deities coincide with those of ancient Gods of Mesopotomia R. T. O. page 149

பிலும், ஒலியனியல், உருபனியல், தொடரியல் ஆகிய அனைத்து வகைகளிலும் எலாமிய மொழி திராவிட மொழி களோடு முழுதும் ஒப்புமையுடையதாக இருப்பதை அச் சோவியத்து மொழிநூல் அறிஞர் தெளிவுபடுத்துகிறார்.

கி. மு. 500-ல் வாழ்ந்தவரான வரலாற்றுத் தந்தை எரடோடசு என்பவர், எலமுக்கும் இந்தியாவுக்கும் இடையி லிருந்த பலுசித்தானியரை ஆசிய எதியோப்பியர் (ஆசிய நீகி ரோக்கள்) எனக் குறிப்பிடுகிறார். இவரால் குறிப்பிடப் பட்டவர் தற்கால பிராகுவி மொழியினராகலாம் என்றும் கருதப்படுகிறது.

எலாமியர் கி. மு. 3,000-ல் அக்காடிய சுமேரியரிட மிருந்து ஆப்பெழுத்தைக் கற்றனர் என்றும், அதற்கு முன் ஓவிய எழுத்தைக் கையாண்டனர் என்றும், கருதுகின்றனர்.

பாசுக்கு (Basque) மக்கள்

உலகில் எந்தமொழிக் குடும்பத்தோடும் தொடர்புடை யது அன்று என்று கருதப்படும் பாசுக்குமொழி தமிழோடு தொடர்புடையதாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக் கிறது. இம்மொழி ஸ்பெயின் நாட்டு எல்லையில் பேசப்படு கிறது. உலக மக்கள் அனைவரும் குமரிக் கண்டத்திலிருந்தே பிரிந்து சென்றனர் என்பதற்கு இது சான்றாக இருக்கிறது.

பண்டாரகர் என். லகோவரி (Dr. N. Lahovary) என் பவர் திராவிட மொழிகளோடு பாசுக்கு மொழியை ஒப்பிட்டு இரண்டும் மிகவும் நெருங்கிய தொடர்புள்ள மொழிகள் என்று கூறியிருக்கிறார் 9

9. Nevertheless, Lexical equivalences are more numerous between Basque and Dravidian.

Dravidian Origins and the west—Dr. N. Lahovari P. 50.

எகிப்து, நண்ணிலக் கடல் நாடுகள் (மத்தியதரைக்கடல் நாடுகள்) ஆகியவற்றில் வாழ்ந்திருந்து ஐரோப்பாவில் குடியேறிய முந்து திராவிட வழியினரே பாசுக்குப் பழங்குடிகள் என்பதை இந்நூலில் நிறுவியுள்ளார். திராவிட மொழிகளுக்கும், பாசுக்கு மற்றும் ஆப்பிரிக்க நண்ணிலக் கடற்பகுதிகளிலிருந்த பழைய மொழிகளுக்கும் உள்ள ஒப்புமைகளை இனச் சொற் பட்டியல்கள் வாயிலாக எடுத்துக் காட்டியுள்ளார்.

எடுத்துக் காட்டுகள்

**தமிழ் — பாசுக்கு**

*அறை — அற்றி, அர்சு (கல், பாறை)*
*சா — செந்து (செத்துப் போ)*
*ஏற்று — எரெய்ன் (தாக்கு, கொல்)*
*அலை — ஒல (நீரலை)*
*உவரி (கடல்) — உர் (தண்ணீர்)*
*அலர் — அலிலி, லிலி (மலர்)*
*தீம் — தி (இனிப்பு)*

அமெரிக்க இந்தியர்கள் துரானிய மக்களோடும், சிறப்பாகத் திரவிடர்களாகிய தமிழரோடும் இனத்தொடர்புடையவர்கள் என்று கூறப்படுகிறது.10

ஆப்பிரிக்க மொழிகளுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை விவரித்த ஆப்பிரிக்க செனகல் நாட்டுக் குடியரசுத் தலைவர் திரு. செங்கோர், ஆப்பிரிக்க மொழிகளிலுள்ள நெசவு, உலோகத் தொழில் போன்ற கைத் தொழிற் சொற்

---

10. The Ancestors of American Indian must have been one with the Ancestors of various nations of Asia speaking the Turanian languages, prominent among which are the Tamils of India classified as Dravidians.
G. Frederic wright—Origin and Antiquity of Man. P. 11.

கள் முழுதும் திராவிடமொழிச் சொற்களை முழுமையாக ஒத்துள்ளன என்று கூறுகிறார்.11

ஆப்பிரிக்காவில் பேசப்படும் பண்டு (Bantu) ஒலாப் முதலிய அனைத்து மொழிகளும் திராவிடமொழிக் குடும்பத்துடன் ஒத்துள்ளமை அறிஞரால் நிறுவப்பட்டு வருகிறது. இதுவேயன்றி இந்தோ ஐரோப்பிய மொழிகளுக்கு மூலமொழி எனப்படும் தியுத்தானிய மொழியும் தமிழ்வேர்ச் சொற்களோடு ஒத்திருப்பதை யாழ்ப்பாணம் ஞானப்பிரகாச அடிகளார், தாம் எழுதிய 'தமிழ்ச் சொற்பிறப்பியல் ஒப்பீட்டுஅகரமுதலி'யின் (Tamil Etymological and comparative Dictionary) முன்னுரையில் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

---

11. Claiming that the 'Erithrean Culture' was the survival of an ancient Indo - African culture, he gave examples to show that vocabulary relating to metallurgy and cotton spinning was exactly the same in the Dravidian Languages of India and Negro African Languages.

Senghor, President of Senegal.. Hindu 25-5-74.

## 21. தொழில் வளமும் கல்விச் செல்வமும் பெருக்கிய தோன்றலர்

கி. மு. 3,000-க்கு முன்பே தமிழகத்திலிருந்து மேனாடு களுக்குத் துணி ஏற்றுமதி செய்யப்பட்டதாக சர். ஜான். மார்சல் கூறுகிறார். சுமேரியாவிலிருந்த ஊர் அகழ்வாய்வில், கி. மு. 4000-க்கு முந்தியது எனக்கருதப்படும் தமிழ்நாட்டுத் தேக்குமரம் கண்டுபிடிக்கப்பட்டது.

தொழில்வளம் பெருகிய பின்புதான் தரை வாணிகமும் கடல் வாணிகமும் பெருகியிருக்க வேண்டும். குமரிக் கண்ட காலத்திலேயே (கி. மு. 5,000 ஆண்டுகளுக்கு முன்பே) கடல் வாணிகம் பெருகியிருந்ததால், அதற்கு முன்பே பல்வேறு தொழில்கள் வளர்ந்திருக்க வேண்டும்.

வேளாண்மைத் தொழிலாலும் வேட்டைத் தொழிலா லும் கிடைத்த பொருள்கள் பண்டமாற்றாகவே விற்கப்பட் டன. பொன் கிடைத்த பின் நாணயப் புழக்கம் பெருகியது.

வாணிகம், நெசவு, கட்டிடக் கலை, சிற்பக்கலை, தச்சுக் கலை, இரும்பு, பொன், வெண்கலப் பொருள்கள் செய்தல் ஆகிய தொழிற் பெருக்கம் குமரிக் கண்டத்திலேயே தோன்றியவை. சங்ககாலத் தமிழரும் இத்தொழிற்றுறை

களில் மிகவும் வல்லுநராக இருந்தனர். அவர்கள் இத் தொழில்களைத் தாம் யாரிடமும் கற்றுக் கொண்டதாகக் கூற வில்லை.

கல்வி கலைத்துறைகளிலும் இவர்கள் படிப்படியாக பெற்ற முன்னேற்றம் நாகரிக வளர்ச்சியின் வாயிலாகத் தெரிகிறது.

கல்வியும் கலையும்

குமரிக்கண்ட காலத்திலேயே தமிழ் எழுத்து வழக்குப் பெற்றிருந்தது. இந்தியாவிலுள்ள எழுத்துகள் ஆரியர்க் குரியவல்ல என்றும், அவை திராவிட வாணிகர்களால் கொண்டு வரப்பட்டு பரவியவை என்றும் ரைஸ்டேவிட் குறிப்பிடுகிறார்.1

மெய்ப்பொருள்கலையில் வேதம் ஆரியராற் செய்யப்பட்ட தென்றும், வேதாந்தம் தமிழ் மக்களாற் செய்யப்பட்டதென் றும், மறைமலை யடிகளார் கூறுகிறார்.2 பண்டைக்காலத் தமிழரிடை புகழ் பெற்ற வேந்தராயிருந்த சனகன், சைவலி, அசாத சத்துரு முதலிய மன்னர்மன்னர் ஆரியர்க்கு வேதாந்தம் உணர்த்திய வரலாறு சதபத பிரமாணம், உப நிடதம் முதலிய நூல்களில் விளக்கப் படுகின்றன. தமிழ் மன்னரும், மன்னர் மரபினரும் ஆரியரால் அரசினியார் (ராஜந்யர்) (Royal family) என்று அழைக்கப்பட்டனர். சாந் தோக்கிய உபநிடதம் 5-ஆவது பிரபாடகம் 3-ஆவது காண்

---

1. All the present available evidence tends to show that the Indian alphabet is not Aryan at all, that it was introduced into India by Dravidian Merchants.

Rhys David—Buddhist India Page-119

2. பண்டைக் காலத் தமிழரும் ஆரியரும்—பக். 50

மறைமலையடிகளார்.

டத்தில், சுவேதகேது என்னும் பிராமணரும் அவர் தந்தை யான கௌதமரும், சைவலி என்னும் திராவிட மன்னரை அடுத்து மெய்ப்பொருள் (வேதாந்த) பாடம் கேட்டுத் தெளி வுற்றனர் என்று கூறப்படுகிறது.

இயல் இசை நாடகம் எனும் முத்தமிழ்ப் பகுப்பால் இசைக் கலையும் நாடகக் கலையும் முதன் முதல் தமிழரிடை தோன்றி வடக்கு நோக்கிப் பரவியது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

வேதம் ஓதுதலையே தமக்குத் தொழிலாகப் பிராமணர் கொண்டது போன்றே, தமிழிலும் ஓதாளர் என்னும் வேளா ளப் பிரிவினர் தமிழ் நூல்களை ஓதுதலையும் ஓதுவித்தலையும் தமக்குத் தொழிலாகக் கொண்டிருந்தனர்.

இவர்கள் சைவ நெறியினர். இவ் வகுப்பார் காலப் போக்கில் எண்ணிக்கையில் குறைந்தனர். இன்றும் கோவை, சேலம் மாவட்டங்களில் ஓதாளர் பிரிவைச் சார்ந்த வேளா ளர் வாழ்கின்றனர்.

'உலகம் பாதி ஓதாளர் பாதி' என்னும் தமிழ் நாட்டுப் பழமொழியால் ஓதாளர் தமிழரின் மக்கள் தொகையில் மிக்கிருந்தனர் என்னும் உண்மை புலப்படுகிறது. 'கொங்கு நாட்டு வேளாளர்' என்னும் நூலிலும் இவர்களைப் பற்றிய குறிப்பு உள்ளது. ஓதாளன் என்னும் சொல்லே தமிழிலும் கன்னடத்திலும் ஓச்சன், உவச்சன் என மருவியுள்ளது என்பர். கன்னடத்தில் உவச்ச அல்லது ஓச்ச எனும் சொல் ஆசிரியரைக் குறிக்கும். இது கம்பர் பிறந்த குலம் என்பது அனைவரும் அறிந்ததே.

அசோகனின் கல்லெழுத்துகள் வட அசோக லிபி, தென் அசோக லிபி என இருவகைப்படும். வடஅசோக லிபி, உருதுமொழியைப் போல் வலமிருந்து இடமாக எழுதப்

படுவது. தென் அசோக லிபி இடமிருந்து வலமாக எழுதப் படுவதால் இது தமிழின எழுத்து முறையை ஒத்திருப்பது அறியத் தக்கது.

தொழில் வளம்

வேளாண்மை தமிழர் நாகரிகத்தை மலர்ச் செய்த முதற்றொழிலாகும். அதற்கடுத்தது நெசவு. முதன் முதலில் இலை தழைகளாலும் மரநாராலும் செய்யப்பட்ட உடைகள் தோன்றின. பின்னர் தோலும் பருத்தியும் ஆடைகளாயின. தமிழிலக்கியங்களில் கூறப்படும் தழையுடை, பழங் கால நெசவுக் கலைக்கு அடிகோலியது. சேலை—சீலை— சீரை எனுஞ்சொற்கள் மரவுரியின் வரலாற்றை விளக்குவன வாகும். சீரை—மரவுரி.

ஒரு வகை மரப்பட்டை நாரால் நெய்யப்பட்ட துணிகள் பிறநாடுகட்கு ஏற்றுமதியாயின என்று கூறப்படுகிறது.1

அரப்பாவில் 14 சந்தைகளும் மொகஞ்சதாரோவில் 17 சந்தைகளும் வணிக நிலையங்களாக விளங்கின. மாட்டு வண்டிகளும் பொதி எருதுகளும் பண்டங்களைச் சுமந்தன. சந்தைகளைச் சுற்றியும் கூட அகழிகள் வெட்டப்பட்டி ருந்தன.

கி.மு. 2,000 ஆண்டிலேயே தேர் பயன்படுத்தப்பட்டது. வேத காலத்தில் படகோட்டி நாவஜா (நாவாய் ஓட்டுபவன்) எனப்பட்டான். பாலைவனத்தின் வழியாகப் பயணம் செய் பவரும், கடற்பயணம் செய்பவரும் வானத்து விண்மீன்களைக் கொண்டு திசையறிந்தனர். புத்த ஜாதகக் கதைகளில், கப்பலில் திசை காட்டும் கருவி பயன் படுத்தியதைப் பற்றி

1. இந்திய வணிக நெறிகள் (பக்-302)
இந்தியில்: மோதி சந்திரர். (தமிழாக்கம்)

யும், இந்துப் பெருங்கடலில் தமிழகத்திற்குத் தெற்கேயிருந்த பொன் விளையும் தீவு (சுவர்ண தீபம்) பற்றியும் குறிப்புகள் உள்ளன.

கப்பல் கட்டும் தொழிலில் பழந்தமிழர் சிறந்து விளங்கினர். எல்லா நாட்டுக்கப்பல்களையும் விட தமிழரின் கப்பல்கள் பெரியனவாயும் வலுவுள்ளனவாயும் இருந்தன.

பொன்னை முதன்முதல் கண்டறிந்தவரும் பயன்படுத்தியவரும் குமரிக்கண்ட தமிழரே யாவர். ஆங்கிலப் பெருங் கவிஞரான சேக்சுபியர் தாம் எழுதிய பன்னிரண்டாம் இரவு (Twelth night) என்னும் நாடகத்தில் பொன்னை இந்திய—மாழை (Indian metal) என்கிறார்.

எகிப்து பிரமிடுகளில் பயன்படுத்தப் பட்டுள்ள இரும்பு உலகில் எந்த நாட்டைச் சேர்ந்ததும் அன்று; அது தமிழகத்திலுள்ள கொங்குநாட்டிலிருந்து கொண்டு செல்லப் பட்டதாகும் என்று வரலாற்றாசிரியர் கூறுகின்றனர்.

சுமேரியாவிலும் எகிப்திலும் பரவிய நாட்டு மருத்துவம் இந்தியாவிலிருந்து சென்றது என்னும் குறிப்பை அந்நாட்டு மருத்துவர்கள் வெளியிட்டுள்ளனர்.

மிளகும் மயில் தோகையும் மேனாட்டு மக்களால் மிகுதியாக விரும்பப்பட்டதால் தொடங்கப்பட்ட கடல் வாணிகம் தமிழரின் பல்வேறுபட்ட தொழில் திறன்களை வளர்த்து விட்டது.

கடல்வணிகர் வானத்து நாண்மீன்களை நன்கறிந்திருந்தனர் என்பதற்கும், வானநூற்கலை குமரிக்கண்ட தமிழர் காலத்திலேயே கடல் வணிகர் வாயிலாக வளர்ந்திருக்க வேண்டும் என்பதற்கும் 27 நாள் மீன்களுக்கும் 12 ஓரைகளுக்கும் பழங்காலத்தில் வழங்கிய தமிழ்ப் பெயர்களே சான்று பகர்கின்றன.

**27 நாண்மீன் (நட்சத்திரம்) பெயர்**

1. அஸ்வனி — இரலை
2. பரணி — தாழி
3. கார்த்திகை — ஆரல்
4. உரோகினி — உருள்
5. மிருகசீரிடம் — மாழ்கு
6. திருவாதிரை — யாழ்
7. புனர்பூசம் — கழை
8. பூசம் — கொடிறு
9. ஆயில்யம் — கவ்வை
10. மகம் — கொடுநுகம்
11. பூரம் — கணை
12. உத்தரம் — மானேறு
13. அத்தம் — கைம்மீன்
14. சித்திரை — நெய்ம்மீன்
15. சுவாதி — விளக்கு
16. விசாகம் — சுளகு
17. அனுடம் — பனை
18. கேட்டை — தழல்
19. மூலம் — குருகு
20. பூராடம் — முற்குளம்
21. உத்திராடம் — கடைக்குளம்
22. திருவோணம் — முக்கோல்
23. அவிட்டம் — பறவை
24. சதயம் — குன்று
25. பூரட்டாதி — முற்கொழுங்கால்
26. உத்திரட்டாதி — பிற்கொழுங்கால்
27. இரேவதி — தொழுபஃறி

## 12 ஓரைகள் (ராசிகள்)

1. மேஷம் — ஆடு
2. இடபம் — ஏறு
3. மிதுனம் — இரட்டை
4. கடகம் — அலவன்
5. சிம்மம் — மடங்கல்
6. கன்னி — நங்கை
7. துலாம் — நிறைகோல்
8. விருச்சிகம் — தேள்
9. தனு — வில்
10. மகரம் — சுறு
11. கும்பம் — குடம்
12. மீனம் — மீன்

## பன்னிரு மாதங்கள்

1. சித்திரை — மேழம்
2. வைகாசி — விடை
3. ஆனி — ஆடவை
4. ஆடி — கடகம்
5. ஆவணி — மடங்கல்
6. புரட்டாசி — கன்னி
7. ஐப்பசி — துலை (துலாம்)
8. கார்த்திகை — நளி
9. மார்கழி — சிலை
10. தை — சுறவம்
11. மாசி — கும்பம்
12. பங்குனி — மீனம்

**கிழமை (வாரம்)**

ஞாயிறு
திங்கள்
செவ்வாய்
அறிவன்
வியாழன்
வெள்ளி
காரி

இத்தமிழ்ப் பெயர்களில் பல2 பிற்காலத்தில் வழக்கிழந்தன எனினும், பழந்தமிழரின் தொழில் திறன், கல்வி வளர்ச்சிக்கு இவை சான்றுயுள்ளன.

2 கட்டுரைத் திரட்டு-(பக்கம்-87)
ந. மு. வேங்கடசாமி நாட்டார்.

# ஆறும் பகுதி

**நாவலந் தேய காலம்**

கி. மு. *3,000* ஆண்டு முதல்

கி. மு. *1,000* ஆண்டு வரை.

## 22. நாவலந் தண்பொழில் தமிழ் வேந்தர்

தென்னகத் தமிழ் வேந்தர் மூவரும் குமரிக்கண்ட கால முதலே வழிவழிச் சிறந்தோங்கி வந்த அரசமரபினராவர். உரையாசிரியர் பரிமேலழகர் தமிழ் மூவேந்தரை படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வரும் பழங்குடியினர்1 என்கிறார்.

### சேரரின் முதன்மை

தென்மதுரையில் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பெருமைக்குரியவர்களாகப் பாண்டியர் பேசப்படினும், இடப் பரப்பிலும் மக்கட்டொகையிலும் சோழ பாண்டியரைவிட சேரரே மிக்கவராகத் தெரிகிறது. சங்க காலத் தமிழகத்தில் சேர நாடு 50 காதம் பரந்திருந்தது. சோழபாண்டிய நாடுகள் இரண்டும் சேர்ந்து சேர நாட்டளவு (50 காதம்) தானிருந்தது. சேரர் இமயந்தொட்டு குமரிவரை ஆண்டதாகவும், அக்காலத்திலும் அதற்கு முன்பும் தமிழே இந்திய நிலப்

---

1. திருக்குறள் 'பழங்குடி' என்னும் சொல்லுக்குப் பரிமேலழகர் உரை.

பரப்பு முழுவதும் பேசியிருக்கக்கூடும்2 எனவும் அறிகிறோம். சோழரும் பாண்டியரும் வடவாரியரை வென்று இமய நெற்றியில் புலியும் மீனும் பொறித்தவராயினும் இமயம் வரை நாடாண்டவர் என்று தம்மைச் சொல்லிக் கொள்ளவில்லை.

வடக்கே பேசப்படும் பெரும்பான்மையான திராவிட மொழிகள் சேரநாட்டுப் பேச்சுத் தமிழோடு ஒருமருங்கு நெருங்கியதாகத் தெரிகிறது. வடநாட்டில் நடந்த பாரதப் போரில் இருதிறத்துப்படைகளுக்கும் பெருஞ் சோறளித்த பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன்3 வரலாறு இங்கு நினைவு கூரத்தக்கது. இவ்வுதியஞ்சேரலாதன்காலத்திலும்,இவனுக்கு முன்னே வாழ்ந்து நமக்குத் தெரியாமற் போன இவன் முன்னோர் காலத்திலும், வடக்கே சேரர்க்குப் பெருஞ்செல்வாக்கு இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

மூவேந்தரை முறைப்படுத்திய பெயர் வரிசையில், சேர சோழ பாண்டியர் எனச் சேரரின் பெயரே முன்னிற்கிறது. இம்முறை வைப்பு வரலாற்றுக் காலத்துக்கு முந்தியது. இம்முறை மாற்றி மூவேந்தரைக் குறிப்பிட்டவர் எவரும் இலர்.

---

2 குமரியொடு வடவிமயத்தொரு மொழி வைத்துலகாண்ட சேரலாதன்......

[சிலப்பதிகாரம்—வாழ்த்துக்காதை, உரைப்பாட்டு மடை]

'வட திசை எல்லை இமயமாகத் தென்னங்குமரியோடா யிடை' (பதிற் : 11; 43)

3 'அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ,
நிலந்தலைக்கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழிய
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்'

கடல் கொண்ட தென்னாடாகிய குமரிக் கண்டத்திலும் சேரரே முதன்மை பெற்றிருப்பர் என்பதற்குச் சான்றாக, குமரிக் கண்ட கடல்கோளில் எஞ்சி நின்ற நாடுகளில் தில்முன் எனப்பட்ட சேரன்தீவநாடும், பனைத்தீவங்கள் என்ற நிலப் பகுதியும் சேரர் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளாகத் தெரி கின்றன.

கடல்கோளுக்கு அஞ்சி கடல் கடந்த நாடுகளில் பல குடி யேற்றங்களை அமைத்தவர்களிலும், சோழ பாண்டியரை விட சேரர் எண்ணிக்கையில் மிக்கவர் என்று கருத அவ்வந்நாடு களில் கிடைக்கும் பழங்காலப் புதைபொருள் எழுத்துச் சான்றுகள் இடந்தருகின்றன.

குமரிக்கண்ட இயற்கையமைப்பை மனக்கண்ணில்நிறுத்தி மூவேந்தரின் தோற்ற வரலாற்றைக் கணித்தால், சேரர் மலை நிலத்திலும், சோழர் முல்லை மருத நிலங்களிலும், பாண்டியர் மருதமும் நெய்தலும் சார்ந்த கடற்றுறை நகரங்களிலும் முதன்முதல் செங்கோலோச்சியவராதல் வேண்டும். அதனாற்றான் அவர்கட்கு முறையே வில், புலி, கயல் ஆகியவை கொடி இலச்சினைகளாக அமைந்திருக்கும்.

நெய்தல் மருத நில நகரங்கள் கடல்கோளுக்கும், அடிக் கடி நடக்கும் போர்களுக்கும் ஈடு கொடுத்து நிற்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாவதால், சோழ பாண்டியரின் மக்கட் டொகை குறைவாகவும், கடல்கோள், போர் ஆகிய இரண்டி லிருந்தும் தப்பித்துக் கொள்ளும் வாய்ப்பு மலைநாட்டுச் சேரர்க்கு மிகுதியாதலால் சேரரின் மக்கட்டொகை மிகுதி யாகவும் இருந்திருக்க வேண்டும். பஞ்சம், போர்க்காலங் களில் தரைவழியாகவும், செழிப்பான வணிகக் காலத்தில் கடல் வழியாக, யானைத்தந்தம், மயில் தோகை போன்ற மலைபடு பொருள்களை மரக் கலங்களில் கடல் கடந்த நாடு களுக்கு எடுத்துச்செல்லவும் ஆங்காங்குக் குடியேறவும், சேரர் துணிந்தவரே. சமநிலங்களில் கோட்டை கொத்தளங்களும், தேரும் மாவும் கொண்டு, செல்வத்தில் மிகுதியும் திளைத்த

சோழ பாண்டியரை விட காடும் மலைமுகடுமே வாழ்வாகக் கொண்ட சேர நாட்டார் புதிது காண, புது இடங்கட்குச் செல்ல விழைவதில் வியப்பில்லை.

திடீரெனத் தாக்கும் கடல்கோளின்போது மலைமுகடுகளில் வதிந்தவர் மட்டும் தப்பியிருக்கவும் வாய்ப்புண்டு. எனவே காலப் போக்கில் சேரர் ஏனைய சோழ பாண்டியரை விட எண்ணிக்கையில் மிகுந்தனர் எனலாம்.

ஐந்திணைப்பாகுபாட்டிலும் குறிஞ்சி நிலத்தை முற்கூறுவதால் முதல் நிலமாகிய குறிஞ்சிக்குரிய சேரரை முதலிடம் தந்து சிறப்பித்தனர் போலும்.

## வேளிரும் அரையரும்

வேளிர் என்பவர் வென்ற நாட்டிற்கு அரசராகுந் தகுதி பெற்றவர். இதனாற்றான் மூவேந்தர் பால், படை மறவராயும் அரசு அலுவலராயும் இருந்த வேளிர் பலர், வென்று பெற்ற நாடுகட்குக் குறுநில மன்னராய் அமர்த்தப்படுவது தொன்று தொட்டு வரும் தமிழ் மரபாயிருந்தது.இருக்குவேள் மரபினர் கருநாடகத்தில் 49 தலைமுறை வேளிராயிருந்தது இதற்குச் சான்றாம். இவ்வேளிரும் மன்னரும், அரையர் என்றும் அழைக்கப்பட்டனர். அரசன் எனும் சொல் அரையன் எனத் திரியும். இருக்குவேளின் நாடு, சிற்றரையம் பேரரையம் என இரு பெரும் பிரிவாக இருந்தது என்பர். வேளிரால் ஆளப்பட்ட நடுவணிந்திய வட இந்தியப் பகுதிகள் வேளகம், வேலூர் என அழைக்கப்பட்டன. பம்பாய்க்கு அருகிலுள்ள எல்லோராவின் பழைய பெயர் வேலூரகம் என்று பட்டயங்களால் (சாசனம்) தெரிய வருகிறது. குசராத்தைச் சார்ந்த கத்தியவார் பகுதியில் பேலா (வேளகம்) எனப்படும் ஊர்கள் உள்ளன. அரையர் என்ற சொல் வடஇந்திய மொழிகளில் ராவ் என்றும் ராய் என்றும் ராஜ் என்றும் திரிந்து வழங்குகின்றன.

குமரிக்கண்டத்தில் இமயமலை போன்று உயர்ந்திருந்த குமரி மலைத்தொடர் கடலில் மூழ்கியதால், அன்று தொட்டுத் தென்கை மூவேந்தர்க்கு இமயமலையே குமரி மலைத் தொடராயிற்று. சிவனை வழிபடுவதற்கு உகந்ததான அக்குமணி (உருத்திரட்சமணி) இமயமலைப் பகுதியில் விளையக்கூடியது என்பதறிந்து இமயத்தைச் சிவனுறையும் இடமாகக் கருதி வழிபட்டனர்.

காளியை வழிபடும் கொற்றவை வழிபாடு வட இந்தியாவில் நெடுங்காலம் வாழ்ந்திருந்த தமிழர் வழி பரவியது. காளிக்கோட்டம் (காளி கோயில்) இருந்த இடமே வங்காளத்தில் கல்கத்தா நகரமாயிற்று.

கங்கையாறும் சோணையாறும் தமிழ்மக்கள் அனைவராலும் அறியப்பட்டிருந்தன. இமயமலையடிவாரக் காடுகளிலிருந்த கவரிமானின் கூந்தலை தமிழ் மகளிர் பெரிதும் விரும்பினர். வணிக உறவு இமயம் முதல் குமரி வரை ஒரே சீராக இருந்தது.

சிந்து, கங்கை, கோதாவரி, காவேரி ஆகிய ஆற்றங்கரைகள் தமிழ் மக்களின் வாழ்விடங்களாயிருந்தன. வேளாளரில் கங்கை குல வேளாளர் இன்றும் உள்ளனர். தமிழ் நாகரிகம் நாவலந்தண்பொழில் (இந்தியா) முழுதும் சிறந்திருந்தது.

தென்னகத் தொன்மை

ஆரியப்படையெடுப்பைத் தடுக்க, 113 ஆண்டுகளாகத் தமிழ்வேந்தர்களின் கூட்டணி ஒன்று அமைக்கப்பட்டிருந்தது என்றும், அதனைத் 'த்ரமிளதேச சங்காதம்'—(தமிழ்நாட்டுக் கூட்டணி) என்றும் கலிங்கவேந்தன் காரவேலன் கி. மு. 1 69 ஆண்டைய கல்வெட்டு கூறுகிறது.4

4. தமிழக வரலாறு (அரசு வெளியீடு-75) பக்-66.

சாணக்கியர் தன்னுடைய அர்த்த சாத்திர நூலில் பாண்டியரைக் குறிப்பிடுகிறார்.5

துவரை நகரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட வேளிர் வேந்தனாகிய இருங்கோவேளின் மரபினர், 49 தலை முறையாக அதே தலை நகரில் இருந்து நாடாண்டனர். கழாத்தலையார் என்னும் புலவரை இகழ்ந்ததால் அம்மரபு அழிந்தது என்று கூறப்படுகிறது. 49 தலைமுறை என்பது 1,000 ஆண்டுகட்குக் குறையாத காலமாகும். எனவே, கி. மு. 1,000க்கு முன்பிருந்தே தமிழ்வேந்தராட்சியே யன்றி குறுநில மன்னராட்சிகளும் நிலைத்திருந்தமை தெரிகிறது.

ஈட்டுரை எழுதிய, புகழ் பெற்ற வைணவப் பெருமகனார் பெரியவாச்சான் பிள்ளை கி. பி. 1228ல் தோன்றியவர். இவர் கலியுகம் 4329 ல் பிறந்தார் என்று கூறப்படுகிறது. இதிலிருந்து கலியுகத் தொடக்கம் கி.மு. 3101 என்று தெரிவதாலும், இக்காலம் சிந்துவெளி, வடஇந்திய நாகரிகக் காலங்களோடும் தென்னக நாகரிகக் காலங்களோடும் நாகரிக ஒப்புமையுடையதாக விருப்பதால், கி.மு. 3,000க்கு முன் பிருந்தே தமிழர் இந்திய நாகரிகம் உடையவராய் இருந்தனர் என்பது உறுதிப்படுகிறது.

இந்தக் கலியுகக் கணக்கு முதன் முதலாக யாரால் தோற்றுவிக்கப்பட்டது என்பது அறியக் கூடாததாயினும், நாடுமுழுதும் பின்பற்றத்தக்க இந்த ஆண்டுக் கணக்கு, ஊழியின்முடிவு தோற்றங்களின் அடிப்படையில் ஏற்படுத்தப் பட்டிருப்பதால், பெரிய வெள்ள ஊழிக்கு ஆட்பட்ட தமிழ மன்னராலேயே தோற்றுவிக்கப்பட்டிருக்கவேண்டும். கலியூழி என்னும் தமிழ்ச் சொல்லே கலியுகம் என்று வடமொழி யாளரால் ஆளப்பட்டிருக்க வேண்டும். கலி என்னும் சொல் செழிப்பு, பெருக்கம் என்னும் பொருள் தருதலால் வளவன் என்றாற்போல் கலியன் என்னும் மன்னன் பெயராகவும்

5. தமிழக வரலாறு; அரசு வெளியீடு பக்-67

இருந்திருக்கக்கூடும். இன்றும் கலிய பெருமாள் என்று பெயருள்ளவர்களைக் காணலாம்.

கலியூழியின் (கி. மு. 3000) தொடக்கத்திலிருந்து வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் ஆண்டதமிழ் மன்னர் களின் வரலாறுகள் அறியக்கூடவில்லை.

எனினும், தற்பொழுதுள்ள தமிழகம், 5 கோடி ஆண்டு களாகக் கடலுள் மூழ்கவில்லை என்னும் நிலவமைப்பியலாரின் (Geologists) கூற்றின்படி, குமரிக்கண்ட காலத்திலேயே குடிவளமும் கொற்றவனுட்சியும் பெற்றிருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

## இடைக்கழகம் (இரண்டாம் தமிழ்ச்சங்கம்)

குமரிநாட்டுப் பாண்டிய நாட்டின் பெரும் பகுதி மட்டு மன்றி, பன்மலையடுக்கத்துக் குமரிமலைத் தொடரும் அதை யடுத்த வளமானநாடுகளும் கடலுள் மூழ்கியதால், அதை ஈடு செய்யும் வகையில் அக்காலத்தமிழர் நாவலந் தண்பொழில் என்று அழைக்கப்பட்ட இந்தியாமுழுதும் பரவி வாழ்ந்தனர்.

பஃறுளி யாற்றங்கரையிலிருந்த தென்மதுரையைப் போன்றே சிந்துவெளி நாகரிகம் அமைத்த மக்களின் வழியினர் வடமதுரையை உண்டாக்கிக் கொண்டாலும், குமரியாற்றங்கரையில் தன் தலை நகரை நிறுவிய பாண்டியன் குமரியாறு கடலொடு கலக்குமிடத்திலிருந்த கதவபுரத்தில் (கபாடபுரம்) இரண்டாம் தமிழ்க் கழகத்தைத் தோற்று வித்தான். தற்காலக் குமரிமுனைக்குத் தெற்கே 500கல் வரை பாண்டியநாடு நீண்டிருந்தது.6

இக்காலத்தில் இலங்கை தமிழகத்தோடு இணைந் திருந்தது. குமரிமலைத்தொடரின் ஒரு பகுதி மகேந்திரமலை என்று அழைக்கப்பட்டது. காட்டெலியட் (Scott Elliot) என்பவர் எழுதிய மறைந்த குமரிக்கண்டம் (Lost Lemuria)

---

6. தமிழர் வரலாறு—பக் 139 (மொழிஞாயிறு பாவாணர்)

என்னும் நூலில் உள்ள படத்தில், குமரித்தொடர்மடகாசுகர் தீவுவரை நீண்டிருப்பது காட்டப்பட்டிருக்கிறது. சிவதரு மோத்தரம் என்னும் சைவ வுபாகமத்தில் பொதியிற்குத் தென்பால் மகேந்திரமலையுண்டென்றும், அது வடக்கு தெற்காக நீண்டிருந்த தென்றும் கூறப்படுகிறது. கந்தபுராணத்தில் கூறப்பட்ட வீரமகேந்திரம் இதுவாயிருக்கலாம்.

இரண்டாம் தமிழ்க்கழகத்தில் 59பேர் உறுப்பினராயிருந்தனர். 3,700 புலவர்கள் அக்கழகத்தில் பங்கு கொண்டனர். வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திருமாறன் ஈறாக 59 அரசர்கள் இத்தமிழ்க் கழகத்தைப் புரந்தனர். இவர்களுள் ஐந்து அரசர்கள் பெரும்புலவர்களாக விளங்கினர். இக் கழகம் 3,700 ஆண்டு நீடித்திருந்தது என்று இறையனார் அகப்பொருளுரை கூறுகின்றது7.

---

7 இனி, இடைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும் தொல்காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழி மோசியும், வெள்ளூர்க் காப்பியனும், சிறுபாண்டரங்கனும், திரையன் மாறனும், துவரைக் கோமானும், கீரந்தையும் என இத் தொடக்கத்தார் ஐம்பத் தொன்பதின்மர் என்பர். அவருள்ளிட்டு மூவாயிரத்து எழுநூற்றுவர் பாடினார் என்ப. அவர்களாற் பாடப்பட்டன கலியும், குருகும், வெண்டாளியும், வியாழமாலை அகவலும் என இத் தொடக்கத்தன என்ப.

அவர்க்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமும், மாபுராணமும் என இவை. அவர் மூவாயிரத்து எழுநூற்றி யாண்டு சங்கமிருந்தார் என்ப. அவரைச் சங்கம் இரீஇயினார், வெண்தேர்ச்செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக ஐப்பத்தொன்பதின்மர் என்ப. அவருள் கவியரங்கேறினார் ஐவரென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்து என்ப. அக்காலத்துப் போலும் பாண்டிய நாட்டைக் கடல் கொண்டது.

(இறையனார் அகப் பொருள் உரை-பக். 5)


நாவலந்தண்பொழில் அல்லது இரலைபாம்
தமிழ்ச்சங்ககால நிலப்படம்
( பழங்கால பண்டைய கடல் வணிகர் குறிப்பின்படி வரையப்பட்டது)
மகேந்திர மலை
குமரியாறு
கதவபுரம் (கபாடபுரம்)
பனைத்திவு
மகன்தீவு
சூரியத்தீவு
மெலுக்கா துறைமுகம்
தில்முன் (அல்லது) சேரன்தீவு
தாம்பர பனை

கட்டிடக்கலை:

தமிழ்ப்புலமையில் மட்டுமன்று; இக்காலத்திய மக்கள் தொழிற்றுறைகளிலும் சிறந்து விளங்கினர். கோட்டை கட்டுதல், பெருங்கட்டிடங்களைச் அமைத்தல் ஆகியவை இவர் களுக்குக் கைவந்த கலையாக இருந்தது.

இலங்கை, பழந்தமிழ் நாட்டின் ஒருபகுதியாயிருந்ததால் மருமம் மிக்க அருங்கட்டிடக்கலைகளில் பெயர் பெற்றதா யிருந்தது. மாந்தை (மாதோட்டம்) என்னுமிடத்தில் இரும்பினுற் செய்த காந்தமலை என்னும் காந்தக் கோட்டை யிருந்ததாகவும், அக் கோட்டையிலுள்ளார் அண்மையிற் செல்லும் கப்பல்களையெல்லாம் காந்தத்தால் இழுத்துக் கொள்ளையடித்ததாகவும், மாந்தைப் பள்ளு, விசுவபுராணம் விசுவகர்ம நாடகம் என்னும் நூல்களுள் கூறப்பட்டுள்ளது.

தொங்குவது போன்ற அமைப்பிலிருந்த மூன்று கோட்டைகளைத் தகர்த்த சோழன் தூங்கெயில் எறிந்த தொடிதோட் செம்பியன் எனப்பட்டான்

தமிழர் முன்னோர்

கம்ப இராமாயணத்தில் தசரதனின் முன்னோராகக்கூறப் படுபவர்கள், தமிழர்க்கும் முன்னோராகவே இருக்கின்றனர். மனுதமிழ்வேந்தனே. சிபி எனப்படும் செம்பியன் சோழ மன்னன் என்பது அனைவரும் அறிந்ததாகும். இராமனின் குடி சூரியக்குடி (சூரியவம்சம்) என்று சொல்லப்படுவது போன்றே சோழர்குடியும் சூரிய மரபு என்று சொல்லப்படுகிறது.

மாந்தாதா, முசுகுந்தன் இருவரும் இராமனின்முன்னோர் எனப்படுகின்றனர். முதுகாந்தன் என்னும் பெயரையே முசுகுந்தன் என்பதாகப் புலவர் குழந்தை கூறுகிருர்.

மேற்கண்ட தமிழ்மன்னர்கள் இடைக்கழக காலத்தில் வாழ்ந்தவராகத் தெரிகிறது.

## 23. வட தமிழ்

மொகஞ்சதாரோ அரப்பா நாகரிகங்கள் செழித்திருந்த காலத்தில் வடஇந்தியா முழுதும் பேசப்பட்ட மொழி தமிழ், அல்லது மூலத்திராவிடம் என்று கூறப்படுகிறது. கி. மு. 2000 வரை செழித்து வளர்ந்த இம்மொழி மிகவும் வள முடையது. இம்மொழியின் எழுத்துகள் ஓவிய எழுத்துக ளாயிருந்தன. இதே எழுத்துகளை இன்னும் வடஇந்தியாவில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்கள் தம் பானைகளில் வரை கின்றனர் என்றும், பானைகளின்மேல் வரையப்படும் இந்த எழுத்துக் கோவைகளின் பொருளையறிந்தால் மொகஞ் தாசரோ முத்திரை எழுத்துகளை எளிதில் படிக்க இயலும் என்றும்,திருவனந்தபுரம் திராவிட மொழியியல் பேராசிரியர் திரு. வி. ஐ. சுப்பிரமணியம் அவர்கள் கூறுகிறார். பழந்தமிழ் நூலான கூத்த நூலுள் வடதமிழ் எனுஞ் சொல்லாட்சி காணப்படுகிறது. கிரந்தம் எனும் சொல்லுக்கு வடதமிழ் என்று யாழ்ப்பாண அகராதியில் பொருள் கூறப்பட் டுள்ளது.

ஆரியர் வருகையின் பின்பும், மங்கோலிய ஆத்திக் மக்களின் ஊடாட்டத்தாலும் வடஇந்திய திரவிட மொழி திரிபடைந்தது. திரிபடைந்த பின்பு பிராகிருதம் என்று அழைக்கப்பட்டது. பிரா கிருதம் என்ற சொல்லுக்கு எழுதப்

படாத மொழி என்று பொருள் கூறுவார் உளராயினும் அது பொருந்துவதாகத் தெரியவில்லை.

பிராகிருத மொழி, அம்மொழி பேசும் மக்களால் பாவுவ மொழி என அழைக்கப்பட்டுள்ளது. கல்வியறிவில்லாத மக்கள் தம் தாய்மொழியிலுள்ள பாடல்களைத்தலைமுறை தலை முறையாக செவிச் செல்வமாகப் போற்றி வந்தனர். எனவே தம் மொழியை பாவுவ மொழி அல்லது பாட்டு மொழி எனக் குறிப்பிட்டதில் வியப்பில்லை. தமிழ்ப் பண்பாட்டின் சிறப் பியல்புகளில் பாட்டும் ஒன்றாகும். குமரிக் கண்ட காலத்தி லிருந்தே தமிழரின் வாழ்வில் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பாட்டு இன்றியமையாத இடம் பெற்றிருந்தது. தாலாட்டி லிருந்து, ஆடல், விளையாட்டு, கதைமொழி, விடுகதை, ஏற்றம் இறைத்தல், பயிர் நடுதல், காவல் காத்தல், கிளி துரத்துதல், அறுவடை செய்தல், நெல்லளத்தல், விழாக்கள், தெய்வ வழிபாடுகள், திருமணம், குழந்தைக்குப் பெயரிடுதல் குரவை பாடல், ஒப்பாரி வரை தமிழரின் வாழ்வில் அனைத்து நிகழ்ச்சிகளும் பாட்டாகவே இருந்தன. தமிழரின் வாயில் உரைநடையைவிட பாட்டே எளிதில் உருவாயிற்று. பழந் தமிழரின் பேச்சுகூட பாட்டைப் போலவே இசையாக, நீண் டொலிக்கும் சொல்லாக இருந்தது.

பிராகிருத மொழியில் பெருங் கவிஞர் இருந்தனர். நாட்டுப்புறங்களில் பாடப்பட்ட பழம் பாடல்களும் தொகுக்கப்பட்டன. வடமொழி செல்வாக்குப் பெற்ற பிற்காலத்தில் பிராகிருதப் பாடல்களின் நயம் வடமொழி யாளரின் உள்ளத்தைக் கவர்ந்தது. தெலுங்கு சாதவாகன மன்னரில் ஒருவனான ஆலனின் 'காதா சப்தசதி' என்னும் தொகுப்பு நூலை ஒட்டி வடமொழியிலும் ஆரிய சப்தசதி எழுதப்பட்டது.

பிராகிருதத்தில் நிறைய வடசொற்கள் கலந்தன. அரசியல் செல்வாக்கால் மக்கள் பேச்சிலும் வடசொற்கள் அளவின்றிப் பெருகின. இக்கலப்பால் பிராகிருதம் மூன்று

வகையாகப் பிரிந்தது. வடமேற்கு இந்தியாவில் வழங்கிய பிராகிருதம் பைசாசி பிராக்கிருதம் எனப்பட்டது. வடஇந்தியாவில் சூரசேனி மாகதி பிராகிருதமும், நடுவணிந்தியாவில் மகாராட்டிரப் பிராகிருதமும் வழங்கிவந்தன. மாகதி பிராகிருதம் பிற்காலத்தில் பாலி மொழியாகப் பிரிந்து பௌத்தர்களின் சமய மொழியாயிற்று. பைசாசி, சூரசேனி, மகாராட்டிரப் பிராக்கிருத மொழிகள் சமண சமயத்தின் சமய மொழிகளாயின.

இந்தப் பிராக்கிருத பாலி மொழிகளே இன்றைய வட இந்திய மொழிகளான இந்தி, குசராத்தி, மராத்தி, பஞ்சாபி, வங்காளி, ஒரியா ஆகியவற்றுக்கு மூல மொழிகளாகும். வட இந்திய மொழிகளுக்குப் பிராகிருதமே தாய்மொழி அல்லது மூலமொழி எனலாம். பிராகிருதத்திற்குத் தமிழே மூல மொழி என்பதைப் பலர் இன்னும் அறியவில்லை.

பிராக்கிருதத்தில் அல்லது இன்றைய வடஇந்திய மொழிகளில், இருக்கு வேதகாலத்திய சமற்கிருதச் சொற்களைத் தனியாகப் பிரித்துவிட்டால் எஞ்சியிருப்பது தமிழ் அல்லது மூலத் திராவிட மொழியே என்பதில் ஐயமில்லை.

சமற்கிருதத்தில் இல்லாத எகர ஒகரக் குறில் எழுத்துக்கள் பிராகிருத பாலி மொழிகளில் உள்ளன. எகர ஒகரக் குறில் எழுத்துகள் தமிழில் அடிப்படையான பொருள் வேறுபாட்டை விளைப்பன என்பது நாம் அறிந்ததே. தொல்-தோல் என்பவை முற்றிலும் வேறு பொருளுடைய சொற்கள்.

தமிழில் ஷ,ஜ,ஹ போன்ற ஒலிப்புகள் தமிழொலிகளாக மாற்றப்படுவது போன்றே பிராக்கிருதத்திலும் இவ்வெழுத்துக்கள் திரிபடைகின்றன. சமஸ்கிருத அனுஸ்வார ஒலி தமிழில் இல்லை. பிராகிருதத்திலும் அனுஸ்வாரம் தனி எழுத்தாகக் கொள்ளப்படவில்லை என்று பிராகிருத இலக்கண ஆசிரியரான ஏமசந்திரர் கூறுகிறார். பிராகிருத

மொழிக்கென தனியெழுத்து வடிவத்தைத் தோற்றுவிக்காமல் வடமொழி ஒலிப்புக்குரிய தேவநாகரி எழுத்துக்களால் எழுதப்பட்டதால், பிராகிருத மொழியின் உண்மையான ஒலிப்பு பிராக்கிருத நூல்களில் காணப்படவில்லை.

பிராகிருத மக்கள் இந்தோ ஐரோப்பிய இனத்தவராக இருந்திருந்தால் அவர்களுக்கு கஜ (யானை) ப்ரிய (அன்பு) எனும் சொற்களை உள்ளபடியே ஒலிப்பது எளிமையாக இருந்திருக்கும். வடஇந்தியா முழுவதும் வாழ்ந்த மக்கள் திரவிடராக இருந்ததால்தான், அவர்களால் அத்தகைய சொற்களை ஒலிக்க இயலாமல் கஜ என்பதை கய என்றும், ப்ரிய என்பதை பியம் என்றும், ஒலிக்கத் தொடங்கினர். சமற்கிருதச் சார்பான சிறப்பெழுத்துக்களை அனைத்துப் பிராகிருதப் பிரிவினரும் தம்மியல்புக்கு ஏற்ப எளிமையாகத் திரித்தே வழங்கியுள்ளனர். பெரும்பான்மைச் சொற்கள் மட்டுமின்றி வேற்றுமை உருபுகள், எண்ணுப் பெயர்கள், இடைச் சொற்கள் ஆகியவைகூட ஆரிய இனச் சொற்களாக வழக்கூன்றி விட்டதால், பிராகிருதத்தை ஆரிய இனமொழிகளில் ஒன்ருகச் சேர்த்து எண்ணுகின்றனர். அச்சொற்ருகுதி முழுதும், இயல்பு மாறி ஒலிக்கப்படுவதிலிருந்தே அவை செயற்கையாகப் புகுத்தப்பட்ட சொற்கள் என்பதைக் காட்டிக் கொடுத்து விடுகின்றன.

இந்தோ ஐரோப்பிய இனமொழிகளாகக் கருதப்பட்டு வரும் வடஇந்திய மொழிகளுள் குசராத்தியும், மராத்தியும் 12-ஆம் நூற்ருண்டு வரையில் ஐந்திரவிட மொழிகளுள் (பஞ்சத் திராவிடம்—தமிழ், தெலுங்கு, கன்னடம், மராத்தி குசராத்தி)வைத் தெண்ணப்பட்டன. கங்கைச் சமவெளிப் பகுதி கௌடதேயமென்றும், ஏனைய இந்தியப் பகுதி திரவிட தேயமென்றும் கூறப்பட்டு வந்தது. இவ்வுண்மைகள், வட இந்திய மொழிகள் படிப்படியாகத் திரவிட குடும்பத்திலிருந்து இந்தோ ஐரோப்பிய குடும்பத்திற்கு மாற்றப் பட்டுள்ளன என்பதை வெளிப்படுத்துகின்றன.

சமஸ்கிருதச் செல்வாக்கு மிகுந்த காலத்தில் பிராகிருத கிளை மொழிகள், தேசி மொழிகள் (நாட்டு மொழி) என இகழப்பட்டன. பிராகிருத இலக்கண இலக்கிய நூல்களி லும் தத்பவ, தத்சம சொற்கள் சமஸ்கிருதத்திலிருந்து நிறைய எடுத்தாளப்பட்டு, தேசிச் சொற்களான பேச்சு மொழிச் சொற்களுக்கு மிகக் குறைந்த இடம் அளிக்கப் பட்டது. காளிதாசன், பாணன் போன்றோரின் சமஸ்கிருத நாடகங்களில் மகளிர் மற்றும் வேலைக்காரரின் உரையாடல் பிராகிருத மொழியில் எழுதப்பட்டுள்ளது.

பாஞ்சாலத்தில் பிரவாகன சைவலி என்னும் திராவிட மன்னர் ஒரு கல்விக்கழகம் வைத்திருந்தார். இக்கழகத்தில் கௌதமர்முதலிய ஆரிய முனிவர் தமிழ் நூல்களைக் கற்றனர். இச்செய்தி சாந்தோக்கிய உபநிடதத்தில் (5வது பிரவாகடம் 3வது காண்டம்) உள்ளது. 8 ஆப்கானித்தானத்தில் தமிலுக் என்று ஒரு நகரம் இருக்கிறது.

பிராகிருத இலக்கியங்களில் தென் பொதியம் எனப்படும் மலையின் தென்றல் குறிப்பிடப் படுகிறது. வடநாட்டிலிருந்த உடன் கட்டையேறுதல் எனும் வழக்கம், பழந்தமிழரிடை ஆனந்தப்பையுள் எனும் பெயரால் குறிக்கப்பட்டது. பூதப் பாண்டியன் இறந்ததும் அவன் பெருந்தேவி உடன்கட்டை யேறினாள். கண்ணன் ஏறுதழுவி நப்பின்னையை மணந்தது பழந்தமிழர் நெறியே.

பிராகிருத இலக்கியங்களிலுள்ள அகப்பாடல்கள், துறை குறிக்கப்படாவிடினும் தமிழிலக்கிய அகத்துறைகளுக்குப் பொருந்தப் பாடப் பட்டனவாக உள்ளன. பொருள் வயிற் பிரிதல், நினைந்தவர் புலம்பல், இற்செறித்தல், பாங்கன் கூற்று, பாங்கி கூற்று, நற்றாய் செவிலி கூற்று போன்றவை செம்மையாக அமைந்துள்ளன.

---

8. திரவிடத் தமிழர்களின் பண்டைக்கால வரலாறு (பக்-50)
துரையனார் அடிகள்

பாலி நூல்களில் தமலிகா எனுஞ் சொல் இந்தியா முழுவதையும் குறிப்பதாக உள்ளது என்று கூறப்படுகிறது.

அநிருத்தன் மணந்து கொண்ட உழை (உஷை), சேர மன்னனுன மாவலியின் மகன்பிள்ளை பேர்த்தி என்றும், அவன் ஆண்ட நாட்டின் தலை நகர், பம்பாய்க்கு வடக்கிலிருந்த சோணிதபுரம் என்றும் கூறப்படும் பழைய கதை வரலாறு, சேரரின் கிளை மரபினர் வடநாட்டிலிருந்தாண்டனர் என்பதைக் காட்டுகிறது.

பாரதப் போரின் போது இரு திறத்துப் படைகளுக்கும் பெருஞ் சோறளித்த சேரலாதன் வரலாறும், வடநாட்டிலிருந்த தமிழ்க் கிளை மரபினரின் செயலையே குறிப்பது என்று கூறுகின்றனர்.

கடல் கொண்ட குமரிக் கண்டத்திலிருந்த தென் மதுரைக்கு ஒப்ப வட இந்தியாவில் வடமதுரை தோற்றுவிக்கப்பட்டது. வடமதுரையைத் தோற்றுவித்தவர், குமரிக் கண்டத்திலிருந்து வட இந்தியாவில்குடியேறிய தமிழ்மரபினரேயாவர்.

கி. பி. 1854ல் சிறந்த மொழி நூலறிஞராக விளங்கிய பாபு இராசேந்திரலால் மித்ரா என்பவர் திராவிட மொழி பிராகிருத வகைகளுள் ஒன்று என்கிறுர்.9

10 சிந்துச் சமவெளியின் வடமேற்குப் பகுதியில் சிபி என்னும் மன்னன் ஆண்டதாகப் பழங்கதை வழங்கி வரு

---

9. As late as 1854 the learned philologist Babu Rajendralal Mitra (Quotcd by Dr. Muir) speaks of the Dravidi as one of the Recognised Prakrits equally with the Souraseni and as being, like it, the parent of some of the vernaculars of India.

Linguistics and Dravidian Philology Page 146
by Prof. P. V. Ulahannan Mappila

10. இந்திய வணிக நெறிகள் (பக்-51)-by மோதிசந்திரர் (மூலம்-இந்தி)

கிறது. இப்பகுதியில் சிபி வழியினர் எனப்படும் சாதியாரும் இருந்தனர். சிபி தமிழ் மன்னன் என்பது அனைவரும் அறிந்ததே.

வேத நூல்களில் அசுரர் எனக் குறிக்கப்பட்டவர் பாரசீக செந்து அவஸ்தா எனும் நூலில் நல்லவர்களாக அறிமுகப் படுத்தப்படுகின்றனர்.

**11** பிராகிருத மொழிகளுள் பிசாசி பிராகிருதம் என்பது மிகப் பழமையானது. கிரேக்க நில நூல் வல்லுநர் இந்தியாவிலிருந்த பசியாகி எனப்படும் பசாயி சாதியினரைப் பற்றி அறிந்திருந்தனர்.

## பிராகிருதத்துக்கும் தமிழுக்கும் உள்ள ஒப்புமைகள்

1. எகர ஒகரக் குறில் இருத்தல்

2. சமற்கிருதத்துக்கே உரிய ர்ரு, ர்ரூ, ல்ரு போன்ற உயிரொலிகளும் அம், அஹ எனும் உயிரின ஈற்றெழுத்துக் களும் பிராகிருதத்தில் இல்லை: தமிழிலும் இல்லை.

3. சமற் கிருத மொழிக்கு முற்றிலும் புதிதான பல சொல்வடிவங்கள் இறந்து படாமல் பிராகிருதத்தில் எஞ்சி யுள்ளன. பூதர்எனும் சொல் அத்தகைய சொற்களுள் ஒன்று. இதனை பிராகிருத இலக்கண நூலாசிரியரான ஏமச்சந்திரர் குறிப்பிடுகிறார். ஆனால் பூதர் எனும சொல் தமிழிலக்கியங் களில் மிகுந்த ஆட்சி பெற்றுள்ளது. பூ-பூத்தல்(தோன்றுதல்) எனும் வேர்ச் சொல்லிலிருந்து தோன்றியது இது. அவை நடுவே வெறுமனே தோற்றம் தரும் அறிவிலிகளையும் இச் சொல் குறித்தது.

4. ஐந்திரம் என்னும் இலக்கண நூல் தமிழுக்கும் பிரா கிருதத்துக்கும் பாலிக்கும் பொதுவான இலக்கண நூலாகக்

---

**11.** இந்திய வணிக நெறிகள் (பக்-180)-by மோதிசந்திரர் (மூலம்–இந்தி)

கூறப்படுகிறது. ஐந்திர இலக்கண நெறியே காதந்திர (சமண) இலக்கணநெறி' கச்சாயன (பௌத்த) இலக்கண நெறிகளாகவளர்ந்தன. சாரிபுத்தர் இளமையில் ஐந்திர இலக்கணங் கற்றார். குணாட்டியர் காலத்திற்கு முன்பே ஐந்திரம் வடமொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டது. 'பாணினியம் தோன்றிய பின் ஐந்திர நூல் அழிந்தது' என்று A. C. பர்னல் (Aindra School of Sanakrit grammar—page-3) கூறுகிறார்.

தொல் காப்பியர், ஐந்திர நிறைந்த தொல்காப்பியன் என்று கூறப்படுகிறார். மகாபாரத உரையாசிரியராகிய தேவ போதர் ஐந்திர இலக்கணம் பாணினி இலக்கணத்தைவிட 25 மடங்கு பெரியது என்கிறார்.

பர்மியம், சயாம், சாலித்தீவம் [ஜாவா) கம்போடியா நாட்டு மொழிகளில் பௌத்த சமயம் பரவியதன் விளைவாக, பாலிமொழியின் வாயிலாக ஐந்திர இலக்கணக் கூறுகள் பரவின.

இந்திர வியாகரணம், (ஐந்திரம்) மிகப்பழையது, அது தமிழ்நாட்டில் வழங்கியது. இந்திர துருவன் என்பவன் ஐந்திரம் கற்றவன், அவன் கற்றது 25,000 சுலோகங்களைக் கொண்டிருந்தது. ஆங்கிலம் போன்ற ஆரியக் குடும்ப மொழிகளில் உயிர் எழுத்துக்களைத் தனியாகவும் மெய் யெழுத்துக்களைத் தனியாகவும் வரிசைப்படுத்திக் கூறும் வழக்கு இல்லை. சமற்கிருதத்தில் மட்டும் எழுத்து வரிசை களில் உயிர்வரிசை தனியாகவும் மெய்வரிசை தனியாகவும் நிற்பது ஐந்திர இலக்கணத்தின் தாக்கமேயாகும்.

5. பிராகிருதத்தில், சொற்களில் இரண்டாம் எழுத்தாக வரும் கரகம் மெலிந்து ஒலிக்கும் (K—G) eka-ega, Laka-Loga. தமிழிலும் சொல்லின்முதலயல் அல்லது வல்லின மெய்யைச் சாராத வல்லெழுத்து மெலிந்து ஒலிப்பது இயல்பாக இருக்கிறது. அகம் (agam), நகம் [Nagam] எனும் சொற்களை நோக்குக.

மேற்கூறியவாறு இரண்டாம் எழுத்து (வல்லெழுத்து) மெலிந்து ஒலிக்காமலிருக்கும் சமற்கிருதச் சொற்கள் பிராகிருதத்தில் புகுந்தால், அவை மெலிந்து ஒலிப்பனவாக அல்லது வேறெழுத்தாக மாறிவிடும். காச (Kacha)—மணி எனுஞ்சொல் பிராகிருகத்தில் காயமணி என்று திரியும். பாதால (pathala)-பாயால (payala) எனத்திரியும். தமிழிலும் பாதாளம் என இரண்டாம் எழுத்து மெலிந்து ஒலிப்பதைக் காண்க.

7. பிராகிருதத்தில் ஒரே ச (Xa) தான் இருக்கிறது. சமற்கிருதத்திலுள்ள ஸ, ஷ, எழுத்துக்கள் இல்லை. தமிழிலும் ஒரே சகரம் தான் உண்டு. ஸ்தூல எனும் சொல் பிராகிருதத்தில் தோர எனத்திரியும் 'ஸ்த்ரீ, (பெண்) பிராகிருதத்தில் இத்தி எனத்திரியும்.

8. வடமொழியில் உள்ள அனுஸ்வாரம் எனப்படும் மூக்கொலி சுன்னமாக (0)க்குறிக்கப்படாமல் பிராகிகிருதத்தில் இனமெல்லெழுத்தாக எழுதப்படும். சமற்கிருதத்தில் சிம்ஹ எனுஞ்சொல் பிராகிருதத்தில் தமிழைப் போலவே சிங்க(ம்) என இனமெல்லெழுத்திட்டு எழுதப்படுகிறது. ஆதலால், ஏமச்சந்திரர் அனுஸ்வாரத்தைத் தன் பிராகிருத இலக்கண நூலில் எழுத்து வரிசையில் குறிப்பிடாமல் ஈற்றில் குறிப்பிடுகிறார். இதில், வடமொழி இலக்கணக் கூறுகள் பிராகிதத்திற்குப் பொருந்தாமலிருப்பதை அவர் சுட்டிக் காட்டுகிறார்.

9. சமற்கிருதத்தில் வினைச்சொற்களின் முதனிலைகள் வல்லின மெய்யீறாக நிற்பது போல் பிராகிருதத்தில் நிற்பதில்லை. அவை தமிழ்சொற்களைப் போன்றே உயிரீறாக நிற்கின்றன.

10. பிராகிருதத்திலிருந்துதிரிந்த மாகதியில், ஸ்க,ஸ்ப, ஸ்த, எனும் கூட்டொலிகள் புகுந்து விட்டன. ஆனால் இவ்வொலிப்புகள் பிராகிருதத்தில் புகவில்லை. பிராகித மொழி பற்றிக் கூறும் போது, இம்மொழியின் சொற்கள் மிகுதியாக

நாட்டுமக்களின் பேச்சு மொழியிலிருந்து வந்தவையாதலால் இவற்றை வடமொழிச் சொற்களோடு ஒப்பிட முடியாது என்று, கிரியர்சன் கூறுகிருர்.

சொல்லொப்புமைகள்

தமிழிலுள்ள பெண்டு எனுஞ்சொல் பிராகிருதத்தில் பிட்டி எனத்திரிந்துள்ளது. விடலை (இளைஞன்) எனுந் தமிழ்ச் சொல் வட எனத்திரிந்துள்ளது.

இவற்றை யொத்த பிறசொற்கள்

படன்தி (பட்டது-கீழே விழுந்தது)
துவரி (துவரை, துவரம்பருப்பு)
அண்ணு (அண்ணன்)
ஐயா (ஐயன்)
மாமி (அத்தை)
குட (குடம்)
கோட்டம் (கொட்டகை)
மரவு (மறைதல், சாதல்)
பாவல (பவளம்)
கடம்ப (கடம்ப மரம்)
ஆமர (மாமரம்)
தால (பனைமரம்)
குவளய (குவளைமலர்)
பலாச (பலாமரம்)
வகுள (வகுளமலர்)
மாலதி (மாலதி மலர்)
தாமரச (செந்தாமரை)
வ்ராயியே (வரைக, எழுதுக)
காக (காக்கை)
மாலாரி (பூமாலை விற்பவள், பூக்காரி.)
வேளம் (வேளை)
மை (கருமை, அழுக்கு)

## 24. இந்திய வரலாற்றுத் தொடக்கம்

ஆரியர் வருகைக்கு முன்பு வடநாட்டில் வாழ்ந்தவர் தமிழர் என்பதும், இந்தியா முழுதும் தமிழ் நாடாக இருந்தது என்பதும் வெளிப்படை. இந்திய நாகரிகமும் வரலாறும் தமிழர் நகாரிகத்தினடிப் படையில் தோன்றியவை. இந்தியர் வரலாறு, தமிழர் வாலாற்றைத் தொடக்கமாகக் கொண்டது. இதை அறியாத பல வரலாற்றுசிரியர் இந்திய வரலாற்றை வடநாட்டிலிருந்து தொடங்கி எழுதியுள்ளனர். இது உண்மையான இந்திய வரலாறு ஆகாது. இந்திய வரலாறு தென்னுட்டிலிருந்து தொடங்கி எழுதப்பட வேண்டும் என்று பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் கூறினுர்[1]. இக்கருத்தை ஏற்றுக் கொண்ட வின்செண்ட் சிமித் என்னும் வரலாற்றுசிரியர், இனி, இந்திய வரலாறு கங்கையிலிருந்து

---

1. The attempt to find the basic element of Hindu Civilization by a study of Sanskrit and the History of Sanskrit in Upper India is to begin the problem at its worst and most complicated point. India, South of Vindhyas, the peninsular India, still continues to be India proper. Here the bulk of the people continue distinctly to retain their preAryan features, their preAryan languages, their preAryan social institutions.

தொடங்காமல் வைகையிலிருந்து தொடங்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

கல்வி, கலை, உழவு, நெசவு, வாணிகம், கப்பற்கலை, கட்டிடக்கலை, தொழில் வளம் ஆகிய பல துறைகள் தென்னகத்திலும், தென்னகத்தோடு இணைந்திருந்த குமரிக் கண்டத்திலும் செழித்திருந்தன. ஆதலால், இந்திய நாகரிகமும், பண்பாடும், வரலாற்றின் தொடக்கமும் தெற்கேயிருந்து தொடங்கப்படுவதுதான் முறையாகும். இந்திய மண்ணின் பண்பாட்டை வளர்த்த சமய வரலாறு, வணிக வரலாறு, இலக்கிய வரலாறு ஆகியவையும் தெற்கிலிருந்துதான் வலுப் பெற்று வளர்ந்துள்ளன.

சமய வரலாறு

சிந்து வெளியில் காணப்பட்ட சிவ வழிபாடு தென்னாட்டுக்கே உரியதாகும். சிவனைத் தென்னாடுடைய சிவனே போற்றி என்று வழிபடுவர். குமரிக்கண்ட காலத்திலேயே சிவ வழிபாடு தோன்றியது என்றும், சேயோன் வழிபாடும் சிவ வழிபாடும் ஒன்றே என்றும் மறைமலையடிகள் கூறுகிறார். குமரிக்கண்ட மாந்தர்க்கு நெற்றியில் மூன்றாவது கண்

---

Even here, the process of Aryanisation has gone indeed too far to leave it easy for the Historian to distinguish the native woof from the foreign woof. But if there is anywhere any chance of such successful disentanglement, it is the south and the further south we go to the larger does the chance grow.

The scientific Historian of India, then ought to begin of the vaigai rather than with the gangetic plain has it has been now long too long the fashion.

Prof. Sundarampillai—
Tamilian Antiquity. No: 2 page-4. 1908.

போன்ற ஒரு உறுப்பு இருந்தது என்னும் செய்தியும், முக்கண் தெய்வ வழிபாட்டின் உண்மையைப் புலப்படுத்துகிறது.

எனவே, மொகஞ்சதாரோ நாகரிகத்தைப் புரிந்து கொள்ள குமரிக்கண்ட நாகரிகம் அல்லது அதன் வழிவந்த தென்னக நாகரிகத்தை அறிந்து, இந்திய சமய வரலாற்றைத் தெற்கேயிருந்து தொடங்குவது இன்றியமையாததாகிறது.

சமண பௌத்த சமயங்களைப் பரப்பிய முனிவரில் பெரும்பான்மையானவர் தென்னகத்தவர்களே. சீனுவிலும் பிற கீழையாசிய நாடுகளிலும் புத்த மதம் பரவக் காரண மாக இருந்த தருமபாலர் காஞ்சிபுரத்தவர். இவரே நளாந்தா பல்கலைக் கழகத்திலும் தலைவராக இருந்தார் என்பது அறியத்தக்கது.

இந்து சமயக் கோட்பாடுகளுக்கு அரும்பெரும் விளக்கம் தந்த ஆதிசங்கரரும், வைணவ நெறியின் ஒளிவிளக்கமான இராமானுசரும் தென்னுட்டவரே. வடமொழியில் அள விறந்த நூல்கள் பெருகக் காரணமாக இருந்தவர்களில் பெரும்பான்மையோர் தென்னுட்டவரே.

எந்தச் சமயத்தையும் சாராமல், உலக மக்கள் அனைவருக்கும் பொதுவான அறநெறிகளைத் தொகுத்துத் தரும் திருக்குறள் போன்ற பொது நூல் இயற்றும் இலக்கியப் போக்கும் முதன்முதல் தென்னகத்திலேயே முகிழ்த்தது.

## கல்வி, கலை

சாதி சமய வேறுபாடுகளைக் கடந்து கல்வி கற்கும் வாய்ப்பு அனைவர்க்கும் கிட்டிய வரலாறும் தெற்கிலிருந்து தான் தொடங்குகிறது. ஏகலைவன் வில்வித்தையில் சிறந்திருந்தது, குற்றமாகக் கருதப்பட்டது போல் தென்னகத்தில் கல்வியும் கலையும் கற்றுக் கொள்வதில் எவர்க்கும் தடையிருந்ததில்லை. குறமகள் இளவெயினி புலவரால் போற்றத் தக்க புலவராக இருந்தார். திருவள்ளுவரும் கபிலரும், தமிழ்

மக்களின் கண்களில் ஒப்பாகவே நோக்கப்பட்டு மதிக்கப் பட்டனர்.

கல்வியாலும், இசை, நாடகம் போன்ற கலைகளாலும் நிறைந்து, முத்தமிழ் எனப்பெயர் பெற்ற நம்மொழியிலிருந்த ஆயிரக் கணக்கான நூல்கள் மூவேந்தர் காலத்தில் அழியாம லிருந்தன. வானநூல், கணிதம், ஏரணம், மருத்துவம் உள் ளிட்ட நூற்செல்வங்கள் சமற்கிருதம் பிராகிருதம் போன்ற மொழிவாணர்களால் அவ்வம் மொழிகளில் மொழி பெயர்க் கப் பட்டன.

சமற்கிருதம் பேசப்படாத மொழியாதலால், பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலுமிருந்த தமிழ் போன்றமொழி யிலிருந்துதான் பல்வேறு கல்வித் துறை நூல்கள் மொழி பெயர்க்கப் பட்டிருக்க வேண்டும். ஏனெனின், சமண முனி வரைப் போன்றும் பௌத்த முனிவரைப் போன்றும் இந்து சமயத் துறவிகள் மருத்துவம் செய்தவரிலர். கடற்பயணம் செய்துமிலர். மருத்துவத்தைப்பெருமளவுக்குத்தொழிலாகக் கொள்ளாதவர்கள் மருத்துவத்தில் முதனூல்கள் இயற்றுவது இயலாதது. கடற் பயணத்தை மேற்கொள்ளாதவர்கள் முதன்முதலில் வானத்துக் கோள் நிலைகளைப் பற்றி ஆராய்ந் தவராக இருக்க வியலாது.

காட்டிலும், கடல் நடுவிலும், கடல்கோள்களின் பிடியி லும் இருந்து படிப்படியாகத் தம் அறிவை வளர்த்துக் கொண்டே நாகரிகப் படிகளில் மென்மெல ஏறிவந்த தமி ழரே வானநூல், கணிதம், மருத்துவம் இலக்கியம் போன்ற பல துறைகளிலும் முதனூல் படைத்தவர் என்பதும், காலப் போக்கில் வடஇந்திய மொழிகளில் இச்செல்வம் பகிர்ந்து கொள்ளப்பட்டது என்பதும் வெளிப்படை. அடிப்படையான நெசவுத் தொழிலில் கூட முதலில் சிறந்தவர் தென்னாட் டவரே. பேரா.சாட்டர்ஜி அவர்கள் வேட்டி, புடவை முதலி யவை திரவிடரிடமிருந்து வந்த சொற்கள் என்கிறார்.

எனவே கல்வித்துறை வரலாற்றை நோக்கினாலும் இந்திய வரலாறு தெற்கேயிருந்து தொடங்கப்படவேண்டும்.

## 25. உலகளாவிய உறவு

தமிழின மொழிகள் உலகில் எங்கெங்குப் பரவியுள்ளன, தமிழின் தாக்கம் பெற்ற மொழிகள் உலகில் எங்கெங்கு வழங்குகின்றன என்பதையும், தமிழரின் பண்பாட்டுக் கூறுகள் எங்கெங்கு ஊடாடியுள்ளன என்பதையும், ஆய்ந்தால் தமிழினத்தின் உலகளாவிய உறவை நிலைநிறுத்த முடியும்.

அமெரிக்கா, ஆப்பிரிக்கா, எகிப்து, கிரேக்கம், மொசபதோமியா, சுமேரியா, காகசஸ், சிந்துவெளி, கிழக்கிந்திய தீவுகள்,ஆத்திரேலியா, சீனம் ஆகிய நாட்டுப்பழைய மொழிகளுக்கும் தமிழுக்கும் தொடர்பு இருப்பதை அறிஞர் பலர் எடுத்துக் காட்டியுள்ளனர்.

இத்தொடர்பு, குமரிக்கண்டத்தில் தமிழர் வாழ்ந்தகாலத்தில் ஏற்பட்டதாகும். தமிழர் திருந்திய நாகரிகம் எய்திய காலத்தில் ஏற்பட்ட உறவால், அம்மொழிகளில் தமிழின் தாக்கம் ஏற்பட்டதா அல்லது தமிழரும் அம் மக்களும் கல்லாத மாந்தராக இருந்தபோது ஏற்பட்ட ஒப்புமையா என்று ஆய்தல் இன்றியமையாதது.

மொழித்தாக்கமோ,மொழியமைதி ஒப்புமையோ,பேசத் தெரியாத குறிப்பொலி (Sign) கருத்துமாற்ற காலத்தில் ஏற்பட்டிருக்க முடியாது. பேச்சுமொழி வளர ஏதேனும் ஒரு

கூட்டுத் தொழில் வளர்ச்சி அல்லது பாட்டுக்கதை வளர்ச்சி தேவை. வேட்டைத் தொழில்தான் கற்கால மாந்தரின் முதற்ருெழில் எனக் கருதப்படுவதால் கற்கால இறுதியி லேயே ஏதேனும் ஒரு மொழியை அவர்கள் பேசியிருக்க வேண்டும்.

கற்காலம் 2,00,000 ஆண்டிலிருந்து 10,000 ஆண்டு வரை பரந்ததாகக் கணிக்கப்படுவதால், இந்நீண்ட கால வெள்ளத்தில் எத்துணையோ கடல் கோளுக்கும் இயற்கைச் சீற்றங்களுக்கும் இடையில் பல்லாயிரக் கணக்கான இடங் களுக்கு, பல்லாயிரக் கணக்கான கல் தொலைவுள்ள உலகின் பல்வேறு பகுதிகளுக்கு, மாந்த இனம் பந்தாடப்பட் டிருக்கும்.

இத்துணைக் கால இடவேறுபாடுகளுக்கிடையில், உலகின் பல்வேறு பகுதிகளில் தமிழின் தாக்கம் பெற்ற மொழிகள் இன்னும் உள்ளன என்ருல், எக்காலத்தில் அத்தொலை நாட்டுமக்கள் தமிழ்ப் பேசும் தலைநிலத்திலிருந்து பிரிந்தார் களோ, அக்காலத்திற்கு முன்பே தமிழ் தோன்றியது என வரையறுப்பது தான் முறையானது.

தமிழ்ப்பேசும் தலைநிலத்திலிருந்து பிரிந்து, ஏறத்தாழ பத்து நூற்ருண்டுகளுக்குப் பிறகு, தொலை நாட்டில் பல்வேறு இன மக்களோடு கலந்து வாழவேண்டிய நிலையில், மொழியில் மாற்றம் நிகழ்வது இயல்பே. அதுவும், இலக்கியம் பெருத பேச்சு வழக்கு மொழியில் பிற மொழித் தாக்கம் ஏற்படும் போது அம்மொழி விரைவில் உருமாறிவிடும். எனவே, வெவ் வேறு காலங்களில் தமிழ்த்தலை நிலத்திலிருந்து பிரிந்த தமிழ், தலைநிலமக்களின் தமிழோடு எவ்வகை உறவும் காணமுடி யாமல்திரிந்திருக்கும். அத்திரிபின்அடிப்படைகள் தெரிந்தால் ஒழிய அம்மொழிகளின் உறவை மீண்டும் நிலைநாட்டுவது அரிது. பாசுக் மொழி திராவிட இனமொழி என்று நிலைநாட்டப்பட்டுள்ளது. இசுபெயினுக்கும் பிரான்சுக்கும் இடைநிலத்தில் பேசப்படும் இம்மொழியினர் எக்காலத்தில்

தமிழ் மக்களிடமிருந்து பிரிந்தனர் என்று வரையறுப்பதும் கடிதாக உள்ளது. வேற்று மக்களோடு பழகாமல் பாசுக் மக்கள் நெடுங்காலம் தனித்து வாழ்ந்ததன் விளைவாக இன்றும் மொழி ஒற்றுமை காணமுடிகிறது.

மொழி அமைப்பில் ஒற்றுமை காண்பது சில சூழல்களில் அரிதாவது போலவே, உடலமைப்பில் ஒற்றுமை காண்பதும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் இடைவெளிக்குப்பின் அரிதாகும்.

குமரிக்கண்டத்திலிருந்து ஐரோப்பா, ஆப்பிரிக்கா சீனம், சீனத்தீவுகள் ஆகிய இடங்களில் குடியேறிய தமிழ் மக்கள், முழுதும், உடல் அமைப்பில் வேறுபடுவது நிகழக் கூடியதே.

ஓரினம், உடலமைப்பு, நிறம் ஆகிய வற்ருல் முற்றிலும் வேஒெரு இனமாக, 300 தலைமுறைகளுக்குள் மாறிவிட முடியும் என்று அறிஞர் டார்வின் கூறுகிருர்.

ஆஃப்கானித் தானத்தில் 'தமிலுக்' என்று ஒரு நகரம் இருக்கிறது. பலுசித்தானத்தில் 'தவுத்புத்திர' என்னும் மக்கள் மொழி, திராவிட மொழியினத்தைச் சார்ந்தது என் கின்றனர். ஆஃப்கானித்தானத்தின் பர்சூழிமொழி (பார் சூழி Barzul) பேசுவோர் திராவிடரே. இச்சொல் பார்+சூழி- உலகமையம் என்று பொருள்படும். உலக நடுக்கோட்டுப் பகுதியாகிய, குமரி முனைக்குத் தென்பகுதியாகிய குமரிக் கண்டநாட்டில் தோன்றியவர் என்னும் [பொருளில் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். இம்மொழி பிராகுவி மொழி எனத் தற்போது அழைக்கப்படுகிறது.

அமெரிக்காவில், அச்தெக், பதலி (Aztec, patoli) பழங் குடிகள் சிவநெறியினர் என்றும், இவர்களுடையதெய்வத்தின் நெற்றியில் மூன்று திருநீற்றுக் கோடுகள் உள்ளன என்றும், கூறப்படுகிறது.

ருமேனியா நாட்டில், பணம் (Bano) என்னும் தமிழ்ச் சொல்லே நாணயத்தைக் குறிக்கும் சொல்லாகவுள்ளது.

எகிப்திய அரேபிய நாட்டுப்பழைய மருத்துவர்கள், தாம் மருத்துவக் கலையை இந்தியாவிலிருந்து கற்றதாகக் கூறியுள்ளனர்.

## சீனமும் தமிழும்

சீன மொழிக்கும் தமிழுக்கும் உள்ள உறவை அறிஞர் கால்டுவெல் தம் நூலுள் எடுத்துக் காட்டியுள்ளார். மூவிடப் பெயர்கள், சுட்டுப்பெயர்கள் ஆகியவை 'ங'கர மெல் லொலியை முதலெழுத்தாகக் கொண்டு அமைந்துள்ளன. தமிழில், ஆறுமெல்லின எழுத்துகளில் ஙகரம் தவிர்ந்த ஐந்தும் சொல்லின் ஈற்றெழுத்தாக உள்ளன. (உரிஞ், வெரிந், கண், கம், கன்.)

ஙகரம் தமிழில், நெடுங் கணக்கில் இருந்தும், அதில் தொடங்கும் அல்லது முடியும் சொற்கள் தமிழ்வழக்கில் தற் காலத்தில் இல்லாததை நோக்கும்போது, தமிழிலும் ஒரு காலத்தில் ஙகரத்தில் தொடங்கும் அல்லது இறும் தமிழ்ச் சொற்கள் குமரிக்கண்ட காலத்தில் தமிழில் இருந்திருக்க வேண்டும் என்று கருதுவதில் தவறில்லை. ஙகரம் மிகுதியாக ஆளப்பட்டிருக்காவிடின் தமிழ்நெடுங்கணக்கில் சேர்த்திருக்க மாட்டார்கள். ஆய்த எழுத்தைப்போல் சார்பெழுத்தாகக் கொண்டிருப்பார்கள். சீனமொழியில் ஙகர மெய்யெழுத்தில் இறும் சொற்கள் எண்ணிறந்தவை. யுவான் சுவாங், சிகி யாங், பீகிங் என ஙகர மெய்யில் இறும் சொற்களைக் காண லாம்.

ஙகர மெய்யெழுத்தைத் தமிழர் சொல்லின் ஈற்றெழுத் தாகப் பயன்படுத்திய காலத்தில் சீனரும் தமிழரும் ஒரே இடத்தில் வாழ்ந்த மக்களாகவோ அல்லது தமிழரின் கிளை மரபினராகவோ இருந்திருத்தல் கூடும். சீனரின் அகுபங்சர் என்னும் ஊசிகுத்தும் மருத்துவமுறை பழந்தமிழரின் பச்சைக் குத்தும் முறையோடு தொடர்புடையதாக இருக்கலாம் என்றும் கருதுகின்றனர்.

சீனமொழி ஓவிய எழுத்து வடிவில் இருப்பதால், குமரிக் கண்ட நாகரிக வளர்ச்சியின் தொடக்க காலத்திலேயே, அதாவது, குமரிக்கண்ட தமிழிலும் ஓவிய எழுத்து வடிவமே பெருகியிருந்த காலத்தில், சீனமொழியினரின் முன்னோர் பிரிந்து சென்றிருக்கலாம்.

சீனமொழியின் எழுத்துக்கள் ஒன்றன் கீழ் ஒன்றாக எழுதப்படுகின்றன. ஓவிய எழுத்துகள் சொற்குறியீடு களான போது, கற்றூண்களில் ஒன்றன் கீழ் ஒன்றாக எழுதப் படுவது இயல்பே. இது மொழி எழுதப்பட்ட காலத்தின் தொடக்கநிலை. ஆப்பிரிக்காவின் கிழக்கேயுள்ள மடகாசுகர் தீவில் கண்டுபிடிக்கப்பட்ட எழுத்துச் சான்று, கல்லில்ஒன்றன் கீழ் ஒன்றாக எழுதப்பட்ட எழுத்து வடிவத்திலிருப்பது இக் கூற்றுக்கு அரண் செய்கிறது.

## தமிழ் ஆத்திரேலியத் தொடர்புகள்

ஆத்திரேலிய மொழிக்கும் தமிழுக்கும் அமைந்துள்ள ஒற்றுமைகளை மொழி நூலார் ஆய்ந்து வெளியிட்டுள்ளனர். ஜெ.சி. ரிச்சர்டு என்னும் ஆத்திரேலிய மொழியாய்வாளர் 1847ல் ஆத்திரேலிய மொழிக்கும் தமிழுக்கும் உள்ள ஒற்றுமையை அறிந்து முதன்முதல் வெளியிட்டார். இவை யடுத்து, வில்லியம் பிளீக் என்னும் மற்றொரு ஆத்திரேலிய மொழியறிஞர் ஆத்திரேலிய மொழியும் திராவிடமொழி களும் ஒரே இலக்கண அமைப்புக்குட் பட்டவை என்றும், ஒலியனியல்முதல் அனைத்து மொழியமைப்பிலும் ஒத்துள்ளன என்றும், உண்மையை வெளிப்படுத்தினர். சுவீடன் நாட்டு அறிஞர்ஓமரும்1 இதே கருத்தை வெளியிட்டார்.

---

1. Grammar and phonetics of the Dravidian and Australian Languages Coincide—A Monograph Publisifed in 1963on the history and structure of the Australian Languages.

By. N. M. Holmer of lund, sweden.

## ஆப்பிரிக்க மொழிகள்

ஆப்பிரிக்க செனகல் நாட்டுக் குடியரசுத் தலைவர் தமிழ் நாட்டுக்கு வந்திருந்த போது ஆப்பிரிக்க மொழிகளில் நாலி லொருபங்கு சொற்கள் திராவிடமொழிகளின் வேர்ச் சொற்களோடு ஒப்புமை உடையன எனக்கூறினர். 2 மட காசுகர் தீவுமொழிகளும் ஈசுடர் (easter islands) தீவு மொழிகளும் ஒத்துள்ளன. மடகாசுகர் தீவு குமரிக்கண்டத் தின் ஒரு பகுதியே என்பது தெரிந்ததே.

ஆப்பிரிக்க மொழிகளுள் ஒன்ருன பண்ட்டு (Bantu) மொழி திராவிடமொழிகளோடு ஒப்புமையுடையது என்று சொல்லப்படுகிறது. நான்காம் வேற்றுமை உருபான 'கு' இம்மொழியில் முன்னொட்டாக (prefix) வருவது ஒரு வேறு பாடாக இருப்பினும் வேற்றுமை உருபு ஒன்ருகவே இருக் கிறது. பண்ட்டுமொழியில் குரி—அவர்களுக்கு என்றும்,குஜெ —அவனுக்கு என்றும் பொருள் தரும்.

ஏர் என்னும் தமிழ்ச்சொல் இலத்தீன் மொழியில்'ஆரா' என மருவி உழும் கலப்பையைக் குறிக்கிறது. தென்னிந் தியாவுக்கும் உலகின் மற்றநாகரிக மையங்களுக்கும் இடையே யுள்ள தொல்பழங்கால தொடர்புகளைப்பற்றிய ஏராளமான சான்றுகளை G-எலியட்ஸ்மித், W.H. ஸ்காப்', J. வில்பிரட் ஜாக்சன் W.J. பெர்ரி முதலிய பலரின் நூல்களில்காணலாம்.

இந்தோ ஐரோப்பிய மொழிச் சொற்களுக்கு பழந் தமிழில்தான் வேர்ச்சொற்களைக் காணமுடியும் என்னும் கருத்து வலிவு பெற்று வருகிறது. 3

---

2. His studies had revealed that one fourth of the African and Dravidian languages had common roots.

Senagal president Senghor, Hindu-24.5.54.

3. That the roots of the large majority of Indo European words are to be found in ancient Tamil, is not a mere theory but a fact ascertiained by extensive induction.

Rev. Gnanaprakasar.

கிரீத்திய, ஏசிய, சுமேரிய, பாபிலோனிய, எகிப்திய பாலி னேசிய நாகரிகங்களிலும், பிற தொன்மையான உலக நாகரிகங்களிலும் தமிழ் நாகரிகக் கூறுகளைக் காண முடியும் என்றும், மேற்கண்ட உலக நாகரிக மக்கள் தென் தமிழகத் (கடல் கொண்ட குமரிக் கண்ட) தமிழரின் மரபினரே என்றும், பேராசிரியர் V.R.R. தீட்சிதர் குறிப்பிடுகிறார்.4 கங்கைச் சமவெளி வாழ்தற்கேற்ற பகுதியாக அமையாத காலத்திலே குமரிக்கண்டத்திலிருந்து பிரிந்து சென்றவரே நண்ணிலக் கடல் நாடுகளில் குடியேறியவர் என்பது அவர் கருத்து.

ஐரோப்பாவின் பழங்குடி மக்களில் ஆல்பைன், நோர்திச், மெதித்தரேனியர் தமிழினத்தோடு ஒருகாலத்தில் தொடர்புடையர் என்றும், அதனால்தான் எபிரேய கிரேக்க இலத்தீன் மொழிகளிலும் தமிழ்ச் சொற்கள் உள்ளன என்றும், கூறுகின்றனர்.

ஆந்திரத்தில் பிக்லிக்கல் என்னும் இடத்தில் கிடைத்த புதுக்காற்காலச் சின்னங்கள் தமிழருடையவை என்றும், கீழ் எகிப்து நீலநதிக்கரையில் கிடைத்த புதுக்காற்காலச் சின்னங்

---

4. We therefore conclude that the so called mediterranean race had its origin in peninsular India, which was part of the original Dravidian home, Which was in the submerged continent that connected south india with Africa, when the Indu Gangetic Basin had not Probably been formed.

So, the Dravidian elemant is not to be found in Indian culture alone, but is largely traceable in Cretan, Aegean, Sumerian, Babylonian, Egyptian, polynesian and other cultures of ancient world.

Origin and spread of Tamils page 27-29.

களும் இவற்றை முழுதும் ஒத்துள்ளன என்றும் கூறப்படுகிறது.5

## எபிரேயர் (HEBREw)

எகிப்து சாசனங்களில் அபிரு (Apiru) என்னும் அக்காடியாவை ஆண்ட நரம்சின் களிமண்பலகையில் 'ஹபிரு' என்றும் விவிலியத்தில் ஏபெரின் என்றும் குறிக்கப்படும் ஈப்ரு என்னும் சொல், மறுகரை, மறுகரையிலிருந்து வந்தவர் என்று பொருள்படுகிறது. இவர்களின் திருநகரமாகிய எருசலேம் என்பது ஊருசாலம் என்பதன் திரிபு என்பர். அதர்வவேதத்தில் ஊருகூலா என்னும் சொல், பெரிய ஊர் என்று பொருள் தருவதாக, பாலகங்காதரத் திலகர் கூறுகிறார்.6

விவிலிய நூலுள் கூறப்படும் கடல் கோள்கள் குமரிக் கண்ட கடல் கோள்களையே சுட்டுவன என்னும் குறிப்பைக் கொண்டு, எபிரேயர்க்கும் தமிழர்க்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது என்று கூறுகின்றனர்.

செமித்தியர் என்னும் சொல்லுக்குச் செந்நிறத்தவர் என்று பொருள்.

நண்ணிலக் கடல் நடுவே உள்ள தீவின் வடகிழக்கில் வாழ்ந்தோர் முசிறி என்னும் இனத்தார். இதே பகுதியில் கிரீதா தீவில் தமலி என்ற இனத்தார் வாழ்ந்ததாக (கி. மு. 480-ல்) எரடோடஸ் கூறியிருப்பதாகவும்,7

---

5, 6 ... ... } vide p. 253

7. The three classical languages of the world, Sanskrit, Hebrew and Greek contain Tamil words in the vocabulary.

—Rhys Davids

இவர்களின் மரபினரே பாரசிகம் வழியாக இந்தியாவுக்கு வந்து பிறகு தென்னிந்தியாவில் குடியேறித் தமிழராக வாழ்வதாகவும், சில வரலாற்றாசிரியர் தலைகீழாக மாற்றி உரைப்பர்.

சிற்றாசியாவில் லீசியர் பேசிய மொழி த்ரிம்மிலி (Trimmili) என்பதாகும். பெத்தலேகம் என்னும் சொல் (Beth—வீடு+El-தெய்வம்) புத்+எல்—புத்தேள் என்னும் தமிழ்ச் சொல்லோடு தொடர்புடையது என்பர்.

கிரேக்க எபிரேய மொழிகளில் தமிழ்ச் சொற்களிருப்பதை ரைஸ் டேவிட் என்பவர் சுட்டிக் காட்டியிருக்கிறார்.8

இதனால் இந்தோ ஐரோப்பிய மொழிகளும், நெடுங்காலத்துக்கு முன்பு குமரிக்கண்ட தமிழிலிருந்து பிரிந்து சென்ற கிளைமொழிகளே என்று தெரிகிறது.

தற்கால மொழி நூலறிஞர் இதனை மேலும் ஆராய்ந்து வருகின்றனர்.

மறைந்திருக்கும் உண்மைகளை முறையாகக் கண்டறிந்து அறிவிக்கும் பொழுது, உலக மக்கள் அனைவரும் ஒரே குடும்பத்தினர், ஒரேமொழி பேசிய மரபிலிருந்து கிளைத்தவர் என்னும் உண்மைகளை அறியும்போது, உலக ஒற்றுமை வலுப்பெறும்.

## தாய்வழியினர்

தமிழர் தோற்றக் காலத்திலிருந்து தாயின் தலைமையை ஏற்றவர். தாய்வழிச் சொத்துரிமையைப் பெற்றவர். உலகின் மற்றெல்லா வகை மக்களிடையேயும், உலகின் முழுமுதற் பொருள் ஆண்பாற் சார்புடையதாகவே கொள்ளப்பட்டிருக்க, தமிழர், எகிப்தியர், இலெமூரியர், சிந்துவெளித் தமிழர் ஆகியோரிடை அதுபெண்பாற் பொருளாகத் தாயுருவிலும் வழிபடப்பட்டிருக்கிறது.

---

8 சட்டர்ஜி

பழந்தமிழரிடையிலும், மலையாளத்தாரிடையிலும், பாலித் தீவுகள், கிழக்கிந்தியத்தீவுகள் ஆகியவற்றில் வாழும் மக்களிடையிலும் இன்றும் தாய்வழி உரிமை உள்ளது. இவ்வுரிமையைக் குறிக்கும் தாயம் என்ற பழந்தமிழ்ச் சொல் வடமொழிச் சட்டநூல் வரை சென்று 'தாயபாகம்' என வழங்கப் படுதலைக் காண்கிறோம்.

அன்னை (கொற்றவை) வழிபாடு மொகஞ்சதாரோவில் நடைபெற்று வந்தது. ஆடுமாடு வளர்த்தல், மாமன் மகளை மணத்தல், தாய்வழிச் சொத்துரிமை ஆகியவை செமித்தியர்க்கும் தமிழர்க்கும் பொதுவானவையாகும்.

தமிழர் தாய்வழியினராக வந்ததன் விளைவாக, உலக மக்கள் அனைவரையும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளாகக் கருதும் பொது நோக்கையே தமக்குரிய பண்பாடாக வளர்த்துக் கொண்டு வந்துள்ளனர். சமயம், கட்டுப்பாடுகள் குறுகிய வழக்காறுகள் (ஆசாரங்கள்) ஆகியவற்றால் தம்மை ஒரு சிறிய எல்லைக்குள் கட்டுப்படுத்திக் கொள்ளாமல், அனைத்து நாட்டு மக்களோடும் இனிது உறவாடி வாழும் இனிய பண்பை இயல்பாகக் கொண்டுள்ளனர். ஆதலால் தான், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் மூதுரை பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் மக்களின் பண்பாட்டை உலகிற்குப் பறைசாற்றி வருகிறது.

இனி, வருங்காலத்திலும் தமிழ் மக்கள் இனமொழி சமய வேறுபாடுகளுக்கு என்றும் அப்பாற்பட்டவராய் உலகந் தழுவிய மக்களாய், எல்லா நாட்டார்க்கும் நண்பராய், எல்லா இனத்தார்க்கும் உறவினராய், வாழ்ந்து காட்டி வழிவழி வந்த பண்பாட்டைக் காப்பர் என்பதில் எவ்வகை ஐயப்பாடும் இல்லை. தமிழரின் தோற்ற வரலாறு உலக மக்களின் தோற்ற வரலாறாக ஒளிர்கிறது. இதைப்போல் தமிழரின் பொதுநோக்கு, உலக மக்களுள்ளத்திலும் மலர்ந்து உலக அமைதிக்கும் ஒருமித்த வளர்ச்சிக்கும் வழி வகுப்பதாகுக.

# கருவிநூற் பட்டி


தொல்காப்பியம்

புறநானூறு

சிலப்பதிகாரம்

திருக்குறள்

புறநானூறு

கலித்தொகை

| | |
|---|---|
| தமிழர் வரலாறு | ஞா. தேவநேயப்பாவாணர் |
| கடல்கொண்ட தென்னாடு அல்லது குமரிக்கண்டம் | பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் |
| தமிழகத்தின் பழமையும் புதுமையும் | ந. சி. கந்தையா பிள்ளை |
| தமிழக வரலாறு | தமிழக அரசு வெளியீடு, 1975 |
| பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும் | மறைமலையடிகள் |
| நம்நாட்டுக் கப்பற்கலை | சாத்தன்குளம் அ. இராகவன் |
| திராவிடத் தமிழர்களின் பண்டைக்கால வரலாறு | துறையனூர் அடிகள் |
| நாமிருக்கும் நாடு கொங்கு நாடு | மு. ஆரோக்கியசாமி |
| இந்திய நாகரிகத்தில் திராவிடப் பண்பு | சிலேட்டர் |
| இந்திய வணிக நெறிகள் (மூலம் இந்தி) | மோதி சந்திரர் |
| கட்டுரைத் திரட்டு | ந.மு. வேங்கடசாமி நாட்டார் |
| இறையனார் அகப்பொருளுரை | |
| சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் | ஞா. தேவநேயப்பாவாணர் |
| ஐந்திரம் | க. ப. அறவாணன் |
| இந்தியாவில் புத்த சமய வரலாறு | தாராநாதர் |

# Bibliography


The Earth — Arthur Beiser and the Editors of Life

Fossilman — Michael H. Day

The Early man — F. Clark Howell

The Riddles of three ocears — Alexander Kondratov

The Cultural Heritage of India — Edited by : Dr. Radhakrishnan

Lost Lemuria — Scot Eliot

History of Creation Vol. I — Haeckel

Studies in the Mediterranean culture — Rev. Father Heras

Origin and Spread of Tamil — N. Ramachandra Dikshidar

Indo Aryan and Hindu — S. K. Chettergi

Archaeology — Francis celoria

Encyclopaedia Britanica — 1970

Dravidian India — T. R. Sesha Iyengar

History of Tamils — P. T. Srinivasa Iyengar

The Ancient History of the Near East — H. R. Hall

Ancient explorers — Cary and warminton

Dravidian origin and the west — Dr. N. Lahouari

Origin and antiquity of Man — G. Frederic wright

Buddhist India — Rhys David

Prakrit Grammar — Hemachandra

Linguistics and Dravidian Philology — P. V. Ulahannan Mappila

Stone age in India — P. T. Srinivasa Iyengar.

# சொல்லடைவு (INDEX)


அக்குமணி 227
அக்கேடியா 188
அங்கேரி 165
அண்ணியசு பிளகம் 135
அல் உபாய்து 109
அல்தின்திபெ 166
அல்பைன் 190
அன்றில் தீவு 126
அகவாழ்க்கை 88
அகழ்வாய்வு 101
அசாத சத்துரு 216
அசிரியமன்னன் 133
அசுணமா 145
அசுர்பாணிபால் 190
அசைநிலைமொழி 82
அசோகன் 217
அசோக லிபி 217
அடியார்க்கு நல்லார் 104,117
அணியம் 45
அணு வெடை 43
அநிருத்தன் 238
அமைப்பாளர் 45
அரவம் 109
அரசினியார் 216
அரப்பா நாகரிகம்
அரிசுதோபுலசு 184
அரையர் 226
அரைவைப் பல் 64
அரைவைக் கல் 105
அரோரா பொரியாலிசு
அலவன் 221
அறிவன் 222
ஆந்தரகோல் 181
ஆப்பு எழுத்து 107
ஆப் 111
ஆய்வுச்சாலைப் பணி 45
ஆர்மீனியன் 164
ஆழ்கடல்அகழ்வாய்வாளர் 105
ஆஸ்ட்ராலோபிதிகஸ் 50
ஆடவை 221
ஆடு 221
ஆரவல்லிமலை 102
ஆரல் 220
ஆரியவர்த்தம் 187
ஆலன் 234
ஆவஸ்யக் சூர்ணி 157
ஆறிரூர் 182
ஆனந்தப் பையுள் 237
இந்தியப் பெருங்கடல் 101
இந்திய மாழை 83
இந்திர துருவன் 240
இந்துமாவாரி 105
இப்பாக்கிரசு 135
இடைக்கழகம் 229
இயங்குதிணை 27

இய, இயவுள் 133
இரட்டை 221
இரலை 220
இராமச்சந்திர தீட்சிதர் 111
இருங்கோவேள் 228
இருந்தையூர் 230
இரும்பொன் 110
இலவந்தீவு 126
இலக்கத்தீவம் 103
இலெமூர் 20, 29
இலெமூரியா 15, 20
இலெமூரியத் தலைநிலம் 47
இழைத்தல் மொழி 81
இறலித் தீவு 126
ஈட்டுரை 228
ஈராசு பாதிரியார் 183
ஈரூர் 182
ஈவான் 176
உச்சாணிக்கிளை 38
உட்சிங்கா 172
உசர் 34
உட்ற்பாங்கு மாந்த வியலார் 46
உதியஞ்சேரலாதன் 224
உப்பாய்து துறைமுகம் 210
உபேரி 13, 133
உய்ரேம்பலி 182
உயர்ஞாயிற்றூர் 182
உயிரி 27
உர்வோர் உப்பல் 152
உரார்த்து அரசர் 164
உருகெழு குமரி 120
உருள்
உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி 83
உவச்ச 217
உழை (உவை) 237
உற 111
உறை 85
ஊர் நாகரிகம் 210
ஊரி (ஊர்வை) 28
ஊழ்கம் (தியானம்) 117
எக்கேல் 19
எதியோப்பியா 136
எரிதுநகர் 168
எலம் நாடு 211
எலும்பு ஊசி 68
எழுமுடி ஆரம் 125
என்கி 132
எஞன் (எண்குணத்தான்) 187
ஏதேன் தோட்டம் 20
ஏலேல சிங்கன் 159
ஏழ் தெங்க நாடு 118
ஏழ் மதுரை நாடு 118
ஏழ் குன்ற நாடு 119
ஏழ் குறும்பனை நாடு 119
ஏழ் குணகரை நாடு 118
ஏழ் முன்பாலை நாடு 119
ஏழ் பின்பாலை நாடு 119
ஏழிலாஞ்சனை 125
ஏறு 221
ஏனங்கள் 33
ஐந்திணைப்பிரிவு 83
ஐந்திரம் 239
ஐந்திரவிடம் 236

ஐவிரல் குரங்கு 31
ஓரியோ பிதிகஸ் 34
ஒற்றைச் செல் உயிரி 26
ஓச்ச 217
ஓதாளர் 217
ஔசு 13, 109
கங்கை 227
கச்சேரி 202
கட்டுமரம் 69
கண்ட நகர்வு 24
கத்தினி 103
கப்பல் 161
கல்விக்கழகம் 237
கவ்வை 220
கன்னி 221
கடகம் 221
கடலோடி 160
கடக அகழ்வாய்வு 100
கடுங்கோன் 13
கடைக்குளம் 221
கணபதியாபிள்ளை 125
கணியம் 207
கணை-- 220
கதவபுரம் (கபாடபுரம்) 114
கதிரியக்கம் 43
கபிலர் 110
கரிமம் 43
கருங்கோழிமோசி 230
கருத்தெழுத்து 81
கலப்பு - 83
கலம் 160
கலம்புணர் கம்மியர் 150
கலி 230
கலியூழி 228
கவரிமான் 227
கழாத்தலையார் 228
கழை 220
களஞ்சியக் கருவூலம் 191
களப்பணி 45
களரியாவிரை 129
கனிமம் 46
காந்தமலை 232
காந்தக் கோட்டை 232
காந்தாரி- 203
காய்சின வழுதி 13
காகசசு- 168
காதா சப்தசதி 234
காரவேலன் 227
காரி 222
காரோதிமம் 145
(காரன்னம்)
காலக்கணிப்பு 148
காவதம் 104
காணு நாடு 114
கிம்பர்லி 172
கிரகாம் 115
கிராதர் 206
கிளிமன் 176
கீச்சொலி 65
கீரந்தை 230
கும்பம் 221
குன்று 220
குசராத்தி 236
குசைத்தீவு 126

குடலூர் 152
குணாட்டியர் 240
குமிழி 42
குயவன்(கோவன்) 176
குயிபிட் 148
குரக்கு மாந்தர் 50
குருகு 220
குறிஞ்சி 88
கூத்தர் 83
கூத்த நூல் 233
கூடாரம் 68
கூடுமலை 182
கூவிளி 65
கேதாரநாத் 205
கைம்மீன் 220
கொற்றவை 227
கொடிறு 220
கொடுநுகம் 220
கொலஹாடோ 188
கோட்டாறு 102
கோண்டுவாஞ 15
கோந்தரதோஸ் 77,130.
கௌதமர் 237
சந்தாத்தீவு 19
சந்தை 218
சகரபுத்திரர் 36
சகாரா 171
சர்கோன் 132
சர்ஜான் மரே 10
சனகன் 216
சனிதார் 60
சாக்சன் 68
சார்த்தவாஹம் 157
சாந்தோக்கிய உபநிடதம் 237
சாகிரப் 198
சாகோசு 103
சாமுவேல் இராமர் 211
சாயாதே முல்லா 103
சாரிபுத்தர் 240
சாலித்தீவு 77
சாலிமாந்தன் 78
சிற்றரையம் 226
சிகுஜென் 164
சிபா ஆறு 176
சிரிப்ஸ் ஆழ்கடல் ஆய்வு நிறுவனம் 105
சிலப்பதிகாரம் 104
சிலவேனியர் 171
சிலை 221
சிவன் 157
சிவோ, சிவப்பன், சிவாஸ் 188
சிவன் ஒளி பாத மலை 188
சிறுபாக்கம் 111
சிறுபாண்டரங்கனூர் 230
சீமைப் புளி 103
சீரை, சீலை 217
சீனம் 250
சீனுவின் துயரம் 179
சுட்டு நாகர் 188
சுத்கஜென்தார் 179
சுற்றுக் கடலோடி 160
சுளகு 220
சுறவம் 221

| | | | |
|---|---|---|---|
| சுழு | 221 | தமுலுக் | 205 |
| சூரசேனி | 235 | தமுலிக | 202 |
| சூரியக்குடி | 232 | தவுத்புத்திர | 249 |
| சூரிய மரபு | 232 | தழல் | 220 |
| சூரியத்தீவு | 106 | தழையுடை | 218 |
| செங்கோன் | 213 | தளிர்பதி | 182 |
| செங்கோன் தரைச்செலவு | 141 | தனிமம் | 43 |
| செங்குளவி | 13 | தனிமக் கூறு | 43 |
| செம்பியன் (சிபி) | 13 | தனியூர்ச் சேந்தன் | 141 |
| செம்பிற் பொருப்பு | 84 | தாசர் | 199 |
| செப்பு வரை | 184 | தாப்ரபனே | 131 |
| செசெல்சு | 103 | தாமரைத் தீவு | 126 |
| செவன் ஏரி | 164 | தார்சியர் | 31 |
| சென்ஞுகெரிபு | 190 | தாலமி | 155 |
| சேக்சுபியர் | 83 | தாழி | 220 |
| சேரன் கிரி | 203 | தாளவோசை | 86 |
| சேரன் தீவு | 106 | தானியக்களஞ்சியம் | 179 |
| சோலகும்பு | 204 | திசைப்பூண்டு | 73 |
| சோழன் கணவாய் | 204 | திசைக்காட்டும் கருவி | 218 |
| சோனம் | 68 | தியகோசுவாரசு | 138 |
| சோவோ மாந்தன் | 150 | தியோதரசு | 139 |
| சோனே | 227 | திரிசமுத்ராபதி | 153 |
| ஞாயிற்றுத் தீவம் | 136 | திரையன் மாறன் | 230 |
| ஞெலிகோல் | 152 | தில்முன் | 131 |
| டிரையோபிதிகஸ் | 50 | தீவமுனை | 143 |
| டிஞேசரஸ் | 74 | (தீபகற்பம்) | |
| தங்காரி | 204 | துலே | 221 |
| தட்சிணை | 200 | துவரைக் கோமான் 85 | 230 |
| தட்சிணபதி | 187 | தூங்கெயில் | 232 |
| தர்சான் | 165 | தூபால் காயின் | 86 |
| தகனே | 83 | தெங்கத்தீவு | 126 |
| தசில நாகரிகம் | 163 | தென்பாலிமுகம் | 12 |
| தசியூக்கள் | 176 | தென்புலத்தார் | 201 |

தென்மதுரைத் தமிழ்க் கழகம் 128
தேவபோதர் 240
தேள் 221
தொடுகடல் 36
தொர்தொக்னே 59
தொல்கதை 11
தொன்றுமுதிர் பௌவம் 21
தோடர் 151
நங்கை 221
நண்கோப 182
நண்ணிலக்கடல் (மத்தியதரைக்கடல்) 21
நரம்பு 83
நாகரிக வளர்ச்சிக்காலம் 81
நாவாய்கர் 149
நாவஜா 158
நான்மலை 182
நிசாதர் 206
நிலந்தருதிருவின் நெடியோன் 125
நிலப்புடைபெயர்ச்சி 24
நிலைத்திணை 27
நியாண்டர்தால் மாந்தன் 53
நியூகினியர் 173
நிறைகோல் 221
நீராடும் மண்டபம் 192
நீரி (நீர்வாழ்வன) 28
நுளம்பர் 187
நூற்றுவர்கன்னர் 153
நெசவுக்கலை 189
நெட்டிமையார் 83
நெடியகற்கால மாந்தர் 59
நெபுகாத் நேச்சர் 190
நெய்தல் 88
நெய்ம்மீன் 220
பஃறுளி 84
பஞ்சத்திராவிடம் 236
பஞ்செத்துகள் 103
பப்பரப்புளி 103
பகுசொன்னிலை 82
படகு 160
படவெழுத்துமுறை 81
படிமுறை வளர்ச்சி 26
படையல் 201
பரன்த்ராபஸ் 51
பலதன் ஏரி 165
பறவை 220
பனியூழி 36
பனை 220
பனைத் தீவு 106
பனைஞாயிறு 197
பாக ஆழம் 108
பாபிரக சுருள் 107
பாபிலோனியா 128
பாதிவாஞள் 43
பாணினி 240
பாரசிவர் 188
பாரோமன்னர் 107
பாலூட்டிகள் 27
பாவுவமொழி 234
பாவெரு ஜாதகக் கதை 190
பாறைப் படிவு (Fossil) 40
பிரமிடு 86
பிராகுவி மொழி 111
பிரவாகன சைவலி 202

பிரான்சிஸ் போர்டஸ் 59
பிளேனி 135
பிற் கொழுங்கால் 220
பீக்கின் மாந்தன் 78
பீலிவளை 149
புத்த ஜாதகக்கதை 218
புல் லுணு (Herbivorous) 51
புதைகுழி 61
பெருந்தேவி 183
பெருமீன் 183
பெருவள நாடு 141
பெரியவாச்சான் பிள்ளை 228
பேரிங் நிலப்பாலம் 36
பேரிங் தீவு 132
பேரரையம் 226
பைசாசி 235
பொதியெருது 144
பௌலந்தார் 84
போபோர்ட் 103
பொற்காலம் 110
பொன்னேர் 84
மகன் தீவு 106
மகாராட்டிர பிராகிருதம் 235
மகுளிம் 134
மடங்கல் 221
மடகாசுகர் 103
மணலூர் 138
மணிவாசகர் 27
மயிர்ப் படலம் 48
மர அணில் 28
மனு 13
மாந்தக் குரங்கு(Ape) 33
மாந்தாதா 232
மாந்தை (மாதோட்டம்) 232
மாந்தைப் பள்ளு 232
மாபிண்டம் 129
மாழ்கு 220
மாழை 82
மானேறு 220
மீகாமன் 156
மீன், மீனம் 221
மீனவர் 182
முக்கடல் தலைவர் 153
முக்கடல் புதிர் 77, 130
முக்கண் மரபு 187
முக்கோல் 220
முந்துகிப்பன் 50
முற்குளம் 220
முற்கொழுங்கால் 220
முதுகாந்தன் (முசுகுந்தன்) 13
முதுகுருகு 129
முதுநாரை 129
முரஞ்சியூர் முடிநாகராயர் 128
முருகன் 157
முழைத்தல்மொழி 80
முறி 85
மூத்தகுடி 89
மூநாடு 115
மெசபதோமியா 68
மெலுகா 135
மேகாலயா 209
மேழம் 221
யாபீன் 87

யாளி 74, 145

யானைப்புளி 103

யுவான் தி லயாங் 155

யூகனெ துபாயிசு 48

லர்க்கானு 177

லகோவரி 212

லாஜொல்லா 105

லொரைசஸ் 30

லோதல் 151

வடநாவலம் 125

வடவனல் 114

வடிம்பலம்ப நின்ற
நெடியோன் 11

வணிகச் சாத்து 157

வருணன் 21

வளி தொழில் 140

வால்மீகி 159

வானநூற்கலை 219

விடலை 242

விடுபட்ட இணைப்பு 48

வியாழ மாலை 230

விலங்காண்டி 79, 127

வீரமகேந்திரம் 220

வெண்டாளி 230

வெண்பொன் 110

வெள்ளவூழி 23

வேட்டி 196

# பிழை திருத்தப் பட்டி

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 11 | 11 | நூல்களும் | சான்றுகளும் |
| 11 | 18 | OceangoraPhyc | Oceanographic |
| 12 | 4 | ஐந்து கோடி | பத்து கோடி |
| 12 | 6 | இலெமூரியா காலம் | கற்காலம் மற்றும் நாகரிக வளர்ச்சிக் காலம் |
| 13 | 7 | குறிப்புகளுக்கிடையே | குறிப்புகளுக்கியைய |
| 13 | 15 | மாந்தரின் ஆல மரத்தின் | மாந்தரின ஆல மரத்தின் |
| 16 | 1 | அப்பா துரை | அப்பாத்துரை |
| 17 | 16 | ஆஸ்த்திரேலியா | ஆத்திரேலியா |
| 41 | 1 | மதக்குரங்கு | மாந்தக்குரங்கு |
| 45 | 3 | Laboratary | Laboratory |
| 45 | 10 | Anthxopologis | Anthropologist |
| 45 | 22 | Plastos | Plastor |
| 46 | 5 | Fessil | Fossil |
| 50 | 10 | முந்து சிப்பன்சி | முந்து சிப்பன் |
| 50 | 16 | முந்து சிப்பன்சி | முந்து சிம்பன்சி |
| 58 | 25 | Archaeslogy | Archaeology |
| 58 | 26 | eary Mam | The Early Man |
| 59 | 18 | ஆண்டுளேக்கு | ஆண்டுகளுக்கு |
| 65 | 11 | முதுகுகளாகி | முதுகாகி |
| 65 | 13 | வீச | வீசி |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 68 | 23 | நகரிலும் | நகரில் |
| 79 | | விலங்காண்பி | விலங்காண்டி |
| 81 | 1 | முழைத்தல் மெரிழி | இழைத்தல் மொழி |
| | | inarticulate Speeh | articulate Speech |
| 90 | 15 | எல்லா வற்றிலும் | எல்லாவற்றினும் |
| 93 | 27 | விழா நாளாக ஆகும் | விழா நாளாயிற்று |
| 96 | 6 | கொள்ளாது | கொண்டாலும் |
| 97 | 21 | கி.மு. 5000 | கி.மு. 50,000 |
| 105 | 2 | அகழ்வாளர் | அகழ்வாய்வாளர் |
| 123 | 3 | சிலபபதிகார | சிலப்பதிகார |
| 129 | 21 | பாஞுடிர் | பாடினர் |
| 135 | 3 | தாப்பனெ | தாப்ரபனை |
| 138 | 25 | மடகாசு | மடகாசுகர் |
| 76 | | | மூன்றும் பகுதி |
| 158 | 8 | நினைவுறுகின்றன | நினைவுறுத்துகின்றன |
| 213 | 12 | ஏற்று | எற்று |
| 220 | 6 | மாழ்கு | மாழ்கு, மான்றலை |
| 221 | 2 | ஆடு | மேழம் |
| 240 | 27 | Laka | Loka |
| 251 | 9 | ச(XA) | ச(Sa) |

## கடல் கொண்ட குமரிநாடு (இலெமூரியா)

சிலப்பதிகார உரையாசிரியரான அடியார்க்கு நல்லார் தரும் விளக்கத்தின் அடிப்படையில் இருந்த நிலப் பகுதிகள்.




குறிப்பு: ஏழ் தெங்க நாட்டிலிருந்து குமரிமலைத் தொடர் வரை 700 காவதம் (சற்றெறப்ப 7000 கி.மீ.) குமரிக்கண்டம் பரந்திருந்ததாகக் கூறப்படுகிறது.



# ஆசிரியர் அறிமுகம்

திரு. மதிவாணன் தருமபுரி மாவட்டம் பென்னாகரத்தில் 1-7-1936ல் பிறந்தார்.

திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியில் புலவர் பட்டம்பெற்றார். சென்னைப் பல்கலைக் கழகத்தின் எம்.ஏ., பட்டமும், மைசூர் பல்கலைக் கழகத்தின் பி. எட்., பட்டமும் பெற்றவர்.

சேலம் அரசினர் கலைக் கல்லூரியில் தமிழ்த் துணைப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

இப்பொழுது **செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககத்தின்** உதவித் தொகுப்பாளராகப் பணியாற்றி வருகிறார்.

தாய்மொழித் தமிழுடன் ஆங்கிலமும், கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு, சமஸ்கிருதம், இந்தி ஆகிய மொழிகளும் பயின்றுள்ள இவர் பன்மொழிப் புலவராக விளங்குகிறார்.

மொழித்துறையில் இவருக்குள்ள பேரார்வம் புதிய படைப்புகளை நாட்டுக்கு நல்கும்!

prabhu printing house, madras-600 0017.